Registered as a News Paper in Sri Lanka

දිනමුරසු වාරමලර්

பக்கம் 24 ரூபா 16/50

ஜூன். 27- ஜூலை 03, 2004

# வாரமலர்
# தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 568



## புதுசு கிரிக்கெட்டின் வரலாறு

## வட-கிழக்கின் தேர்தல் முடிவுகளில் ஐரோப்பிய யூனியன் அதிருப்தி

## ஆசியப் பெண்கள் விவாகரத்து

## நிபந்தனைகளுக்குள் தடுமாறும் பேச்சுக்கள்!

## ஜோர் விமர்சனம்

# ஆன்மீகம்



## இறை வழிபாடு செய்!

இறை வழிபாடு செய்வதற்கு முன்பாக அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். பூப் பறிப்பது, சந்தனம் அரைப்பது, பூசை அறையைச் சுத்தம் செய்வது, பூசைப் பாத்திரங்களைத் துலக்குவது, நைவேத்தியம் தயாரிப்பது போன்ற செயல்களில் ஈடுபடும்போது மனதில் வேறு சிந்தனைகள் தோன்றா. அற்பத்தனம், கோபம், வெறுப்பு முதலானவை அகன்றுவிடும்.

எப்படியாவது மனதை இறைவன்பால் வைக்க வேண்டும். இடைவிடாத இறை நினைவு மனதில் இருக்க வேண்டும். இறைவன் எனக் கருதி, எதை பக்தியோடு வழிபடுகிறோமோ, இறைவனுடைய காட்சியை அவற்றில் காணலாம். சிவ பூசைகளைச் செய்து ஒருவர் மனப் பக்குவம் அடைந்த பிறகு, பூசைகளில் அதிகமாக ஈடுபடத் தேவையில்லை. அந் நிலையில் மனம் இறைவனிடம் ஒன்றி இறைவனையே நினைத்துக்கொண்டிருக்கும்.

எவரும் உபவாசம் இருந்து உடலை வருத்திக் கஷ்டப்படக் கூடாது. இறைவனிடம் சரண்புகுந்தால் எதற்கும் அஞ்சவேண்டியதில்லை. கள்ளம், கபடம் அற்ற எளிய சுபாவம் உடையவர்கள் இறைவனை அடைய முடியும்.

- ஸ்ரீராமகிருஷ்ணரின் அமுதமொழிகள் -

## ஊற்றிவிடுங்கள்

ஜனங்களே, எக்காலத்திலும் அவரை நம்புங்கள்; அவர் சமுகத்தில் உங்கள் இருதயத்தை ஊற்றிவிடுங்கள்; தேவன் நமக்கு அடைக்கலமாயிருக்கிறார். (சங்கீதம் - 62:8,)

ஆம்! சகோதரனே, சகோதரியே!! உங்கள் இருதயத்தை தேவ சமுகத்திலே ஊற்றிவிடுங்கள். தீர்க்கதரிசியாகிய சாமுவேலின் தாய் மலடியாயிருந்தபோது மிகவும் துக்கப்படுத்தப்பட்டாள். தொடர்ந்து அவள் மனமடிவாக்கப்படுகிறாள். கர்த்தருடைய சந்நிதியிலே மனங்கசிந்து அழுது விண்ணப்பிக்கிறாள். ஆசாரியனாகிய ஏலி விசாரித்தபோது, கர்த்தருடைய சந்நிதியில் என் இருதயத்தை ஊற்றிவிட்டேன் என்று கூறுகிறாள். (1 சாமுவேல் 1 ஆம் அதிகாரம்) அலட்சியப்படுத்தப்பட்டவள், அவமானப்படுத்தப்பட்டவளுக்கு தேவன் ஒரு பெரிய தீர்க்கதரிசியையே மகனாகக் கொடுக்கிறார். இதில் ஒரு இரகசியம் இருக்கிறது, ஊற்றிவிட்ட பின்னர் மீண்டும் எடுத்துக்கொள்ள முடியாது. சாமுவேலின் தாய் ஜெபித்துவிட்டுச் சென்றபின் துக்கமுகமாயிருக்கவில்லை (1 சாமு, 1:18.) என்று வேதம் சொல்லுகிறது. ஆம், உங்கள் இருதயத்தை இயேசுவுக்கே ஊற்றிவிடுங்கள். அவர் உங்களுக்கு நன்மையைக் கட்டளையிடுவார் என நம்புங்கள். ஆமேன்.

– போல் ஜோன், தெல்தெனிய.

## அருள்மறையின் ஒரு திருவாக்கு

இன்று அநேக பொருட்கள் கலப்படம் செய்யப்பட்டு பாவனையாளர்களுக்கு விற்பனை செய்யப்படுவதை நாம் காண்கின்றோம். நாட்டு மக்களின் நல்வாழ்வுக்கு உலைவைக்கும் இத்தகைய பொருட்களை விற்பனை செய்யும் வர்த்தகர்கள், தாம் பணத்தின் மீது கொண்டுள்ள பேராசையினாலேயே இவ்வாறு நடந்து கொள்கின்றனர்.

அல்லாஹ் வாணிபத்திற்கு வகுத்திருக்கும் இலக்கணத்துக்கும், அவன் ஏற்படுத்தி இருக்கும் விதிமுறைகளுக்கும், அவன் காட்டியிருக்கும் வரம்புகளுக்கும் புறம்பாகச் சென்று பொருள் தேடுவதெல்லாம் ஹராமானதாகும்.

ஒரு வியாபாரத்தில் சம்பந்தப்பட்ட இரு தரப்பினரும் உண்மையைப் பேசி மெய்யாக நடந்துகொண்டார்களென்றால் அவர்களுடைய வியாபாரம் அல்லாஹ்வின் அருளைப் பெற்றதாக இருக்கும். மாறாக உள்ளதை மறைத்துப் பொய் பேசினார்களானால் அவ் வியாபாரத்தில் உள்ள நல்லருள் அல்லாஹ்வால் அழிக்கப்படும்.

நேர்மையான வாணிபம் செய்பவர்கள் நற்செயல் புரிந்தவர்களாவார்கள். இவர்களுடைய வருவாயைப் பெருக்கும் பொறுப்பு அல்லாஹ்வைச் சார்ந்தது. நேர்மையான வாணிபம் செய்பவன் கொடை கொடுக்கும் வள்ளல் ஒருவருக்குச் சமமாவான். இது அருள்மறையின் ஒரு திருவாக்கு.

எம்.சி. கலீல், கல்முனை – 05.

## கவிதைப் போட்டி இல.565

### பரிசுக்குரிய கவிதை

### உயிர்கள் விலைக்கு உண்டா?

உரிமைக்காக
உயிர்களைப் பறித்தால்
உரிமைகளை ஆள்வதற்கு
உயிர்களுக்கு எங்கே
போவது?
உயிர்கள் விலைக்கு உண்டா?

– பீ. சாருஹாந்,
தாண்டியடி.

### இடம் உள்ள வரை இடம் பிடித்துள்ள வியக்க வைத்த கவிதைகள்



**பதிலென்ன?**

ஹிட்லரின் ஆட்சி
இங்கே
வந்துவிடுமா?
கிழக்கே நடப்பதை
பார்த்தால்...

– எஸ்.பி. பாலமுருகன்,
பதுளை.

**இன்னோர் நாள் பார்ப்போம்**

அங்கிள் என்ன பார்க்கிறீர்கள்?
இது எங்கள் நாட்டில்
அடிக்கடி நடக்கும் செயல்தான்?
வாருங்கள் இன்னோர்
நாளைக்குப் பார்க்கலாம்.

– கிருஸ்ணன் பிரகாசன்,
திருகோணமலை.

**நிர்மூலம்!**

மானிடர் மட்டுமல்ல,
மானிட விழுமியங்களும்
நிர்மூலமாக்கப்பட்ட நிலையில்
அராஜகத்தின் கூடாரத்தைக்
காண்கின்றேன்.

– வெலிகம ரிம்ஸா முஹம்மத்,
வெலிகம.

**பயங்கரவாத விலை**

விறகுக்கட்டைகள் என
விளையாட்டாக நினைக்காதீர்!
பாரெங்கும் பரந்திருக்கும்
பயங்கரவாதத்திற்கு
விலைபோனவர்களே இவர்கள்!

– க. கமால்தீன்,
ஏறாவூர் – 3.

**உறவுகளே....**

சகோதரப் படுகொலைகளால்
சாவுகள்தான் அதிகரிக்கும்...
சிந்தியுங்கள் உறவுகளே... இவற்றால்
சீரழியப் போவது ஓரினம்தான்...

– கி. ரமேஷ்,
பெரிய போரதீவு.

**வேடிக்கை!**

அடுக்கி வைக்கப்பட்ட தீக்குச்சி போல்
அமைதியாய் படுத்து உறங்கும்
அலங்கோல உயிர்நீத்த உடல்களை
நிலை கொண்டு பார்ப்பது
இக்காலத்தில் எவருக்கும் ஒரு வேடிக்கை!

– கே. கோபால்,
அக்கரைப்பற்று.

**கசாப்புக்கடை**

"அழகிய ஈராக்கியர்களின்
நிர்வாண தேகங்கள்
சிறைச் சந்தைகளில்
மலிவு விற்பனை"
கறுத்தக் கோட்டணிந்த
"அமெரிக்க"
நுகர்வோர்களுக்கு மட்டும்.

– கை. சதீஷ்,
பொத்துவில் நகர்.

## கவிதைப் போட்டி இல.568



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி

கவிதைப் போட்டி இல.568

**விழித்தெழு!!**

உதிர்ந்து போன
மனிதத்தை
உற்று நோக்கி,
உறங்கி விட்ட - உன்
ஆன்மாவை
தட்டி எழுப்பு

– திருமதி சோபனா தயாபரன்,
கரவெட்டி

**பட்டியல்**

பட்டியல் இட்டு – அதன்படி
படுகொலைகள் புரிந்த பின்பும்
இன்னும் பட்டியலில்
இடம்பெற வேண்டிய
கொலைகள் பற்றியே
இந்த மிருகத்தின் சிந்தனை
இது கவலை அல்ல நடிப்பு.

– பா. ருகுணரேகா,
யாழ்ப்பாணம்.

**எங்கே ஏற்றுமதி செய்கிறீர்கள்?**

மர்மக் கொலைகள்
எப்படி
நடக்குதென்று
மண்டையைக்
குழப்பும்
இவ்வேளையில்
இரகசியமாக இந்த
மனிதக்
கருவாடுகளை
எங்கே ஐய்யா
ஏற்றுமதி செய்யப்
பார்க்கிறீர்?

– எஸ்.பி.பி.
கணேஷ்,
தாண்டியடி.

# உங்கள் பக்கம்

## திருமலை இரத்த அழுத்த நோயாளர்களின் அவலம்

திருகோணமலை தேசிய வைத்திய சாலைக்கு தினமும் இந்த மாவட்டத்திலிருந்து ஏராளமானோர் சிகிச்சை பெற வருகின்றனர். இவர்களுள் குறிப்பாக இரத்த அழுத்த நோயாளருக்கு மாதத்தில் நான்கு வெள்ளிக்கிழமையும் விசேட பரிசோதனை இடம்பெறுவதுண்டு. இதற்கென குறிப்பிட்ட தினத்தில் நோயாளிகள் அதிகாலையிலிருந்தே வரிசையில் நின்று நம்பர் எடுப்பதற்கு வந்து கூடுவர். இருக்கைகளில் இடமில்லாமல் கால் கடுக்க நிற்க வேண்டிய நிலை. ஒருவாறு ஏழு மணியளவில் நம்பர் கிடைத்ததும் மருந்து எழுதும் கொப்பி எடுப்பதற்கு மீண்டும் ஒரு வரிசையில் நிற்க வேண்டும். இங்கு பணி புரியும் சிற்றூழியர்களிடம் இருக்க வேண்டிய பொறுமை, சகிப்புத் தன்மை இல்லை. கடுகடுப்புடனேயே பேசுவர். சிலரது கொப்பிகளும் இங்கு இல்லையென்று கடுமையான பதில் வரும். எனவே, இரவு நேர ஊழியர்கள் ஊடாக நம்பர்களையும், மருந்தகத்திலிருந்து மருந்துகள் வழங்கும்போது கொப்பிகளையும் அவரவர்களிடம் கொடுத்து விட்டால் மேலே குறிப்பிட்டுள்ள தேவையற்ற கெடுபிடிகளையும் வீணான கால தாமதத்தினையும் தவிர்க்க முடியும். மேலும், டாக்டர்கள் எழுதிக் கொடுக்கும் மருந்து வகைகளில் முக்கியமானவற்றை தனியார் கடைகளில் வாங்க முடியாத வறிய நிலையிலிருக்கும் நோயாளிகள் அந்த மருந்துகளைத் தவிர்த்து விடுவதால் நோய் அதிகமாகி வீட்டில் முடங்கிக் கிடக்கும் பரிதாபமான நிலைக்குள்ளாகியிருக்கின்றனர். குறிப்பிட்டுள்ள விடயங்கள் தொடர்பாக திருமலை வைத்தியசாலைப் பணிப்பாளர்கள் கவனத்திற் கொண்டு இரத்த அழுத்த நோயாளர்களின் அவலத்தை நீக்க ஆவன செய்யும்படி தயவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

- ஒரு நோயாளி
திருமலை.

# வாசக[ர்] சாலை

## முரசே நீ வாழ்க!

என் மனதில் நீங்காத
இடம் பிடித்த முரசே!
உன்னில் வரும் ஆக்கங்கள்
அத்தனையும் அருமையிலும்
அருமை. உலகின் எந்த
மூலையிலும் நடக்கும்
சம்பவங்களை உன்னில்
தான் படிக்க முடிகிறது.
நீ பல ஆண்டு வாழ
வாழ்த்துகிறேன்.
ஏற்றிடு என் வாழ்த்தை.

உன் வாசகன்
- ஆர். கோபிநாத்,
இல. 23, கண்டி வீதி,
கம்பளை.

வாரம் தோறும்
வலம் வரும்
என் இனிய முரசே!
தித்திக்க வைக்கும்
உன் சுவையான ஒவ்வொரு
ஆக்கமும் என்னை
பிரமிக்க வைக்கிறது.
வாழ்க உன் பணி.

நித்தியா,
வவுனியா.

## புத்தம் புது மலர்

புத்தம் புது மலராய் உதிக்கும்
என் முரசே!
நித்தம் என் நினைவில் வளரும்
என் முரசே!
சித்தம் தன்னில் சிதறாத
என் முரசே!
நீ பிறந்து 11 ஆண்டுகளாய்
எம் மண்ணில் ஒலித்தாயோ.
11 ஆண்டுகள் நீ எப்படி அயராது
எம் மண்ணில் உழைத்தாயோ,
அதே போன்று நீ பல்லாண்டு பல்லாண்டு
பல்லாயிரத்தாண்டு
நீடூழி வாழ நான் இன்றும்
என்றும் உன்னை
வாழ்த்திடுவேன்.

- யோகா
இல. 26, அல்விஸ் பிளேஸ்,
கொள்ளுப்பிட்டி.

## அன்பின் முரசே!

வானத்திலே பவனி வரும்
கதிரவன் ஒருவனே - ஆனால்
எங்கள் தாயகத்திலே
பவனி வருவது தினமுரசே!

தமிழினத்திற்கு எதிரான
அடக்குமுறை அராஜகத்தை
அம்பலப்படுத்தும் - உன்
பணி தொடர வேண்டும்.

சத்தியம் தான் அழிந்தாலும்
தமிழரின் சரித்திரத்திலே
சத்தியமாய் நீ இருப்பாய்
தினமுரசே வாழ்க! வாழ்க!!!

- சி. புலேந்திரன்,
பாலமுனை,
மண்டூர்.

## மதிப்பிற்குரிய ஆசிரியர் அவர்களுக்கு,

அற்புதமான
படைப்புகளை அழகு
தமிழில் வழங்கும்
இனிய தமிழ் முரசே,
ஆன்மீகம் தந்த
மனிதனும் உள்ளமும்
ஆக்கம் சிறப்பாக
இருந்தது. லேடீஸ்
ஸ்பெஷல் தந்த
நலமாக வாழ்வோம்
ஆக்கம் பயனுள்ளதாக
அமைந்திருந்தது.
மேலும், இவ் வாரச்
சிறுகதைகள் இரண்டும்
அருமையாக இருந்தன.
பாராட்டுகின்றேன்.
முரசின் பணி மேலும்
சிறந்தோங்க இனிய
வாழ்த்துக்கள்.

- மங்களா வாமதேவன்,
தங்களா வாமதேவன்,
லேக் வீதி,
மட்டக்களப்பு.


மடல்கள் மற்றும்
ஆக்கங்கள்- உட்பட சகல
தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:-1772, கொழும்பு.
தொலைபேசி: -011 4-514282
தொலை நகல் (Fax):-011 4-513266
ஈ-மெயில்: (E-mail):-
murasu@sltnet.lk

# மரணத்தை விலை கொடுத்து வாங்கும் இலங்கைப் படகு அகதிகள்!
# இவர்களை சொந்த மண்ணில் வாழவைக்கக் கூட்டுத்திட்டம் தேவை

"உலக அகதிகள் தினம் கடந்த ஞாயிற்றுக்கிழமை உலகெங்கும் அனுஷ்டிக்கப்பட்டபோது, கொந்தளிக்கும் மன்னார் கடலில் இலங்கைத் தமிழ் அகதிகள் 25 பேர் படகு கவிழ்ந்து நீரில் மூழ்கி இறந்தனரென்று வெளிவந்த செய்தி மிகவும் வேதனைக்குரியது" என்று பேசாலை மீனவர் சங்கத் தலைவர் சகாயம் பீரிஸ் தெரிவித்தார். இராமேஸ்வரம் சங்குமால் என்ற இடத்திலிருந்து 25 தமிழ் அகதிகளை ஏற்றிக்கொண்டு பேசாலைக்குப் புறப்பட்ட படகே, கடற்கொந்தளிப்புக் காரணமாக நீரில் மூழ்கியதென்றும் இதில் பன்னிரண்டுக்கு மேற்பட்ட பெண்கள், பிள்ளைகள் இருந்தனரென்றும் அவர் சொன்னார். அநேகமாகக் கடந்த 16ஆம் திகதி இப்படகு கவிழ்ந்திருக்கலாமென்றும் மூன்று சடலங்களே கண்டுபிடிக்கப்பட்டதாகவும் ஏனைய சடலங்கள் வேறு எங்காவது ஒதுங்கியிருக்கலாமென்றும் அவர் கூறினார்.

தமிழகத்தில் இலங்கைத் தமிழ் அகதிகளுக்கென இருக்கும் 102 நலன்புரி நிலையங்களில் சுமார் 90 ஆயிரம் அகதிகள் உள்ளனரென்றும், இவர்கள் பத்துப் பதினைந்து வருடங்களாக அங்கு அகதி முகாம்களில் கஷ்டமான சூழ்நிலையில் வாழ்ந்து வருகிறார்களென்றும் அவர் கூறினார். "அகதிகள் தாயகம் திரும்ப முடியாமல் அந்தர நிலையில் வாடும்போது அகதிகளுக்கான ஐ.நா. உயர் ஸ்தானிகராலயம் அகதிகள் தினத்தை அனுஷ்டிப்பதில் அர்த்தமில்லை. இலங்கையில் யுத்தம் நிறுத்தப்பட்டு இரண்டரை வருடங்கள் கழிந்துவிட்டன. தமிழகத்திலிருக்கும் பெரும்பாலான அகதிகள் தாயகம் திரும்ப விரும்புகிறார்கள். ஆனால், பெருந்தொகைப் பணம் கொடுத்துத் திருட்டுத்தனமாகவே நாடு திரும்ப வேண்டியுள்ளது. ஏனெனில், இவர்களிடம் கடவுச் சீட்டுகள் கிடையாது. கடவுச் சீட்டுகளைப் பெற்றுக் கொடுப்பதற்கும், சட்ட ரீதியாக உரிய ஆவணங்களோடு நாடு திரும்புவதற்குத் தேவையான வசதிகளைச் செய்து கொடுப்பதற்கும் அகதிகளுக்கான ஐ.நா. உயர் ஸ்தானிகராலயமோ, சென்னையிலுள்ள இலங்கையின் ஸ்தானிகராலயமோ அல்லது தமிழக அரசோ எவ்வித ஆக்கபூர்வமான முயற்சியும் எடுக்கவில்லை" என்று அவர் சொன்னார்.

சுய விருப்பத்தின் பேரில் நாடு திரும்ப விரும்பும் அகதிகளுக்கு விமான டிக்கெட் உட்படச் சகல வசதிகளும் செய்து கொடுக்கத் தயாராக இருப்பதாக அகதிகளுக்கான ஐ.நா. உயர் ஸ்தானிகராலயப் பேச்சாளரொருவர் கூறினார். ஆனால், கடவுச்சீட்டுப் பெறுவது, இந்திய அதிகாரிகளுடன் பேசி உரிய ஒழுங்குகளைச் செய்வது போன்ற விடயங்களுக்கு மாதக் கணக்கில் காலம் எடுப்பதால் அகதிகள் தயங்குகின்றனர். அது மட்டுமல்ல, நாடு திரும்பும் அகதிகளுக்கு வாழ்விட வசதி, தொழில் வாய்ப்பு, பிள்ளைகளின் கல்வி வசதி மற்றும் நிவாரண உதவிகள் போன்றவை செய்து கொடுக்கப்பட வேண்டும். இது தொடர்பாக இலங்கை - தமிழக அரசுகள் மற்றும் அகதிகள் மீள்குடியேற்றத்துக்காக இயங்கும் சர்வதேச அமைப்புகள் ஒன்றிணைந்து திட்டங்களை மேற்கொண்டால் மட்டுமே காத்திரமான முறையில் அகதிகளை நாடு திரும்பச் செய்ய முடியும் என்று மன்னாரில் இயங்கும் தன்னார்வத் தொண்டர் நிறுவன அதிகாரியொருவர் கூறினார்.

இலங்கையில் யுத்த நிறுத்தம் அமுலில் இருக்கும் கடந்த இரண்டரை வருட காலப் பகுதிக்குள் சுமார் ஆறாயிரம் பேர் தமிழக அகதி முகாம்களிலிருந்து தாயகம் திரும்பியுள்ளனர். பிரபாகரனின் வயோதிபப் பெற்றோர் போன்று தமிழ் நாட்டில் வீடுகளை வாடகைக்கு எடுத்து வாழ்ந்த குடும்பங்கள் கடவுச் சீட்டுக்களைப் பெற்று விமான மூலம் சட்ட ரீதியாக இலங்கை திரும்புகின்றன. இவர்களுக்கு இங்கே வாழ்க்கை வசதிகள் உள்ளன. வாழ்வதற்கான ஆதாரங்களும் இருக்கின்றன. எதுவுமேயின்றி அந்தர நிலையில் வாழும் அகதிகள் தலா ஐயாயிரம், ஆறாயிரம் ரூபாவெனக் காசு கொடுத்துக் கள்ளமாகத் தாயகம் திரும்ப முனைகின்றனர். இவர்கள் விலை கொடுத்து மரணத்தை வாங்கும் அப்பாவிகள் என்றும் அவர் சொன்னார்.

## அமைச்சர் டக்ளஸ் மறுப்பு

"வன்னிப் புலிகளுடன் ஏற்பட்ட மோதலையடுத்து கொழும்புக்குத் தப்பிவந்த கருணாவுடன் நான் பல தடவைகள் தொடர்புகொண்டு, எம்மோடு சேர்ந்து இயங்குமாறு வற்புறுத்தியதாகவும், அதற்கு கருணா மறுப்புத் தெரிவித்ததாகவும் நிலாவினி என்பவர் மட்டக்களப்பில் நடத்திய செய்தியாளர் மாநாட்டில் கூறியிருந்தார். இது குறித்து ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தாவிடம் தொடர்பு கொண்டு கேட்டபோது அது உண்மைக்குப் புறம்பான கூற்று எனத் தெரிவித்த அவர், கருணா அம்மானும் அவரது அணியினரும் ஜனநாயக வழிக்குத் திரும்ப வேண்டுமென்பதே தனது விருப்பமென்றும், தலைவர்களின் மோதல்கள் காரணமாக இயக்கத்திலிருக்கும் கீழ்மட்ட உறுப்பினர்களே பாதிக்கப்படுவதாகவும் இவை தவிர்க்கப்பட வேண்டுமென்பதே தனது விருப்பமென்றும் டக்ளஸ் தேவானந்தா மேலும் கூறினார். மத்தியில் கூட்டாட்சி; மாநிலத்தில் சுயாட்சி! என்றும் பிரிக்க முடியாத வடக்கு - கிழக்கு மாநிலம்!! என்ற அரசியல் கோட்பாட்டோடு இயங்குபவர்கள் நாங்கள். இந்தக் கோட்பாட்டை ஆதரிக்கும் சகல சக்திகளும் எமது நேச சக்திகளே என்றும் அவர் சொன்னார்.

## 12 இலட்ச ரூபாவுடன் தலைமறைவு!

புலிகளின் வாழைச்சேனைப் பகுதி நிதிப் பொறுப்பாளரான அன்பினியன் என்பவர் 12 இலட்ச ரூபா பணத்துடன் தலைமறைவாகிவிட்டதாகவும், இதனையடுத்து பஞ்சாட்சரம் என்பவரைப் புலிகள் விசாரித்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. அன்பினியனின் நெருங்கிய உறவினர்கள் சிலரைப் புலிகள் கைது செய்து தடுத்து வைத்துள்ளனர்.

## பாதுகாப்புக் கோருகிறார் கிஷோர் எம்.பி.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட எம்.பி.யான சிவநாதன் கிஷோர் தனக்கு வழங்கப்பட்டிருக்கும் பொலிஸ் பாதுகாப்பை அதிகரிக்குமாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிடம் நேரடியாகவே கேட்டுக்கொண்டார். அண்மையில் ஜனாதிபதியை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பி.க்கள் சந்தித்து இடைக்கால நிர்வாக சபை உட்படப் பல்வேறு விடயங்கள் பற்றிப் பேசிய சமயத்திலேயே கிஷோர் இவ்வாறு கோரினார். புலிகளுடன் பேசி அரசாங்கம் சமாதானத்துக்கு வரவில்லையென்றால் தமிழ்க் கூட்டமைப்பு எம்.பி.க்கள் பதவிகளைத் துறந்துவிட்டு புலிகளுடன் இணைந்து போராடத் தயாரெனப் பிரபாகரனிடம் தான் கூறினாரென்று தமிழ்த் தொலைக்காட்சியொன்றுக்கு அளித்த பேட்டியில் முன்னார் கிஷோர் கூறியிருந்தார். தேர்தலையடுத்துப் பிரபாகரனைக் கூட்டமைப்பு எம்.பி.க்கள் சந்தித்துப் பேசியது குறித்து மேற்படி தொலைக்காட்சி கேள்வி எழுப்பியபோதே அவர் இவ்வாறு சொன்னார்.

## 'மீனகம்' கானகமாகியது!

தொப்பிகல, தரவைக் காட்டுப் பகுதிகளில் கருணா அணியினர் மேற்கொண்ட தாக்குதல்களையடுத்து தரவைப் பகுதியிலிருந்த 'மீனகம்' முகாமைவிட்டு பிரபா அணியினர் பின்வாங்கியுள்ளனர். கிழக்கு மாகாணத்திலுள்ள புலிகளின் பாரிய கள முகாமாகவும், பல நவீன வசதிகளோடும் இது அமைக்கப்பட்டிருந்தது. சுமார் 5 கோடி ரூபா செலவில் கட்டப்பட்ட இந்த 'மீனகம்' முகாம் புலிகளின் பயிற்சிக் களமாகவும் விளங்கியது.

## மலையகப் பாடசாலைகளின் நிலையை உயர்த்தத் திட்டம்

மலையகப் பாடசாலைகளில் கட்டட வசதிகள், தளபாடங்கள் போன்ற உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கும் ஆசிரியர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கும் விரைவில் நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளன. சுவீடனின் சிடா நிறுவனம் இதற்கென ஐந்நூறு மில்லியன் டொலர்களை வழங்கியுள்ளது. இதனைக் கொண்டு மலையகத்திலுள்ள நூற்றுக் கணக்கான பாடசாலைகளை அபிவிருத்தி செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. க.பொ.த. உயர்தர வகுப்பில் சித்தியடைந்த சுமார் எட்டாயிரம் மாணவர்கள் மலையகத்தில் இருப்பதாக அண்மையில் நடத்தப்பட்ட ஆய்வொன்றின் மூலம் தெரியவந்துள்ளது. இம் மாணவர்களுக்குப் பயிற்சியளித்து அவர்கள் வாழும் பிரதேசங்களிலுள்ள பாடசாலைகளிலேயே நியமனம் வழங்குவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது. சிடா நிறுவனத்தின் உதவியைக் கொண்டு மலையகப் பாடசாலைகளை அபிவிருத்தி செய்யுத் திட்டம் ஜூலை முதல் வாரத்தில் ஆரம்பிக்கப்படுமென மலையகக் கல்வியதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

## தமிழரசுக் கட்சிக்குள் பூசல்

ஜனாதிபதியைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பி.க்கள் சந்தித்துப் பேசிய விடயங்கள் தொடர்பாக அக் கட்சிக்குள் கருத்து முரண்பாடுகள் எழுந்துள்ளன. சம்பந்தரும், சுரேஷ் பிரேமச்சந்திரனும் கடினப் போக்கைக் கையாண்டுள்ளனரென்று ரவிராஜ் மற்றும் ஈழவேந்தன் போன்றோர் தெரிவிக்கின்றனர். கட்சிக்குள் கடினப் போக்கு, மெத்தனப் போக்கு என்று இரு வேறுபட்ட அபிப்பிராயங்கள் தோன்றியுள்ளதாக உட்கட்சி வட்டாரங்கள் கூறுகின்றன. பத்மினி சிதம்பரநாதன், கஜேந்திரன் போன்றவர்கள் சம்பந்தர் - சுரேஷ் அணியை ஆதரிப்பதாகவும், மட்டக்களப்பு எம்.பி.க்கள் பலர் ரவிராஜ் பக்கம் சார்ந்திருப்பதாகவும் தெரியவருகிறது.

## சமரவீரவின் சமரச உத்தி

பாராளுமன்ற ஜனநாயகத்தையும், பாராளுமன்ற உறுப்பினர்களின் சிறப்புரிமையையும் பாதுகாக்கக் கோரி எதிர்க்கட்சிகள் கூட்டாகச் சபாநாயகரிடம் சமர்ப்பித்த மகஜரில் எம்மையும் கேட்டிருந்தால் நாமும் கைச்சாத்திட்டிருப்போம் என்று அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்தார். ஜே.வி.பி. பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸவும் இக் கருத்தையே தெரிவித்தார். ஆளும் கட்சிகளிடம் எதிர்க்கட்சிகள் கையொப்பத்தைக் கேட்டிருந்தால் அவர்களும் கையொப்பமிட்டிருப்பார்கள். அப்போது பாராளுமன்றத்திலுள்ள 225 எம்.பி.க்களுமே இந்த மகஜரில் கைச்சாத்திட்டிருப்பார்களென்று மங்கள சமரவீர கூறிய கருத்து அபாரமானது என்கிறார் அரசியல் அவதானியொருவர்.

## சம்பந்தமில்லாமல் பேசும் சம்பந்தர்

தமிழ் மக்களால் நிராகரிக்கப்பட்ட ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சிக்கு அமைச்சுப் பதவி வழங்கியது தவறெனக் கூறும் தமிழரசுக் கட்சி எம்.பி. சம்பந்தன், உண்மையிலேயே மட்டக்களப்பு மக்களால் கடந்த தேர்தலில் நிராகரிக்கப்பட்ட ஜோசப் பரராஜசிங்கத்தை தேசியப் பட்டியல் மூலம் எம்.பி.யாக்கியது எந்தளவுக்கு நியாயமானதென்று தமிழரசுக் கட்சியின் ஆரம்பகால உறுப்பினரான ஹரிச்சந்திரன் வாகீசன் என்பவர் விடுத்துள்ள அறிக்கையொன்றில் கேள்வி எழுப்பியுள்ளார். ஈ.பி.டி.பி. அணியினரையும், ஆனந்தசங்கரியின் சுயேச்சைக் குழுவினரையும் சுதந்திரமாகத் தேர்தல் பிரசாரம் செய்யப் புலிகள் அனுமதிக்கவில்லை. அதுமட்டுமல்ல, அவர்கள் மிரட்டப்பட்டார்கள். அந்த நிலையில் ஒரு ஆசனத்தைப் பெற்றதே பெரிய விடயம் என்றும் வாகீசன் இந்தியாவிலிருந்து விடுத்திருக்கும் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

## நிலாவினி உட்பட பெண் புலிகள் நால்வரின் குடும்பத்தவர்கள் 17 பேர் விடுதலை!

புலிகளின் முன்னாள் மட்டக்களப்பு - அம்பாறை முக்கியஸ்தர் கருணா அம்மானோடு கொழும்புக்குத் தப்பிச் சென்று, மீண்டும் வன்னிப் புலிகளோடு இணைந்துகொண்ட நிலாவினி, பிரேமினி, லாவண்யா, தீந்தமிழ் என்ற நான்கு பெண்களினதும் குடும்ப அங்கத்தவர்கள் பதினேழு பேர் வன்னிப் புலிகளால் விடுவிக்கப்பட்டுள்ளனர். புலிகளின் மகளிர் பிரிவுத் தளபதிகளென்று கூறப்படும் இந்த நால்வரும் தலைமறைவானதையடுத்துக் கடந்த ஏப்ரல் மாதம் 13ஆம் திகதி இவர்களின் பெற்றோரும், சகோதர, சகோதரிகள் சிலரும் வன்னிப் புலிகளால் கைதுசெய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர். இவர்கள் நால்வரும் மட்டக்களப்புக்குத் திரும்பி வராதவரை நெருங்கிய குடும்ப அங்கத்தவர்களை விடுவிக்கப் போவதில்லை என்றும் வன்னிப் புலிகள் தெரிவித்திருந்தனர். அது மட்டுமன்றி, உயிரோடு வீடுகளுக்குத் திரும்ப அனுமதிக்கப் போவதில்லையென்று புலிகள் மிரட்டினரென்றும் தெரிவிக்கப்படுகிறது. இது பற்றிப் பெண் புலிகள் கருணாவுக்குத் தெரியப்படுத்தியதோடு, தங்களை மீண்டும் மட்டக்களப்புக்குச் செல்ல அனுமதிக்குமாறு கருணாவைக் கேட்டுக்கொண்டதாகவும், அதற்கு அவர் ஆரம்பத்தில் மறுப்புத் தெரிவித்ததாகவும் கருணா தரப்புத் தகவல்கள் கூறுகின்றன.

இந்த நால்வரினதும் குடும்ப உறுப்பினர்களைச் சுட்டுக் கொல்லப் போவதாக வன்னிப் புலிகள் மிரட்டினார்களென்ற தகவல் கருணாவுக்குத் தெரிவிக்கப்பட்டதையடுத்தே இவர்களை மட்டக்களப்புக்குத் திரும்பிச் செல்லக் கருணா அனுமதியளித்துள்ளார். ஆனால், தான் சம்பந்தப்பட்ட முக்கியமான தகவல்களை வன்னிப் புலிகளுக்கு அறிவிக்கக் கூடாதென்ற உறுதிமொழியைப் பெற்றுக்கொண்டே இவர்கள் திரும்பிச் செல்லக் கருணா அனுமதியளித்துள்ளார். மட்டக்களப்புக்கு வந்து சேர்ந்த நான்கு பெண் புலிகளையும் வன்னிப் புலிகளின் கிழக்குத் தலைமை தனித்தனியாக விசாரித்த பின்னரே நெருங்கிய குடும்ப அங்கத்தவர்கள் விடுவிக்கப்பட்டனர். மட்டக்களப்பு - அம்பாறையை விட்டு வெளியே செல்லக் கூடாதென்றும் புலிகளோடு சம்பந்தப்பட்ட எந்த விடயங்கள் பற்றியும் எவருக்கும் தெரிவிக்கக்கூடாதென்றும் எச்சரித்த பின்னரே அவர்கள் வீடுகளுக்குச் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

## பிள்ளைகள் கடத்தல்

கடந்த மாதம் பதினெட்டு வயதுக்குக் கீழ்ப்பட்ட 67 சிறுவர், சிறுமிகளை ஆயுதப் பயிற்சிக்கெனப் புலிகள் கடத்திச் சென்றுள்ளனரென்று ஐ.நா. சிறுவர் நிதியத்தின் (யுனிசெப்) பேச்சாளரான ஜியோப்ரே கீல் கூறினார். ஜனவரி மாதம் 23 பிள்ளைகளையும் பெப்ரவரியில் 35 சிறுவர், சிறுமிகளையும் மார்ச் மாதம் 13 பிள்ளைகளையும் ஏப்ரலில் 57 சிறுவர்,சிறுமிகளையும் புலிகள் கடத்திச் சென்றுள்ளனரென்றும் அவர் கூறினார்.

## புலிகளின் உள்விவகாரத்தில் ஹக்கீம் தலையீடு

புலிகளைப் பலவீனப்படுத்த எவரும் துணை போகக் கூடாது என்று புலிகளுக்காக வக்காலத்து வாங்கும் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம், புலிகளால் பாதிக்கப்பட்ட முஸ்லிம்களுக்கு உதவும்படி ஏன் புலி இயக்கத்தை வற்புறுத்தத் தயங்குகிறாரென்று நுஆ என்றழைக்கப்படும் தேசிய ஐக்கிய முன்னணியின் முக்கியஸ்தர்களிலொருவரான அபூபக்கர் முஹமத் என்பவர் கேள்வி எழுப்பினார்: வடக்கிலிருந்து புலிகளால் விரட்டப்பட்ட 75 ஆயிரத்துக்கு மேற்பட்ட முஸ்லிம்கள் இன்னமும் தமது சொந்த இடங்களுக்குத் திரும்ப முடியாமல் அகதி முகாம்களிலேயே வாழ்கிறார்கள். யாழ்ப்பாணத்தில் பல முஸ்லிம்களின் வீடுகளில் இன்னமும் புலிகளின் மாவீரர் குடும்பங்களே இருக்கின்றன. இவர்களுக்கெல்லாம் இயல்பு வாழ்க்கை நடத்த உதவும்படி புலிகளை ஹக்கீம் கேட்கலாமே என்றும் அவர் சொன்னார். கிழக்கில் முப்பதாயிரம் முஸ்லிம் குடும்பங்களின் வயற்காணிகள் இப்போதும் புலிகள் வசமே இருப்பதாக அண்மையில் வெளியிடப்பட்ட மனித உரிமைகள் ஆணைக் குழுவின் ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. புலிகளுக்காகப் பேசும் இவர், இக் காணிகளை முஸ்லிம்களிடம் கையளிக்கும்படி கேட்கத் தயங்குவது ஏன்? என்றும் கேள்வி எழுப்பினார். புலிகளின் உள்விவகாரத்தில் எவரும் தலையிடக் கூடாது என்று கூறும் ஹக்கீம், புலிகளின் உட்பிரச்சினை சம்பந்தப்பட்ட விடயத்தில் ஒரு பக்கச் சார்பாகக் கருத்துக் கூறுவதும் உள்விவகாரம் சம்பந்தப்பட்ட வெளியார் தலையீடு என்றும் அபூபக்கர் சொன்னார்.

## சுவிஸில் வீரமக்கள் தினம்

தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் சுவிஸ் கிளையினர் வழமை போல இம்முறையும் சுவிஸில் வீரமக்கள் தின ஏற்பாடுகளைச் செய்து வருகின்றனர். இது குறித்து கடந்த 13.06.2004 அன்று தமிழ் சிறார்களுக்கான அறிவுத்திறன் போட்டிகளையும் நடாத்தியிருந்தனர். எதிர்வரும் 04.07.2004 அன்று நடைபெறும் வீரமக்கள் தின வைபவத்தில் இதற்கான பரிசளிப்பு மற்றும் நாடகம், பட்டிமன்றம் போன்ற கலைநிகழ்வுகளும் இடம்பெறும் என அறியப்படுகிறது. விழா நடைபெறும் இடம் Bodenacker. 25, Gemeinsaft zenrtum, Unter Afolten. தொடர்புகளுக்கு 076.3681546.

## நடேசனைச் சாடுகிறார் முன்னாள் மாகாண அமைச்சர்

மட்டக்களப்பில் சுட்டுக் கொல்லப்பட்ட ஊடகவியலாளர் நடேசன் வடக்கு - கிழக்கு மாகாண சபை ஆட்சிக் காலத்தில் புலிகளின் உளவாளியாகச் செயற்பட்டவரென்று மேற்படி மாகாண சபையின் முன்னாள் அமைச்சரொருவர் குற்றஞ்சாட்டினார். இதனால் முன்னாள் நிதியமைச்சராகவிருந்த கிருபாகரன் இவரைத் 'தட்டு'வதற்குத் திட்டமிட்டிருந்தாரென்றும் முதலமைச்சர் வரதராஜப்பெருமாளினதும் தனதும் தலையீட்டையடுத்தே நடேசன் தப்பிப் பிழைத்தாரென்றும் அவர் சொன்னார். 'தமிழீழத்தின் குரல்' என்ற வானொலிச் சேவையை அப்போது மும்மொழிகளிலும் ஒலிபரப்பி வந்தோம். எங்கிருந்து இந்த வானொலிச் சேவை நடத்தப்படுகிறதென்பதைக் கண்டுபிடிக்க இலங்கை அரசும், புலிகளும் ஆலாய்ப் பறந்துகொண்டிருந்தனர். திடீரென ஒரு நாள் எனக்கு அநாமதேயத் தொலைபேசி அழைப்பொன்று வந்தது. "டேய்... (ஒரு சமயம் சார்ந்த தமிழ் பேசும் மக்களைக் குறிப்பிட்டுக் கொச்சைப் படுத்தும் குறியீட்டுச் சொல் அது. முழுமையாக எழுதுவது அசிங்கமானது) உங்கட றேடியோ எங்கேயிருந்து ஒலிபரப்பாகுதெண்டு தெரியுமடா. கெதியில தர்றம் வேலை" என்று அழைத்த குரல் எச்சரித்தது. அப்போது எமது ஊடகத்துறைப் பணிப்பாளராக இருந்தவர் நடேசன். ஏற்கெனவே அவர் மீது சந்தேகம் கொண்டிருந்த கிருபாகரன், காட்டிக் கொடுத்தவர் நடேசனென்றும், புலிகளிடமிருந்து 'சம்திங்' பெறுவதற்காகவே இதைச் செய்கிறாரென்றும் அடித்துச் சொல்லிவிட்டார். அப்படியானால் ஈ.பி.ஆர்.எல்.எப். முக்கியஸ்தர்களெல்லாம் இந்தியாவுக்குக் கப்பலேறிய பின்னர், புலிகளால் நடேசன் கைதுசெய்யப்பட்டதாகக் கூறப்படுகிறதே. தமது ஒற்றரென்று தெரிந்திருந்தால் புலிகள் பிடித்திருக்கமாட்டார்களே என்று கேட்டபோது,

"அங்குதான் விடயமே தங்கியுள்ளது. ஒற்றனென்ற சந்தேகத்தின் பேரில் நாம் அவரைக் கைவிட்டுச் சென்றுவிட்டோம். புலிகளுக்குப் பணத்துக்காக ஒற்றர் வேலை பார்த்த நடேசனை, புலிகளும் 'இரு தரப்பு ஒற்றராக' இருக்கலாமென்று சந்தேகப்பட்டதோடு, தம்மிடம் அவர் கறந்த பணத்தையும் பறித்துக்கொள்வதற்காகவே அவரைப் பிடித்தனர். சந்தேகம் தீர்ந்ததும் அவர்கள் விடுவித்துவிட்டனர்" என்றார் தனது 'யூசுவலான' (வழமையான) சிரிப்போடு அவர்.

# முரசம்

## பாராளுமன்றத்தில் ஜனநாயகம்

*அன்புள்ள உங்களுக்கு, வணக்கம்.*

பாராளுமன்றத்தை ஜனநாயகத்தின் அடையாளமாகக் கொள்வர். ஆனால் இப்போது பாராளுமன்றத்தில் ஜனநாயகம் பேணப்பட வேண்டுமெனப் பாராளுமன்ற உறுப்பினர்களே கையெழுத்துப் போடுகின்ற நிலைமை ஏற்படுகின்றது.

பாராளுமன்றத்தில் இத்தகைய கோரிக்கை எழுவதற்கான நிகழ்வு அண்மையில் நிகழ்ந்த புத்த பிக்கு விவகாரமே. ஜாதிக ஹெல உறுமய கட்சியைச் சேர்ந்த பா.உ. மக்மி மனு தயாரத்ன தேரர் சத்தியப்பிரமாணம் எடுப்பதற்கு நீதிமன்றம் விதித்திருந்த தடையுத்தரவுக்கு மாறாக, அத்தகைய தடையுத்தரவு தனக்குக் கிடைக்கவில்லை என்று, குறிப்பிட்ட பிக்குவைச் சத்தியப்பிரமாணம் செய்ய சபாநாயகர் அழைத்திருந்தார். இதைத் தொடர்ந்து அத்தகைய சத்தியப்பிரமாணம் தவறானதெனக் கூறி ஆளுங்கட்சித் தரப்பினர் ஆட்சேபித்தனர். அப்போது ஏற்பட்ட அமளிதுமளியின்போது தாம் தாக்கப்பட்டதாகப் புத்த பிக்கு கூறுகிறார். இதையடுத்து ஜனநாயகம் பாதுகாக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கை முன்வைக்கப்படுகிறது.

எந்தத் தரப்பும் இதை எதிர்ப்பதற்கு அவசியமில்லை. இது தனித்து எதிர்க்கட்சிகளின் கோரிக்கையாக அமைவதாகவன்றி பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் அனைத்துக் கட்சிகளும் ஆதரிக்க வேண்டிய கோரிக்கையே. பாராளுமன்றத்துக்குள் ஜனநாயக நடைமுறைகள் பேணப்படுவது உறுதிசெய்யப்பட வேண்டும். இதேவேளை பாராளுமன்ற உறுப்பினர்களின் நடத்தைகள் மட்டுமன்றி, பாராளுமன்றத்தில் மேற்கொள்ளப்படும் தீர்மானங்களும் நியாயமானவையாக அமைய வேண்டுமென்பதைக் கருத்தில் கொள்ள வேண்டும்.

நீதிமன்றத் தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையில் அதை உதாசீனம் செய்து, சத்தியப்பிரமாணம் செய்ய அழைத்தமை ஜனநாயகத்திற்கு ஏற்புடையதா என்பதை ஆராயாமல், அதனால் ஏற்பட்ட அமளிதுமளிகளில் மட்டுமே ஜனநாயகத்தைத் தெடுவது ஆரோக்கியமான ஒன்றல்ல. இவ்வாறான பல அமளிதுமளிகள் முன்னரும் நடந்திருக்கின்றன. முன்னாள் அமைச்சர் மகேஸ்வரன் பாராளுமன்றத்தில் செருப்பை எடுத்துக் காட்டியிருந்தார். 2000ஆம் ஆண்டின் கடைசிப் பகுதியில் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க பாராளுமன்றத்தில் சமர்ப்பித்த அரசியல் அமைப்பு ஆலோசனைகளை அப்போது எதிர்க்கட்சியாகவிருந்த ஐக்கிய தேசியக் கட்சி சபைக்குள் வைத்துத் தீயிட்டுக் கொளுத்தியது. மற்றும் முன்பொருமுறை பாராளுமன்றத்துக்குள் ஏற்பட்ட அமளியில் அப்போதைய பா.உ.ஆக இருந்த வாசுதேவ நாணயகார சபாநாயகர் இருக்கையில் சென்று அமர்ந்தார். அவர் மீது ஆளுங் கட்சி பா.உ.க்கள் சபைக்குள்ளேயே தாக்குதல் நடத்தினர். இத்தகைய சம்பவங்கள் பல நிகழ்ந்திருந்தாலும், தற்போதுதான் புத்த பிக்கு தாக்கப்பட்டதாகக் கூறி, பாராளுமன்றத்துக்குள் ஜனநாயகம் பாதுகாக்கப்பட வெண்டுமென்ற கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது. காலம் பிந்தியதென்றாலும் இக் கோரிக்கையைச் சகலரும் ஆதரிக்கவே வேண்டும். அத்துடன் அது அனைத்துத் தரப்பினருக்கும் பொதுவானதாகவும் மதிக்கப்பட வேண்டும். சபாநாயகர் போன்ற பொறுப்பு வாய்ந்தவர்களின் தீர்மானங்கள் கட்சி சார்பற்றும் நியாயமானதாகவும் அமைவது அதை வீடவும் அவசியமாகும். இல்லையேல் இத்தகைய கோரிக்கையே அர்த்தமற்றதாகும்.

■ ■

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை

*என்றென்றும் அன்புடன்,*
*ஆசிரியர்.*

---

# எக்ஸ்ரே ரிப்போர்ட்

# நிபந்தனைகளுக்குள் தடுமாறும் பேச்சுக்கள்

இலங்கையின் தலையாய பிரச்சினையான இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணுமுகமாக, திரும்பவும் புதிய அரசாங்கத்துக்கும் புலிகளுக்கும் இடையில் பேச்சுவார்த்தை முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. புதிய அரசாங்கம் பதவியேற்றதும் ஆரம்பத்தில் பெருத்த சந்தேகக் கண்கொண்டு நோக்கி, எச்சரிக்கைத தொனியில் பேசிய தமிழரசுக் கட்சியினர், குறிப்பாக அதன் பாராளுமன்றக் குழுத் தலைவர் சம்பந்தன், பின்னர் ஜனாதிபதியின் பதில்களைத் தொடர்ந்து இறங்கி வந்தார்.

எனினும், தற்போதைய நிலையில் பேச்சுக்களை ஆரம்பிப்பதில் இன்னும் சில சிக்கல்கள் இருக்கத்தான் செய்கின்றன. அவற்றில் முக்கியமான விடயம் பேச்சுக்கள் தொடர்பாக புலிகள் விதித்துள்ள நிபந்தனைகள்.

இனப் பிரச்சினைக்கான தீர்வுக்காக நிகழ்த்தப்பட்ட முன்னைய பல பேச்சுவார்த்தைகளிலும் இத்தகைய நிபந்தனைகளின் தலைதூக்கலே பாரிய முட்டுக்கட்டைகளாக உருவெடுத்திருந்தன. முறிவுக்கும் வழிகோலியிருந்தன.

இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் வாயிலாக ஏற்றுக் கொள்ளப்பட்ட மாகாண சபைக்கான இடைக்கால நிர்வாக சபை தொடர்பான பேச்சுவார்த்தைகளின்போதும் இவ்வாறுதான் நிகழ்ந்தது. அதனால் அப்போது சமாதானத்துக்கான ஒரு பொன்னான சந்தர்ப்பம் தவறவிடப்பட்டது.

மாகாண சபைக்கான இடைக்கால நிர்வாக சபையில் புலிகளுக்குப் பெரும்பான்மை ஆசனங்களாக 7 ஆசனங்கள் வழங்க இணக்கம் காணப்பட்டது. அடுத்து அந்த இடைக்கால நிர்வாக சபைக்கான முதலமைச்சர் பதவிக்கு புலிகளிடம் 3 பெயர்களைச் சிபாரிசு செய்யும்படி கோரப்பட்டது. அதன்படி புலிகள் 3 பெயர்களைச் சிபாரிசு செய்தனர். அம் மூவரில் ஜே.ஆர். சி.வி.கே.சிவஞானத்தைத் தேர்ந்தெடுத்தார்.

இதனை ஏற்றுக்கொண்டு இடைக்கால நிர்வாக சபையைப் பொறுப்பேற்றிருந்தால் இன்று வரை நீடிக்கும் பல பிரச்சினைகள் தீர்ந்திருக்கும். சுமார் 17 ஆயிரம் புலிப் போராளிகளின் மரணமும் தவிர்க்கப்பட்டிருக்கும். அத்தோடு இந்தியப் படைகளுடனான மோதல், ராஜீவ்காந்தி படுகொலை, அதன் காரணமாக இந்திய அரசோடு ஏற்பட்ட பகைமை என்பன தவிர்க்கப்பட்டிருக்கும்.

ஆனால் எப்போதோ, எந்த மக்களின் பிரச்சினைகளுக்கான தீர்வாக மாகாண சபைகள் உருவாக்கப்பட்டனவோ, அந்த வடக்குக் கிழக்கு மாகாண சபை இயங்காதிருக்க, ஏனைய ஏழு மாகாணங்களுக்குமான மாகாண சபைகள் இயங்குகின்றன. தற்போது அவற்றில் சிலவற்றுக்கான தேர்தல்களும் நிகழ்ந்துகொண்டிருக்கின்றன. வடக்கு- கிழக்கில்தான் சபையும் இல்லை; தேர்தல்களும் இல்லை; கடந்த 14 வருடங்களாக!

ஆனால், இவற்றுக்கெல்லாம் காரணமாக, அமைந்தது அப்போதைய பேச்சுவார்த்தைகளில் ஏற்பட்ட ஒரு அற்பப் பிரச்சினையே. புலிகள் சிபாரிசு செய்த மூவரில் அன்றைய ஜனாதிபதி ஜே.ஆர். சி.வி.கே.சிவஞானத்தை முதலமைச்சர் பதவிக்குத் தேர்ந்தெடுத்தார். ஆனால், புலிகளோ, இல்லை அம் மூவரில் மற்றொருவரான பத்மநாதனையே முதலமைச்சராக்க வேண்டுமெனப் பிடிவாதம் செய்தனர்.

ஆனால், பத்மநாதன் மீது வழக்கொன்று சுமத்தப்பட்டிருந்ததைக் காரணங்காட்டி ஜே.ஆர். அதை மறுத்துவிட்டார். இதனால் புலிகள் இடைக்கால நிர்வாக சபையை ஏற்க மறுத்துவிட்டனர்.

இதே பத்மநாதன் பின்னர் வரதராஜப்பெருமாளை முதலமைச்சராகக் கொண்டு ஈ.பி.ஆர்.எல்.எப். கட்சியின் தலைமையில் இயங்கிய வட-கிழக்கு மாகாண சபையில் புனர்வாழ்வு அமைச்சுக்கான செயலாளராகச் செயற்பட்டார். புலிகள் முதலமைச்சராக்க நினைத்தவர் செயலாளராகவே செயற்படத் தயாராக இருக்கையில், புலிகள் அவருக்கு முதலமைச்சர் பதவி வழங்க வேண்டும் என்று வலியுறுத்தியே அன்று கிடைத்திருந்த இடைக்கால நிர்வாக சபையைக் கைவிட்டது எத்துணை அனாவசியமானது என்பது வட - கிழக்கு மக்கள் சிந்திக்கத் தக்கது. புலிகள் எப்போதுமே தங்கள் கருத்தை மக்களின் கருத்தென வலியுறுத்துவதுண்டு. ஆனால், மக்களுக்கோ அப்போது யார் முதலமைச்சராக்கப்பட வேண்டுமென்ற பிடிவாதமான நிபந்தனையேதும் இருந்ததென்று கூறி இதை நியாயப்படுத்த முடியுமா?

இதேவேளை, புலிகள் தாங்களே சிபாரிசு செய்த ஒருவர்தான் சி.வி.கே. சிவஞானம். அதையே ஜே.ஆரும் அங்கீகரித்து நியமிக்க முன்வந்தார். ஆனால், புலிகள் உடனடியாக தாமே சிபாரிசு செய்தவரைத் தாமே நிராகரித்தனர். இப்போது, கடந்த பாராளுமன்றத் தேர்தலில் அதே சி.வி.கே.சிவஞானத்தை தமது சிபார்சில் தமிழரசுக் கட்சியின் யாழ் மாவட்ட வேட்பாளராக நிறுத்தியிருந்தனர். சி.வி.கே.சிவஞானத்தை இன்று அங்கீகரிக்கும் புலிகள் அன்று அவரது நியமனத்தை ஒரு பிரச்சினையாகக் காட்டி, 17 வருடங்களுக்கு முன்னரே கிட்டியிருந்த சமாதானத்துக்கான வாய்ப்பொன்றை நிராகரித்தனர். இன்று தாம் நேரடியாகப் பங்குபற்றாது தமது சார்பில் பிற கட்சியினரையே பாராளுமன்றத்தில் செயற்பட வைக்க முடியுமாக இருக்கும் புலிகளுக்கு, அன்று தாமே சிபாரிசு செய்த ஒருவரை முதலமைச்சராகக் கொண்டு, தாமே பெரும்பான்மையாக இருக்கின்ற ஒரு இடைக்கால நிர்வாக சபையை இயக்க முடியாதென்று சொல்வதற்கு நியாயமுண்டா? அவ்வாறு புலிகள் சிபாரிசு செய்த ஒரு முதலமைச்சர் புலிகளின் கட்டுப்பாட்டை மீறி நடந்துகொள்ளத்தான் முடிந்திருக்குமா? எவ்வாறோ, அந்த வாய்ப்புப் பாழாக்கப்பட்டது. இப் பேச்சுவார்த்தைகளின் முறிவின் பின்னான நிகழ்வுகளில் பலிக்கடாவாக்கப்பட்டவர் ராஜீவ்காந்தி.

இதையடுத்த பேச்சுவார்த்தைகள் புலிகளுக்கும் ஜனாதிபதி பிரேமதாஸாவிற்கும் இடையில் நிகழ்ந்தன. இப் பேச்சுவார்த்தைகளில் புலிகளின் ஆர்வம் ஒரு தீர்வினை எட்டுவதை விட இந்தியப் படைகளைத் திருப்பி அனுப்புவதிலும், வட - கிழக்கு மாகாண சபையைக் கலைப்பதிலுமே இருந்தது. பிரேமதாஸாவுக்கு இதில் இருந்த இந்திய எதிர்ப்புணர்வைப் பயன்படுத்திப் புலிகள் தமது நோக்கத்தை நிறைவேற்றிக் கொண்டனர். இந்தியப் படைகளுக்கு எதிராக மோதுவதற்காக பிரேமதாஸாவால் புலிகளுக்குப் பெருந்தொகைப் பணமும் ஆயுதங்களும் வெடிமருந்துகளும் பணமும் வழங்கப்பட்டன. ஈழ விடுதலைப் போராட்டம் ஆரம்பித்தபின் புலிகள் எதிரியாகக் கருதி வந்த இலங்கை அரசாங்கத்துடன் ஆயுதங்கள் பெற்றுக்கொள்ளுமளவுக்கு நட்புறவு பாராட்டியதும் அதுவே முதன்முறையாகும். ஆனால், அந்த அன்னியோன்னியத்தைப் பயன்படுத்தியும் புலிகள் ஒரு தீர்வுக்கான உடன்பாட்டைக் கண்டுகொள்ளவில்லை. இந்தியப் படைகள் திருப்பி அனுப்பப்பட்டு வட-கிழக்கு மாகாண சபை கலைக்கப்பட்டதுடன் இந்த அன்னியோன்னியம் முடிவுக்கு வந்தது. புலிகள் கலைக்கப்பட்ட அம் மாகாண சபையைப் பொறுப்பேற்கவும் இல்லை. இல்லையேல் புதிய தீர்வொன்றைப் பிரேமதாஸாவுடன் ஈட்டிக்கொள்ளவுமில்லை.

உண்மையில் புலிகள் பிரேமதாஸாவுடன் நடத்திய பேச்சுவார்த்தைகளில் என்ன பேசப்பட்டதென்பது இன்னமும் எவருக்கும் தெரியவில்லை. ஒன்றுமே பேசப்படவில்லையென்றும் கூடக் கூறுகிறார்கள். எவ்வாறாயினும் பாலசிங்கம் எழுதிய சுயசரிதை நூலில், இப் பேச்சுவார்த்தைகளின்போது புலிகள் மாகாண சபையைப் பொறுப்பேற்க வேண்டுமென்றும், அதற்கு அவர்கள் ஆயுதங்களை கைவிட வேண்டுமென்று கோரியதாகவும், இது புலிகளை விசனத்துக்குள்ளாக்கியதாகவும் குறிப்பிடப்படுகிறது.

புலிகள் - பிரேமதாஸா பேச்சுவார்த்தை இருவருக்குமான பொது நோக்கத்தை ஈட்டிக்கொண்டதுடன் முடிந்தது. பின்னர் மறுபடி யுத்தம்! அப்போது பிரேமதாஸா பேச்சுவார்த்தைகளுக்கு மூன்று முன்நிபந்தனைகளை முன்வைத்தார்.

01. புலிகள் பிரிவினையைக் கைவிட வேண்டும்.

02. புலிகள் ஆயுதங்களைக் கையளிக்க வேண்டும்

03. புலிகளின் தலைவர் பிரபாகரன் பேச்சுவார்த்தைகளில் நேரடியாகப் பங்குபற்ற வேண்டும்.

புலிகள் இந் நிபந்தனைகளை ஏற்றுக்கொள்ளமாட்டார்களென்பது பிரேமதாஸாவுக்குத் தெரியும். ஆனாலும், புலிகள் பிரிவினையைக் கைவிடமாட்டார்கள், ஆயுதங்களை ஒப்படைக்க மாட்டார்கள். புலிகள் தலைவர் பிரபாகரனைத் தவிர வேறு எவர் கூறும் முடிவையும் புலிகளின் இறுதி முடிவாகக் கொள்ள முடியாது என்ற கருத்தை பிரேமதாஸா எய்தியிருந்தார். இதனை வெளிப்படுத்தவே இந் நிபந்தனைகளை முன்வைத்தார்.

அப்போதைய பேச்சுக்களில் புலிகள் சார்பாகப் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டவர்கள் பாலசிங்கம், யோகி ஆகியோர். ஆனால், அவர்களால் பேசப்பட்டவைக்குப் புலிகளின் தலைவர் பிரபாகரன் பொறுப்பேற்றுக்கொள்ளவில்லை. புலிகள் பேச்சுக்களை முறித்துக்கொண்ட தீர்மானம் கூட பேச்சுவார்த்தையில் ஈடுபட்ட இவர்களுக்குத் தெரியாது. புலிகள் யுத்தத்தை ஆரம்பித்து மட்டக்களப்பில் பொலிஸ் நிலையங்களைத் தாக்கிய வேளையில் பாலசிங்கம் கொழும்பில் இருந்தார். அவர், அமைச்சர் ஹமீத்திடம், ஏதோ மட்டக்களப்பில் தவறுதலாக நிகழ்ந்துவிட்டது, தான் சென்று பேசிச் சரிப்படுத்துவதாகக் கூறியே விமானம் மூலம் அரசாங்கத்தின் உதவியுடன் புலிகளிடம் வந்து சேர்ந்தார்.

> **எப்போதோ, எந்த மக்களின் பிரச்சினைகளுக்கான தீர்வாக மாகாண சபைகள் உருவாக்கப்பட்டனவோ, அந்த வடக்குக் கிழக்கு மாகாண சபை இயங்காதிருக்க, ஏனைய ஏழு மாகாணங்களுக்குமான மாகாண சபைகள் இயங்குகின்றன. தற்போது அவற்றில் சிலவற்றுக்கான தேர்தல்களும் நிகழ்ந்துகொண்டிருக்கின்றன. வடக்கு- கிழக்கில்தான் சபையும் இல்லை; தேர்தல்களும் இல்லை; கடந்த 14 வருடங்களாக!**

இவ்வாறு தனது சொந்தப் புத்தியில் சமயோசிதமாக நடந்துகொள்ளாதிருந்தால் பாலசிங்கம் கூடக் கைதாகியிருக்கக் கூடும். எவ்வாறாயினும் அடுத்த பேச்சுவார்த்தைகளின் முறிவின் பின்னான யுத்தத்தின் பலிக்கடாவாகியவர் பிரேமதாஸா.

இதையடுத்து ஏற்பட்ட மற்றுமோர் சமாதானத்துக்கான சந்தர்ப்பம் 1994இல் புதிதாகப் பதவியேற்ற சந்திரிகாவின் பி.ஏ. அரசாங்கத்தின் வருகையுடன் ஏற்பட்டது. தமிழ் மக்களின் பெருத்த ஆதரவுடனும் சிங்கள மக்களின் பெருத்த ஆதரவுடனும் தேர்ந்தெடுக்கப்பட்ட ஜனாதிபதியாக சந்திரிகா பதவியேற்றார். அதுவரை காலமும் நிலவிவந்த இனவாத அரசியலை மாற்றி, இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணவும், தமிழ் மக்களின் நியாயமான அபிலாசைகளைத் தீர்க்கவும் பிரசாரம் செய்து வெற்றியீட்டிய ஒருவராக அவர் திகழ்ந்தார்.

பி.ஏ. அரசாங்கத்தின் வருகையின்போது அதுவரை நிலவிய வடக்குக் கிழக்குக்கான பொருளாதாரத் தடையை நீக்கி, புலிகளுடன் நிபந்தனைகளற்ற பேச்சுவார்த்தைக்கு அழைப்பு விடப்பட்டது.

எனினும், இப் பேச்சுவார்த்தைகளை புலிகள் இரு தட்டுகளாகப் பிரித்தனர். அன்றாடத் தேவைகளுக்கான பேச்சுவார்த்தைகள், அரசியல் தீர்வுக்கான பேச்சுவார்த்தைகள் என இரண்டு படுத்தினர். இவற்றில் அன்றாடத் தேவைகளுக்கான பேச்சுவார்த்தைகளையே முதலில் நடத்த வேண்டுமென்றும், அதை முடித்துக்கொண்டே அரசியல் தீர்வுக்கான பேச்சுவார்த்தைகளை நடத்த வேண்டுமெனவும் புலிகள் வலியுறுத்தினர். ஆனால், அரசாங்கமோ இரண்டையும் சமகாலத்தில் நடத்துவதே உசிதமானதெனத் தெரிவித்துவந்தது. ஆனால், புலிகள் அரசியல் பேச்சுவார்த்தைகளுக்கு முன்வரவில்லை. இறுதியில் அரசியல் பேச்சுவார்த்தைகளைத் தொடங்காமலே அப் பேச்சுவார்த்தைகள் முறிந்து போயின.

இப் பேச்சுவார்த்தைகளின்போது, ஒரு கட்டத்தில் புலிகள் மேலும் சில புதிய நிபந்தனைகளை முன்னிறுத்தினர்.

1. பூநகரி இராணுவ முகாமை அரசாங்கம் பின்வாங்கிக்கொள்ள வேண்டும்.

2. கிழக்கில் புலிகள் ஆயுதங்களுடன் நடமாட அனுமதிக்க வேண்டும்.

3. கடல் வலயத் தடைகளை நீக்க வேண்டும்.

என்பனவே அந் நிபந்தனைகளாக இருந்தன. இவற்றை அரசாங்கத்தால் ஏற்க முடியவில்லை. இதனால் இந் நிபந்தனைகளே பேச்சுவார்த்தைகளுக்கான முட்டுக்கட்டைகளாகி இறுதியில் முறிவுக்குத் தள்ளின. 2 வார முன்னறிவித்தல் வழங்கப்படுவதாக இணங்கிக்கொள்ளப்பட்டதையும் மீறி, திருகோணமலையில் கடற்படைக் கப்பலொன்றைத் தாக்கியதன் மூலம் புலிகள் மீண்டும் யுத்தத்துக்குச் சென்றனர். இப் பேச்சுவார்த்தைகளின் முறிவின்பின் ஏற்பட்ட விளைவுகளின் பலிக்கடாவானவர் ஜனாதிபதி சந்திரிகா. எனினும், அவர் குண்டு துளைக்காத காரினால் காப்பாற்றப்பட்டு ஒரு கண்ணைப் பறிகொடுத்ததுடன் தப்பிக்கொண்டார்.

இதையடுத்து பேச்சுவார்த்தைகளுக்கான சந்தர்ப்பம் 2002ஆம் ஆண்டு பதவிக்கு வந்த ரணிலின் ஐ.தே.க. அரசாங்கத்தில் ஏற்பட்டது. இதன்போது புலிகளுடன் யுத்தநிறுத்த ஒப்பந்தம் செய்துகொள்ளப்பட்டது. மூன்றாம் தரப்பு ஏற்பாட்டாளர்களாக நோர்வே அரசாங்கம் பங்கெடுத்தது. ஆறு சுற்றுப் பேச்சுவார்த்தைகள் நடந்தன. ஆனாலும் அவையும் நடைமுறை ஒழுங்குகள், நிதியுதவிகள், அன்றாட விடயங்கள் தொடர்பாகவே அமைந்தனவேயன்றி அரசியல் தீர்வு குறித்து நகரவில்லை. அதுவும் கூட புலிகள் உதவி வழங்கும் நாடுகளின் கூட்டமொன்றுக்கு அமெரிக்காவுக்கு அழைக்கப்படாததையடுத்து முறிவடைந்தது. அதன்பின் புலிகள் தமக்கான இடைக்கால நிர்வாக சபையொன்றைக் கோரி, அதற்கான வரைபொன்றை முன்வைத்தனர். அதுபற்றி ஆராயப்படாமலே அவ்வரசாங்கம் ஆட்சியிழந்தது.

தற்போது புதிய அரசாங்கம் பதவியேற்றுள்ள நிலையில் மீண்டும் பேச்சுவார்த்தைகளுக்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. ஆனால், முன்னைய காலங்களைப் போலவே மீண்டும் நிபந்தனைகள் தலைதூக்கியுள்ளன.

1. நோர்வே மூன்றாந் தரப்பு ஏற்பாட்டாளர்களாகப் பங்கேற்க வேண்டும்.

2. புலிகளை ஏகப் பிரதிநிதிகளாக ஏற்க வேண்டும்.

3. புலிகளுடன் மட்டுமே பேச்சுவார்த்தை நடத்த வேண்டும்.

4. பேச்சுவார்த்தைகள் வெளிநாடுகளிலேயே நடத்தப்பட வேண்டும்.

5. பேச்சுவார்த்தை புலிகள் முன்வைத்துள்ள இடைக்கால அதிகாரசபை யோசனைகளை அடிப்படையாகக் கொண்டதாக இருக்க வேண்டும் என்ற நிபந்தனைகளைப் புலிகள் முன்னிறுத்தியுள்ளனர்.

இப்போது கேள்வி, இந்த நிபந்தனைகளுக்கு மத்தியில் எப்படி அரசாங்கம் பேச்சுவார்த்தைகளைக் கொண்டுசெல்லப் போகிறது என்பதே. எனினும், பலரது எதிர்பார்ப்புக்கும் மாறாக, ஜனாதிபதி இந் நிபந்தனைகள் மீது சாதகமான ஒரு அணுகுமுறையை மேற்கொள்ளத் தயாராக முன்வந்திருந்தார். புலிகளை ஏகப் பிரதிநிதிகள் என்று ஏற்றுக்கொள்வதற்குப் பதில் முதன்மையான தரப்பினராகக் கொள்ள முன்வந்திருந்தார். நோர்வே அரசாங்கத்தை ஏற்பட்டாளராகப் பங்காற்ற அவரே அழைப்பு விடுத்திருந்தார். புலிகளுடன் மட்டுமே பேசவும் இணங்கியிருந்து பேச்சுவார்த்தைகளை வெளிநாடுகளில் நடத்தச் சம்மதித்திருந்தார். புலிகள் முன்வைத்த இடைக்கால அதிகார சபை குறித்தும் பேச்சுவார்த்தை நடத்த இணங்கி, அதேவேளை, அதற்குச் சமாந்தரமாக நிரந்தரத் தீர்வுக்கான பேச்சுவார்த்தைகளும் மேற்கொள்ளப்பட வேண்டுமெனக் கூறியிருந்தார்.

ஆனாலும், அந்த ஒன்றை புலிகள் நிராகரிக்கும் நிலையே இப்போது காணப்படுகிறது. அதாவது, நிரந்தரத் தீர்வுக்கான பேச்சுவார்த்தைகளை இப்போது நடத்தப் புலிகள் விரும்பவில்லை. அவர்கள் இடைக்கால அதிகார சபைக்கான பேச்சுக்களின் பின்னர்தான், நிரந்தரத் தீர்வு குறித்துப் பேசலாமெனக் கூறுகின்றனர்.

இந்த ஒன்றே, இப்போது ஒரு முட்டுக்கட்டையாகக் கிளம்பியுள்ளது. இதனை மேவி எப்படி இந்தத் தடவை கிடைத்துள்ள வாய்ப்பைச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளப்போகிறோம் என்பதே கேள்விக்குறியாக உள்ளது.

எமது பேச்சுவார்த்தை வரலாற்றில் நிபந்தனைகள் பேச்சுவார்த்தைகளைச் சாதகமான திசை வழியில் இட்டுச் சென்றுள்ளனவா? இல்லையேல் முட்டுக்கட்டைகளாகவே ஆகியுள்ளனவா? என்பதை நாம் அக்கறையுடன் ஆராய வேண்டியவர்களாக உள்ளோம்.

●

# இலங்கையின் தேர்தல் வரலாற்றில் நடந்த மிகப் பெரிய மோசடி

கடந்த ஏப்ரல் மாதம் இரண்டாம் திகதி நடைபெற்ற பொதுத் தேர்தலில் வடக்கு - கிழக்கு மாகாணத்தில்தான் தேர்தல் வரலாற்றிலேயே இல்லாத மிகப் பெரிய மோசடி நடைபெற்றது. மோசடி மூலமே தமிழர் தேசியக் கூட்டமைப்பு இருபத்தி இரண்டு ஆசனங்களைப் பெற முடிந்தது.

தேர்தல் மோசடியைச் சரியான ஆதாரங்களுடன் உறுதி செய்த ஐரோப்பிய ஒன்றியத்தின் தேர்தல் கண்காணிப்புக் குழுவினர், தமது தேர்தல் கண்காணிப்பு அறிக்கையைக் கடந்த வாரம் வெளியிட்டுள்ளனர். அத்தோடு ஐரோப்பிய தேர்தல் கண்காணிப்பாளர் திரு. ஜோன் குஸ்னகனுடன் இலங்கைக்கான ஐரோப்பிய ஒன்றிய வதிவிடப் பிரதிநிதி திரு. வூட்டர் வில்சன் அவர்களும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் அலுவலகத்திற்கு வருகை தந்து, இந்த இறுதி அறிக்கையில் உள்ள கீழ்வரும் பந்தியை திரு. ஜோன் குஸ்னகன் வாசித்துக் காட்டியதுடன் இறுதி அறிக்கையின் பிரதி ஒன்றையும் அமைச்சர் தேவானந்தாவிடம் கையளித்தார்.

"நாட்டின் வடக்கு - கிழக்குப் பகுதியைத் தவிர ஏனைய பகுதிகளில் தேர்தல் பெரும்பாலும் நீதியாகவும் ஜனநாயக ரீதியாகவும் நடந்து முடிந்துள்ளது. வடக்கு - கிழக்கு தேர்தல் முடிவுகள் அரசாங்கம் ஒன்றை அமைப்பதைத் தீர்மானிக்கும் சக்தியாக இருந்திருப்பின் அரசின் சட்டபூர்வத் தன்மை குறித்துக் கேள்வி எழுப்பப்பட்டிருக்கும். இலங்கையின் வடக்கு - கிழக்கு பகுதிகளில் தேர்தல் நடைபெற்றிருக்கும் முறை ஜனநாயக விரோதமானது. இதனை எந்த விதத்திலும் ஏற்றுக்கொள்ள முடியாது" என்று குறிப்பிட்டிருந்ததை அவர் சுட்டிக்காட்டினார்.

ஈ.பி.டி.பி.யும் ஆனந்தசங்கரியின் சுயேச்சை குழுவும் வவுனியாவில் புளொட்டும் வடக்கு - கிழக்கு தேர்தல் மோசடி நிறைந்ததென அறிவித்து மீள்வாக்குப் பதிவுக்கு உத்தரவிடும்படி உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்துள்ளன. இந்த நிலையில் இந்த அறிக்கையானது சட்ட வலுவுள்ளதாக அமையும் என சட்டவல்லுநர்கள் தெரிவிக்கின்றனர்.

யாழ். மாவட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு எதிராகப் போட்டியிட்ட ஈ.பி.டி.பி. மற்றும் ஆனந்தசங்கரியின் சுயேச்சைக் குழுவும் சுதந்திரமாக மக்கள் மத்தியில் இறங்கித் தேர்தல் பிரசாரம் செய்ய அனுமதிக்கப்படவில்லை. பிரசாரம் செய்தவர்களைப் பல்கலைக்கழக மாணவர்களும் புலிகளும் சேர்ந்து மாணவர்கள் என்ற போர்வையில் தாக்கியதோடு வாகனங்களும் சேதப்படுத்தப்பட்டன. ஆனந்தசங்கரியின் வாகனங்களும் வேட்பாளர்களும் கைதடிச்சந்தியில் வைத்து மிகவும் மோசமாகத் தாக்கப்பட்டனர். இத் தாக்குதல் சம்பவத்தை யாழ். பத்திரிகைகள் இருட்டடிப்புச் செய்தன. ஈ.பி.டி.பி.க்கு ஆதரவாகப் பிரசாரம் செய்தவர்கள் கடுமையாகத் தாக்கப்பட்டனர். குறிப்பாக தேர்தலுக்கு முதல் நாளன்று அக் கட்சியின் தேர்தல் முகவர்களாகச் செல்ல இருந்தவர்களின் வீடுகளுக்குச் சென்று தாக்கப்பட்டு மிரட்டப்பட்டனர். இதனால் தேர்தல் முகவர்களாகச் செல்ல இருந்தவர்கள் பயத்தினால் பின்வாங்கினார்கள். தமிழர் தேசியக் கூட்டமைப்பு கள்ளவாக்குள் போடுவதற்கு இது மிகவும் இலகுவாக இருந்தது. இது புலிகள் பிரயோகித்த ஒரு வழி. குறிப்பாக ஈ.பி.டி.பி.யின் முகவர்களாகப் பெண்களும் ஈடுபட்டார்கள். அவர்கள் பட்டப்பகலிலே கடத்தப்பட்டு ஆண் புலிகளால் தாக்கப்பட்டனர். அங்க சேட்டைகளிலும் ஈடுபட முனைந்தனர். சிங்கள இராணுவம் பெண்களுடன் சேட்டை விட்டால் பெரிய கொட்டை எழுத்துகளில் எழுதும் யாழ். பத்திரிகைகள், தமிழ்ப் பெண்கள் மீது மேற்கொள்ளப்பட்ட அசிங்கமான சேட்டைகள் குறித்து ஒரு வார்த்தைதானும் எழுதவில்லை. ஆனால் மாற்றுக் கட்சிகளுக்கு எதிரான திட்டமிட்ட பொய்ப் பிரசாரங்களைப் பத்திரிகையொன்று கட்டவிழ்த்து விட்டிருந்தது.

வடக்கில் தேர்தல் மோசடிகள் பரவலாக இடம்பெற்றன. ஆண்களின் வாக்குகளைப் பெண்களும் பெண்களின் வாக்குகளை ஆண்களும் போட்டார்கள். இறந்தவர்களின் வாக்குகளும் வெளிநாடுகளில் வசிப்போரின் வாக்குகளும் கூடப் போடப்பட்டன. இப்படியானவர்களின் வாக்காளர்கள் அட்டைகளை வீடுகளுக்குச் சென்று புலிகள் சேகரித்தனர். தேர்தல் தினத்தன்று தேர்தல் சாவடிகளுக்கு அண்மையில் வாகனங்களில் வைத்து குறிப்பிட்ட நபர்கள் மாறி மாறிச் சென்று கள்ள வாக்குகள் போட்டனர். கைவிரலில் போடப்படும் மையும் உடனுக்குடன் அழிக்கப்பட்டது. கோப்பாயில் ஒரு கட்டு வாக்குச்சீட்டு பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டது. இது போலியாக அச்சிடப்பட்டுள்ளதெனக் கண்டுபிடிக்கப்பட்டது.

தேர்தலுக்கு மூன்று நாட்களுக்கு முன்னர் யாழ். கச்சேரியில் யாழ். அரச அதிபரும் தேர்தல் உதவி ஆணையாளரும் தேர்தலில் போட்டியிடும் கட்சியின் வேட்பாளர்களை அழைத்துக் கூட்டம் நடத்தினார்கள். அக் கூட்டத்தில் ஈ.பி.டி.பி. வேட்பாளர் ஒருவர் கேள்வியொன்றை எழுப்பினார். தமது ஆதரவாளர்கள் பலருக்கு வாக்காளர் அட்டைகள் இன்னும் கிடைக்கவில்லை. தேர்தலுக்கு மூன்று நாட்கள் இருக்கின்றன என்று கேட்டார்.

அதற்குப் பதிலளித்த அரச அதிபர், நாற்பது சதவீதமான வாக்காளர் அட்டைகள் விநியோகம் செய்யப்பட்டிருக்கின்றன. இன்னும் அறுபது சதவீதமான அட்டைகள் விநியோகம் செய்யப்படவில்லை. போதிய ஆளணியினர் இல்லாததால் இவற்றை விநியோகம் செய்ய முடியவில்லை என்றார். அறுபது சதவீதமான வாக்காளர் அட்டைகளை எப்படி மூன்று நாட்களுக்கு விநியோகம் செய்யலாம் என்பது அதிகாரிகளுக்கும் புலிகளுக்கும் மட்டுமே புரிந்த விடயம். கிட்டத்தட்ட ஓர் இலட்சம் வாக்காளர் அட்டைகள் யாழ். பெரிய தபாலகத்தினுள் இருந்து தேர்தலுக்கு முதல் நாள் இரவு புலிகளால் எடுத்துச் செல்லப்பட்டன. கச்சேரியில் வாக்குகள் எண்ணும்போது பெட்டிகளுக்குள் மூன்று, நான்கு வாக்குச் சீட்டுக்கள் ஒன்றாக மடித்து போடப்பட்டிருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது.

**வடக்கில் தேர்தல் மோசடிகள் பரவலாக இடம்பெற்றன. ஆண்களின் வாக்குகளைப் பெண்களும் பெண்களின் வாக்குகளை ஆண்களும் போட்டார்கள். இறந்தவர்களின் வாக்குகளும் வெளிநாடுகளில் வசிப்போரின் வாக்குகளும் கூடப் போடப்பட்டன.**

இக் கூட்டத்தில் முகமாலை வாக்களிப்பு நிலையம் பற்றியும் கேள்விகள் கேட்கப்பட்டன. வன்னியில் உள்ள வாக்காளர்களுக்கும் புலிகள், வீட்டுச் சின்னத்துக்கு வாக்குப் போடும்படி பிரசாரம் செய்கிறார்கள். ஏனைய கட்சிகளின் சின்னம் அந்த மக்களுக்கு தெரியாதே. எனவே, தேர்தல் அன்று ஏனைய கட்சிகள் அங்கு சென்று துண்டுப்பிரசுரம் விநியோகிக்க வேண்டும் என்று கேட்டதற்கு, கூட்டமைப்பு வேட்பாளர் வாய்க்குள் முணுமுணுத்துக் கொண்டு கூட்டத்தைவிட்டு வெளியேறிவிட்டார். ஏனைய கட்சிகள் முகமாலையில் பிரசாரம் செய்யக் கூடாது என்பதை அந்த வேட்பாளர் தனது வெளிநடப்பு மூலம் காட்டியுள்ளார்.

ஆனால், திடீரென யாழ்ப்பாணத்திலிருந்து ஈ.பி.டி.பி.யின் முகமாலை தேர்தல் சாவடி முகவர்கள் அங்குபோய் இறங்கினார்கள். இதை அவதானித்த அரச அதிபர் தேர்தல் முகவர்களைப் பார்த்து, கிளிநொச்சியில் வாக்களிக்க உரிமையுள்ளவர்கள் மட்டுமே தேர்தல் முகவர்களாக வரலாம் என்றார். தேர்தல் சட்டத்தின்படி இலங்கைக் குடிமகன் எவரும் எங்கும் முகவர்களாகச் செயற்படலாம். எந்தச் சட்டத்தில் இப்படிக் கூறியிருக்கிறார்கள் என்று கேட்கப்பட்டபோது, அந்த நேரத்தில் வெளிநாட்டுக் கண்காணிப்புக் குழுவினரில் ஒருவர் அவரிடம் வந்து நடந்ததை விசாரித்தார். இப்படி பல மோசடிகளுக்கு அதிகாரிகளே துணை போனார்கள் என்பதுதான் கவலையான விடயம். முகமாலையிலும் தேர்தல் மோசடி கூடுதலாக நடைபெற்றது. ஐரோப்பிய தேர்தல் கண்காணிப்புக் குழு தனது அறிக்கையில் இதனைச் சுட்டிக்காட்டியிருக்கிறது. தேர்தல் மோசடிகளைச் செய்வதற்கு வன்னியிலிருந்து சுமார் நூறுக்கு மேற்பட்ட பெண் புலிகள் யாழ்ப்பாணம் திருக்குடும்ப ஆங்கிலப் பாடசாலையில் கொண்டுவந்து தங்க வைக்கப்பட்டனர். தேர்தல் முடிந்த இரவு அவர்கள் திரும்பி வன்னிக்குச் சென்றுவிட்டார்கள். இது வெளியில் தெரிந்த விடயம். வேட்பாளர் ஒருவரின் வாக்காளர் அட்டையை வாங்கி பெற்றோரின் பெயர், விபரங்களை விசாரித்தபோது திக்குமுக்காடினார் ஓர் இளம்பெண். வேட்பாளருக்கு வாக்காளரின் விபரங்களை அறியும் உரிமை சட்டத்தில் உண்டு. வேட்பாளரிடம் வாக்காளர் பட்டியலும் கையில் இருந்தது. கள்ள வாக்குப் போட வந்த பெண் மாட்டிக்கொண்டார். அங்கு கடமையிலிருந்த தேர்தல் அதிகாரியிடம் வேட்பாளர் நிலைமையைக் கூற, அந்த அதிகாரியோ "பிளீஸ் ஆளை விட்டு விடுங்கோ; போகட்டும். பிறகு தெரியும் தானே எங்களுக்கு பிரச்சினை வரும்" என்றார். இப்படித்தான் தமிழ் அதிகாரிகளுக்கு உயிர்ப் பயம் இருந்தது. அனைத்து தேர்தல் சாவடிகளிலும் இதே நிலைமைதான் காணப்பட்டது. யாழ்ப்பாணத்து ஆசிரியர் ஒருவர் இப்படிக் கூறினார். "தம்பி யாழ்ப்பாண முற்றவெளியில் வாக்குப் பெட்டிகளை வைத்து வாக்குகளைப் போடச் சொல்லியிருக்கலாம். வீணாக அரசாங்கம் தேர்தல் அலுவல்களுக்காக அதிகாரிகளை வைத்துச் சம்பளம் குடுக்கிறது. ஒருவரும் தேவையில்லை" என்றார் வேதனையும் கேலியும் கலந்த குரலில்.

முன்னர் நடந்து முடிந்த தேர்தல்களிலும் பல்கலைக்கழக மாணவர்கள் கள்ள வாக்குகள் போட்டனர். யாழ். பல்கலைக்கழகப் பேராசிரியர் சிற்றம்பலம் "பல்கலைக்கழக மாணவர்கள் கள்ள வாக்குப் போட்டதனால் அவர்களுக்குக் கரும்புள்ளி ஏற்பட்டுவிட்டது" என்றார்.

ஐரோப்பிய ஒன்றிய தேர்தல் அறிக்கைக்கு தமிழ்க் கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர்களின் பதில் என்ன? தாங்கள்தான் தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகள் என்பதை மறு பரிசீலனை செய்வார்களா? ●

-றெக்ஸ்-

## அதிரடி அய்யாத்துரை



***புதிய*** பாராளுமன்றத்தில முதலாம் நாள் எங்கட சம்பந்தனார் ஒரு சிம்ம கர்ச்சனை செய்தவரெல்லே! எனக்கு உந்தச் சிம்மக் குரல் கேட்டுப் புல்லரிச்ச கையோட இதே கர்ச்சனையை வேற எப்பவோ ஒருக்காக் கேட்டதா ஒரு ஞாபகம் தட்டிச்சுது. கன்ஸாட்டை எடுத்து வைச்சுப் புரட்டிப் பாத்தால் கடந்த அரசாங்கத்தின்ர முதலாவது பாராளுமன்ற அமர்விலயும் புல்லரிக்கிற பேச்சுத்தான் பேசியிருக்கிறா. அதில இருந்தத அந்தப்படியே வாசிக்கிறன் கேளுங்கோ. "இந்தப் பாராளுமன்றத்தின் ஆயுட்காலத்திற்குள் தமிழ்த் தேசிய இனத்தின் பிரச்சினைக்கு ஒரு நியாயமான நிரந்தரத் தீர்வு ஏற்படாமல் இருக்குமானால் சுயமரியாதையுள்ள எந்தத் தமிழனும் அடுத்த பாராளுமன்றத்துக்குச் சமூகம் தரமாட்டான் என்பதை இந்தச் சபையில் தெரிவிப்பது எனது கடமையெனக் கருதுகிறேன்." நீங்களும் வேணுமெண்டால் எடுத்து வாசிச்சுப் பாருங்கோ. கன்ஸாட் தொகுதி 139, ஓராம் இலக்கம் ஒன்பதாம் பக்கத்தில பதிவாகிக் கிடக்குது, 2001 டிசம்பர் 19ஆம் திகதி அவர் ஆற்றின உரை. பிரச்சினையைத் தீர்க்காட்டி மானமுள்ள தமிழன் அடுத்த பாராளுமன்றம் வரமாட்டானெண்டார். இப்ப திரும்பவும் வந்திருந்து வேற ஏதோ முழங்கிறார். அப்ப இவருக்கு மானமில்லையோ, இல்லை இவர் தமிழனில்லையோ, இல்லாட்டால் பிரச்சினைதான் தீர்ந்திட்டுதோ...எனக்கெண்டால் ஒரே குழப்பமாக் கிடக்குதுங்கோ.

"கூட்டத்தில் கூடிநின்று
கூவிப் பிதற்றலன்றி
நாட்டத்தில் கொள்ளாரடி - கிளியே
நாளில் மறப்பாரடி"

நான் சொல்லேல்லை. இதை அண்டைக்கே பாரதி சொல்லி விட்டான்!

***விளையாட்டை*** விளையாட்டா எடுத்துக் கொள்ளத் தெரியாதவை விளையாட வெளிக்கிடக் கூடாது பாருங்கோ. ஆப்ட்ரோல் ஒரு கிரிக்கெட்! 11 முட்டாள்கள் விளையாடப் பதினோராயிரம் முட்டாள்கள் இருந்து பாக்கிற விளையாட்டெண்டு எங்கட பேர்னாட்ஷோ கிண்டலடிச்ச விளையாட்டு. அதை எவ்வளவு சீரியஸாக்கிப் போட்டினம் எங்கட அரசியல்வாதிகள் பாத்தீங்களா? முரளி போடுற பந்து 'எறிபந்து' எண்டு அவுஸ்திரேலியப் பிரதமரே தலையிட்டுச் சொல்லிறதுக்கு என்ன அவசியம் வந்தது? பிரதமர் என்ன கிரிக்கெட் பிளேயரா? ஏன்தான் எல்லாத்துக்குமே தாங்கள்தான எசமானர்களாயிருக்க வேணுமெண்டு இந்த வெள்ளைக்காறர் நினைக்கினமோ! முரளி, ஒரு சின்ன நாட்டில இருக்கிற சின்னப் பையன்தான். ஆனால் அவனுக்கும் பெரிய நாட்டுப் பெரிய நாட்டுப் பெருமிதங்களுக்கெல்லாம் பதிலடி குடுக்கத் தெரியுமெண்டு காட்டியிருக்கிறார், அந்த நாட்டோட விளையாடுறத போய்க்கட் பண்ணி. அந்தப் பிரதமர் இப்பதான் ஏதோ சமாதானம் சொல்லித் தடுமாறுகிறார். இனியாவது சின்னத்தனங்கள் பண்ணிச் சிறுமதியராய் நடக்காட்டிச் சரி!

***பேச்சு*** வார்த்தையை ஆரம்பிக்கிறது தொடர்பாய் பேசப்போறதாய் ஜனாதிபதியச் சந்திக்கப் போன தமிழரசுக் கட்சிக்காறர் அங்க போய் "டக்ளஸ"க்கு ஏன் அமைச்சுப் பதவி குடுத்தனீங்கள்" எண்டு கேட்டிச்சினமாம். அதுக்கு அவ, "இந்து கலாசார அமைச்சை வேற யாருக்குக் குடுக்கிறது" எண்டு கேக்க வாயப் பொத்திக்கொண்டு வந்திட்டினமாம். இதே பேர் வழிகளின்ர மறுபக்கத்தையும் பாருங்கோ. இதே அமைப்பின்ர வன்னி எம்.பி.மார் ரெண்டு பேர் பாராளுமன்றத்தில டக்ளஸைச் சந்திச்சு "எங்கட பகுதிக்கு கொஞ்சம் உதவி செய்ய வேணும்" எண்டு கேட்டிச்சினமாம். "அதுக்கென்ன? ஆனால், நீங்கள் இதுகள ஏன் உங்கட தலைவர்களிட்டக் கேக்கக் கூடாது" எண்டு அவர் திருப்பிக் கேட்டாராம். "அவையிட்டக் கதைச்சு ஒரு காரியமும் செய்ய ஏலாது. நீங்கள்தான் ஏதும் செய்து தர வேணும்" எண்டு ஒருவர் சொல்ல, மற்றவர் "டக்ளஸ் செய்வார், அவர் நல்லவர்" எண்டாராம். எப்பிடிப் போகுது கதை பாத்தியளே? அப்பிடிப் போடு, போடு போடு, அசத்திப் போடு பேச்சால!

***தற்கொலை*** அங்கியொண்டு தெருவில இருக்கக் கண்டு பொலிஸார் மீட்டனரெண்டு செய்தியொண்டு கேட்டுச் சொக்கிப் போன ஒருத்தர் கேட்டார், "சமாதான காலத்தில தற்கொலை அங்கிக்கு என்ன வேலை" எண்டு. இதுக்கு எப்பிடியாவது ஒரு பதிலச் சொல்லியாக வேணுமெண்டு யோசிச்சுப் பாத்திட்டுச் சொன்னன், "அதுங்கோ நீங்கள் கேட்டது மெத்தச் சரி. சமாதான காலத்தில தற்கொலை அங்கிக்கு என்ன வேலை? அது தான் இருந்து வேலையில்லையெண்டிட்டுத் தற்கொலை செய்துகொள்ளத் தெருவுக்கு வந்திருக்குது அந்தத் தற்கொலை அங்கி! தப்பென்ன இருக்குது இதில?" எண்டன். ஆள் திகைச்சுப் போனார். இப்பிடி ஒரு நாலு எழுத்தாளர்கள் நியாயப்படுத்த இருக்கேக்க நமக்கென்ன கவலையெண்டிட்டு ஆள் மாறிட்டார். நல்ல பதிலோ இல்லையோ!

***பத்திரிகைகளில*** வெளிவராத வித்தியாசமான செய்தியொண்டு கேள்விப்பட்டன். வில்லங்கமான செய்தியும்தான். அது ஒண்டுமில்லை, ஒரு வாழ்த்துச் செய்தி! வாழ்த்து யாருக்கெண்டு கேப்பியள்; வாழ்த்து இந்தியப் பிரதமருக்கு! வாழ்த்தை யார் அனுப்பினதெண்டு கேப்பியள், அது யாருமில்லை; எங்கட அறளை வேந்தன் சொறி... ஈழத்தின் வேந்தன்! அதில என்ன வில்லங்கமெண்டு கேக்கிறியளோ? என்ன செய்தி எண்டதுதான் கொஞ்சம் வில்லங்கமான விசயம். சேதி என்னவெண்டால் ரெண்டெழுத்தாரோட இந்தியப் படைகளுக்குச் சண்டை மூண்ட காலத்தில இலங்கையில இந்தியத் தூதுவராய் இருந்த அதே தீக்ஷித் அவர்களை இந்திய அரசாங்கம் தன்ர பாதுகாப்பு ஆலோசகரா நியமிச்சிருக்கிறத வாழ்த்திச் செய்தி பறந்திருக்குதாம்! பாவம்...! பாலா அண்ணை தீக்ஷித்தோட நடத்தின பேச்சுக்களைப் பற்றி தன்ர சுயசரிதையில எழுதினதையும், அதே போல தீக்ஷித் தன்ர புத்தகத்தில ரெண்டெழுத்தாரோட நடத்தின பேச்சுக்களப் பற்றி எழுதினதையும் அவர் வாசிக்கேல்லப் போல! என்ன வில்லங்கப் படப் போறாரோ எனக்குத் தெரியாது.

"கொக்கரக்கோ கொம்மாங்கோ;
அறளை பேந்தால் அம்மாங்கோ!"

***வடக்குக்*** கிழக்கு மாகாண எம்.பி.க்கள் அந்தப் பகுதி அதிகாரிகளுக்கு மேல சவாரி விடத் தொடங்கியிருக்கினமாம். அரசாங்க நடைமுறைகளை மீறி அலுவல்களைச் செய்ய நிர்ப்பந்திக்கினமாம். இப்ப இவையின்ர இஷ்டப்படி ஆடிப்போட்டுப் பிறகு 'இங்குவாறி' வரேக்கை ஆர் வந்து காப்பாத்தப் போகினமெண்டு அதிகாரிகள் முணுமுணுக்கினமாம். இதுகளைக் கேள்விப்பட்டுத்தான் இந்த எம்.பி.மாரோட பேச கவர்னர் கூட்டமொண்டுக்கு அழைப்பு விடுத்தவராம். ஆனால், கில்லாடிகள் கதைய மாத்தி அரசியல் விவகாரமாய்க் காட்டிக் கூட்டத்தைப் பகிஷ்கரிச்சுப் போட்டினமாம். எல்லாஞ் சரி... கெட்டிக்காறன் புழுகு எத்தினை நாளைக்கு எண்டதுதான் இப்ப கேள்வி.

***ஓட்டோக்களுக்கு*** மீற்றர் பூட்டப் போறதா ஒரு செய்தி கேள்விப்பட்டன். அருமையான ஐடியாதான், பூனைக்கு மணி கட்டுமாப் போல! அது சரி. மீற்றர் பூட்டி என்னதான் செய்யப் போகினம்? மீற்றருக்கு மேலதானே ரேட்டே கேப்பாங்கள் எங்கட ஓட்டோக்காறர்? ஓட்டோக்களுக்கு மீற்றர் போடுற வேளையில அவைக்கெண்டு ஒரு தனி ரோட்டப் போட்டுக் குடுத்திட்டால் நல்லது. அந்தச் சின்ன மூக்கைச் சடுக்கெண்டு நுழைச்சுக்கொண்டு புகுந்திச்சுதெண்டால் பின்னால வாற வண்டிகளுக்கெல்லாம் ட்ரபிக் ஜாம்தான்! ப்ளீஸ் திங்க்! ○

# விளம்பரப் பகுதி

## சிங்கப்பூரில் திருமண சேவை



சிங்கப்பூரில் திருமணம் செய்ய வருவோருக்கும் வீடுமுறையைக் கழிக்க வருவோருக்கும் சகல வசதிகளும் கொண்ட வீடும் மற்றும் திருமணத்துக்கு வேண்டிய எல்லா ஏற்பாடுகளையும் குறைந்த செலவில் திருப்திகரமாகச் செய்து தருவோம். மேலும் எங்கள் இடம் 'குட்டி இந்தியா' என்று அழைக்கப்படும் இடத்தில் இருப்பதால், வேண்டிய பொருட்களை நடந்து சென்றே வாங்கலாம். மேலும் விபரமறிய எந்த நேரத்திலும் தொடர்புகொள்ள வசதியாக

கை தொலைபேசி எண். : 0065 97514941,
தொலை நகல். : 0065 64816144.

படத்தில் காணும் அப்புவிடம் தொடர்பு கொள்ளவும்.


சிங்கப்பூருக்குள் வர அனுமதி கிடைக்காமல் திரும்பிப் போவதைத் தடுப்பதற்கு 2 கிழமைக்கு முன்பே எங்களுடன் தொடர்புகொள்ளவும்.

**Lingam Wedding Services,**
10.Anson Road #15 -14 International Plaza, Singapore 079903.

## நான் நிரூபித்துக் கொண்டிருக்கும் மலையாள மாந்திரீகம்







எனக்கு இறைவன் தந்த நன்கொடை.
இங்கு தீய வேலைகளுக்கு இடமில்லை.
முடியாத வேலைகளை முடியும் என்று பாரம் எடுப்பதில்லை.
முடியும் என்றால் முடித்துக் காட்டுவது,
அத்தோடு நிறைவேறும் திகதியையும், வாங்கும் பணத்திற்கு ரசீதையும் கொடுப்பது.

**மட்டக்களப்பு அன்பர் கூறும் கதை** பதிவேட்டு இல : 3504

த.சபேசன், வங்கி ரோட், செங்கலடி, மட்டக்களப்பு.

ஜோதிட பேராசிரியர் அவர்களே!

இதை உங்கள் பதிவேட்டில் எழுதிவைக்க நான் ஆசைப்படுகிறேன். ஐயா! எனக்கு வயது 33, இக் காலங்களில் உங்கள் துறையில் உள்ளவர்களில், ஒவ்வொருவரிடமும் அதாவது மாந்திரீகம், ஜோதிடம் இப்படிப் பல பேரிடம் பார்த்துள்ளேன். ஒரு சில அரைகுறைத் தேர்ச்சி பெற்றவர்கள், வாயில் வந்தவைகளைக் கூறி அன்றாடத் தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்கிறார்கள். அதற்கு மாறாக, தங்கள் செயலைக் கண்டு சந்தோசம் அடைகின்றேன். என்னைப் பொறுத்தவரை ஆழம் தெரியாமல் காலை விடமாட்டேன். என்னை மன்னிக்க வேண்டும். உங்கள் அருள் ஞானத்தையும் தசாவதானியின் தன்மையையும் கண்டுகொண்டேன். தங்களிடம் ஏனோதானோ என்று பலன் கேட்க வந்த எனக்கு நடந்தது என்ன? நான் உங்கள் கதிரையில் அமர்ந்தபோது அற்புதமாக என் வாழ்க்கைச் சரித்திரத்தையும், நான் சொல்ல வந்த காரியத்தையும், செய்ய வந்த காரியத்தையும் சில நொடிகளில் கூறினீர்கள். நிச்சயமாக நான் நம்புகின்றேன், என் வேலை பூர்த்தியாகுமென்று. தங்குதடையின்றி உங்கள் பணத்தை வங்கியில் செலுத்துவேன். ஆசீர்வாதத்திற்குரிய தசாவதானி ஐயா அவர்களே! என் பிரச்சினையை மின்சார வேகமாகச் செயற்பட வைக்க உங்களைக் கேட்கின்றேன். இன்று எனக்குத் தெரிகிறது, எத்துறையில் இருந்தாலும் அத்துறையில் தேர்ச்சி பெற்றவர்களிடம் சென்றால் வெற்றி நிச்சயமாகக் கிடைக்கும் என்று.

**கெக்கிராவ பரீனா என்ன கூறுகிறார்.** பதிவேட்டு இல. 3505

நான் திருமணம் செய்து 7 வருட காலத்திற்குப் பின் கணவர் 3 வருட காலமாக வேறு ஒரு பெண்ணுடன் உறவுகொண்டு திருமணம் செய்யும் அளவிற்குப் போய்விட்டது. 2002ஆம் ஆண்டு நான் கொடுத்த பணத்திற்கு தகுந்ததாக என்னைக் காப்பாற்றினீர்கள். சந்தோசம். மீண்டும் அப் பெண்ணோடு தொடர்புகொண்டு என்னை வெறுக்கின்றார். அவரை மீண்டும் அழைத்துக் கருணை புரியுங்கள்.

**சுவிஸ் - உதயகுமாரி என்ன கூறுகிறார்** பதிவேட்டு இல. 3514

அருள் ஞான சித்தர் ஐயா அவர்களுக்கு!

திருமணம் முடித்து கடந்த 3 வருடங்களாக சுவிஸில் குடியும் கும்மாளமாகவும் இருந்து என்னையும் எனது மகனையும் தவிக்க விட்டுவிட்டு வேறு பெண்களோடு சுற்றித் திரிந்த எனது கணவனின் போக்கையும் குணத்தையும் மாற்றி, என்னை வாழ வைத்த தெய்வமே! எனது ஆயிரம் கோடி நன்றிகளை உங்கள் காலடியில் சமர்ப்பிக்கின்றேன்.

**கொழும்பு பர்சானா என்ன கூறுகின்றார்.** பதிவேட்டு இல. 3515

எங்களைத் துன்பத்திலிருந்து காப்பாற்றிவிட்டீர்கள். உங்களிடம் வந்த பிறகு எனக்கு ஒரு புதிய தைரியமும் தெம்பும் ஏற்பட்டுவிட்டது.

**Swiss - சுரேஷ்** பதிவேட்டு இல. 1093

ஐயா,

நான் எங்கு சென்றாலும், யாரிடம் சென்று என்ன மாந்திரீக பரிகாரம் செய்தாலும், ஐயாவிடம் வந்து பரிகாரம் செய்து ஆசீர்வாதம் பெற்றால்தான் காரியம் நிறைவேறும் என்பதை நான் நன்றாக உணர்ந்துகொண்டேன்.

நீங்கள் சொல்லி வைத்தது சொன்னபடி நடந்து வருகிறது. நன்றி.

**M.யோகேந்திரன் - Doha, Qatar.** பதிவேட்டு இல. 30003

யோகேந்திரன் என்ன கூறுகிறார்.

அன்றும் இன்றும் என்றும் உலகம் போற்றும் மதிப்பிற்குரிய ஐயா அவர்களுக்கு, நீங்கள் அனுப்பிய மோதிரம் மற்றும் சாந்திப் பொருட்கள் பாவிக்க ஆரம்பித்தவுடன் மின்னல் வேகத்தில் என் எண்ணங்கள் நிறைவேறின.

என்னால் நம்பவே முடியவில்லை. ஐயாவின் ஆசீர்வாதம் என்றும் நிலைத்து எனக்குக் கிடைக்க வேண்டுகிறேன்.

எனது நுவரெலியா கிளை நிறுவனத்தில் மந்திரம், ஜோதிட வேலைகளுக்குக் கைமேல் பலன் கிட்ட எனது மூத்த சகோதரனாகிய P.T.R. அவர்களிடம் சென்று உங்கள் வேலைகளை அப்பொழுதே நிவர்த்தி செய்துகொள்ளலாம். (இங்கும் தீய வேலைகளுக்கு இடமில்லை)

என்னிடம் மாந்திரீகம், ஜோதிடம் சம்பந்தமாகத் தொலைபேசியில் ஆலோசனை பெற, இத் துறையில் தேர்ச்சி பெற்றவர்களை நியமித்திருப்பதால் அவர்களிடம் கதைத்து ஆடர்களோ, Appointmentகளோ பெற்றுக்கொள்ளலாம். தொலைபேசியில் நான் உரையாட கால அவகாசம் இல்லை.

**பேராசிரியர் டாக்டர் பி.கே.சாமி (J.D.G.A.N.) J.P.**
இல.162, ஸ்ரீ துர்க்கா தேவி ஆலயம், மாந்திரீக உச்சாடன பீடம் கொட்டாஞ்சேனை வீதி, கொழும்பு 13. Cli No : 2342463, 2470615 Fax : 2344831
நுவரெலியாவில்: 33, Daily Fair Complex, Nuwara Eliya. Tel : 052 - 2222508, 2235097.

## Basel.S.P.T. ரவி கடையின் மாபெரும் மலிவு விற்பனை

2004க்கான அனைத்து விதமான புதிய (MODEL) ஆடைகளையும் 70% கழிவில் பெற்றுக்கொள்ளலாம். ஆம்! ஆம்! இது நிஜம்! வழமை போல் பல புதிய டிசைன்களை உங்கள் விருப்பத்திற்கு ஏற்றவாறு மிக மிக மலிவாகப் பெற்றுக்கொள்ளலாம்.

150–SFr. க்கு மேல் கொள்வனவு செய்பவர்களுக்கு 1 கல்லுக் Kolam சாறி அன்பளிப்பாக வழங்கப்படும்.

தங்கத்தின் விலை உங்களுக்கு இன்ப அதிர்ச்சியைத் தரும்.

தாயகத்திற்கு விடுமுறையில் செல்ல இருப்பவர்களே! உங்கள் உறவினர்களை மகிழ்விக்க ஓர் அரிய சந்தர்ப்பம். இந்த மலிவு விற்பனையில் மிக மிக மலிவாக விற்க முடிவு செய்துள்ளோம்.

### Basel மாநகரில் Basel S.P.T. ரவி கடையில்

காலம் : 04.06.04 வெள்ளி
05.06.04 சனி
06.06.04 ஞாயிறு

நேரம் : 10.30 மணி முதல்
20.00 மணி வரை

பஞ்சாபி 5-SFr.இல் இருந்து
டெனிம் 5-SFr.இல் இருந்து
சேட் 5-SFr.இல் இருந்து
சாறி 7-SFr.இல் இருந்து
T-Shirt 1-SFr.இல் இருந்து
Audio-CD 1-SFr.இல் இருந்து
மணிக்கூடு 9-SFr.இல் இருந்து



~~210.-~~ 65.-

தொடர்புகளுக்கு Basel ரவி கடை :
Tel : 061 2720990
Tel : 061 2729030
Tel : 079 3562278
Fax : 061 2729031.

இடம் : Basel ரவி கடைக்கு முன்பாக Elisabathenanlage-9,
(ரவி கடைக்கு முன்பாக அமைக்கப்படும் கூடாரங்களில் விற்பனை இடம்பெறும்)

### Bern மாநகரில் Basel S.P.T. ரவி கடையில்



~~220.-~~ 65.-

பஞ்சாபி 5-SFr.இல் இருந்து
டெனிம் 5-SFr.இல் இருந்து
சேட் 5-SFr.இல் இருந்து
சாறி 7-SFr.இல் இருந்து
T-Shirt 1-SFr.இல் இருந்து
Audio-CD 1-SFr.இல் இருந்து
மணிக்கூடு 9-SFr.இல் இருந்து

காலம் : 25.06.04 வெள்ளி
26.06.04 சனி
27.06.04 ஞாயிறு

நேரம் : 11.00 மணி முதல்
20.00 மணி வரை

தொடர்புகளுக்கு Basel ரவி கடை :
Tel : 061 2720990
Tel : 061 2729030
Tel : 079 3562278
Fax : 061 2729031.

இடம் : Restaurent Galaxy Effingerstr.20, 3001 Bern.

### Zurich மாநகரில் Basel S.P.T. ரவி கடையில்

காலம் : 03.07.04 சனி
04.07.04 ஞாயிறு
05.07.04 திங்கள்

நேரம் : 11.00 மணி முதல்
20.00 மணி வரை

பஞ்சாபி 5-SFr.இல் இருந்து
டெனிம் 5-SFr.இல் இருந்து
சேட் 5-SFr.இல் இருந்து
சாறி 7-SFr.இல் இருந்து
T-Shirt 1-SFr.இல் இருந்து
Audio-CD 1-SFr.இல் இருந்து
மணிக்கூடு 9-SFr.இல் இருந்து



~~190.-~~ 69.-

தொடர்புகளுக்கு Basel ரவி கடை :
Tel : 061 2720990
Tel : 061 2729030
Tel : 079 3562278
Fax : 061 2729031.

இடம் : volks Haus மண்டபம் Steufecher str 60, Zurich.

## சிறுகதை, கவிதை எழுத்தாளர்களுக்கு....

முரசுக்காக சிறுகதைகளை எழுதிவரும் அன்பு எழுத்தாளர்களே! எதிர்காலத்தில் எழுத்துப் பணியில் ஈடுபட இருப்பவர்களே! முரசுக்காக சிறுகதைகள் எழுதுகின்றபோது கையெழுத்துப் பிரதியாக இருந்தால் மூன்று பக்கங்களும், தட்டச்சு செய்திருந்தால் ஒன்றரைப் பக்கம் வரக்கூடிய விதத்திலும் எழுதி அனுப்பி வையுங்கள்.

கவிதை எழுதுபவர்கள் தொடர் சங்கிலியாக எழுதாமல் எடுத்துக்கொள்ளும் விடயத்தை சிறியதாகவும் சுவையாகவும் எழுதுமாறு கேட்டுக்கொள்கிறோம். முரசு எழுத்தாளர்களாக இருப்பவர்களைக் கௌரவிக்கும் அதேவேளை, புதிய புதிய எழுத்தாளர்களுக்குக் களம் அமைத்துக் கொடுக்கவும் வாசகர்கள் ஒத்துழைப்பார்கள் என்ற நம்பிக்கை எமக்கு உண்டு.

நன்றி.

- ஆசிரியர்

## லண்டன், பாரிஸ்
### இந்திய ஹோமியோபதி வைத்திய நிபுணர்

மாறாத நோய்களை எல்லாம் ஹோமியோபதி மருத்துவத்தின் மூலம் தீர்த்து வைக்கும் இந்திய ஹோமியோபதி சிகிச்சை நிபுணர்


**டாக்டர் ஆர். தியாகராஜன்** DHMS, AMRSH (LON)

30.06.2004 முதல் லண்டன், பாரிஸ் நகரங்களுக்கு விஜயம் செய்து நீண்டகால நோயினால் பாதிக்கப்பட்டவர்களை நேரில் பார்வையிட்டு சிகிச்சை அளிக்கவுள்ளார். மாறி மாறி வரும் ஆஸ்துமா (Asthma) சர்க்கரை வியாதி என்ற டையபற்றிக்ஸ் (Diabetes), எக்ஸிமா (Eczema) மலட்டுத்தன்மை, பேறின்மை (Strillity), ஆண்மைக் குறைபாடுகள் (Impotency) போன்ற வியாதிகளுக்கு சிறந்த முறையில் நிவாரணம் அளிக்கப்படும். ஹோமியோபதி மருத்துவம் மனிதனை முழுமையாகக் கருத்திற் கொண்டு மனம் மற்றும் உடலில் உண்டாகும் மாற்றங்களை உற்று நோக்கி ஒரு முழுமையான சிகிச்சையான பாதுகாப்பான, பக்க விளைவுகளற்ற (Side effects) முறையில் அனைத்து வியாதிகளுக்கும் அளிக்கவல்லது.

முன்கூட்டிய பதிவுக்கு - லண்டன் தொலைபேசி:
**02087678004 - 07984803488 - 07833341693**
**E-mail : homoeocare@rediffmail.com**

இந்தியா - 0091-9843051099 இலங்கை - 0094-777602513
ஜூன் மாதம் இலங்கை விஜயம் 24.06.2004 முதல் 28.06.2004.

## 5ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 30 - 11 - 1934
மறைவு: 15 - 06 - 1999

அமரர்
**கோபாலசுந்தரம் திருத்தணிகாசலம்**

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் (Ceylon workers congres)

**திதி:- 19.06.2004**

மனிதர்குல் மாணிக்கமாய் மாந்தருள்
திலகமாய்
புனிதமாய் வாழ்ந்து பொன்னம்பலவாணரடி
சேர்ந்த
எங்கள் அன்புத் தெய்வத்தின் நினைவு
மாறவே மாறாது
உங்கள் நினைவுடனேயே நாம் இப் பூவுலகில்
வாழ்கிறோம்.

சந்தை வீதி,
உடுப்பிட்டி.

பிரிவால் துயருறும்
-அன்பு மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளை, பெறாமக்கள்

இன்னொருவர் பார்வையில்

# வட-கிழக்கின் தேர்தல் முடிவுகளில் ஐரோப்பிய யூனியன் அதிருப்தி

## ஐரோப்பிய யூனியனின் தேர்தல் கண்காணிப்புக் குழு அண்மையில் வெளியிட்டுள்ள இறுதி அறிக்கையின் முக்கிய அம்சங்கள்

டிசம்பர் 2001இன் பொதுத் தேர்தலை அடுத்து ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க பிரதமர் ஆனார். சுமார் 65,000 உயிர்களைப் பலிகொண்ட இனப் பிரச்சினைக்கு நிரந்தரமான தீர்வைக் காண்பதற்குப் புதிய முயற்சிகள் இந்தத் தேர்தலையடுத்து முன்னெடுக்கப்பட்டன. டிசம்பர் மாதப் பிற்பகுதியில் புலிகள் ஒரு தலைப்பட்சமாகப் போர் நிறுத்தத்தைப் பிரகடனம் செய்தனர். அரசாங்கம் இதற்குச் சாதகமாகப் பதிலளித்ததைத் தொடர்ந்து நிரந்தரமான போர் நிறுத்தம் இரு தரப்புக்கும் இடையில் பெப்ரவரி 22, 2002இல் கைச்சாத்திடப்பட்டது. எப்படியிருந்தபோதும் அரசாங்கத்தில் ஏற்பட்ட மாற்றம் அரசியலில் ஒரு புதிய பரிமாணத்தை அதாவது சகவாழ்வு அரசை உருவாக்கியது. பொதுசன முன்னணியின் தலைவியான திருமதி சந்திரிகா ஜனாதிபதியாகவும் ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கமாகவும் அமைந்தது. ஆனால், காலப்போக்கில் சக வாழ்வு அரசியல் போக்கானது சமாதானப் பேச்சுக்களை முன்னெடுத்துச் செல்வதில் கடினமான நிலையை உருவாக்கியது. பிரதமருக்கும் ஜனாதிபதிக்கும் இடையே சமரசமான நிலையை உருவாக்க மேற்கொண்ட முயற்சிகள் அனைத்தும் தோல்வியில் முடிந்து போனதைத் தொடர்ந்து ஜனாதிபதி பெப்ரவரி 2004இல் பொதுத் தேர்தலை நடத்தத் தீர்மானித்தார். பாராளுமன்றம் கலைக்கப் பட்டது.

கடந்த மூன்று ஆண்டுகளில் மூன்றாவது பொதுத் தேர்தல் இதுவாகும். ஐரோப்பிய யூனியனின் பிரதிநிதிகளைத் தேர்தல் கண்காணிப்புப் பணிக்கு வருமாறு இலங்கை அரசு அழைப்பு விடுத்த மூன்றாவது சந்தர்ப்பம் இதுவாகும். மார்ச் 7ஆம் திகதியன்று இலங்கைக்கு வந்த ஐரோப்பிய யூனியனின் தேர்தல் கண்காணிப்பாளர்கள் மே 2ஆம் திகதியன்று மீண்டும் திரும்பினர்.

### தேர்தல் வன்முறைகள்

கடந்த 2000 மற்றும் 2001ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தல்களோடு ஒப்பிடுகையில் இந்த முறை தேர்தல் வன்முறைகள் குறைந்த தாகவும் தேர்தல் முறைகேடுகள் குறைந்த தாகவும் காணப்பட்டது. இவ்வகையில் 2004இன் பொதுத் தேர்தலில் பெருமளவுக்கு முன்னேற்றம் இருக்கின்றது. எனினும் தேர்தல் பிரசாரங்களின் முடிவில் ஐந்து பேர் கொல்லப்பட்டிருந்ததுடன் பதினைந்துக்கும் அதிகமானோர் காயமடைந்தும் இருந்ததோடு சுமார் 2,000 வரையிலான தேர்தல் வன்முறை கள் பதிவு செய்யப்பட்டுமிருந்தன.

2004இன் பொதுத் தேர்தலின்போது பெருமளவு வன்முறைச் சம்பவங்கள் புலிகளாலேயே தூண்டிவிடப்பட்டன. இதற்கு முந்திய பொதுத் தேர்தல்களில் பிரதான இரு கட்சிகளே வன்முறைகளைப் பெருமளவில் தூண்டியிருந்தன. ஆயினும், இரு தரப்பின ருக்கும் இடையே முறுகல் நிலை நீடித்தது. இது வன்முறை களுக்கு இட்டுச் சென்றது. இத்தகைய சம்பவங்களில் பல குருநாகல் மற்றும் அம்பாறை மாவட்டங்களில் இடம்பெற்றன.

நிலைமைகளில் முன்னேற்றம் ஏற்படுவதற்குப் பல காரணிகள் பங்களிப்புச் செய்துள்ளன. 2000 மற்றும் 2001ஆம் ஆண்டுத் தேர்தல்களின்போது சட்டமும் ஒழுங்கும் நடுநிலையான முறையில் பேணப்படவில்லை. இது தேர்தல் சூழ்நிலையில் ஏற்றுக்கொள்ள முடியாத வன்முறைகளையும் அச்சுறுத்தல்களையும் இடம்பெற வைத்தது. ஆனால், 2004இன் பொதுத் தேர்தலும் தேர்தல் நாளும் பெருமளவுக்கு அரசியல் மயப்படாதிருந்தது. தேர்தல் பிரசாரத்தின்போது சுவரொட்டிகள் ஒட்டப்படுவது, அரசியல் பேரணிகள் நடத்துவது என்பவனவற்றைப் பொலிஸார் தடை செய்தமையின் காரணமாக தேர்தல் தொடர்பான வன்முறைகள் கணிசமான அளவுக்குக் குறைவடைந்தன. தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் ஒருங்கிணைந்த செயற்பாடுகள் மற்றும் தேர்தல் ஆணையாளரின் தீர்மானகரமான பங்களிப்பு என்பவை குறிப்பிடத் தக்களவு முன்னேற்றத்தைக் காட்டியுள்ளது. பிரதமருக்கும் ஜனாதிபதிக்கும் இடையே அதிகாரங்கள் பகிரப்பட்டு இருந்தமையும் கூடத் தேர்தல் வன்முறைகள் குறைவடைந்தமைக்குக் காரணமெனச் சிலர் சுட்டிக் காட்டுகின்றனர்.

புலிகள் தேர்தல் வன்முறைகளைத் தூண்டிவிட்டமைக்கு இரு பிரதான காரணங்கள் கூறப்படுகின்றன.

முதலாவதாக, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைத் தவிர்ந்த ஏனைய அரசியல் கட்சிகள் அல்லது நபர்கள் தமிழர் தேசிய நலன்களைப் பிரதிபலிப்பதைப் புலிகள் அனுமதிக்கவில்லை. தேர்தல் பிரசாரங்களின் ஆரம்பத்தில் ஐ.தே.க. வேட்பாளர் ஒருவரும் ஈ.பி.டி.பி.யின் உறுப்பினர் ஒருவரும் புலிகளால் சுட்டுக் கொல்லப்பட்டமை மூலமாக இச் செய்தி புலப்படுத்தப்பட்டது. இத்தகைய கடுமையான செயற்பாடுகள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைத் தவிர்ந்த ஏனைய கட்சிகள் வடக்கு - கிழக்கு மாகாணத்தில் சுயாதீனமான பிரசாரத்தில் ஈடுபடுவது பெரும்பாலும் கட்டுப்படுத்தப்பட்டன. இரண்டாவதாக, புலிகளுக்குள் வடக்கு என்றும் கிழக்கு என்றும் ஏற்பட்ட பிளவு காரணமாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வேட்பாளர் ஒருவர் கொல்லப்பட்டதோடு, அரசாங்க அதிபர் ஒருவரும் கொலை முயற்சிக்கு உள்ளானார். அத்துடன் மட்டக்களப்பிலிருந்து வடக்குத் தமிழர்கள் பலர் வெளியேறவும் நேரிட்டது.

> **இலங்கையின் 13ஆவது பாராளுமன்றத்துக்காக நடத்தப்பட்ட தேர்தலில் பல முறைகேடுகள் நடந்ததாக அரசியல் கட்சிகள் சுட்டிக்காட்டியிருந்தன. ஐரோப்பிய யூனியனின் கருத்தும் மேற்படி கட்சிகளின் கூற்றை உறுதி செய்கிறது.**

### மேலதிகப் பிரச்சினைகள்

தேர்தல் பிரச்சாரத்தின்போது பல முக்கியமான குறைபாடுகள் அவதானிக்கப் பட்டன. 2004இன் தேர்தல் பிரசாரத்தின்போது அரசாங்க வளங்கள் துஷ்பிரயோகம் செய்யப்பட்டமை குறித்த முறைப்பாடுகள் மிகக் குறைவாகவே கிடைத்தன. எனினும் தேர்தல் தொடர்பான செய்திகள் பரப்பப்பட்டமை தொடர்பில் ஊடகங்கள் நடந்துகொண்ட விதம் பற்றிய சர்ச்சைகள் மேல் எழுந்தன. அரச ஊடகங்கள் ஜனாதிபதியினால் நியமிக்கப் பட்டவர்களாலேயே நிர்வகிக்கப்பட்டன. இவை எல்லா அரசியல் கட்சிகளுக்கும் வேட்பாளர்களுக்கும் இடையில் ஒத்த அணுகுமுறையைக் கடைப்பிடிக்கவில்லை. இதனால் வாக்காளார்கள் தமது தெரிவு குறித்துப் போதுமான தகவல்களைப் பெற்றுக்கொள்ள வழி வகுக்கவில்லை. மேலும், இவ் வகையில் செயற்படுவதற்குத் தனியார் மற்றும் இலத்திரனியல் ஊடகங்களும் தவறியிருந்தன என்பதும் குறிப்பிடத் தக்கது.

இது தவிர தேர்தல் தினத்தன்று வடக்கு - கிழக்கில் பல பிரச்சினைகள் எதிர்கொள்ளப் பட்டன. ஐரோப்பிய யூனியனால் நியமிக்கப்பட்ட உள்ளூர் முகவர்கள், ஆள் மாறாட்டங்கள் மற்றும் பல தடவை வாக்களிப்பில் ஈடுபடுவது போன்ற முறைகேடுகள் பல இடம்பெற்றதாகச் சுட்டிக்காட்டினார்கள்.

### தேர்தல் நிர்வாகம்

வடக்கு - கிழக்கு மாகாணத்தைத் தவிர ஏனைய இடங்களில் தேர்தல் தொடர்பான நிர்வாகப் பணிகள் செம்மையாகவே இடம்பெற்றன. எல்லா மட்டத்திலும் பணி புரிந்த அலுவலர்கள் திறம்படப் பயிற்றுவிக்கப் பட்டிருந்தனர். நன்கு ஒழுங்குபடுத்தப்பட்ட வகையில் தமது கடமைகளைப் பொறுப்புடனும் பக்கச்சார்பின்றியும் நிறைவேற்றினர்.

17ஆவது அரசியலமைப்புத் திருத்தம் முழுமையாக நடைமுறைப்படுத்தப்படாத போதும், இதன் மூலம் தம் மீது சுமத்தப்பட்ட பொறுப்புக்களைத் தேர்தல் ஆணையாளர் நிறைவேற்ற முயற்சி எடுத்துள்ளார். முன்னைய தேர்தல்களை விட இம்முறை அவரது முயற்சி அதிகமானமாகும்.

இந்த அதிகாரத்தின் மூலம் பலப்படுத்தப்பட்ட நிலையில் நேர்மையான சுதந்திரமான தேர்தலை நடத்தும் கடமைப் பொறுப்பில் பல்வேறு அரசியல் கட்சிகளிடமிருந்தும் தேர்தல் ஆணையாளர் மிகுந்த பாராட்டுகளைப் பெற்றுள்ளார். அவரது பண்பான அணுகுமுறை மற்றும் அரசியல் கட்சிப் பிரதிநிதிகளோடு அவர் பழகும் முறை என்பன தேர்தல் நிர்வாகப் பணி தொடர்பான நம்பிக்கைகளை அதிகரிக்கச் செய்தன.

### முடிவுகள்

முன்னைய இரு தேர்தல்களோடும் ஒப்பிடுகையில் 2004இன் பொதுத் தேர்தல் பிரச்சினைகள் குறைந்ததாகக் காணப்பட்டது. இது வரவேற்புக்குரியதாகும். அதேவேளை 2000 மற்றும் 2001ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தல்களின்போது இடம்பெற்றது போன்ற வன்செயல் சம்பவங்கள் மீண்டும் இடம்பெறாது என்ற தவறான நம்பிக்கைக்கு இது இட்டுச் செல்லக் கூடாது.

பெரும்பாலும் மிக மோசமான தேர்தல் வன்முறைகள் புலிகளாலேயே தூண்டி விடப்பட்டன என்பதை மறுப்பதற்கு இல்லை. சுமார் இரண்டாயிரத்துக்கும் அதிகமான தேர்தல் வன்முறைகள் பதிவாகியுள்ளன. இப் புள்ளிவிபரமானது இலங்கையில் ஜனநாயகம் எதிர்நோக்கும் அச்சுறுத்தல்கள் தொடர் வதையே காட்டுகின்றது. எல்லா அரசியல் கட்சிகளின் தலைவர்களும் சிவில் சமூகத்துடன் இணைந்து ஜனநாயக அரசியல் பண்புகளைப் பாதுகாக்கவும் வலுப்படுத்தவும் தேவையான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டியது அவசியமாகும். 17ஆவது அரசியலமைப்புத் திருத்தம் நிறைவேற்றப்பட்டு இரு வருடங்கள் கடந்துள்ளபோதும் உத்தேசிக்கப்பட்ட சுயாதீன தேர்தல் ஆணையத்தை நிறுவுவதற்கான இணக்கப்பாடு எதுவும் காணப்படவில்லை என்பது இவ் வகையில் கவலை அளிப்பதாகும். இந்த நிறுவனம் தேர்தல் நிர்வாகப் பணிகளில் ஈடுபடும் அதிகாரிகளின் சுயாதீனத்தை உறுதிப்படுத்துவதுடன், அதிகார துஷ்பிரயோகங்களில் அல்லது ஜனநாயக நடைமுறைகளைப் பாதிக்கும் வகையில் செயற்படுபவர்கள் மீது நடவடிக்கை எடுக்கவும் உந்துதல் கொடுக்கும். முன்னைய இரு தேர்தல்களின்போதும் ஐரோப்பிய யூனியனின் தேர்தல் ஆணைக்குழு முன்வைத்த பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவது பயனுள்ளதாக இருக்கும்.

மேலோட்டமாகப் பார்த்தால் 2004இன் பொதுத் தேர்தல் வடக்கு - கிழக்கைத் தவிர ஏனைய பகுதிகளில் ஜனநாயகப் பண்புகளுடன் நடத்தப்பட்டதாக உள்ளது. வடக்கு-கிழக்கின் தேர்தல் முடிவுகள் அரசாங்கத்தை அமைப்பது யார் என்பதில் தீர்மானகரமான பங்கை வகித்துள்ளதெனின், இந்தத் தேர்தலின் இறுதிப் பெறுபேறுகளது சட்டபூர்வத் தன்மை கேள்விக்குரியதாகும். இலங்கையின் வடக்குக் கிழக்குப் பகுதிகளில் இடம்பெற்ற தேர்தல் வன்முறைச் சம்பவங்கள் முற்றிலும் ஏற்றுக்கொள்ளப்பட முடியாதவை என்பதோடு ஜனநாயக நடைமுறைகளுடன் முழுமையாக ஒத்துப் போகாதவையும் ஆகும்.

### பரிந்துரைகள்

பெரும்பாலான பரிந்துரைகள் 2000 மற்றும் 2001 பொதுத் தேர்தல்களை அடுத்து முன்வைக்கப்பட்ட சிபார்சுகளே ஆகும். எனினும், இவற்றில் பெரும்பாலானவை துரதிர்ஷ்டவசமாக இன்னமும் அமுல்படுத்தப் படவில்லை என்பது கவனத்திற்குரியது. இருந்தும் இவற்றில் சிலவற்றை இலங்கையில் அதிகாரத்தில் இருப்பவர்கள் கவனத்திற்கு எடுத்துள்ளனர். குறிப்பாக அரசியலமைப்பின் 17ஆவது திருத்தம் ஓரளவுக்காவது நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டது என்பதும், உள்ளூர் தேர்தல் கண்காணிப பாளர்கள் வாக்குச் சாவடிகளுக்குள் அனுமதிக்கப்பட்டனர் என்பதும் இவற்றில் குறிப்பிடத் தக்கது. ஐரோப்பிய யூனியனின் தேர்தல் கண்காணிப்புக் குழு, பின்வரும் பரிந்துரைகள் முழுமையாக அமுல் நடத்தப்படுமாயின் எதிர்காலத் தேர்தல்களின் போது நல்ல பிரதிபலன்களை எதிர்பார்க்கலா மெனக் கருதுகின்றது.

### சட்டபூர்வ விடயங்கள்

அரசியலமைப்பின் 17ஆவது திருத்தம் முழுமையாக அமுல்படுத்தப்பட வேண்டும். குறிப்பாக ஜனாதிபதியும் அரசியலமைப்புக் கவுன்சிலும் ஒரு இணக்கப்பாட்டிற்கு வந்து சுயாதீன தேர்தல் ஆணையத்தை நிறுவ வேண்டும்.

உயர் நீதிமன்றம் தேர்தல் தொடர்பான விடயங்களைக் கையாள்வதில் சில நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். அரசியலமைப்பிலும் பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்திலும் குறிப்பிட்டுள்ளவற்றை உள்ளடக்கியதாக இது இருக்க வேண்டும்.

தமது பிரதிநிதிகளைச் சுதந்திரமாகத் தெரிவு செய்வதற்குள்ள வாக்காளர்களது உரிமையை உத்தரவாதப்படுத்த வேண்டும்.

பாராளுமன்றத் தேர்தல் சட்டத்தின் 48ஏ பிரிவின் கீழ் உயர் நீதிமன்றம் கொண்டிருக்கும் சட்ட அதிகாரமானது தேர்தல் வன்முறைச் சம்பவங்கள் அதிகரிக்குமானால் தேர்தல் ஆணையாளர் வாக்குப் பதிவை இரத்துச் செய்து மீண்டும் தேர்தல் நடத்துவதற்கு ஏதுவாகத் திருத்தப்பட வேண்டும்.

தேசிய பொலிஸ் ஆணைக்குழுவுக்கு மேலதிக அதிகாரங்கள் வழங்கப்பட்டு பொலிஸ் அதிகாரிகளுக்கு எதிரான முறைப்பாடு களையும் கையாள அனுமதிக்க வேண்டும்.

தேர்தல் நடைமுறைகளில் பொலிஸாரின் பங்களிப்பு வெளிப்படையானதாக இருக்க வேண்டும் என்பதுடன், கிடைக்கப்பெறும் முறைப்பாடுகள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் குறித்துத் தேர்தல் முடிவுகளுக்குப் பின்னர் தெளிவாக்கப்படுதல் வேண்டும்.

* பிரசாரங்களின்போது செலவிடப்படும் பணம், கிடைக்கப் பெறும் நன்கொடைகள் என்பன தொடர்பில் கணக்குக் காட்டப் படுவதற்கு சட்ட ஏற்பாடுகள் மூலம் வழி வகுக்கப்பட வேண்டும். தனிப்பட்ட வேட்பாளர்களும் அரசியல் கட்சிகளும் தேர்தலுக்காகச் செலவிடும் பணம் மட்டுப்படுத்தப்பட்டதாக இருப்பதற்குரிய வகையில் கவனம் செலுத்த வேண்டும்.

* சுயாதீன தேர்தல் ஆணையம் நிறுவப்பட்டதன் பின்னர், அரச மற்றும் தனியார் ஊடகங்களையும் இலத்திரனியல் ஊடகங்களையும் கட்டுப்படுத்துவது தொடர்பில் இறுக்கமான கட்டுப்பாடுகளை நடைமுறைப் படுத்த வழி வகுக்க வேண்டும்.

* சிறிய அரசியல் கட்சிளும் தத்தம் கருத்துக்களைப் பரப்புவது தொடர்பில் ஊடகங்கள் உரிய முக்கியத்துவமளிக்க வழி காணப்பட வேண்டும். ஆகக் குறைந்தபட்சம் சிறிய அரசியல் கட்சிகளது பிரசாரம் முன்னெடுக்கப்படுவதை அரச இலத்திரனியல் ஊடகங்களாவது உறுதிப்படுத்த வேண்டும். இலவச தேர்தல் பிரசார ஒலிபரப்புக்களை விடவும் இது முக்கியமானது.

* கட்டணம் செலுத்தப்பட்ட விளம்பரங்கள் யாவும் சுதந்திரமான நிறுவனமொன்றின் மூலம் கட்டுப்படுத்தப்பட வேண்டும். இத்தகைய விளம்பரங்களில் பயன்படுத்தப்படும் மொழி நடை, கருத்துக்கள் என்பவை கவனத்தில் கொள்ளப்பட வேண்டும். விளம்பரங்களின் அளவு மற்றும் கால எல்லை என்பன தொடர்பாகக் கட்டுப்பாடுகள் பேணப்பட வேண்டும்.

### தேர்தல் நிர்வாகப் பணிகள்

**வாக்காளர் பட்டியல்.**

* வாக்காளர் பட்டியல் முழுமையாகத் திருத்தி அமைக்கப்பட்டு வாக்களிக்கத் தகுதியுள்ள இளைய தலைமுறையினர் உள்ளடக்கப்பட வேண்டும்.

* வாக்காளர் பட்டியலை முழுமையாகக் கணினிமயப்படுத்துவது இதன் தரத்தை உயர்த்துவதுடன் இரட்டைப் பதிவுகளை நீக்கவும் தற்காலம் வரையிலான பதிவுகளை மேற்கொள்ளவும் உதவும்.

* வட பகுதியில் குறிப்பாக புலிகளது கட்டுப்பாட்டுப் பகுதிகளில் இருக்கும் வாக்காளர்களது உண்மையான விபரங்கள் பெறப்பட வேண்டும்.

* தேசிய அடையாள அட்டையை அல்லது அதனையொத்த ஏதும் ஒரு ஆவணத்தை வாக்களிப்பின்போது காண்பிப்பதைக் கட்டாயமாக்க வேண்டும்.

* வாக்குப் பதிவு பற்றிய முறைப் பாடுகளைக் கவனத்திற் கொண்டு மறு வாக்குப் பதிவுக்கு உத்தரவிடக் கூடிய கால அவகாசம் வழங்கப்படும் வகையில் வாக்குகள் எண்ணும் பணி தாமதிக்கப்பட வேண்டும்.

* தேர்தல் பணியாளர்கள் பின்வரும் தொழில்நுட்ப விவகாரங்களில் பயிற்றுவிக்கப் படுதல் வேண்டும்.

* வாக்களிப்பில் ஈடுபடுவதற்கு முன்னார் வாக்காளர்களது கைகளில் மை பூசப்பட்டுள்ளதா என்பதைப் பரிசோதித்தல்.

* வாக்காளரின் விரல்களில் மை சரியாகப் பூசப்படுவதை உறுதிப்படுத்துவது.

வாக்காளரின் இரகசியத்தைப் பேணும் வகையில் வாக்குச் சாவடிகள் அமைக்கப்படு வதன் முக்கியத்துவத்தை உறுதிப்படுத்துவது.

* தேர்தல் ஆணையத்தினுள் சுதந்திர மான ஊடகப் பிரிவை அமைத்து தேர்தல் தொடர்பான விடயங்களை முறையாக விளம்பரப்படுத்துவது.

### அரசியல் கட்சிகள்

* ஐரோப்பிய யூனியனின் தேர்தல் கண்காணிப்புக் குழுவின் பரிந்துரைக்கு அமைவாக அரசியல் கட்சிகள் தமக்கென ஒழுக்க நெறிக் கோவைகளை வகுத்து அமுல்படுத்த வேண்டும். இது வன்முறை களைத் தவிர்ப்பதையே நோக்கமாகக் கொண்டிருக்க வேண்டும்.

* பல்வேறு கட்சிகளும் இலங்கையின் எப் பாகத்திலும் சுதந்திரமான தேர்தல் பிரசாரத்தில் ஈடுபடுவது உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

### ஊடகங்கள்

* எல்லா ஊடகங்களும் தேர்தல்கள் தொடர்பாக தத்தமக்கென நடைமுறைக் கோவைகளை உருவாக்கி நடைமுறைப்படுத்த வேண்டும். குறிப்பாக அரச ஊடகங்கள் இதில் கவனம் காட்ட வேண்டும்.

* அச்சு ஊடகங்களுக்கு எதிரான முறைப்பாடுகளைக் கையாள்வதற்கு ஏதுவாக முறைப்பாட்டு ஆணைக்குழுவின் செயற்பாடுகள் மறு சீரமைக்கப்பட வேண்டும்.

* அரச ஊடகங்களின் நிர்வாக முகாமைத்துவப் பணிகளுக்கு நியமனம் பெறுபவர்களின் அரசியல் பின்னணியை விடவும் தொழில்சார் தகைமைக்கு முன்னுரிமை கொடுக்கப்பட வேண்டும். அரச ஊடக நிர்வாகம் தொடர்பில் அரசாங்கமும் எதிர்க்கட்சியும் பொது இணக்கப்பாடொன்றை எட்ட வேண்டும்.

* அரச இலத்திரனியல் ஊடகங்கள் நேர்மையான முறையில் பொதுச் சேவையில் ஈடுபட வேண்டும்.

### உள்ளூர்க் கண்காணிப்பாளர்கள்

* உள்ளூர்க் கண்காணிப்பாளர்கள் வாக்கு எண்ணும் நிலையங்களினுள் அனுமதிக்கப்படுதல் வேண்டும்.

* உள்ளூர்க் கண்காணிப்பாளர் தமது பணிகளைச் செம்மையாகச் செய்வதற்குத் தேவையான பயிற்சிகளும் ஆதரவும் இத்துறையில் ஈடுபட்டுள்ள பல்வேறு அமைப்புகளுக்கும் இடையிலான வலைப் பின்னல் அமைப்பும் அவசியமாதாகும்.

### பெண்கள் பங்களிப்பு

* பெண்கள் தேர்தல் நடைமுறைகளில் பங்கு கொள்வதற்கேற்ற வகையில் அரசியல் கட்சிகள் போதிய கவனம் செலுத்த வேண்டும்.


# கவிஞர் வாலி எழுதுகிறார்!

## -வாழ்க்கை சரிதம்-

"பாதை தெரியுது பார்" படம் எடுத்த குமரி பிலிம்ஸ் அலுவலகம் மாம்பலம் கிரி ரோடு அருகே இருந்தது. அந்தக் கம்பெனியின் மாடியில் ஒரு கீற்றுக் கொட்டகையில், நிறைய வாத்தியக்காரர்களை வைத்துக்கொண்டு இசையமைப்பாளர் திரு.எம்.பி. ஸ்ரீநிவாசன், பொதுவுடைமைக் கவிஞர் திரு.கே.சி. எஸ்.அருணாசலம் எழுதிய 'சின்னச் சின்ன மூக்குத்தியாம்...' என்ற பாடலை ஒத்திகை பார்த்துக் கொண்டிருந்தார்.

எம்.பி. ஸ்ரீநிவாசனிடம் என்னை அழைத்துச் சென்று 'பாதை தெரியுது பார்' படத்தில் எனக்கு ஒரு பாடல் தருமாறு கோபி வெகுவாக வற்புறுத்தினார். எம்.பி. ஸ்ரீநிவாசன் என்னை ஏற்கெனவே கோபி வீட்டில் பார்த்துப் பழக்கமானவர்தான். இருப்பினும், என்னைப் பார்த்த அவர் என் எழுத்தைப் பார்த்ததில்லை.

"கோபி, கே.சி.எஸ்.அருணாசலம், ஜெயகாந்தன், பட்டுக்கோட்டை மூணு பேருதான் இந்தப் படத்துல பாட்டு எழுதுறாங்க. மிஸ்டர் வாலிக்கு ஒரு பாட்டு கொடுக்கிற மாதிரி சிச்சுவேஷன் எதுவுமில்லை. இருந்தாலும் சமூகப் பிரக்ஞையோட பொதுவுடைமைக் கருத்தை Reflecd பண்ற மாதிரி ஏதாவது பாட்டு வாலி வெச்சிருந்தார்னா படத்துல Title Song ஆக யூஸ் பண்ண முயற்சிக்கிறேன்...." என்று எம்.பி. எஸ். கோபியிடம் சொன்னதும் என்னைப் பார்த்து கோபி கேட்டார்.



"வாலி எம்.பி.எஸ்.சொல்றமாதிரி Social Awareness ஐப் பத்தி ஏதாவது பாட்டு வெச்சிருந்தா சொல்லுங்க....!"

நான் சிறிது யோசித்து என் நோட்டில் எழுதி வைத்திருந்த ஒரு பாட்டை மனப்பாடமாக எனக்குத் தெரிந்த வர்ண மெட்டில் எம்.பி.எஸ்.ஸிடம் பாடிக் காண்பித்தேன்.

எம்.பி.எஸ். உடனே எந்த அபிப்பிராயமும் சொல்லவில்லை. கண்ணாடியை எடுத்து தன் நீண்ட ஜிப்பாவில் துடைத்துவிட்டுக்கொண்டு பிறகு என்னிடம் பேசலானார்.

"மிஸ்டர் வாலி! இப்ப நீங்க பாடிக் காமிச்ச பாட்டு நல்லா இல்லேன்னு நான் சொல்ல மாட்டேன். ஆனா, என்னைப் பெரிசா Impress பண்ணல்லே... So Sorry" என்று வாத்தியக்காரர்களுக்கு Notation கொடுக்கப் போய்விட்டார்.

"கவலைப்படாதீங்க வாலி! வேற இடத்துல ட்ரைபண்ணுவோம்" என்று கோபி என்னை அழைத்துக்கொண்டு வீடு திரும்பினார்.

திரு.எம்.பி.எஸ்.ஸிடம் 1958இல் நான் பாடிக் காண்பித்த அதே பாட்டு 1967இல் ஒலிப்பதிவாகி, பட்டிதொட்டியெல்லாம் தேசிய கீதம் போல் ஆயிற்று. இதை நான் பிற்காலத்தில் எம்.பி.எஸ்.ஸிடம் சொன்னபோது, மெய்யாகவே மிகவும் சங்கடப்பட்டார்.

தன் கணிப்பு அன்று தவறாகப் போனதை அந்தப் பெரிய மனிதர் சற்றும் தயக்கமின்றி ஒப்புக்கொண்டார்.

அந்தப் பாடல்தான் 'படகோட்டி' படத்தில் இடம்பெற்ற,

"கொடுத்ததெல்லாம் கொடுத்தான் – அவன்
யாருக்காகக் கொடுத்தான்?
ஒருத்தருக்கா கொடுத்தான் – இல்லை
ஊருக்காகக் கொடுத்தான்!"

என்று என் நண்பர் திரு.எம்.ஜி.ஆர். பாடி பிரபலமடைந்த பாட்டு.

அன்றாடம் பல இசையமைப்பாளர்களின் பழக்கம் எனக்கு கோபியால் கிடைத்தது.

திரு.ஜி.ராமநாதன், திரு.டி–ஜி.லிங்கப்பா, திரு.அருண்ராகவன், திரு.கோவிந்த ராஜுலு நாயுடு, திரு.ஜி.கே.வேங்கடேஷ் என்று பலரை எனக்குப் பழக்கப்படுத்தி வைத்தார் கோபி.

பிற்காலத்தில் மேற்சொன்ன நம்பிக்கைச் சங்கிலி ஒவ்வொரு கண்ணியாக அற்று விழ ஆரம்பித்தது.


நான் இளைத்தும் களைத்தும் போனேனே தவிர, கோபி சளைத்தாரில்லை.

ஒருநாள் அதிகாலை என்னை ஒரு இசையமைப்பாளர் வீட்டுக்கு கோபி தன் ஸ்கூட்டரில் அழைத்துச் சென்றார். எனக்கு அந்த இசையமைப்பாளரிடம் ஏற்கெனவே அளவு கடந்த அபிமானமும் மரியாதையும் உண்டு. அவர் மூலம் எனக்கு எப்படியும் படத்துறையில் பாட்டெழுதும் ஒரு வாய்ப்பைப் பெற்றுத் தந்துவிடுவது என்று கங்கணம் கட்டிக்கொண்டு அவர் வீட்டுக்கு என்னைக் கூட்டிப் போனார் கோபி.

அந்த இசையமைப்பாளருக்கு கோபியிடம் மிகுந்த பிரியமுண்டு. கோபியை ஆரத் தழுவி அவர் வரவேற்றார். நான் ஒரு ஓரத்தில் பூனைக்குட்டி போல் ஒடுங்கி நின்றேன். என்னை அவரிடம் கோபி அறிமுகப்படுத்திவிட்டு. என் ஊர், என் கல்வி இவை பற்றியெல்லாம் ஒரு சிறிய முன்னுரையை வழங்கிவிட்டு, என் பாட்டு நோட்டை என் கையிலிருந்து வாங்கி, அந்த இசையமைப்பாளரிடம் கொடுத்தார். அவர் அதை ஆர்வமோடு வாங்கி, சில பக்கங்களைப் புரட்டிப் பார்த்து நின்று நிதானமாகப் படித்தார். பிறகு என் பாட்டு நோட்டை என்னிடம் திருப்பித் தந்துவிட்டு காபி வரவழைத்து எங்கள் இருவருக்கும் வழங்கினார். நான், இந்த இடத்திலும் நம்முடைய பாட்டு எடுபடவில்லை என்று ஒடிந்து போனேன்.

(தொடரும்)






காலை 7 மணி.

"தாங்கள் தயாராகிவிட்டீர்களா?" ஜோர்ஜ் மரியாதையாகக் கேட்கிறார்.

"ஆம். ஆனால், எனது கறுப்பு டையை எனது கை அணிகளோடு (Cufflinks) பறிமுதல் செய்துவிட்டார்கள்" நான் பதிலளிக்கிறேன்.

ஜோர்ஜின் சக அதிகாரி கறுப்பு டை ஒன்றையும் ஒரு சோடி கை அணிகளையும் என்னிடம் ஒப்படைக்கிறார். அவர்கள் எனது பிரச்சினையை ஏற்கெனவே எதிர்பார்த்திருந்தனர் என்று நான் யூகிக்கிறேன். எனது டையை விடவும் அவரது கறுப்பு டை அழகாக இருப்பதாக நான் அவரிடம் கூறுகிறேன்.

"இருக்கக்கூடும். ஆனால், என்னுடையது க்ளிப் பண்ணப்பட்டுள்ளது. இல்லாவிட்டால் அதைச் சந்தோசமாக உங்களுக்குத் தந்துவிடுவேன்" அவர் கூறுகிறார்.

"க்ளிப் பண்ணப்பட்டிருக்கிறது?" அவர் சொன்னதை நான் ஏளனமாகத் திருப்பிச் சொல்கிறேன்.

"சிறைச்சாலை ஒழுங்கு விதிகள் அவை. கழுத்தை நெரிக்கக் கூடிய அபாயமுள்ள ஒரு டையை எந்தச் சிறை அதிகாரியும் அணிவதில்லை" அவர் விளக்குகிறார்.

ஒவ்வொரு சில நிமிடங்களுக்கும் நான் புதியதொன்றைக் கற்றுக்கொள்கிறேன்.

அந்த இரு அதிகாரிகளும் என்னை முன் ஹோலுக்குக் கூட்டி வருகின்றனர். ஆனால், அதற்கு முன்பாக இரண்டைப் பூட்டுப் போடப்பட்ட, கூரையிலிருந்து தரை வரை உயர்ந்த கம்பிகளைக் கொண்ட ஏழு நுழைவாயில்களைத் தாண்டி வர வேண்டியிருந்தது. வரவேற்பு அறைக்கு வந்தபோது மீண்டும் ஆடை களையப்பட்டு நான் பரிசோதிக்கப்படுகிறேன். அதிகாரிகள் தம்மால் இயன்ற அளவுக்குக் கருணையுடனும் மனிதாபிமானத்துடனும் தமது பணியைச் செய்கிறார்கள். ஆயினும் கூட அது அவமானகரமானதாகவே இருக்கிறது.

நான் முற்றத்திற்குக் கூட்டிக்கொண்டு போகப்பட்டேன். அங்கே வெள்ளை நிற வேன் ஒன்று எனக்காகக் காத்துக்கொண்டிருந்தது. உள்ளே ஏறியதும் கதவிலிருந்து மிகவும் தூர உள்ள ஓர் ஆசனத்தில் அமரும்படி வேண்டப்பட்டேன். ஜோர்ஜ்

### தமிழில் தருவது ஜெஃப்ரி ஆச்சர்

கதவருகே அமர்ந்துகொள்கிறார். அவருக்குப் பின்னால் இருக்கும் மேலதிக ஆசனத்தில் அவரது சகபாடி அமர்ந்துகொள்கிறார். சிறிய ஜன்னல்கள், கம்பிகளால் மறைக்கப்பட்டு கருமையாக இருக்கின்றன. யாரும் என்னைப் பார்க்க முடியாத போதும் கூட என்னால் எவரையும் பார்க்க முடிகிறது. நான் ஜோர்ஜிடம் சொல்கிறேன்: பத்திரிகைக் காரர்கள் நன்கு ஏமாறப்போகிறார்கள்.

(பக்கங்கள் வளரும்)

# ஆசியப் பெண்களால் விவாகரத்துப் பெறும் அமீர் இராச்சியப் பெண்கள்

மத்திய கிழக்கு நாடுகளில் குறிப்பாக ஐக்கிய அரபு அமீர் இராச்சியத்தில் புதிதாக ஒரு பிரச்சினை தலைதூக்கியுள்ளது. அதாவது அங்குள்ள குடும்பஸ்தர்களது பார்வை ஆசிய நாடுகளில் இருந்து புலம்பெயர்ந்துள்ள அழகிய உடற்கட்டமைப்புகளைக் கொண்ட பெண்களின் பால் திரும்பியுள்ளதாகத் தெரிய வருகின்றது.

இதன் காரணமாக வசீகரிக்கப்பட்டுள்ள அராபிய நாட்டு குடும்பஸ்தர்கள் தங்கள் மனைவிமாரை ஒழுங்காக நடத்துவதில்லை என்ற காரணத்தினால் விவாகரத்துக்கள் நாளாந்த ரீதியில் அதிகரித்து வருவதாகவும், இதனைத் தடுத்து நிறுத்துவதற்கும், வெளிநாட்டுப் பெண்களுடனான திருமண ஒப்பந்தங்களைத் தடை செய்வதற்கும், வரையறை பண்ணுவதற்குமான நடவடிக்கைகள் அங்கு மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தகவல்கள் கூறுகின்றன.

ஐக்கிய அரபு அமீர் இராச்சியத்தில் விவாகரத்துக்களை மேற்கொள்ளும் நடவடிக்கைகள் நாளாந்தம் வளர்ச்சி பெற்று வருவதாகவும்,வருடத்துக்கு சுமார் 6,000 விவாகரத்துக்கள் முன்பு இடம்பெற்று வந்ததாகவும், அது தற்போது 20,000 வரையில் அதிகரித்துள்ளதாகவும் மதிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த வருடம் வரை ஆரம்பக் கல்வியை மேற்கொண்டு வருகின்ற 2,829 மாணவர்களது



பெற்றோர்கள் விவாகரத்துப் பெற்றுள்ளதாக அபுதாபி விவாக நிதியத்தின் பணிப்பாளர் நாயகம் ஜமால் அல்ப்டபா கூறுகின்றார்.

ஒரு சில பகுதிகளில் நூற்றுக்கு 40 வீதமான திருமணங்கள் விவாகரத்துக்களில் முடிகின்றனவாம். இதில் 23வீதமான குடும்ப வாழ்க்கை பாலியல் பலவீனங்கள் காரணமாகவே சிதைகின்றன என்றும் கூறப்படுகின்றது. இப் பிரச்சினையானது கல்வியறிவு அற்ற பெண்கள் மிக அதிகமாக வாழும் பகுதிகளிலேயே பரவலாகக் காணப்படுகின்றது. நாகரிகப் பகுதிகளில் படித்த பெண்களிடையே இப் பிரச்சினை மிகவும் குறைவு என்றே கூறப்படுகின்றது.

அராபியப் பெண்கள் தங்களது மத, கலாசார அடிப்படையில் முழு உடம்பையும் மூடியவாறான ஆடைகளை அணிவது வழக்கமாகும். ஆனால், மத்திய கிழக்கு நாடுகளில் தொழில்வாய்ப்பு கருதிச் சென்றிருக்கும் இலங்கை, பாகிஸ்தான், பிலிப்பைன்ஸ் மற்றும் பங்களாதேஷ் ஆகிய நாடுகளைச் சேர்ந்த பெண்கள் மேலைத்தேய நாகரிகத்துக்கு ஏற்ற வகையில் தங்களது உடம்பை அரைகுறையாக மறைத்தும், சில பகுதிகளை எடுப்பாகக் காட்டியும் ஆடை அணிவதும், ஏனையவர்களை கிறங்கடிக்கக் கூடிய நடத்தைகள் காரணமாகவும் அங்கு இவ்வாறான நிலைமைகள் தோன்றக் காரணமென ஊடகங்கள் கூறுகின்றன.

ஐக்கிய அரபு அமீர் இராச்சியத்தின் ஜனாதிபதி ஷிக் சயீத் பின் சுல்தான் அல் – நஹ்யாஸ், தேசிய மக்கள் தொகையை வளர்த்தெடுப்பதன் நோக்கத்தில் விவாக நிதியம் என்றொரு அமைப்பை நிறுவினார். அனாதைகள் திருமணம் முடிக்கும்போது இந்த நிதியம் நிதி உதவி வழங்கும். அதே நேரம் வெளிநாட்டுப் பெண்ணைத் திருமணம் முடித்துள்ள ஒருவர் இரண்டாந் தாரமாகத் தமது நாட்டைச் சார்ந்த ஒரு பெண்ணைத் திருமணஞ் செய்வாராயின் இந்த நிதியம் 19,000 டொலர்களை வழங்கும் வகையில் பின்னர் சட்ட திட்டங்கள் கொண்டு வரப்பட்டுள்ளன.

இப் பிரச்சினை தொடர்பாக ஆராய்ந்துள்ள சமூகவியலாளர்கள், வெளிநாட்டுப் பெண்களை விவாகஞ் செய்வதன் மூலம் பல்வகைப்பட்ட பிரச்சினைகளைத் தோற்றுவிக்கக்கூடிய சமூக மற்றும் கலாசார ரீதியிலான மாற்றங்கள் ஏற்பட்டு, குடும்ப வாழ்க்கை சிதைவுற்று மேலும் மேலும் விவாகரத்துக்கள் அதிகரிப்பதாகச் சுட்டிக் காட்டியுள்ளனர்.

வெளிநாட்டுப் பெண்ணுக்கும் உள்ளூர் ஆணுக்கும் இடையில் திருமணம் நடக்கும்போது, அதன் மூலம் பிறக்கும் குழந்தையை அப் பெண் தனக்கே உரிய கலாசாரத்தின்படியே வளர்க்க முற்படுவாளன்றி, அராபிய சம்பிரதாயங்களுக்கு உட்பட்டல்ல என்பது இஸ்லாமிய மதத் தலைவர்களால் இங்கு எடுத்துக் கூறப்பட்டுள்ளது. எனினும், அமீர் இராச்சியத்திலுள்ள பல இளைஞர்கள் தங்களது குடும்ப ஆலோசனைகளைப் பெறாமல் மேற்கத்தைய மற்றும் ஆசிய நாடுகளைச் சார்ந்த பெண்களையே விவாகஞ்செய்து வருவதாகவும் கூறப்படுகின்றது.

23 இலட்சம் மக்கட் தொகையைக் கொண்டுள்ள அமீர் இராச்சியத்தில் நூற்றுக்கு 70 வீதமானவர்கள் தென்னாசிய தீவிலிருந்தும் ஏனையவர்கள் வேறு பகுதிகளிலிருந்தும் புலம் பெயர்ந்துள்ளவர்களாவர் என்பது குறிப்பிடத் தக்கது.

உள்ளூர் ஆண்கள் வெளிநாட்டுப் பெண்களைத் திருமணம் செய்துகொள்வதற்கு இன்னுமொரு காரணம் கூறப்படுகின்றது. அதாவது, மணப் பெண்ணுக்கு பாரியதொரு தொகையைச் சீதனமாகக் கொடுப்பதில் இருந்தும் தவிர்த்துக்கொள்ளல் ஆகும். மணப்பெண்களுக்கு வழங்கப்படக்கூடிய சீதனத் தொகையானது எண்ணெய் உற்பத்திப் பெருக்கத்துடன் இரண்டு, மூன்று மடங்குகள் அதிகரித்துள்ளதாகவும், இதனால் குறைந்த வருமானம் பெறும் ஆண்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகின்றது. சில திருமணங்களின்போது மணப்பெண்ணுக்கு ஒரு இலட்சம் டொலர்கள் சீதனமாகத் கொடுக்கப்பட்ட சம்பவங்களும் நினைவு கூரப்படுகின்றன. விவாக நிதியப் பணியகம் திருமணம் முடிப்பவர்களுக்கு நிதி உதவி வழங்கி வருவதுடன், தற்போது கலப்புத் திருமணங்களுக்கு எதிராக இளைஞர்களை அறிவுறுத்தும் பிரசார நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு வருகின்றது. அதே நேரம் நாட்டு மக்களால் குறைந்த விலை கொடுத்துப் பெறக் கூடிய திருமண வரவேற்பு மண்டபங்களையும் கட்டி வருகின்றது.

இந்த நிதியம் புதிதாக முன்வைத்துள்ள நிபந்தனை ஒன்றின் பிரகாரம் திருமணம் முடிக்கின்ற ஆணுக்கோ, பெண்ணுக்கோ எய்ட்ஸ் உட்பட்ட தொற்று நோய்கள் இல்லை என்பதை வைத்திய சான்றிதழ்கள் மூலம் நிரூபிக்க வேண்டும்.

இதேநேரம் விவாகரத்து பெற்றுக்கொண்டுள்ள பெண்களைத் திருமணம் செய்ய முன்வருமாறு நாட்டு மக்களை அறிவுறுத்தக் கூடிய நடவடிக்கைகளை ஜனாதிபதி மேற்கொண்டு வருகின்றார் என்ற போதிலும் இவ்வாறான விவாகரத்துக்கள் பெண்களது தவறுகளால் ஏற்பட்டவை அல்ல என்பதை உணர்வுபூர்வமாக உணர்த்துவதற்கு பல காலங்கள் செல்லும் என்றே சமூக ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

- பாரூக் -

# ஜனாதிபதியுடன் தமிழ்க் கூட்டமைப்பு சந்திப்பு


கடந்த ஜூன் 10ஆம் திகதி இரவு ஜனாதிபதி திருமதி சந்திரிகாவுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையே இடம்பெற்ற சந்திப்பு மிகவும் முக்கியமானது என்றே கூறலாம். இச் சந்திப்பின் முக்கியத்துவம் குறித்து விளக்கும் முதலாவது அம்சம், ஜனாதிபதி அவர்கள் கூட்டமைப்பினரை நீண்ட நேரம் காத்திருக்க வைக்கவில்லை என்பதுடன் கலந்துரையாடல் கிட்டத்தட்ட நள்ளிரவு வரையில் நீண்டுள்ளது. இரண்டாவது அம்சம், இந்தச் சந்திப்பின் முக்கியத்துவம் குறித்தும், இங்கு வெளிப்பட்ட ஆக்கபூர்வமான கருத்துக்கள் குறித்தும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரான இரா.சம்பந்தன் ஊடகங்களுக்குத் தெரிவித்த விடயங்களாகும்.



**அரசாங்கத்துக்கும் புலிகளுக்கும் இடையே பொதுவான நலன்கள் தற்செயலாகப் பொருந்தியுள்ளன. இது சிலவேளை முட்டுக்கட்டைகளை நீக்குவதற்கு அல்லது விரைவாகச் சீர்குலைந்து போவதற்கு வழிவகுக்கலாம்.**

**ஜனாதிபதி**

அடிப்படையில் புலிகளின் இடைக்கால நிர்வாக யோசனையை மையமாகக் கொண்டு பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க ஜனாதிபதி சந்திரிகா இணக்கம் தெரிவித்தார். வடக்கு - கிழக்கு மாகாணத்திற்கான இடைக்கால நிர்வாக யோசனைகள் குறித்து தயக்கங்களும் சந்தேகங்களும் இருக்கின்றபோதிலும் இதனை ஆரம்பமாகக் கொள்ள ஜனாதிபதி சம்மதித்தார். சம்பந்தனின் கூற்றுப்படி அடிப்படைப் பிரச்சினைகள் தொடர்பான பேச்சுக்களையும் நீண்ட தூரத்திற்கு தள்ளி வைக்காமல் இருக்க ஜனாதிபதி வற்புறுத்தியுள்ளார். ஜனாதிபதி 12ஆம் திகதியன்று இரவு நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரையில் தெரிவித்த கருத்துக்கள் சம்பந்தன் வெளியிட்டவற்றை உறுதிப்படுத்துகின்றன. நிரந்தரத் தீர்வைக் காண்பதற்காக (அடிப்படைப் பிரச்சினைகள் குறித்துப் பேசி என அர்த்தம் கொள்க)



புலிகளுடன் பேச்சுவார்த்தைகள் நடத்த அரசாங்கம் தயாராக இருக்கின்ற அதே வேளையில் இடைக்கால ஏற்பாடுகள் குறித்தும் (இடைக்கால நிர்வாகம் என அர்த்தப்படுத்துக) அதாவது வடக்கு - கிழக்கின் அவசரமான அபிவிருத்திப் பணிகள் பற்றியும் கவனிக்க அரசாங்கம் தயாராக உள்ளது என்று ஜனாதிபதி தனது உரையில் வெளிப்படுத்தியுள்ளார்.

தமிழ்க் கூட்டமைப்பினர் ஜனாதிபதியைச் சந்தித்துப் பேசுவதற்குப் புலிகள் பச்சைக் கொடி காட்டியிருப்பார்கள் என்பது நிச்சயம். சம்பந்தன், ஜனாதிபதியுடன் பேசிய பல தரப்பட்ட விடயங்கள் குறித்தும் ஊடகங்களுக்கு நேரடியாக விளக்கம் அளித்தமை இதனைத் தெளிவாகப் புலப்படுத்துகிறது. ஊடகம் ஒன்றுடனான தொலைபேசி உரையாடலின்போது பேச்சுவார்த்தைகள் மீள ஆரம்பமாக வேண்டும் என்பதை விடவும், ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் அரசாங்கத்துக்குச் சங்கடத்தை ஏற்படுத்தும் கேள்விகளையே குணதாச அமரசேகர சம்பந்தனிடம் திரும்பத் திரும்ப எழுப்பினார். இந்த இடத்தில் ஊடகங்கள் மிகக் கவனமாகவும் பக்குவமாகவும் நடந்துகொள்ள வேண்டுமேயன்றி பொதுமக்களை ஆத்திரமூட்டும் வகையில் செயற்படக் கூடாது என்பதைக் கூறி வைக்க வேண்டும்.

பேச்சுவார்த்தைகள் சமாந்தரமாக இடம்பெற வேண்டியது தவிர்க்க முடியாதது என்பதைச் சம்பந்தன் பகிரங்கமாக ஒப்புக்கொண்டார். தமிழ்க் கூட்டமைப்பின் பேச்சாளரை மேற்கோள் காட்டி "தமிழ் நெற்" இணைய தளம் வேறு கருத்துக்களை முன்வைத்தது. அதாவது, ஜனாதிபதியுடனான சந்திப்பின்போது உயர் பாதுகாப்பு வலயம் நீக்கப்பட வேண்டும்; பயங்கரவாதத் தடைச் சட்டம் விலக்கப்பட வேண்டும் என்பன போன்ற விடயங்கள் எழுப்பப்பட்டதாகவும், இனிமேலும் சிங்களத் தலைவர்களை நம்பி ஏமாறத் தமிழர்கள் தயாராக இல்லை என்பது போலக் கூறப்பட்டதாகவும் தமிழ் நெற் தெரிவித்தது.

மறு பக்கத்தில் ஜூன் 12ஆம் திகதி 'டெயிலி நியூஸ்' நாளிதழ் அரசாங்கத் தரப்பிடமிருந்து கசிந்த தகவல்களால் உற்சாகம் பெற்ற வகையில் செய்தி வெளியிட்டது. தமிழ்க் கூட்டமைப்பினருடனான சந்திப்பு ஆக்கபூர்வமானதாகவும் சுமுகமாகவும் இடம்பெற்றதாக அது வர்ணித்தது. இப் பேச்சுவார்த்தையின் தன்மையில் நம்பிக்கை வெளிப்பட்டதாகச் சுட்டிக்காட்டி நேரடிப் பேச்சுக்கள் விரைவாக ஆரம்பிக்கப்படலாம் எனவும், அதாவது புலிகளுடன் பேச்சுக்களை மீள ஆரம்பித்து சமாதான முயற்சிகள் முன்னெடுக்கப்படும் எனவும் 'டெயிலி நியூஸ்' கூறியது.

ஆனால், இது வெறும் ஆரம்பம் மட்டுமே. நாங்கள் அனைவரும் நிம்மதியாக உறங்கச் செல்வதற்கு இன்னமும் நீண்ட தூரம் பயணம் செய்ய வேண்டும். திருமதி சந்திரிகா மேற்கொண்ட இந்தச் சந்திப்புக்கு உள் நோக்கம் வேறு இருப்பதாகச் சிலர் காட்டலாம். அதாவது பாராளுமன்றத்தில் எதிர்க் கட்சிகளின் கூட்டு எதிர்ப்பைத் தணிக்க தமிழ்க் கூட்டமைப்பைப் பயன்படுத்த முனைவதாகக் கருதப்படலாம். ஆனால், சுயநலம் சார்ந்த உள்நோக்கங்கள்தான் மக்களைச் செயலில் ஈடுபட உந்திச் செல்பவை என்பதை மறுப்பதற்கு இல்லை. இந்த வகையில் ஜூன் முதலாம் திகதியன்று உதவி வழங்கும் நாடுகள் வெளியிட்ட அறிவிப்பு அரசாங்கத்தை உசார்ப்படுத்தி இருக்கலாம். பிரசல்ஸில் ஐரோப்பிய யூனியன், ஜப்பான், நோர்வே மற்றும் அமெரிக்கப் பிரதிநிதிகள் இலங்கைக்கு உதவுவது தொடர்பாகக் கூடிப் பேசிய பின்னர் இந்த அறிவிப்பு வெளியானது.

நெருக்கடிகளிலிருந்து விடுபடுவதற்காக சர்வதேச சமூகத்தின் உதவிகள் இலங்கைக்குப் பெருமளவில் தேவைப்படுகின்றன. இதனை ஈட்டிக் கொள்வதற்காக ஆக்கபூர்வமான வகையில் பேச்சுவார்த்தைகளை விரைவாக ஆரம்பிக்க வேண்டுமென இந்தக் கூட்டு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது. சமாதான முயற்சிகளில் முன்னேற்றம் காணப்படாதவிடத்து சர்வதேச சமூகத்தின் கவனம் வேறு இடங்களுக்குத் திரும்பலாம் எனவும் கோடிட்டுக் காட்டப்பட்டிருந்தது.

இந்தக் கூட்டு அறிக்கையின் வாசகங்கள் அரசாங்கத்துக்குத் தெளிவான சில சமிக்ஞைகளை வழங்கியுள்ளன. அத்துடன் புலிகளுக்கும் சில கடுமையான எச்சரிக்கைகளைக் காட்டியுள்ளன. அதாவது, அடிப்படை மனித உரிமைகளைப் பேணிப் பாதுகாப்பது, இடைக்கால நிர்வாகக் கோரிக்கை தொடர்பில் ஆக்கபூர்வமான- நடைமுறைச் சாத்தியமான- அணுகுமுறையைக் கடைப்பிடிப்பது என்பவை தொடர்பில் புலிகளுக்கும் எச்சரிக்கைகள் விடப்பட்டுள்ளன. மேலும், சிறுவர்களைப் படையணிக்குச் சேர்ப்பதை நிறுத்துவது, ஏற்கெனவே சேர்க்கப்பட்டிருப்பவர்களை மீண்டும் பெற்றோரிடம் ஒப்படைப்பது என்பவற்றைப் புலிகள் செய்ய வேண்டும் எனவும் வற்புறுத்தப்பட்டுள்ளது. அத்துடன் புலிகள் முன்வைத்துள்ள இடைக்கால நிர்வாகக் கோரிக்கையின் உள்ளடக்கம் இரு தரப்பிலும் இணங்கப்பட்ட விடயங்களை நடைமுறைப்படுத்தும் வேகத்தை வெளிப்படுத்தவில்லை எனவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. செயற்றிறன் மிக்க நிர்வாகக் கட்டமைப்பு வடக்கு - கிழக்கு மாகாணத்தில் இல்லை என்றால் உதவி வழங்கும் நாடுகள் அதனை மீளக் கட்டி எழுப்புவதற்காக இரு தரப்புக்கும் ஊக்கம் தரும் எனவும் இந்த கூட்டு அறிக்கையின் இறுதிப் பகுதியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இடைக்கால ஏற்பாடுகளுக்கு ஒரு இடைக்காலமாக என அர்த்தப்படுத்துக)

**தமிழரசுக் கட்சி**

**வடக்கு - கிழக்கு மாகாணத்திற்கான இடைக்கால நிர்வாக யோசனைகள் குறித்து தயக்கங்களும் சந்தேகங்களும் இருக்கின்றபோதிலும் இதனை ஆரம்பமாகக் கொள்ள ஜனாதிபதி சம்மதித்தார். சம்பந்தனின் கூற்றுப்படி அடிப்படைப் பிரச்சினைகள் தொடர்பான பேச்சுக்களையும் நீண்ட தூரத்திற்கு தள்ளி வைக்காமல் இருக்க ஜனாதிபதி வற்புறுத்தியுள்ளார்.**

எப்படியிருந்தபோதும், சமாதான முயற்சிகளின் முன்னேற்றம் என்பது தொடர்பில் உதவி வழங்கும் நாடுகள் எத்தகைய கருத்தைக் கொண்டுள்ளன என்பது தெளிவாகப் புலப்படவில்லை. ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு வடக்கு - கிழக்கின் இடைக்கால நிர்வாகப் பொறுப்பைத் தம்மிடம் கையளிக்க வேண்டும் என்பதே புலிகள் எதிர்பார்க்கும் முன்னேற்றம் ஆகும். புலிகளைப் பொறுத்தவரையில் அடிப்படைப் பிரச்சினை ஆய்வாளர்களின் விவாதப் பொருளாக இருக்க, அன்றாட அத்தியாவசியத் தேவைகளுக்கு முகம் கொடுப்பதன் ஊடாகத் தனி அரசு ஒன்றை நோக்கிப் பயணிப்பதாகவே இருக்கிறது. யு.பி.எவ்.ஏ. அரசாங்கத்தைப் பொறுத்த வரையில் முன்னேற்றம் என்பது அடிப்படைப் பிரச்சினைகளை அணுகுவதாக (முரண்பாடு தோன்றுவதற்கான காரணிகளைக் களைவது) இருக்கிறது. அதாவது, இனப் பிரச்சினைக்கு நிரந்தரமான நிலையான தீர்வைக் கண்டு காலப்போக்கில் புலிகளின் இராணுவ பலத்தை தேசிய நீரோட்டத்துக்குள் சங்கமிக்கச் செய்வது என்பதாக இருக்கிறது.

சத்யா முன்னைய ஒரு கட்டுரையிலும் சுட்டிக்காட்டியுள்ளதைப் போல இதிலுள்ள சிக்கல் என்னவெனில், புலிகளின் இடைக்காலத் தன்னாட்சி நிர்வாகக் கோரிக்கையானது அடிப்படைப் பிரச்சினைகள் அனைத்தையும் கவனத்தில் கொண்டதாக இருக்கின்றதா? தற்போதுள்ள சூழ்நிலையில் அரசியலமைப்புச் சீர்திருத்த முயற்சிகளில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசாங்கம் இறங்க முடியுமா? (அதாவது வடக்கு - கிழக்குக்கு அதிகாரங்களைப் பகிர்ந்து அளிக்க அல்லது சுயாட்சிக்கு வழிவிடும் விதத்தில் என அர்த்தப்படுத்துக)

இந்த முரண்பாடுதான் உதவி வழங்கும் நாடுகளின் பிரதிநிதிகளது சுழல் கதிரைகளைச் சுழற்ற வைப்பதாக உள்ளது.


ஆனால், இது குறித்தும் நாட்டு மக்களுக்கான தனது உரையில் ஜனாதிபதி சில விடயங்களைச் சுட்டிக் காட்டியுள்ளார். அரசாங்கத்துக்கும் புலிகளுக்கும் இடையே பொதுவான நலன்கள் தற்செயலாகப் பொருந்தியுள்ளன. இது சிலவேளை முட்டுக்கட்டைகளை நீக்குவதற்கு அல்லது விரைவாகச் சீர்குலைந்து போவதற்கு வழிவகுக்கலாம். தற்செயலாகப் பொருந்திய பொது ஆர்வம் பூர்த்தியடையும்போது மீண்டும் முரண்பாடும் மோதலும் தலைதூக்கலாம்.


ஆதலால், பரஸ்பர நம்பிக்கையைக் கட்டி எழுப்பும் செயற்பாடுகள் தொடர வேண்டும். அதாவது சந்திரிகாவுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையிலான சந்திப்புக்கள் அடிக்கடி இடம்பெறுவதானது வடக்கு - கிழக்கிலும் தென்பகுதியிலும் இருக்கக்கூடிய ஏனைய அரசியல் சக்திகளின் தயக்கங்களையும் சந்தேகங்களையும் போக்குவதாக அமையலாம். சமாந்தரமான பேச்சுவார்த்தைகள் மூலமாக நீடித்து நிலைக்கக் கூடியதும், அனைவரையும் உள்ளடக்கும் வகையிலுமான வழிமுறைகளை முன்னெடுக்கலாம். இந்த வகையில் புலிகள் தமது ஏகப்பிரதிநிதித்துவக் கொள்கையைக் கைவிட வேண்டியதும் முக்கியமானதாகும். தமிழ் மக்கள் மீது மேலாதிக்கம் செலுத்தும் வகையில் மாற்றுக் கருத்துக்களை அடக்கும் அல்லது அழித்து ஒழிக்கும் செயற்பாடுகளை புலிகள் முற்றாகக் கைவிட வேண்டும். வன்முறைக்கு ஊடாக அரசியல் பன்மைத்துவத்தை இல்லாது ஒழிப்பதைப் புலிகள் நிறுத்த வேண்டும்.

இதேபோல குழம்பிய குட்டையில் மீன் பிடிக்கும் செயற்பாடுகளைப் பாதுகாப்புத் தரப்பினரும் நிறுத்த வேண்டும்.

ஆனால், இவை எல்லாம் எய்தப்படுமாயின் பின்னர் பிரச்சினை எங்கே இருக்கிறது?

*நன்றி :- "டெய்லி மிரர்" 14.06.2004*
*ஆக்கம் :- சத்யா.*





> சக்தி தனக்கே அடிமை யாக்கு - அது
> சத்தியநல் லிரவியைக் காட்டும் - மதி
> சக்தி தனக்கே அடிமை யாக்கு - அதில்
> சாரவரும் புயல்களை வாட்டும்.
>
> -சுப்பிரமணிய பாரதியார்

## ஆப்பு அசைத்த குரங்கின் கதை

**பாப்பா முரசு சிறுகதை**

ஓர் ஊரில் ஒரு வணிகன் இருந்தான். அவன் தான் வசித்துவந்த ஊரின் எல்லைப்புறத்தில் ஒரு கோயில் கட்ட வேண்டுமென்று தீர்மானித்தான். கோவில் கட்டும் பணி தொடங்கியது. அப் பணியில் ஈடுபட்டிருந்த கட்டுமானக் கலைஞர்களும், சிற்பிகளும், தச்சர்களும் காலை முழுவதும் வேலை பார்த்துவிட்டு மதிய உணவிற்கு ஊருக்குள் சென்றுவிடுவர். ஒருநாள் அந்த இடத்திற்கு குரங்குகளின் கூட்டம் ஒன்று வந்தது. மனிதர்கள் அங்கு வேலை பார்த்துக் கொண்டிருந்தபொழுது, அவை அங்குள்ள மரங்களின் மீது ஏறிக் கிளைக்குக் கிளை தாவி மகிழ்ச்சியுடன் விளையாடிக் கொண்டிருந்தன. மதிய உணவு வேளை வந்தது. ஒரு மரத்தை அறுத்துக் கொண்டிருந்த தச்சன் ஒருவன், பாதி அறுத்த மரத்தின் இடையில் ஆப்பு ஒன்றினைச் செருகிவிட்டு மற்றவர் களுடன் உணவு உண்ணச் சென்றுவிட்டான்.

இதனை ஒரு மரக் கிளையில் அமர்ந்திருந்த குரங்கு ஒன்று பார்த்தது. அதன் பார்வை அந்த ஆப்பின் மீது ஆவலுடன் விழுந்தது. அது கீழே குதித்து ஆப்பு செருகியிருந்த மரத்தின் மீது அமர்ந்தது. பிறகு தனது கைகளால் அந்த ஆப்பை அசைத்தது.



அவ்வளவுதான், ஆப்பு அதன் கையோடு வந்துவிட்டது. அதே சமயம் குரங்கின் வால் மரத்தின் பிளவில் மாட்டிக்கொண்டது. அந்தோ பரிதாபம்! அந்தக் குரங்கு அங்கேயே மாண்டது.

"அதனால்தான் கூறுகிறேன் உனக்குத் தேவையில்லாத விஷயத்தில் தலையிடக் கூடாதென்று" என்று கதையை முடித்த கரடகன் "அது தவிர, இப்போது நீ பிங்களகனிடம் பணியில் கூட இல்லையே!" என்றும் கேட்டது.

அதற்குத் தமனகன் "நீ கூறுவது உண்மையாக இருக்கலாம். எனினும் ஒரு நல்ல குடிமகன், அவன் எந்நிலையில் இருந்தாலும், தனது அரசனைக் காக்கும் விஷயத்தில் எப்போதும் எச்சரிக்கையுடன் இருத்தல் வேண்டும். எனவே, பிங்களகனின் அச்சத்திற்குக் காரணம் என்னவென்று நான் கண்டுபிடிப்பேன்" என்று மறுமொழி கூறியது. பிறகு தமனகன், பிங்களகனைக் காணச் சென்றது. அது பிங்களகனைச் சந்தித்து, தலை வணங்கி மிக்க மரியாதையுடன் "அரசே! தங்களைக் காண்பதில் நான் மிக்க மகிழ்ச்சியடைகிறேன். நான் தங்களிடம் ஒரு சில வார்த்தைகள் பேச வேண்டுமென்று எண்ணியிருந்தேன். எனினுத் தங்களைக் காணும் துணிவு எனக்கு வரவில்லை. தங்கள் நம்பிக்கைக்குரிய நலம் விரும்பியான நான், தங்களிடம் பேச அனுமதி வேண்டுகிறேன்!" என்று கோரியது.

தமனகனின் பணிவான பேச்சு, பிங்களகனை மகிழ்ச்சியடையச் செய்தது.

"அஞ்ச வேண்டாம் தமனகா! நீ தாராளமாகப் பேசலாம்" என்று அது கூறியது.

"நன்றி அரசே!" என்று கூறிய தமனகன், மீண்டும் ஒரு முறை வணங்கிவிட்டு, "நான் ஆற்றங் கரையில் அமர்ந்திருந்தபொழுது, நீங்கள் தண்ணீர் கூட அருந்தாமல் அலறியடித்துக்கொண்டு ஓடுவதைக் கண்டேன். என்ன நடந்தது? உங்கள் பீதிக்குக் காரணமென்ன?" என்று கேட்டது. அதற்கு பிங்களகன், "அடடா! உனக்கு எத்தனை கூர்மையான பார்வை! அந்த இரகசியம் என்னவென்று கூறுகிறேன், கேள். ஆற்றங்கரை அருகே இடி முழக்கம் போன்ற ஓர் வினோதமான ஓசை கேட்டது. அது மிகவும் அச்சமூட்டுவதாக இருந்தது. அந்த ஒலியை எழுப்பிய கொடிய மிருகம் என்னைப் பிடித்துவிடக் கூடாதே என்றுதான் ஓடினேன்" என்றது.

"நீங்கள் சொல்லும் அந்த ஓசையை நான் கூடத்தான் கேட்டேன். ஆனால், அதனை எழுப்பியது யார் என்று எனக்குத் தெரியாது. மேலும், வெறும் ஓசைக்காக ஒருவர் ஏன் அஞ்ச வேண்டும்? போர் முரசின் ஓசையைக் கேட்ட ஒரு பசித்த நரியின் கதை உங்களுக்குத் தெரியாதா?" என்று தமனகன் கேட்டது.

"இல்லை. அதைச் சொல் வாயாக," என்று பிங்களகன் கூறியது.

அதனால் தமனகன் பிங்களகனுக்கு அந்தக் கதையைச் சொல்லத் தொடங்கியது...

**தொடரும்.....**

## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 03.07.2004

வர்ணம் தீட்டும் போட்டி இல: 551
தினமுரசு வாரமலர்
த. பெ. இல. 1772.
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 549

**பரிசுக்குரியவர்:**
**செல்வன்.எஸ்.துஷாந்த்,**
**இல.20, தாமரைக்கேணி வீதி,**
**மட்டக்களப்பு.**

### பாராட்டுக்குரியவர்கள்

| | |
|---|---|
| ரா.திவ்யா, 175, லோவர் வீதி, பதுளை. | பா.சிறீகுகன், யாழ்ப்பாணக் கல்லூரி, வட்டுக்கோட்டை. |
| அ.செந்தூரன், கலைவாணி பாலர் பாடசாலை, திருகோணமலை. | ஏ.எச்.நிரோஷா, யூ.எல்.ஸிஃபானி, பழைய தபாலக வீதி, ஓட்டமாவடி - 01. |
| எம்.எச்.அமானி, 2ஆம் வகுப்பு, கஹட்டபிட்டியா முஸ்லிம் வித்தியாலயம், கம்பளை. | கே.எஸ்.றாதை, கிங்ஸ்டன் சர்வதேச பாடசாலை, கொழும்பு - 06. |
| பா.ஜேம்சன், இல.23, 1ம் குறுக்குத் தெரு, எமில் நகர், மன்னார். | சிவாஜினி யோகராசா, சரசாலை தெற்கு, சாவகச்சேரி. |
| ஆர்.கிரிஷான், 187/16ஈ, ஜயசமகி மாவத்தை, களுபோவில. | ஆர்.பேர்ட்ரி, 38/47, போதிராம மாவத்தை, ஆட்டுப்பட்டித் தெரு, கொழும்பு - 13. |

## என் கடிதம்!



அருமை மிக்க நண்ப னுக்குக்
கடிதம் எழுதவே
ஆசை யாக வெள்ளைத் தாளை
எடுத்துக் கொள்ளுவேன்.

'அன்பு மிக்க சோமு வுக்கு',
என்று தொடங்குவேன்.
அச்ச டித்த எழுத்தைப் போல
அழகாய் எழுதுவேன்.

வணக்கம் என்றே அடுத்த வரியில்
தனியாய் எழுதுவேன்.
வரிசை யாகத் தகவல் யாவும்
புரியக் கூறுவேன்.

ஆசை யாகக் கடிதம் தன்னை
எழுதி முடித்ததும்
அன்பு நண்பன் என்றே எழுதி
அதற்கும் அடியிலே,

கண்ணன் என்றே கையெ
ழுத்தைப்
போட்டு நானுமே,
கடிதம் அதனை உறைக்குள்
வைத்துக்
கருத்தாய் ஒட்டுவேன்.

குண்டு குண்டாய் நண்ப னுடைய
விலாசம் எழுதுவேன்.
குறையில் லாமல் அஞ்சல்
தலையை
உறைமேல் ஒட்டுவேன்.

அஞ்சல் பெட்டி வாய்க்குள்
போட்டு
வீடு திரும்புவேன்.
அருமை நண்பன் பதிலைக்
காண
ஆவல் கொள்ளுவேன்.

## உங்கள் பொது அறிவு எப்படி?

### விஞ்ஞானக் கண்டுபிடிப்புக்கள்

1 சூரிய கிரகணத்தின் காலம் எவ்வளவு?
-7 நிமிடம் 31 வினாடிகள்.

2. சந்திர கிரகணத்தின் நீடிப்பு காலம் அளவு?
-104 நிமிடம்.

3.கோள்களை எதிர்ப் பக்கமாகச் சுற்றும் கோள்?
-யூரேனஸ்.

4.யூரேனஸ் கோளைக் கண்டுபிடித்தவர்?
-சேர். வில்லியம் வளர்கஸ் (1781 இல்)

5.நெப்டியூன் எப்பொழுது கண்டுபிடிக்கப்பட்டது?
-1846இல்.

6.கோள் மண்டலத்தின் அமைப்பை விளக்கியவர் யார்?
-போலந்து நாட்டைச் சேர்ந்த நிகலொஸ் சோபா

7. புதன் சூரியனைச் சுற்றி வர எவ்வளவு நாட்கள் எடுக்கும்?
-88 நாட்கள்.


8. செவ்வாய்க் கிரகம் சூரியனைச் சுற்றி வர எவ்வளவு காலம் எடுக்கும்?
-687 நாட்கள்.

9. வெள்ளி, சூரியனைச் சுற்றி வர எவ்வளவு நாட்கள் எடுக்கும்?
-247 நாட்கள்.

10. வெள்ளியின் வெப்ப நிலை?
-480 கி.

## அதிசய உலகம்

### வேகமாக ஓடும் பாம்பு



தரையில் மிக வேகமாகச் செல்லக் கூடிய பாம்பு எது?

ஆபிரிக்காவில் உள்ள 'கறுப்பு மம்பா' என்று ஆராய்ச்சியாளர்கள் சொல்கிறார்கள். மம்பா என்ற நச்சுப் பாம்பில் நான்கு வகை உண்டு. அவற்றில் ஒன்றுதான் கறுப்பு மம்பா.

பெயரில் கறுப்பு இருக்கிறதே தவிர, அது உண்மையில் கறுப்பு நிறமானது அல்ல. சாம்பல் நிறத்தில் அல்லது வெளிர் பழுப்பு நிறத்தில் இருக்கும். கறுப்பு மம்பா 4.3 மீற்றர் (13 அடி) நீளம் வளரக் கூடியது. இதைக் கொஞ்சம் உசுப்பிவிட்டால் போதும், உடனே படம் விரித்துக் கொத்திவிடும். கடுமையான விஷம் என்பதால் கொத்தப்பட்டவர் உடனே செத்துவிடுவார்.

மணிக்கு 12 கி.மீ. வேகத்தில் செல்லும் ஆற்றல் படைத்தது கறுப்பு மம்பா. மரத்தின் மீது அல்லது செங்குத்தான பாறையின் மீது ஏறும் திறமையும் இதற்கு உண்டு.

### வேட்டை

**தென்னாபிரிக்காவின் 'மாலா மாலாகாமா ரிசர்வ்' வனவிலங்கு சரணாலயத்தில் உள்ள வலிமை மிகுந்த டிஜோ லோலோ சிறுத்தை இருளில் ஒளிந்திருந்து இம்பாலா மான் ஒன்றைத் தாக்கி, அதன் கழுத்தைக் கடிக்கும் காட்சி! இதை இழுத்துச் சென்று புதரில் மறைத்து வைத்து சில நாட்கள் சாப்பிடும்! வன விலங்குகள் அருகி வரும் காலத்தில் இத்தகைய சரணா லயங்கள்தான் அவற்றைப் பாதுகாத்து வருகின்றன.**

**- தா**



# தகவல் பெட்டி

## சோதனை

அமைதியாக இருந்த ஐரோப்பிய நாடுகளில் ஆபத்து நிறைந்த சூழ்நிலை உருவாகிவிட்டது. இதற்குக் காரணம் ஸ்பெயின் நாட்டில் இடம்பெற்ற ரயில் குண்டுவெடிப்புத்தான். அக் குண்டு வெடிப்பிற்குப் பிறகு பிரிட்டன், பிரான்ஸ், ஜேர்மனி ஆகிய நாடுகளிலுள்ள சுரங்கப்பாதை ரயில்கள், விமான நிலையங்கள் பலத்த பாதுகாப்புக்கு உட்படுத்தப்பட்டுள்ளன. பிரான்ஸிலுள்ள இரயில் நிலையம் ஒன்றில் இராணுவத்தினர் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருக்கும் காட்சி இது. நமது நாட்டிலும் கடந்த 16 ஆம் திகதி தற்கொலைக் குண்டுதாரியின் அங்கி, கிராண்ட்பாஸ் பகுதியில் கண்டுபிடிக்கப்பட்டிருப்பது பயங்கரவாதத் தாக்குதல்கள் நடைபெறுமோ என்ற அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது. நடக்காதென்று எதுவும் இல்லை. ஏனெனில், பயங்கரவாதிகள் எல்லாம் பாஸ்போட் முடித்து உலகம் சுற்றி வருகிறார்கள்.



## சாகசம்





அமெரிக்காவில் நடைபெற்ற வினோத விளையாட்டுப் போட்டியில் சுடப்பட்ட படம் இது. விரைவாகத் தண்ணீரில் ஓடும் வள்ளத்தில் கயிற்றை இறுக்கிப் பிடித்தபடி கம்பீரமாக நிற்கும் மிஸ்ரர் அணில், உலகத்திலேயே முதலாவதாக சாகசம் காட்டக் கூடிய அணில் என்று பெயர் பெற்றிருக்கிறது. விடுவார்களா அமெரிக்கர்கள்? அமெரிக்கக் கொடியை அணிலின் கழுத்தில் கட்டி தங்கள் நாட்டுப்பற்றைக் காத்துக்கொண்டார்கள். துணிச்சலான அணிலுக்கு ஒரு ஓ போடு!

## தம்பதிகள்

அமெரிக்காவின் விண்வெளி ஆய்வு கூடத்தில் பணியாற்றி, கொலம்பியா விண்கலம் வெடித்துச் சிதறியதில் இறந்த இந்திய வீராங்கனை கல்பனா சவுலாவின் பெயர் நியூயோர்க் நகரிலுள்ள வீதியொன்றிற்குச் சூட்டப்பட்டுள்ளது. இந்த நிகழ்ச்சிக்கு அமெரிக்கரான அவரது கணவர் ஜீன்கரிசன் அழைக்கப்பட்டிருந்தார். 1982ஆம் ஆண்டு மேற் படிப்புக்காக அமெரிக்கா சென்று 1984ஆம் ஆண்டு விமான ஓட்டியாகப் பயிற்சி பெற்றார். பயிற்சி அளித்தவரான ஜீன்கரிசனையே காதலித்துத் திருமணமும் செய்து கொண்டார். கல்பனா பற்றி அவரது கணவர் கூறும்போது இறந்த என் மனைவி இந்தியப் பெண்ணாக இருந்தும் அவரிடம் அமெரிக்கப் பெண்ணைப் போல துணிவும் வீரமும் கண்டேன் என மனமுருகிச் சொல்கிறார். இதோ கல்பனாவும் அவரது கணவரும்.





## பெண் பிரபல்யங்கள்

இந்த இரண்டு பெண்மணிகளுமே உலகில் பிரபல்யமானவர்கள்தாம். ஒருவர் அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ்ஷின் தாயார். மற்றைய பெண்மணி வியட்நாம் போரில் அமெரிக்காவின் எரிகுண்டுத் தாக்குதலால் 80 வீதமான உடல் எரிவுக் காயங்களால் பாதிக்கப்பட்டு உயிர் தப்பியவர். இவர் சிறுமியாக இருந்தபோது, நடைபெற்ற குண்டுத் தாக்குதலுக்குட்பட்டு உயிர் தப்புவதற்காக ஆடைகளைக் களைந்து வியட்நாம் வீதி வழியே நிர்வாண நிலையில் ஓடி வந்தார். அக்காட்சி அமெரிக்கப் பத்திரிகையாளர் ஒருவரினால் படம் பிடிக்கப்பட்டு வெளி உலகத்திற்குத் தெரியவந்தது. இந்தப் பெண்மணி, தனது உலகப் பிரபல்யமான அந்தப் படத்தை பாபரா புஷ்ஷுக்குக் காட்டுவதையும் அவரது கணவர் அருகில் இருப்பதையும் படத்தில் காணலாம். வியட்நாமியப் பெண்மணியான கிம்பூச் அவர்கள் கனேடியப் பிரஜையாகி அங்கு வாழ்ந்து வருகிறார்.

## கைலாகு



ஈராக்கில் அமெரிக்கா தலைமையிலான இராணுவ நடவடிக்கையானது இன்னும் ஓய்ந்தபாடில்லை. இதை வாசித்துக் கொண்டிருக்கும் நேரத்தில் கூட ஈராக்கில் ஒரு குண்டிவெடிப்புச் சம்பவம் நடைபெற்றாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. அந்த அளவுக்கு ஈராக் பூமி மயானமாகியிருக்கிறது. கூட்டுப்படைகளுக்கு எதிராக அவ்வப்போது தாக்குதல்கள் நடத்தப்பட்டிருந்தாலும் அமெரிக்காவினால் அமைக்கப்படவுள்ள ஈராக் இடைக்கால நிர்வாகத்தில் பங்கெடுக்கவுள்ளவர்கள் இலக்கு வைத்து தாக்கப்படுகிறார்கள். அடிப்படைப் பிரச்சினைக்குத் தீர்வு காணாமல் இடைக்கால நிர்வாகங்கள் குறித்து முடிவுகளுக்கு வருவது ஏற்புடையதல்ல என்பதை இப்படு கொலைகள் உணர்த்துகின்றன. இது ஈராக்கியர்களுக்கும் சரி, இலங்கையர்களுக்கும் சரி, எதிர்காலத்தையிட்டு நன்கு சிந்தித்து முடிவெடுக்க வேண்டிய தருணம். அமெரிக்க இராணுவத்தினர் ஈராக்கிய சிறுவர்களுக்குக் கைலாகு கொடுத்து மகிழ்ச்சிப் புன்னகை தெரிவிக்கிறார்கள். ஆனாலும் அபுகிரைப் சிறையில் நடந்த கொடூரங்கள் இந்தச் சிறுவர்களின் வரலாற்றில் கறைபடிந்த சம்பவமாகவே பதியப்பட்டிருக்கும்.



## உறைப்பு

மேலை நாடுகளில் உறைப்பு உண்ணக் கூடாது; உடலுக்குத் தீங்கு விளைவிக்கும் என்பது பழைய கதை. உறைப்பு உணவுடன் சேர்க்கப்பட வேண்டுமென்பது புதிய கதை. உறைப்பு இருதய வியாதிகளைக் கட்டுப்படுத்துகிறதாம். இவ்வகையான புதிய கண்டுபிடிப்புச் செய்தி வெளியாகியதும் இந்தியாவிலுள்ள அகமதாபாத்தில் உள்ள தோட்டத்தில் பறிக்கப்பட்ட மிளகாய்கள் வெள்ளம் போல் பரப்பி வைக்கப்பட்டிருக்கும் காட்சி இது. இவை அமெரிக்காவுக்கும் பிரிட்டனுக்கும் ஏற்றுமதி செய்யப்படவிருக்கின்றன.

## தியா... சரத்குமார், ரஜினி




### ராமதாஸ் - ரஜினி சந்திப்பு?

தேர்தல் முடிவுகளால் 'ஜக்குபாய்' ரொம்பவே 'ஷாக்'குபாய் ஆகிவிட்டார். ஆம்...நதி நீர் இணைப்புப் பிரச்சினையை விடவும் ரஜினி முன் விஸ்வரூபம் எடுத்து நிற்கும் சிக்கல், வட மாவட்டங்களில் 'ஜக்குபாயை' ரிலீஸ் செய்வதுதான்! வட ஆற்காடு, தென் ஆற்காடு ... மாவட்ட விநியோகஸ்தர்களில் முக்கிய புள்ளிகள் இரகசியக் கூட்டம் போட்டு ... ரஜினி - ராமதாஸ் சந்திப்புக்கு ஏற்பாடு செய்து, பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி ... வைக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். 'ஜக்குபாய்' டிஸ்கஷனை ... விடவும் மேற்படி சந்திப்பு விஷயம்தான் சீரியஸ் டிஸ்கஷனில் ... இருக்கிறது ரஜினி வட்டாரத்தில்.

### 'கற்க கசடற' கலாட்டா!

விஜயின் சித்தி மகன் ... இவரை வைத்து 'கற்க கசடற' துவங்கினார் ஆர்.வி.உதயகுமார். விஜயின் ஒன்றுவிட்ட தம்பி என்ற ஒட்டுறவைக் காட்டி சில மலேஷியர்களை வளைத்த உதயகுமார், "படத்தைத் தொடங்குவதற்கு முதலில் பணத்தைப் போடுங்க...மீதியை விஜய்யை வைத்து அனைத்து ஏரியாவையும் வித்து துட்டு தாரேன்..." என்று சூப்பர் ஸ்கிரீன் பிளே செய்துள்ளார். அதை நம்பி மலேஷியர்களும் 'கற்க கசடற' பூஜைக்கு வந்தனர். ஆனால் நடந்ததே வேறு. ஏற்கனவே 'சின்ன ராமசாமி பெரிய ராமசாமி' என்ற பெயரில் ஆர்.வி.உதயகுமார் ஹீரோவாக நடித்து, இயக்க, பல விநியோகஸ்தர்களிடம் அட்வான்ஸ் வாங்கியுள்ளார். "அதை செட்டில் பண்ணு..." என்று பிலுபிலுவெனப் பிடித்துவிட்டு, கிடைத்த பிளைட்டைப் பிடித்து மலேஷியா பறந்துவிட்டனர்.




## தனுஷ் தனிக்குடித்தனம்!

கஸ்தூரிராஜாவிடமிருந்து முழுவதுமாகத் தன்னைத் துண்டித்துக்கொள்ளும் முயற்சியில் தீவிரமாக இருக்கிறார் தனுஷ். தனக்காக ஒரு தனி வீடு பார்த்து, பேச்சிலர் பார்ட்டியாகிவிடும் திட்டத்தில் இரகசியமாக வீடு தேடுகின்றார். அதே சமயம் பெற்றோரின் மாதச் செலவுக்கு ஒரு தொகை தந்து பெற்ற கடனைத் தீர்ப்பதிலும் உறுதியாக உள்ளாராம்.

## சினிமா பங்குச் சந்தை!

இயக்குநர் சரண் தயாரிப்பில், சூர்யா நடிக்க ஹரி இயக்கும் படம், முழுக்க முழுக்க சினிமாவில் பிரபலமான டெக்னீஷியர்களின் 'ஷேர்' களில் உருவாகும் படம். இந்தப் பங்கு முதலீட்டைப் பக்காவாக கையகப்படுத்தித்தான் 2005இல் தொடங்க வேண்டிய படத்தின் அறிவிப்பை, இந்த வருடம் ஏப்ரலிலேயே செய்தார் இயக்குநர் சரண். ஹரி - சூர்யா இருவரின் கமர்ஷியல் வேல்யூவை வைத்தே பங்குகள் சேகரிக்கப்படுவதாகத் தகவல்.

## ஆர். பி. சவுத்ரி படத்தில் அரிவாள் கலாசாரம்!

விஜய் - திரிஷா ஜோடி 'கில்லி'யில் வெற்றிபெற திரிஷாவை விடாது துரத்தி தன் படத்தில் விஜய் ஜோடியாகப் பிடித்துப் போட்டுவிட்டார் ஆர்.பி.சவுத்ரி. படத்தின் பெயர் 'திருப்பாச்சி'. அரிவாளுக்குப் பெயர் பெற்ற ஊர் ஆச்சே... படத்தில் அரிவாள் கலாசாரம் இல்லாமல் போய்விடுமா என்ன?

## நர்கீ வேடத்தில் மனிஷா கொய்ராலா!

பல வருடங்களுக்கு முன் இந்திப் பட உலகையே பரபரப்படையச் செய்த படம் 'மதர் இந்தியா', நர்கீஸ், சுனில்தத், ராஜ்குமார் நடித்த இந்தப் படம் வெற்றிகரமாக ஓடி, வசூலில் சாதனை படைத்தது.

ஒரு கிராமத்தில் ஏழை விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்த ஒரு பெண், சமூக சூழ்நிலைகளால் எப்படியெல்லாம் பாதிக்கப்படுகிறாள் என்பதே 'மதர் இந்தியா' படத்தின் கதை.

நீண்ட பல வருடங்களுக்குப் பின் இந்தப் படத்தை நேபாள மொழியில் தயாரிக்க பட அதிபர்கள் பால், நீர்ஷா ஆகிய இருவரும் முன்வந்துள்ளனர். நர்கீஸ் நடித்த வேடத்தில் மனிஷா கொய்ராலா நடிக்கிறார்.

## ஆனாலும் இது ஆகாது ரம்பா!

'மாய்ந்து மாய்ந்து பி.ஜே.பி.க்குப் பிரசாரம் பண்ணினீங்க...கட்சி தோத்துப் போய்விட்டதே!' என்று ரம்பாவிடம் கேட்டால், "இப்போ ஒரு படத்திற்கு கால்ஷீட் குடுக்கிறேன். அவங்க கேட்கிற அளவுக்கு கவர்ச்சியும் காட்டுறேன்... படம் ஊத்திக்கின்னா நானா பொறுப்பு. டைரக்ஷன் தப்பு. அப்பால இந்தப் படம் ஊத்திக்கின்னா இன்னா? அடுத்த படத்திற்கு கால்ஷீட் கொடுக்கப்போறேன். ஒரு நடிகை அம்புட்டுத்தான் செய்ய முடியும்" என்று கெக்கே பெக்கேவென அறிவுபூர்வமாகப் பதில் சொல்கிறார்.

## இஷா நையாண்டி!

தமிழில் கைவிடப்பட்ட இஷா கோபிகர், இந்தியில் முன்னணி நடிகையாகத் திகழ்கிறார். ரஜினியின் 'ஜக்குபாய்' படத்திற்கு இஷா கோபிகரை அணுகியுள்ளனர். "தமிழ் ரசிகனுக்கு வாட்டர் பேக் மாதிரி இருந்தா புடிக்காதே...வாட்டர் பெட் மாதிரியல்லவா இருக்கணும்" என்று தொடர்பு கொண்ட மனேஜரை நையாண்டி செய்து வாய்ப்பை மறுத்துள்ளார். அதாவது கிரண், ஜோதிகா மாதிரி நடிகைகளைத்தான் தமிழனுக்குப் பிடிக்கும் என்று நக்கல் அடித்துள்ளார்.




## முத்தல் வேணாம்; தொத்தல் போதும்!

மீனாவிடம் சத்யராஜ் ஜோடியாக நடிக்க கால்ஷீட் கேட்டனர். குறுக்கே பாய்ந்த மீனாவின் தாய்க்குலம், கால்ஷீட் கேட்ட நபரை பிடி பிடித்துவிட்டார். "புள்ள கணக்கா இருந்த எம் பொண்ணை முதல் படத்திலேயே புள்ளத்தாச்சியாகக் காட்டி கவுத்துப்புட்டானுங்க...இனிமே மீனா பாப்பா முத்தல் நடிகருங்க கூடவெல்லாம் நடிக்க மாட்டா. தனுஷு பையன் மாதிரி தொத்தலா இருந்தாலும் பரவாயில்லை. இட்டா கால்ஷீட் தாறேன்" என்று கத்திவிட்டார். இதைக் கேள்விப்பட்ட சத்யராஜ் தனிப்பட்ட முறையில் மீனாவைச் சந்தித்து "அம்மணி கால்ஷீட் டைட்டுன்னு நாசூக்காக சொல்லப்புடாதுங்களா...வயசானவன்கிற ரேஞ்சுல, நம்ப இமேஜை இந்த அப்பு அப்பிப்புட்டீங்களே" என்று சொல்ல சுற்றியிருந்தவர்கள் குபீர்...?




## தமாஷானார் மும்தாஜ்!

'ஆட்டக்காரிக்கு வாய் பெரிது, அஞ்சாறு அரிசிக்கு கொதி பெரிது' என்பார். அப்படித்தான், ஆட்டம் போட ஒரு படம் கூட இல்லாத மும்தாஜ், ஐஸ்வர்யாராய் ரேஞ்சுக்கு ஆணவத்தில் ஆட்டம் போட்டார். மொத்தமாக அவருக்கு கோலிவுட்டு வைத்துவிட்டது ஆப்பு. தற்போது அன்றாடச் செலவுக்கே அல்லாடும் நிலை. மனம் திருந்திய மைத்துனியாகி தமாஷ் நடிகையாகும் முயற்சியில் இறங்கி விவேக், வடிவேலு, கருணாஸ் ஆகியோரிடம் சான்ஸ் கேட்டு வருகிறார். விட்டால் காக்கா ராதாகிருஷ்ணன் ஜோடியாகக் கூட நடிப்பார் போலிருக்கிறது. முதன்முதலாக விவேக் மனம் இரங்கி மும்தாஜுக்கு சான்ஸ் பிச்சை போட்டுள்ளார். 'செல்லமே' என்ற படத்தில் விவேக் ஜோடியாக நடித்து வருகிறார் மும்ஸ்.

## சிம்ரன் - தீபக் ஜோடி!

கதாநாயகிக்கு முக்கியத்துவம் உள்ள ஒரு படத்திலும், கணவர் தீபக் ஜோடியாக ஒரு படத்திலும் நடிக்க கிட்டத்தட்ட பேச்சுவார்த்தையை முடித்துவிட்டார் சிம்ரன். ஆனால், ஒரு கண்டிஷனுடன்! 'நியூ' படம் ரிலீஸ் ஆகி, அது ஹிட் ஆனால்தான் இந்தப் படங்களில் நடிப்பது குறித்து இறுதி முடிவு எடுப்பேன்... அதுவரை ஒரு பிட்டு நியூஸ் கூட கசியப்புடாது. 'நியூ' ஊத்திக்கொண்டால் முடிவை மறுபரிசீலனை செய்வேன்" என்கிறார்.

# இனி...

ஷியாமிடம் "உங்கள் திட்டமிடல்தான் என்ன" என்று கேட்கும்போது, "ஒரு படம் வெற்றிகரமாக ஓடினால் அது இயக்குநரின் படம் என்றாகிவிடுகிறது. சரியாகப் போகாவிட்டால் நடித்த ஹீரோவின் பெயர் மட்டுமே அங்கு அலசப்படுகிறது.

இதுவரை விட்டுவிடுங்கள். இனி என் நடிப்பில் வரப்போகும் படங்கள் 'ஷாம்' படம். படத்தின் முழு ரிசல்ட்டும் என்னையே சேரும். அந்த அளவுக்கு இப்போது தெளிவாக இருக்கிறேன்.

# இன்னும்....

தனது 'சாமி' படம் மூலம் திரிஷாவுக்குத் திருப்புமுனை தந்தவர் ஹரி. இப்போது சரத்குமாரை வைத்து 'அய்யா' படத்தை இயக்கப்போகும் ஹரி, சரத்துக்கு ஜோடியாக நடிக்க திரிஷாவைக் கேட்டிருக்கிறார்.

திரிஷா இன்னும் பதில் சொல்லவில்லை.


## இந்தியத்

தமிழ் சினிமாவில் நடிக்க விரும்புவோர் உடன் விண்ணப்பிக்கவும்.

(இலங்கையில் படப்பிடிப்பு)

**Director**
No. 9 1/1, Hamden Lane,
Wellawatta,
Colombo - 06.




லவ்ஸ் தமிழ்-ஸ்வீட்டி

## அதற்குப் பிறகும்...

பிரசாத் ஸ்ருடியோவில் பிரசாந்த், மீனா நடிக்கும் 'ஷாக்' படப்பிடிப்பு. நைட்டியில் ஒரு காட்சிக்கு நடிக்க வந்த மீனா, திடுமென இடறி விழுந்து முழங்காலில் வெட்டுக் காயம் ஏற்பட்டும், தனது அன்றைய காட்சியை நடித்துக் கொடுத்த பிறகே வீட்டுக்குப் புறப்பட்டார், மீனா.

## ஆட்டம் அபாரம்

'அடி தடி' படத்தில் "உம்மா உம்மம்மா" என்ற பாட்டிற்கு ரதியுடன் இவர் போட்ட ஆட்டம் இளைய நாயகர்களின் வேகத்திற்குக் கொஞ்சமும் குறைவில்லாதது. படம் வந்த பிறகு புதிதாக நாலு படம் புக்காகிவிட பிஸியாகிவிட்டார் சத்யராஜ்.

இது போக, பாரதிராஜா இயக்கும் படம் ஒன்றிலும் சத்யராஜ் நடிக்கிறார். இது இன்னொரு கடலோரக் கவிதைகளாக இருக்குமா?

## சாருக்கான் சுயசரிதை எழுதுகிறார்

இந்திப் பட உலகின் சூப்பர் ஸ்டார்களில் ஒருவரான சாருக்கான், தனது வாழ்க்கை வரலாறைச் சுயசரிதையாக எழுதுகிறார்.

தனது சுயசரிதைக்கு 'ஒரு தலைமுறைக்கு 20 வருடங்கள்' என்று பெயர் சூட்டியிருக்கிறார். இதில் 25 அத்தியாயங்கள் இடம் பெறுகின்றன.

## திருப்பு முனை

'மனதில்' படத்தில் கவுசல்யாவுடன் ஜோடி சேர்ந்திருக்கும் கார்த்திக்கு இந்தப் படம் திருப்புமுனையாக அமையும் என்கிறார்கள்.

இது பற்றி கார்த்திக் சொல்லும்போது, கவுசல்யாவை உயிருக்கு உயிராக நேசிக்கிறேன். எங்கள் காதல் கனிந்து திருமணம் வரை வருகிறது. தாலி கட்டப்போகும் நேரத்தில் இவள் என் மனைவி என்று சுட்டிக் காட்டியபடி வருகிறான் ஒருவன். அவன் என்னைப் போலவே இருக்கிறான்.



விஜயகாந்த்

# ஜக்குபாயில் ஜோதிகா

ஜோதிகாவுக்கு தமிழ்த் திரைப்படத் தயாரிப்பாளர்கள் விதித்துள்ள தடையையும் மீறி தனது 'ஜக்குபாய்' படத்தில் அவரை ரஜினி ஹீரோயினாக புக் செய்திருப்பதாகக் கூறப்படுகிறது.

'பாபா' மற்றும் மக்களவைத் தேர்தலில் எடுத்த அரசியல் நிலைப்பாட்டுக்கு ஏற்பட்ட படுதோல்விகளுக்குப் பிறகு ரஜினி நடிக்கவுள்ள படம் 'ஜக்குபாய்'.

கே.எஸ்.ரவிக்குமார் படத்தை இயக்கவுள்ளார். மக்களவைத் தேர்தல் எதிரொலியால், அலை ஓயட்டும் என்று 'ஜக்குபாயை' கொஞ்ச நாட்களுக்கு கிடப்பில் போட்ட ரஜினி, மீண்டும் பட வேலைகளை ஆரம்பித்துள்ளார். ஆனால், இதில் பெரும் இரகசியம் காக்கப்படுகிறது.

இந்தப் படத்துக்காக தனது உதட்டில் இருந்த வெள்ளைப் படலத்தை அறுவைச் சிகிச்சை மூலம் சரி செய்துள்ள ரஜினி, தனது ஹீரோயினை தேர்வு செய்யும் வேலையை முடித்துள்ளார்.

ஜோடியாக ஐஸ்வர்யாராயை நடிக்க வைக்க ரஜினி தரப்பில் பெரும் முயற்சிகள் நடந்தன. ஆனால், அவரது கால்ஷீட் கிடைப்பதில் தாமதம் ஆகி வருவதால், ஜோதிகாவை ஹீரோயினாக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

இதற்காக ஜோதிகாவை அலர்ட் செய்துள்ளனராம். அவரும் ஓ.கே.சொல்லிவிட்டு 'ஜக்குபாய்'க்காக கால்ஷீட்டை ஒதுக்கி வைத்துவிட்டார் என்கிறார்கள்.

அர்ஜுனுடன் புக் ஆன ஒரு படத்தில் நடிக்க மறுத்ததற்காக தயாரிப்பாளர் சங்கம் ஜோதிகாவுக்கு 'ரெட் கார்ட்' போட்டுள்ளது. அதாவது, புதுப் படங்களில் நடிக்க ஒப்புக்கொள்ளும்முன் தங்களிடம் அனுமதி பெற வேண்டும் என்று திரைப்படத் தயாரிப்பாளர் சங்கம் அவருக்கு உத்தரவிட்டுள்ளது. மேலும் ஜோதிகாவை புக் செய்யும் நிறுவனங்களும் அதை தயாரிப்பாளர்களிடம் தெரிவிக்க வேண்டும். இந்தப் பிரச்சினை காரணமாகத்தான் கமல்ஹாசனின் 'வசூல்ராஜா எம்.பி.பி.எஸ்.' பட வாய்ப்பை ஜோதிகா நழுவவிட்டார்.

இந் நிலையில் ரஜினியின் படத்தில் நடிக்க ஒப்புக்கொண்டுள்ள ஜோதிகா அதற்குத் தயாரிப்பாளர் சங்கத்தின் முன் அனுமதியைப் பெறவில்லை. மேலும் ரஜினி தரப்பில் இருந்தும் தயாரிப்பாளர்களுக்கு தகவல் தெரிவிக்கப்படவில்லை.

இதனால் புதுப் பிரச்சினை உருவாகும் என பேச்சு அடிபடுகிறது.


ஜோதிகாவுக்கு 'ரெட் கார்டு' போடப்பட்டபோது அவர் கடுமையான டைபாய்ட் ஜுரத்தில் பாதிக்கப்பட்டிருந்தார். அப்போது மும்பையில் இருந்த ஜோதிகா, அங்கிருந்தபடியே தயாரிப்பாளர் சங்கப் பிரமுகர்களைத் தொடர்பு கொண்டு தடையை நீக்குமாறு கெஞ்சி வந்தார். ஆனால், நினைத்தது நடக்கவில்லை.

இதனால் உடல் நலம் தேறியதும் சென்னை வருவதைத் தவிர்த்துவிட்டு தெலுங்குப் பக்கமாய் சான்ஸ் தேட ஆரம்பித்தார். அப்படி சில வாய்ப்புக்களும் கிடைத்த நிலையில் தான் 'ஜாக்குபாய்' சான்ஸ் வந்துள்ளது.

உடனே தனது தெலுங்கு புரோக்ராம்களை மாற்றிக்கொண்டு 'ஜக்குபாய்'க்கு எப்போது வேண்டுமானாலும் நடிக்கத் தகுந்த வகையில் கால்ஷீட்டை அமைத்துக் கொண்டுள்ளாராம்.

கொசுறு :- ஒரு படத்துக்கு ஜோதிகா வாங்கும் சம்பளம் இன்றைய தேதிப்படி ரூ.40 இலட்சம்!

# சினி விசிட்



# ஜோர்

சத்தியராஜின் திரைப்படங்கள் நக்கல், நளினங்களுக்குக் குறை வைப்பதில்லை. அவரது மகனோடு சேர்ந்து வழமையான காதல் கதை என்றாலும் கூட ஜோராக நடித்திருக்கிறார். வழமையான காதல் கதை; எதிர்பார்க்கும் அளவுக்கு நகைச்சுவை அளவாக்வே சேர்க்கப்பட்டுள்ளது. சத்தியராஜ், சிபிராஜ் இரட்டை லொள்ளுகளுக்கு இடையில் வைகைப்புயல் வடிவேலு தன் பங்குக்கு ஒரு வீசு வீசியிருக்கிறார். இந்த நகைச்சுவைக் கூட்டணிக்கு அவருக்கே உரித்தான கானா பாடல்கள் மூலம் தேவா 'அடிதடி'க்குப் பிறகு அசத்தியிருக்கிறார். திரையரங்கை விட்டு வெளியில் வரும்போது நம்மை முணுமுணுக்கச் செய்கிறது "மம்மிச் செல்லமா டாடி செல்லமா" பாடல். கதாநாயகிகளாக பானுப்ரியா, கஜாலா இருவரும் நிறைவாகவே பங்களிப்புச் செலுத்தியிருக்கின்றனர். வித்தியாசமான புதிய கதையமைப்பை எதிர்பார்க்காமல் சத்தியராஜ், சிபிராஜ், வடிவேலு இம் மூவேந்தர்களின் நகைச்சுவை மழையில் முகம் அலம்பிக்கொள்ள திரையரங்கு செல்லலாம். 'ஜோர்' - லொள்ளு.




## வீதி நாடகக்காரர்கள்!


அம்மா வணக்கம்!
அய்யா வணக்கம்!
இன்னொரு
வீதி நாடகத்திற்கு
தயாராகிறார்கள் – எங்கள்
வேட்பாளர்கள்!

செத்தவனும்
வோட்டுப்போட வருவானோ?
பிறகேன்
இப்போதுமட்டும் – எங்கள்
தாத்தாவின்
கடைசி யாத்திரையிலும்
கால்கடுக்க நடந்தாரே – எங்கள்
வேட்பாளர்!

நாங்கள்
பசித்திருந்தாலும்
ரோட்டோர மாடுகள் கூட
ருசியாய் தின்கிறதே
சுவரொட்டியில் – எங்கள்
வேட்பாளர்களை!

அங்கே பாருங்கள்
ஆண்டியும்
அரசனாகப் போகிறான்
ஏழைகளின் மாட்டுவண்டி
சின்னத்தில்
வோட்டுக் கேட்டு
இன்டர்கூலரிலல்லவா
செல்லப்பார்க்கிறார் – எங்கள்
வேட்பாளர்!

**புசல்லாவை கணபதி.**



## சுடரில்லா தீபம்

நதிகளின் மேல்
ஒரு துரும்பு

அலைகளில்
அல்லாடுகிறது.

கரைகளில்
படகிருக்கு, துடுப்பிருக்கு
பக்கத்திலே படகோட்டியும்.

கரைகளில் ஒதுங்க
முடியவில்லை.

அலைகளுக்குள்
அடங்க வழியுமில்லை.

வழி சொல்லா மனிதர்களும்
வழி மறித்த மனிதர்களும்

மௌனங்களில்
குடி அமர்ந்து
வாசலில் தடுப்பு!

இதயங்கள் பூட்டி
திறப்புக்கள் தொலைத்து

அதிசயம்
பூவை முட்கள் படருவது!

பழுத்தோலை
பிடுங்குவது நியாயம்தான்.

குருத்தோலையுமா
பிடுங்குவார்கள்?

சபைகளில் தீர்ப்பு
தரிசனங்கள் கத்தியுடன்!

கருவிகளுடன் தான்
காத்திருப்போ?

**-முல்லை நிலா.**

## மீண்டும் வேண்டும் ஒரு சமாதான உதயம்!

தொட்டதெல்லாம் வேதனை
இதை வென்று முடிப்பதே சாதனை!
பட்டதெல்லாம் போதும்
படும் துயரம் நிதமும்
விட்டதெல்லாம் விடுதலைக்கே!

இனி விடிவதெல்லாம் – யுத்தம்
முடிவதற்கே!
வெறும் சட்டமெல்லாம் வேண்டாம்!
இனி சமாதானமே வேண்டும்!

சாய்ந்த துப்பாக்கிகளின் சத்தம் இனியும்
சஞ்சலமாய் ஒலிக்க வேண்டாம்!
கிடைத்திருக்கும் நிம்மதியை
கிள்ளி எறிந்திட எண்ண வேண்டாம்!

முடிந்துபோன யுத்தத்தை – மீண்டும்.....
உருவாக்க உதவ வேண்டாம்!
அச்சமின்றி வாழும் எம் மக்களை
மிச்சமின்றி அழிந்துபோக விடவேண்டாம்.

**எம்.கே.சிப்னா, காத்தான்குடி.**

## வாழ்வை அர்த்தமாக்கு!



உன்னைப் பற்றி
ஒரு நிமிடம் கூட
நினைத்துக் கொள்வதில்லை
நான்!
நீயோ.....
ஒரு நிமிடம் கூட
என்னைப் பற்றி
நினைக்காமல் இருந்ததில்லையாமே
உண்மையாகவா...?

உன்னைப் பற்றிய
நினைவுகளால் - என்றுமே
வருந்தியதில்லை நான்!
ஆனால்...
என்னைப் பற்றிய
நினைவுகளோடு - நீ
வாழ்ந்து கொண்டிருக்கிறாயென
அறிந்த போதுதான்
வருந்துகின்றேன் உனக்காக!

உன்னோடு - நான்
நட்பாகப் பழகியது
உன் எண்ணங்களுக்கு
மதிப்பளித்ததனால் மட்டுமேயன்றி
உனக்கு
மாலையிடுவதற்காக அல்ல!

எதற்காக......?
அர்த்தமில்லாமல்
என்னை நினைத்து.

உன் வாழ்வை
அஸ்தமனமாக்கிக் கொள்கின்றாய்?
என்னைப் பற்றிய
நினைவுகளை அழித்துவிட்டு
உன் வாழ்வை
அர்த்தப்படுத்திக் கொள்!

**எஸ்.வினோ, மாத்தளை.**

## அரசியல்

ஊரில் உள்ளவர்
ஒன்றாய் இட்ட
தவறின் அடையாளம்

தவறு தொடர்ச்சியாக
இருக்க வேண்டும்
என்பதற்கான
ஒப்பந்தம்

ஏமாளியும்
ஏமாற்றுபவனும்
விளையாடும்
விளையாட்டு

பொய்யும்
பொய்யும்
போட்டியிடும் களம்
உணர்ச்சிகள்
தூண்டப்படும்
சாதனம்

சுயநலம்
தலைவிரித்தாடும்
மைதானம்

வாக்குறுதிகள் மட்டும்
அச்சாகும் அச்சகம்

மனிதர்கள்
விலங்குகளாக
மாற்றப்படும் மேடை

சிந்தனை தவறினால்
எம்மையும் மயக்கும்
தூக்க மாத்திரை!

**எம்.ஐ.எம்.உவைஸ்,**
**அக்பர் கிராமம்.**

## மனசு

ஓயாத அலைகள் - கூட
ஓய்ந்து போனாலும்

தீரா நதிகள்
வற்றிவிட்டாலும்

ஜீவனெல்லாம்
செவ்வாய்க்குள்
சென்றுவிட்டாலும்

மேகம் கிழிந்து
இடி ஒன்று
இறங்கினாலும்

நடுக்கடலில்
நாதியற்று நின்றாலும்


உலகமே
மூன்றாம் யுத்தத்தில்
மூழ்கிவிட்டாலும்

விண் கற்கள்
வீழ்ந்து - எம்மை
காயப்படுத்தினாலும்

இலங்கை
இரு கூறாய்ப்
போனாலும்

உனக்கான அன்பு
உடைந்து போகாது!


**நஸீம் ரூமி, புத்தளம்.**



## அவன் ஒரு மூலையில்!

இரத்த நாளங்கள்
ஏங்கிச் சுருங்கிக் கொண்டிருக்கின்றன
யாருக்குமே விளங்கா
உரத்த குரலில் அவன்
ஒப்பாரி வைக்கிறான்

இதயமிழந்ததால்
இரத்த வோட்டமும் நின்றுவிட
உதயமாகும் பொழுதுகளும்
உயிரோட்டம் தர மறுத்து விட
உறக்கமின்றியே படுக்கையில்
உயிரைப் பிடித்துக் கொண்டு
அவன் ஒரு மூலையில்.



**ஏறாவூர் ஏ.பி.எம்., கிழக்கு வளாகம்.**

# கவிதை எழுதுதலும் வாசித்தலும்

[பயிற்சிக் களம்]

## சிறப்புக் கவிதையும் – கவிஞரும்

மொழியின் ஆகச் சிறந்த துல்லியத்தையும் சிக்கனத்தையும் கொண்டமைபவை இன்றைய கவிதைகள். கவிதையில் சொல்லாமல் விடப்படுவதும், அவற்றை நோக்கிப் பயணிக்கும் மனதுக்கான படிக்கட்டுகளாக வார்த்தைகள் அமைந்து வழிகாட்டுவதும் நல்ல கவிதையின் சிறப்பியல்புகள். இளம் கவிஞர் மோகனரங்கனின் கவிதைகளும் இத்தகைய மௌனத்தைச் சென்று தொடுபவை. சொல்ல வந்ததற்கும் சொல்லில் வந்ததற்கும் நடுவில் பறந்து போய்விடும் பறவையாக கவிதை அமையும் அவஸ்தையைச் சொல்பவர்.

படிமங்களின் இசையில் ஒன்றிணைந்து தீவிரமடைகின்றன இவர் கவிதைகள். க.மோகனரங்கனின் ‘நெடுவழித் தனிமை’யிலிருந்து ஆறு கவிதைகள்.



### பரிணாமம்

விட்டு
விடுதலையாகி
வான் திரியும்
பறவைகள்
பச்சைப் புல்வெளியில்
பார்த்திருக்க
கட்டற்றுத் தாவி மறியும்
மான்கள்
கத்தும்
குரலோசையில்
கானகம் மயக்கிடும்
குயில்கள்
வியந்து
வெகுகாலம் நின்றிருந்தவன்
யோசித்துப் பின் தேர்ந்தான்
கூண்டுகள் செய்யும்
விதம்.

### அந்தி

எதிர்ப்படும்
என்னை யாரோ போல்
ஏறிடும்
உனது பார்வை வழி
நுழைகிறேன்
காலி செய்து
காலம் வெகுவான
வீடொன்றினுள்
தூசடைந்த சுவரில்
நிறம் மங்கிய கிறுக்கல்
படிக்கவொட்டாமல் தடுக்கிறது
வெள்ளெழுத்து.

### இசை வளரும் தனிமை

சுழலும்
கிராமைட் தகட்டின்
தீர்மானிக்கப்பட்ட
வரிகளினூடே நழுவிச் செல்லும்
ஒலி ஊசி
சூழ்ந்த
நிசப்தத்திலிருந்து
உருப்பெறும்
சப்தத்தின் கூறுகளால்
அதிரத் துவங்கும்
அறை வெளி
முடிச்சவிழும்
நரம்புகளின் வலைப் பின்னலினுள்
துள்ளி மறையுமொரு
தங்க மீன்
இருள் கிளை பிரிந்தொரு
வனாந்திரத்தின் நடுவே
அன்பு செய்தவர்களின்
எலும்புகளை மாலையாய்
அணிந்துகொண்டு
தகித்தெழும்
தீயைச் சுற்றி
குதித்தாடத் துவங்கும்
குரங்கை
பிறவிகள் தோறும்
நானறிவேன்.

### இடைத் தூரம்

என்
தோட்டத்தில்
உட்கார்ந்திருந்த
பெயரறியாப் பறவையை
உனக்காக
காகிதத்தில் பிடித்து வைக்க
முயன்றேன்
சொல்ல வந்ததற்கும்
சொல்லில் வந்ததற்கும்
நடுவில்
பறந்து போயிருந்தது
பறவை.

### இடம் பெயர்ந்த கடல்

அன்றிரவு
சொல்ல முடியாத இரகசியம் போல
எல்லாவற்றையும் ஒளித்திருந்தது
இருள்
அறிந்திருந்த நட்சத்திரங்களோ
வெளிறி ஒளிர்ந்தன
கட்டிலனாகாப் பாஷை அவற்றினுடையது
விடி விளக்கின்
மெலிதான ஊதா வெளிச்சத்தில்
கனவில் வந்ததாய்
காணத் தெரிந்தது அறை
மைப் பூச்சு கலைந்த விழிகள்
திரை அவிழ்க்க
துவங்கியது
ஆதி நாடகம்
தேங்கியிருந்த மௌனத்தை
ஒரு மூலையில் அசைவித்தது
உனது முதல் சொல்
என்னில் தொடங்கி
எதிர்ப்பட்ட எல்லா உயிர்களிலும்
ஓடி மறைந்ததொரு சிலிர்ப்பு
தொடர்ந்த இடையறாத பிரவாகத்தில்
சகலமும் மூழ்க
நானுணர்ந்தேன் என்னை
பெருநீர்ப் பரப்பினொரு பகுதியாய்.

### பிரார்த்தனை

கண்கள் மூட
நெஞ்சு நேர்ந்து
கைகள் தொழும்
திரு உருவான
சிலையாகத்தான்
சிந்திக்க வேண்டுமென்பதில்லை
நிழலடியில்
தலைச்சுமை மிறக்கி வைத்த
ஆசுவாச மூச்சொன்று
போதும்
கல்லாகும் யோகம்
பயில்வேன்.


## பேனா நண்பர் பகுதி – பேனா நண்பர் பகுதி – பேனா நண்பர் பகுதி



பெயர் : ரி.ஜோர்ஜ்
வயது : 28
முகவரி : UD 67, சிறி மைந்தா ராம மாவத்தை, கொழும்பு–09.
தொ.பேசி : 011 2692186
பொழுதுபோக்கு: பத்திரிகை, வானொலி.



பெயர் : அ.காந்தன்
வயது : 22
முகவரி : இல–180, காந்தி நகர், திருகோணமலை.
பொழுதுபோக்கு : வானொலி கேட்டல், கவிதை எழுதுதல்.



பெயர் : கே. ரசிகுமார்
வயது : 20
முகவரி : புதுக்குடியிருப்பு வீதி–05, மட்டக்களப்பு.
பொழுதுபோக்கு : ரி.வி. உதைபந்தாட்டம், பத்திரிகை.



பெயர் : கே. குகன்
வயது : 26
முகவரி : புதுக்குடியிருப்பு–05, மட்டக்களப்பு.
பொழுதுபோக்கு : ஓர்கன் வாசித்தல், பத்திரிகை, கிற்றார் வாசித்தல்.

# அழகாக வேண்டுமா? குளிக்கும்போது மஸாஜ்!

உடம்பு 'பளபள'வென்று பொலிவாக இருக்க வேண்டும் என்று ஆசைப்படாதவர்கள் யார்? பளபளப்புக்கு முதல் தேவை உடம்பில் நல்ல இரத்த ஓட்டம்!

இரத்த ஓட்டத்துக்குத் தேவை உடற்பயிற்சி! உடற்பயிற்சி என்றால் நூறு இருநூறு கிலோவைத் தூக்கி மூச்சு வாங்க வேண்டும் என்றில்லை... பள்ளிக்கூடத்தில் டிரில் மாஸ்டர் கை கால்களைத் தூக்கி மடக்கிச் செய்யக் கற்றுக்கொடுத்த உடற்பயிற்சிகளைச் செய்தாலே போதும். பள்ளிப்பருவத்தில் பி.ரி. வகுப்புகளை கட் அடித்துவிட்டு ஊர் சுற்றியவர்கள் அட்லீஸ்ட் 'ஜாகிங்' போகலாம்! 'ஜாகிங் போகவோ எக்ஸர்சைஸ் செய்யவோ என் உடம்பு வளையவே வளையாது' என்பவர்கள், குறைந்தபட்சம் மூச்சை ஆழமாக இழுத்து விடலாம் அல்லவா?

ஆம்... தோல் உட்பட உடம்பில் இருக்கும் ஒவ்வொரு செல்லுக்கும் 'பிராணவாயு'தான் சாப்பாடு! நல்ல காற்றோட்டம் உள்ள இடத்தில் உடற்பயிற்சி செய்யும்போது நீங்கள் சாதாரணமாக இழுக்கும் காற்றின் அளவை விட அதிகமான காற்றைச் சுவாசிப்பீர்கள்...!

தோல் உட்பட உடம்பிலிருக்கும் அத்தனை செல்களும் இரத்தத்திலிருக்கும் பிராணவாயுவை மட்டும் உறிஞ்சி எடுத்துக்கொள்கின்றன! இந்தப் பிராணவாயுதான் தோலில் இருக்கும் செல்களுக்கும் உணவு! அதனால் நமது நாட்டில் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்தே முனிவர்களும் ரிஷிகளும் செய்துவரும் பிராணாயாமம், அதாவது மூச்சுப் பயிற்சியின் முக்கியத்துவம் இப்போது அதிகரித்துவிட்டது!


"ஓகோ! பிராணாயாமம் செய்தால் தோல் அழகாகிவிடுமா?" என்று கேட்டுவிட்டு நீங்களே புத்தகம் பார்த்துச் சமையல் செய்வது மாதிரி புத்தகம் படித்துப் பிராணாயாமம் செய்ய ஆரம்பித்துவிடாதீர்கள். ஏடாகூடமாகப் போய்விட வாய்ப்புண்டு! இதற்குத் தேவை முறையான பயிற்சி.

முகம் மற்றும் தோல் அழகாக இருக்க வேண்டும் என்றால் இன்னொரு வழி – மஸாஜ்!

சாதாரணமாகக் குளிக்கும்போது நாமே நம் உடம்பை மஸாஜ் செய்து கொண்டால் அதுவே போதுமானது! உடற்பயிற்சி செய்வதால் இரத்த ஓட்டம் எப்படி அதிகரிக்கிறதோ அதே மாதிரி மஸாஜ் செய்வதாலும் இரத்த ஓட்டம் அதிகரிக்கிறது.

***எந்த உணவு சாப்பிட்டால் தோல் தேஜஸோடு இருக்கும்?***

இதில் உண்மை என்னவென்றால் தோலுக்கென்று ஸ்பெஷல் டயட் எதுவும் கிடையாது! உடம்பு ஆரோக்கியமாக இருந்தால் தோலும் ஆரோக்கியமாக இருக்கும்! உடம்பு ஆரோக்கியமாக இருக்க வேண்டும் என்றால் Balanced Diet மிகவும் அவசியம். சமீபகாலமாக வெஜிட்டேரியனிஸம் மேலைநாடுகளில் பிரபலமாகிக்கொண்டு வருகிறது! பச்சைக் காய்கறிகள், பழங்கள் எல்லாம் சுலபமாக ஜீரணம் ஆவதுடன் உடம்புக்கு எந்தவிதமான தொல்லைகளையும் தருவதில்லை! அதனால் இப்போது மேலை நாட்டினர் பலர் உடல் ஆரோக்கியத்துக்காக வெஜிட்டேரியனாக மாறிவருகிறார்கள்.



***தோல் அழகுக்கும் அணியும் உடைக்கும் சம்பந்தம் உண்டா?***

உண்டு! Hot, Hotter, Hottest என்ற சீதோஷ்ணமுள்ள நம் நாட்டுக்குக் காற்றோட்டம் உள்ள கதரும் கைத்தறியும்தான் சிறந்த ஆடை! சுட்டெரிக்கும் வெயிலில் சிந்தடிக் துணிகளால் உருவாக்கப்பட்ட டைட்டான ஆடைகளை அணிந்தால் நல்லது இல்லை என்பதை ஒரு டாக்டர் சொல்லித்தான் தெரிந்துகொள்ள வேண்டுமா என்ன?

நம் முகமும் உடம்பும் அழகாக இருப்பதற்குத் தூக்கம் ஒரு முக்கியமான தேவை! அதைப் போலவே தோலின் பொலிவுக்கும் மனசு ரிலாக்ஸாக இருக்க வேண்டியதும் மிக அவசியம்!

மேலும், ஒரு நாளைக்கு இரண்டு தடவையாவது குளிக்க வேண்டும். முடியாதவர்கள் குறைந்த பட்சம் ஒரு தடவையாவது குளித்தே ஆகவேண்டும்.

"எல்லாம் சரி. நான் சிவப்பாக மாறுவதற்கு வழி சொல்லாமல் நீங்கள் இந்தக் கட்டுரைத் தொடரை முடித்துவிட முடியாது!" என்று பலர் குரல் கொடுப்பது காதில் விழுகிறது!

அவர்களுக்காகவே அடுத்த பாரா –

"நாம் எந்த நிறத்தோடு பிறந்தோமோ, அதே கலரை மெய்ன்டெய்ன் செய்வதில்தான் அழகு இருக்கிறது. இன்னும் கொஞ்சம் தத்துவ ஸ்டைலில் சொல்ல வேண்டுமென்றால், "பச்சைக் கிளி சிவப்புக் கிளியாக மாற வேண்டும் என்று ஆசைப் படுகிறதா?" இல்லை. மான், "நாம் மாநிறமாக இருக்கிறோமே. அந்த முயல் மாதிரி பால் வெள்ளையாக மாற வேண்டும்" என்று நினைக்கிறதா? இல்லையே!

அதே போல் நீங்கள் எந்தக் கலரோடு பிறந்தீர்களோ, அதே கலரை மெய்ன்டெய்ன் செய்யுங்கள். அதுதான் அழகு! கறுப்புத் தோலோடு பிறந்துவிட்ட நாமெல்லாம் செங்காமட்டிக் கல்லிலிருந்து வெளிநாட்டு சோப் வரை சகலவிதமான சோப்பையும் பயன்படுத்தி, வெறிகொண்ட மாதிரி நிறம் மாற முயற்சி செய்வது இயற்கைக்கு முரணானது!

வெள்ளைக்காரன் மாதிரி செக்கச் செவேல் என்று நாம் சிவப்பாக இருந்தால் சித்திரை மாதத்துக் கத்திரி வெயிலில் வெளியிலே தலைகாட்டவே முடியாது. மீறிப்போனால், சீஸன் தெரியாமல் இலங்கைக்குச் சுற்றுலாவரும் வெள்ளைக்காரர்களுக்கு வருவது மாதிரி நமக்கு Sunburn வந்துவிடும்! அதாவது தோல் வெந்துவிடும். நம்மூர் சீதோஷ்ணத்துக்கு நம் தோல்தான் சரிப்பட்டு வரும். அதனால் இது மட்டமான நிறம் அல்ல. அநாவசியமாகக் கவலைப்படாதீர்கள்! உங்கள் கலர்தான் உங்களுக்கு அழகு!




# பெண்களுக்கு மார்புப் புற்றுநோய்

"எண்ணெய், வெண்ணெய் சேர்த்த, பொரித்த பண்டங்களைப் பெண்கள் அதிகம் சாப்பிடக் கூடாது. சாப்பிட்டால் மார்பகப் புற்றுநோய் வரக்கூடும்! சாப்பாட்டில் தினமும் கீரைகள், காய்கறிகள் சேர்த்துக் கொண்டால், புற்றுநோய் வராமல் தப்பித்துக் கொள்ளலாம்.

**கொழுப்புச்சத்து**

நாம் உண்ணும் உணவுக்கும் புற்றுநோய் தோன்றுவதற்கும் தொடர்பு இருக்கிறது. கொழுப்புச் சத்து அதிகமாக உள்ள உணவுகள் மார்பகப் புற்றுநோய், பெருங்குடல் புற்று தோன்றுவதற்கு ஒரு காரணமாகிறது.

கொழுப்புச் சத்துகள் எளிதில் செரிமானம் ஆவதில்லை. அவை செரிமானமாவதற்குப் பித்தநீர் அதிகம் தேவைப்படுகிறது. இந்தப் பித்தநீர், கொழுப்புச்சத்துடன் சேர்ந்து பெருங்குடலின் உட்புறம் உள்ள சளியுடன் கலக்கிறது. இது புற்றுநோய் ஏற்படுவதைத் தூண்டுகிறது.

பருமனாக உள்ள பெண்களின் உடலில் உள்ள கொழுப்புச்சத்து, அதிக அளவில் 'ஈஸ்ட்ரோஜென்'னாக (பெண்களுக்குரிய சுரப்பி) மாறுகிறது. மார்பகப் புற்றுநோய் ஏற்படுத்தும் காரணிகளில் இச்சுரப்பியும் ஒன்று.

**பரம்பரை**

நம் பெண்களில் மிகச் சிலருக்கு (அதாவது 3 சதவீதப் பெண்களுக்கு) வழி வழியாக மார்பகப் புற்றுநோய்க்கான மரபணு உள்ளது. இவர்களின் முன்னோரில் யாருக்காவது புற்றுநோய் இருந்திருக்கும்.

மார்பகப் புற்றுநோயை எவ்வாறு தெரிந்துகொள்ளுவது? மார்பகத்தில் வலியற்ற சிறு கட்டி இருக்கும். சாதாரணமாக ஏனைய புற்றுநோய்களுக்குக் காணப்படும் அறிகுறி களான பசியின்மை, உடலின் எடை குறைதல், இரத்தச் சோகை ஆகியவை இந்நோய்க்கும் காணப்படும்.

வலியற்ற கட்டிகள் உள்ளதா என்பதை அவரவர்களே சோதித்துக்கொள்ளலாம். குளிக்கும்போது மார்பகங்களைக் கையால் தடவிப் பார்த்தால் தெரியும்.

மருத்துவரும் இந்நோயாளிகளைச் சோதனை செய்யலாம் "மேம்மோ கிராம்" என்ற கருவி கொண்டு தொடக்கத்திலேயே புற்று நோயைக் கண்டறியலாம். குறிப்பாக 45 வயதுக்கு மேற்பட்ட பெண்களுக்கு இது நன்கு தெரியும்.

நீண்டகாலம் வாழும் பெண்களுக்கு மார்பகப் புற்றுநோய் ஏற்படும் வாய்ப்பு அதிகம் உள்ளது (நீண்டகாலம் வாழும் ஆண்களுக்கு விந்து நாளச் சுரப்பிப் புற்றுநோய் ஏற்படுகிறது)

**வயிற்றில்**

வயிற்றின் மேல் பகுதியிலும் உணவுக் குழாயின் கீழ்ப் பகுதியிலும் காணப்படும் புற்றுநோய், கொழுப்புச்சத்து அதிகமுள்ள உணவு, புகைபிடித்தல், மது அருந்துதல் ஆகியவற்றால் ஏற்படுவதாகும்.

வயிற்றின் கீழ்ப் பகுதியில் புற்றுநோய் ஏற்படுவதற்கு இன்னொரு முக்கிய காரணமும் இருக்கிறது. ஒருமுறை பயன்படுத்திய எண்ணெயை மீண்டும் பயன்படுத்திப் பொரித்த உணவுப் பண்டங்களை உண்டால் புற்று வரும்.

சாதாரணமாக, பூரி, வடை, அப்பளம் சுட எண்ணெய் பயன்படுத்துகிறோம். பின் அதே எண்ணெயை மற்ற உணவுப் பொருள்களைச் சமைப்பதற்கும் பயன்படுத்துகிறோம். இதனால் புற்றுநோய் ஏற்படுகிறது.

இரத்தச் சோகை, பசியின்மை, உடலின் எடை குறைதல், உடல் நலக்குறை ஆகிய வற்றின் மூலம் வயிற்றில் புற்றுநோய் ஏற்பட்டி ருப்பது தெரியவரும். புற்றுநோய் வயிற்றின் மேல் பகுதியில் இருந்தால் உணவை விழுங்குவது சிரமமாக இருக்கும். வயிற்றின் கீழ்ப் பகுதியில் இருந்தால் வாந்தி ஏற்படும்.

**பெருங்குடல் புற்று**

பெருங்குடல் புற்றுநோயில் மரபணுவியலின் பங்கு என்ன?

பெருங்குடலில் "கழலை" எனப்படும் கட்டிகள் வளர்ச்சியுடையவர்களுக்குப் பெருங்குடல் புற்றுநோய் ஏற்படலாம். இது பரமபரையாகவும் வரலாம். புறவளர்ச்சியின் வகையைப் பொறுத்து, கழலைக் கட்டி அல்லது பெருங்குடலை அகற்றுவதன் வாயிலாக இதனைத் தடுக்க இயலும்.


வயிற்றுப்போக்கு அல்லது மலச்சிக்கல், இரத்தச் சோகை, மலத்தில் இரத்தக் கசிவு, உடலின் எடை குறைதல், பசியின்மை போன்றவற்றால் இந்நோய் இருப்பது தெரிய வருகிறது. 'கோலோன்ஸ்கோப்' என்றும் கருவி கொண்டு சோதனை செய்து, பெருங்குடல் புற்றுநோய்களைக் கண்டறிய இயலும்.

**காய்கறிகள்**

**புற்றுநோயைத் தடுக்கும்**

காய்கறி, கீரைகள், பழங்களிலுள்ள உயிர்ச்சத்துக்களும் எதிர்ப்பொருள்களும் புற்றுநோய் வளர்ச்சியைத் தடை செய்கின்றன. புற்றுநோய் வளர்ச்சியைத் தடுத்து, நோய் எதிர்ப்புச் சக்தியைப் பெருக்குகின்றன.

கீரை, காய்கறி, பழங்களில் உள்ள நார்ச்சத்து, பெருங்குடல் புற்றுநோயைத்



தடுப்பதற்கும் உதவிபுரிகிறது. இந்த நார்ச்சத்து புற்றுநோயை ஏறபடுத்தும் திசுக்களைக் கரைத்து, மலத்தை வெளியேற்றி, பெருங்குடல் புற்றுநோய் ஏற்படுவதைத் தடுக்கிறது.

பெண்கள் காய்கறி – பழங்கள் – கீரைகள் நிறையச் சாப்பிட வேண்டும். மார்பகப் புற்றுநோய் வருவதை இது தடுக்கும். கொழுப்புச்சத்து நிறைந்த குறிப்பாக, இறைச்சிக் கொழுப்பை நீக்கினால், வயிற்றுப் புற்று வராமல் தடுக்கலாம். முறையான பரிசோதனை செய்து, புற்றைத் தொடக்கத்தில் கண்டுபிடித்துவிட்டால் விரைவில் குணப்படுத்திவிடலாம்.

# நலமாக வாழ்வோம்

## ஏகபாத சீர்சாசனம

**ஏகபாத சீர்சாசனம் செய்வதால் ஏற்படும் பலன்கள் :**

**1. பெண்களுக்குக் கருப்பை சரிவு அல்லது இறக்கம் இருந்தால் அதை சரியான நிலையில் நிமிர்த்தி வைப்பதற்கு இந்த ஆசனம் உதவும்.**

**2. அடிக்கடி கருச்சிதைவுக்கு ஆளாகும் பெண்கள் இந்த ஆசனத்தை தொடர்ந்து செய்து வந்தால் அவர்களுக்கு கரு நிலைத்து குழந்தை பிறக்கும்.**

**3. மாதவிடாய் கோளாறுகளை சரி செய்கிறது.**

**4. கண்ட மாலை, கழுத்து வீக்கம், தலைவலி, மயக்கம், நுரையீரல் கோளாறு இருதய பலவீனம் இவைகள் நீங்கி இளமையும் சுறுசுறுப்பும் உண்டாகும்.**

**5. மூலநோய் விரைவில் குணமாகும்.**

**6. தொடக்க நிலை விரை வீக்கத்தை வற்ற வைத்துவிடும்.**

**7. உள்ளங்கை, உள்ளங்கால்கள் ஆகிய இடங்களில் வியர்வை ஏற்படுவதைப் போக்கும்.**

**8. கல்லீரலுக்குப் புத்துணர்ச்சியூட்டி பசியைத் தூண்டும்.**

**9. ஆஸ்துமா நோய்க்கு மிக முக்கியமான ஆசனம்.**

**10. நரம்புத் தளர்ச்சியைப் போக்குகிறது.**

**11. 'வெரிக்கோஸ் வெயின்' எனும் கால் நரம்புகள் புடைத்து இருப்பதை சரி செய்யும்.**

**12. மலச்சிக்கலைப் போக்கும்.**

**13. அடிவயிற்றுப் பெருக்கத்தை தடுக்கும்.**

**14. குடல் இறக்க நோயை குணம் செய்யும்.**

**15. வசிய ஆசனம் என்று பழைய யோக நூலில் காணப்படுகிறது. அதாவது தொடர்ந்து இவ்வாசனத்தை செய்து வந்தால் வசியசக்தி ஏற்படும்.**

**செய்முறை :**

**1. விரிப்பின் மீது கால்களை நீட்டி அமரவும்.**

**2. வலது காலை மடித்து இடது கையால் வலது குதிகாலையும் வலது கையால் கணுக்காலையும் பிடித்துத் தூக்க வேண்டும்.**



**3. குதிகாலை மெதுவாக நெற்றிப் பொட்டை நோக்கி கொண்டு வர முயற்சிக்க வேண்டும். இந்த நிலையில் 30 எண்ணிக்கை இருக்கவும்.**

**4. காலை இறக்கி விரிப்பின் மீது வைத்து நீட்டி சிறிது ஓய்வு எடுக்கவும்.**

**5. மாற்று ஆசனமாக இடது காலை மடித்து முன்பு போல செய்யவும். வலது கால், இடது கால் என மாற்றி மாற்றி இரண்டு முறை செய்து முடிக்கவும்.**

**6. மூன்று மாத காலப் பயிற்சிக்குப் பிறகு காலை கழுத்திற்குக் கொண்டுவரும் அளவு எளிதாக வரும். அதுவே முழுமையான பயிற்சியாகும்.**

**குறிப்புகள்:**

**1. படத்தில் உள்ளபடி வரவில்லை என்று ஆதங்கப்பட வேண்டாம். தினம் காலை, மாலை முயற்சி செய்து வரவும்.**

**2. கிழக்குத் திசை நோக்கி அமர்ந்து செய்ய வேண்டும்.**

**3. இந்த ஆசனம் சரியாகச் செய்ய வந்தால் பத்மாசனம் எளிதாகச் செய்ய வரும்.**

**4. சாதாரண மூச்சில் முதுகுத் தண்டை நிமிர்த்தி அமர்ந்து செய்ய வேண்டும்.**

**5. வலது காலை மடித்து பயிற்சி செய்யும்போது இடது காலை மடக்காமல் நேராக நீட்டி வைக்க வேண்டும்.**

# சமைப்போம் சுவைப்போம்

*தொகுத்துத் தருவது :* **ஷேபா**

## வனிலா ஐஸ்கிறீம

**தேவையான பொருட்கள்:-**

| | | |
|---|---|---|
| 1 1/2 | – | கோப்பை பால் |
| 3/4 | – | கோப்பை சீனி |
| 2 | – | முட்டைகள் |
| 1/4 | – | கோப்பை தண்ணீர் |
| 1 | – | கோப்பை கிறீம் |
| 1/2 | – | தேக்கரண்டி வனிலா எஸ்ஸென்ஸ் |
| 1/4 | – | தேக்கரண்டி உப்பு |

**செய்முறை :**

முட்டை வெள்ளைக் கரு, மஞ்சள் கருவைப் பிரித்துக்கொள்ளவும்.

தண்ணீரை ஒரு பாத்திரத்தில் சூடாக்கிக்கொண்டு அதன் மீது இன்னொரு பாத்திரம் வைத்து அதில் மஞ்சள் கரு, பால், சீனி ஆகியவற்றைச் சேர்த்து ஒரு கரண்டியால் நன்றாகக் கலக்கவும். கரண்டியின் பின்னே ஒரு படலமாகப் படியும் வரைக்கும் கலக்கவும். இதில் உப்பு, வனிலா, எஸ்ஸென்ஸ் மற்றும் கிறீம் சேர்த்து மெதுவாக மடிக்கவும். கரண்டியின் மூலம் மெதுவாக எடுத்து மடித்து மடித்து கலக்கவும். இதனை குளிர்சாதனப் பெட்டியின் உறை அறையில் வைத்து முக்கால் பாகம் உறையும் வரை வைக்கவும். பிறகு வெள்ளைக் கருவைத் தனியே எடுத்து தீவிரமாக அடித்து நுரை நுரையாக வரும்வரை அடித்து இதனுடன் கலந்து மீண்டும் நன்றாக அடித்து இதனை உறை அறையில் இரவு முழுவதும் வைக்கவும். காலையில் எடுத்து உண்ணலாம்.

எல்லாம் இந்தத் திருட்டுக் கும்பலகளாகத்தான் இருக்கும். சாராயம் காய்ச்சுவானுங்க! சூதாடு வானுங்க! கடத்தல் பண்ணுவானுங்க! ஒழியட்டும் என்று ஒரு சராசரி பொதுஜனம் போல் சபித்தான்.

இன்னும் ஏதாவது தொடருமா என்று நினைத்தபோது,

நாலு போலீசார் இரண்டு பேர்களை விலங்கு போட்டு நடத்திக்கொண்டிருந் தார்கள்.

விலங்குகளோடு பிணைந்த நீளச் சங்கிலியை அவர்கள் கைகளில் பிடித்திருந்தார்கள்.

அந்த இரண்டு கைதிகளைப் பார்த்ததும்... மனதைத் தாண்டிக்கொண்டு அவன் சந்தோஷக் குரல் வெளிவந்தது.

கைதியில் ஒருத்தன் காமாட்சிநாதன்! இன்னொருத்தன் பால...

பால... பால... பாலசந்துருடு.

நினைவின் எண்ணற்ற செல் அடுக்குகளிலிருந்து ஒரு புழுப் போல் அந்தப் பெயர் நெளிந்து வெளிவந்துவிட்டது.

இரண்டு பேரையும் கடத்தல் கோஷ்டியில் அவன் சேர்த்துப் பார்த்தது கிடையாது. இரண்டு பேரும் லாங் பஜாரில் வெவ்வேறு மூலைகளில் அப்பாவித்தனமான வியாபாரம் பண்ணிக்கொண்டிருந்தார்கள். இரண்டு பேரையும் தொழிலில் நினைத்துப் பார்க்க மனம் எண்ணியதேயில்லை.

முன்னால் போலீசார் சங்கிலியோடு போய்க்கொண்டிருக்க, பின்னால் காமாட்சி மட்டும் அவனைத் திரும்பிப் பார்த்தான்.

இரண்டு பேரும் ஒருவரை ஒருவர் முறைத்தார்கள். காமாட்சிக்கு உள்ளே தழல் வெந்துகொண்டு மேலே வந்திருக்க வேண்டும்.

குருவைச் சீற்றத்துடன் பார்த்து - "அட சீ!" என்றான்.

அந்த 'சீ'யில் ஆயிரம் ஹார்ஸ் பவர் இருந்தது.

அதே நேரத்தில் முன்னால் போன காக்கிக்காரர்கள் திரும்ப, குரு பால்கனிக்குள் அமிழ்ந்துகொண்டான்.

இருதயம் தடம் மாறிப் பேசியது.

ஒரு நிமிடத்தை ஓடவிட்டு மெள்ள நிமிர்ந்தான்.

அடுத்தாற்போல் ஒரே ஒரு நபரை இரண்டு போலீசார் சங்கிலி போட்டு நடத்திச் சென்றுகொண்டிருந்தார்கள்.

அந்த நபரைப் பார்த்ததும் ஒரு விசித்திர அதிசயம் அவனைத் தாக்கியது.



அந்த நபர் அவனைப் போலவே இருந்தான். அதே கிராப்பு, கிருதா, முகம், கண்கள், நடை, அமைப்பு!

மை காட்! இப்படிக் கூட ஓர் அதிசயம் நடக்குமா? மனசு கைகொட்டி ஆச்சரியப்பட்டது.

அவனுக்கு டபுளாகப் போடலாம். சினிமாக்காரர்கள் இருந்தால் படம் பிடித்து விடுவார்கள். ஒருத்தன் நல்லவன்! ஒருத்தன் கெட்டவன்! ஒருத்தன் காட்டில் இருந்தான். ஒருத்தன் நாட்டில் இருந்தான். ஒருத்தன் களவாளி! ஒருத்தன் இன்ஸ்பெக்டர்! இன்ஸ்பெக்டரின் காதலியைக் களவாளி கடத்திக்கொண்டு போக, அவள் சோகமாக ஜானகியின் குரலில் பாட, கார் சேஸ், கப்பல் சேஸ், ஏரோப்ளேன் சேஸிற்குப் பிறகு, சொச்சத்திற்கு ஒரு டூயடையும் போட்டுவிட்டு இன்ஸ்பெக்டர் அவளை அடைகிறார்.

சொடுக்கு நேரத்தில் இவ்வளவும் வந்து போக, குரு அந்த நபரைப் புன்னகையோடு உற்றுப் பார்க்க அவனும் அதிசயத்தோடு இவனை ஒரு விசேஷ பார்வை பார்த்தான்.

அப்போது - அண்ணே! அவனைப் பாத்தியா! அவன் தான் துக்கிரி! அந்தப் படுபாவிப் பயலின் கதையை அப்புறம் சொல்லுதேன்... என்று அரை நொடியே திரும்பிய காமாட்சி அந்த தனிக் கைதியிடம் சொல்ல,

அவன் பேச்சு முடிவதற்குள்ளாகவே, பால்கனியில் அமிழ்ந்துகொண்டான்.

ஐந்து நிமிடம் போகவிட்டு, எழுந்து உள்ளே வந்து, ஆனந்தமாகச் சோம்பல் கழற்றி, - "இன்னியோட எல்லாக் கஷ்டமும் போச்சுடா! கதை சொல்லப் போறானா மில்லே, கதை! ஆயுசுக்கும் கம்பி எண்ண லாம்! அங்கே குந்திக்கிட்டு கதை சொல்லிட்டே இரு", என்று சபித்தான்.

இன்பமாக மிதப்பது போல் ஓர் உணர்ச்சி! அதைப் பகிர்ந்துகொள்ள - கமலம் இல்லாது போய்விட்டாள்.



## துரோகம் துரத்துகிறது!

**அங்கம் 8**

இரவுக்குள் ஒரு யோசனைக்கு வந்தான். மறுநாள் காலையில் ஊருக்குப் புறப்பட வேண்டும்.

கத்திக்காரிதான் இந்தத் தீர்மானத் திற்குப் பெரிய காரணம்!

நிலவறையில் மேசை - நாற்காலி பாத்திரம் பண்டம் எல்லாம் போட்டு உக்கிராண அறை போல் காண்பித்துவிட்டுப் புறப்பட்டான்.

காலை நெடுந்தூர விரைவு வண்டி 'டுர்ர்ர்ர்ர்' என்று ஓட, ஊரைவிட்டு நாற்பது மைல் வேகத்தில் பிய்த்துக் கொண்டிருந்தான்.

ஒரு மணி நேரத்திற்குப் பிறகு பஸ் களைப்பாறியது. காப்பியும் பேப்பரும் வாங்கினான்.

சீட்டில் உட்கார்ந்து, ஒரு அப்பாடா போட்டு, ஒரு சர்வசுதந்திரமான நிலையை மனசில் அநுபவித்த பிறகு, பேப்பரை அதன் மெருகு குலைக்காமல் மெள்ள ஊதிப் பிரித்தான்.

'விர்'ரென்று ஓர் ஏவுகணை பறந்தது.

அவனது போட்டோவையே முதல் பக்கத்தில் பிரசுரித்திருந்தார்கள்.

ஒரு செகண்டில் சீட்டை விட்டுக் கழன்ற மாதிரியும் அடுத்த செகண்டில் சீட்டில் 'தொப்'பென்று விழுந்த மாதிரியும் உணர்ச்சி!

கண்களைக் 'கடகட'வென்று கொட்டிக் கொண்டு படித்தான்.

தலைப்பு : வேலங்காட்டில் வேட்டை.

வேலங்கரையை அடுத்த வேலங் காட்டில் நேற்று போலீசார் சோதனை நடத்தியதில் ஒரு பயங்கரவாதி பிடிபட்டார். அவர் பெயர் சூரியகுமார். அவரைப் போலீசார் ஒரு வருடமாகத் தேடி வருகிறார்கள். இவரைத் தவிர, தலைமறைவாகிவிட்ட காமாட்சிநாதன், பாலசந்துருடு என்ற இரண்டு கடத்தல் புள்ளிகளும், இருபது கள்ளச் சாராயம் காய்ச்சுபவர்களும் பிடிபட்டார்கள்.

கடற்கரை ஓர நகரங்களின் போலீஸ் அமைப்பை முற்றிலும் மாற்றியதிலிருந்து, இத்தனை பேர் சேர்ந்து அகப்படுவது இதுதான் முதல் தடவை. புதுப் போலீசார் உடனே தீவிர நடவடிக்கைகள் எடுத்தது பற்றி மக்கள் பாராட்டுகிறார்கள்.

சென்ஸார் சுத்தமான செய்தியை வாசித்த பிறகு நிம்மதி! இந்த போட்டோவில் இருப்பது சூரியகுமாரா? ஏமாந்துவிட்டேனே! அசப்பில் என்னைப் போல இருக்கிறானே. நல்லவேளை! என்னை இவன் என்று நினைத்து யாராவது பிடித்துப் போயிருந்தால்... நாலு உதை உதைத்து ஜெயிலுக்குள் தள்ளி...

சிரிப்பு வந்தது. அதெல்லாம் சினிமாவில் நடக்கும். இதை வைத்துக் கதை திரித்துக் கொண்டே போவார்கள். நிஜ வாழ்க்கையில் நடக்குமா, சாட்சி, சந்தர்ப்பம் இல்லையா?

டேய், சூரியகுமார்! என்னைப் போல தான்டா இருக்கே! வாடா ரெண்டு பேரும் சேர்ந்து சினிமாவிலே நடிக்கலாம். நிறையப் பணம் கிடைக்கும்டா!

கண்ணைச் சிமிட்டிக்கொண்டே போட்டோவைப் பார்த்துச் சொன்னான்.

பஸ்ஸில் யாராவது அந்தப் பத்திரிகை வாங்கி இருக்கிறார்களா - பார்த்தான்.

பின் பக்கத்துக் கடைசி வரிசையில் ஒருவர் வாங்கியிருந்தார். அவனைப் பார்த்தால் திடுக்கிடுவார்! சூரியகுமார் இதோ இருக்கிறான், டோய்!

பேப்பரைப் பத்திரமாக மடித்து வைத்தான். கமலத்திற்குக் காட்ட வேண்டும். - 'என் போட்டோ பத்திரிகையிலே வராதுன்னு சொன்னியே! இதோ பாரு!'

ஒரு வேடிக்கையான உற்சாகம் அவனைப் பிய்த்துக்கொண்டு உதறியது.

ஒரு பெரிய ஆற்றுப் பாலத்தைக் கடந்து, விக்டரி ஆர்ச்சைத் தாண்டி, காந்தி பெயரோடு நிற்கும் ஒரு நோஞ்சல் சிலையைச் சுற்றி, வாழைப்பழத் தெருவின் குறுகலான பாதையில் நிறைய ஹாரனைச் செலவழித்து, 'ரே ரே ரே' என்று கத்தும் ஒரு கொத்துச் சிறுவர்கள் வால் பிடித்துக்கொண்டு வர, பேருந்து நிலையத்தில் அந்த பஸ் பெருமூச்சோடு நின்றது.

புழுதியும் மஞ்சள் வெய்யிலும் கலந்த மாலை நேரம்.

(துரோகம் துரத்தும்......)

எழுதுவது
**புஷ்பா தங்கதுரை**

## அழகும் - ஆபத்தும்



கடந்த புதன்கிழமை சா பாலோவில் நடைபெற்ற பேஷன் ஷோவில் மாடல் அழகி அனா கிக்மேன் மலைப்பாம்புடன் ஒய்யாரமாக வந்த காட்சி இது.

பிரேஸில் நாட்டைச் சேர்ந்த இந்த அழகி கையில் மலைப்பாம்புடன் வந்த காட்சி பார்வையாளர்களைப் பயமுறுத்தியது. அழகு - ஆபத்து இரண்டையும் ஒரு காட்சியாய்க் காணும்போது பதறாமல் என்ன செய்வதாம். பாம்பின் பார்வையா, பாவையின் பார்வையா விபரீதமானதாகத் தெரிகிறது?

## என்றும் பதினாறு



மனிதன் விரும்புகிறானோ இல்லையோ முதுமை, நமது அனுமதி இன்றியே நம்மை அநுபவிக்கிறது. தள்ளாத முதுமையிலும் தளராமல் வாழ்வதாகப் பாட்டி பெருமைப்படுகிறார். முகத்தில் தெரிவது சுருக்கமில்லையாம். அநுபவத் தழும்புகளாம். இன்றும் தான் இளமையாக இருப்பதாகவே உணர்கிறாராம்.

லெபனான் நாட்டின் மிக வயதான பெண்மணி ஹமீதா முசல்மானி, தனது பரம்பரையின் சமீபத்திய 'வரவான' 10 மாதக் குழந்தை முகமதுவுடன்! லெபனானின் ஷைதியெத் கிராமத்தில் வசித்து வரும் ஹமீதா, தான் 1877-இல் பிறந்ததற்கான ஆவணங்களை வைத்துள்ளார். இதன்படி இவருக்கு வயது 126. உலகிலேயே வயதான பெண்மணியாக இவர் இருப்பதற்கான சாத்தியக்கூறுகள் இருக்கின்றன.

## ஒரு சர்ச்சை




மேக்னா நாயுடு பாலிவுட்டை ஒரு கலக்குக் கலக்கிக்கொண்டிருக்கிறார். 'ஹவஸ்' என்ற படத்தில்தான் இந்த சூடேற்றும் காட்சி. விவகாரமான காட்சியாக இருக்கிறதே என்று படத்தின் இயக்குநர் கரண் ராஜ்தானிடம் கேட்டால், "இந்தப் படம் ஒரு அற்புதமான காதல் கதை" என்கிறார்.

எனினும் 'ஹவஸ்' படத்தில் மெக்னா நாயுடுவின் கவர்ச்சிக் காட்சிகள் கதைக்குத் தேவைதான் என்றாலும், சற்று அதிகமாகவே கவர்ச்சி



உள்ளதென்பதால் தணிக்கைக் குழு திக்குமுக்காடிப்போய்விட்டதாம். மகளிர் அமைப்புகளும் சமூக அமைப்புகளும் எதிர்ப்புக் குரல் எழுப்பி வருகின்றனவாம். எவரும் சர்ச்சைகளைக் காதில் போட்டுக்கொள்வதாகத் தெரியவில்லையாம்.



# 15 ஒரு பெண்ணின் வாழும் வரலாறு

## ஹிலாரி கிளிண்டன் எழுதுகிறார்

இது விடயத்தில் எனது பெற்றோர்களும் என்னை ஆர்வப்படுத்தினார்கள்; ஊக்குவித்தார்கள். இவ்வாறான நல்ல மனப்பான்மைகொண்ட பெற்றோர்களை நான் அடைந்து கொண்டது மிகப் பெரும் வரப்பிரசாதமாகும்... இதே போன்றுதான் எனது ஆசிரியர்களும், கல்லூரித் தோழிகளும், இது விடயத்தில் மிகவும் ஆக்கபூர்வமான ஆலோசனைகளைத் தந்துகொண்டிருந்தனர்: இவர்கள் எல்லோரும் ஒரு பெண் வரையறைக்குள்தான் இருக்க வேண்டும் என்று கூறவுமில்லை, பெண்பிள்ளைகள் அவ்வாறு அதை செய்யக்கூடாது: இவ்வாறு கட்டாயம் இதை செய்யக்கூடாது போன்ற கருத்துக்களையெல்லாம் அவர்கள் வெளியிடுவதில்லை. ஆனால் தரமான..... முன்னேற்றகரமான கருத்துக்களை, ஆரோக்கியமான ஆலோசனைகளை – காத்திரமான புத்திமதிகளை எனக்கு கூறுவதிலேயே கவனம் செலுத்தினர்; இது எனக்கு மிகவும் மன அமைதியையும் சந்தோசத்தையும் கொடுத்தது.

1972ஆம் ஆண்டு "MS " சஞ்சிகையில் வெளியான ஒரு கட்டுரை எனது



கவனத்தை ஈர்த்தது. அந்த கட்டுரையை எழுதியவர் ஜனி ஓரீலி என்ற பிரபல எழுத்தாளர். அவர் தனது ஐம்பதாவது வயதில் எழுதிய "கிளிக்" என்ற தலைப்பிலான ஒரு பிரபல ஆக்கத்தை – வெளியிட்டவேளையில், அவர் அதில் குறிப்பிட்ட சில கருத்துக்களின் நினைவலைகளை மீட்டிப்பார்க்கின்றபொழுது எனக்கு ஒரு விடயம் நினைவுக்கு வருகிறது: அவர் தனது அந்தக் கட்டுரையில் "கிளிக்" என்று மிக நுணுக்கமாக குறிப்பிடப்பட்டிருந்தது என்னவெனில், பெண்களிடம் உள்ள மறைமுகமான இரகசியம் என்பதுதான். "அது கம்பிச் சுருள்களிலி லிருந்து வெளிவரும் மின் குமிழ்களின் பளபளப்பு – அல்லது திடீரென ஏற்படும் ஒளி மின்னல் போன்று இருக்கும்" என்றார் அவ்வாறு குறிப்பிட்டு ஆண்கள், பெண்கள் சம்பந்தமாக பல்வேறுபட்ட விடயங்களை மிக நயமாக அந்தக் கட்டுரை மூலமாக அலசி ஆராய்ந்திருந்தார். அத்துடன் குறிப்பாக பெண்களின் பல்வேறு இரகசியங்கள், பெண்களுக்கேயுரிய மனோரீதியான உள்ளோட்டங்கள், மனோதிடங்களை வளர்த்துக்கொள்வதுபற்றி பலவாறான விடயங்களையும் உதாரணங்கள் மூலம் நுணுக்கமாக விளக்கிக் காட்டியிருந்தமை என்னை அந்தக் கட்டுரையை வாசிக்கத் தூண்டியது. அந்தக் கட்டுரையிலிருந்து பல அம்சங்களை விளங்கிக் கொண்டதன் மூலம் நான் திருப்திப்பட்டுக் கொண்டேன். மேலும் அந்தக் கட்டுரையினூடாக எனது எதிர்கால இலட்சியத்திற்கான பல ஆரம்ப விடயங்களைக் கற்றுத் தெளிவடைந்து கொண்டேன்: அதனை செயற்படுத்தவும் முடிவு எடுத்தேன்.

மேலும் "கிளிக்" என்ற பெயரில் வெளிவந்த ஆக்கத்தினடியாக எழுந்த எனது "மனஓர்மை" என்னை விண்வெளி ஆராய்ச்சியில் ஈடுபடவேண்டும், அத்துடன் "NASA" விண்வெளி ஆய்வு மையத்தில் நானும் இணைந்து ஒரு விண்வெளி ஆய்வாளராக மாறவேண்டும் என்ற உணர்வு எனக்கு வந்தது. உடனடியாக ஒரு ஆரம்ப விண்வெளி வீரர் பயிற்சி வகுப்பில் சேர்ந்து கொள்வதற்காக நான் NASA விண்வெளி ஆய்வுகூடத்துக்கு விண்ணப்பித்தேன்.

எனக்கு அவர்கள் மறு அறிவித்தல் கடிதம் அனுப்பியிருந்தார்கள். அந்தக்கடிதத்தில் தற்போதைய நிலையில் பெண்களை அந்த விண்வெளிவீரர் பயிற்சி வகுப்பில் சேர்த்துக் கொள்வதில்லை என்று எனக்கு அறிவித்திருந்தார்கள். அது எனக்கு மிகவும் கவலையைத் தந்தது. ஆனால் நான் என்னை திடப்படுத்திக் கொண்டேன். ஆண்கள் மாத்திரம்தான் அந்தப் பயிற்சியில் – அதாவது விண்வெளி வீரர் பயிற்சியில் சேர்த்துக்கொள்வதென்பதுடன் பெண்களை இழிவாகக் கருதும் நிலை என்றும் கருதினேன். ஆனால் பெண்களினாலும் இப்பேற்பட்ட பயிற்சியில் ஈடுபட முடியும் என்பதை பிற்காலத்தில் NASA வினுடாக விண்வெளிப்பயணத்தில் ஈடுபட்ட பெண்களின் துணிவு பற்றி நினைக்கும்போது மிகவும் சந்தோசமாக இருக்கிறது. ஆனால் ஆணாதிக்கம் என்பது பெண்கள் மீது ஒருபோதும் இருக்கக்கூடாது, இருக்கவும் முடியாது என்பதுதான் எனது உறுதியான நிலைப்பாடாகும். அத்துடன் பெண்கள் ஒருபோதும் எவராலும் துஷ்பிரயோகம் செய்யப்படக்கூடாது. ஆண்களோடு எல்லாவிடயங்களிலும் பெண்களும் சமம்தான் என்பதை நாம் உணர்ந்து கொள்ளவேண்டும், மற்றவர்களுக்கும் நமது உறுதியான நடவடிக்கைகளினூடாக உணர்த்தவும் வேண்டும்.

எனது உயர் கல்லூரி நாட்களில் என்னுடைய மிக ஆத்மார்த்தமான தோழிகளில் ஒருத்தி கல்லூரியிலிருந்து விலகிச் சென்றுவிட்டாள். அது எனக்கு மிகவும் கவலையைத்தந்தது, அவள் விலகிச் சென்றதற்கான அடிப்படைக் காரணமே அவளுடைய அன்பு நண்பன் வேறொரு பாடசாலையில் கற்றதுதான் என்பது பின்னர்தான் எனக்கு தெரியவந்தது.

எனது தோழிகளில் மேலும் இருவரின் நிலைமைகள் மிக மிக வித்தியாசமான கோலத்திலிருந்தன. அதாவது, ஒருத்தி தன்னுடைய பள்ளித் தோழனுக்காக வேண்டி வேறு கல்லூரிக்கு போய் சேர்ந்துவிட்டாள். மற்றவள், தொடர்ந்தும் அவளது உயர் கல்வியை தொடரவில்லை. ஏனெனில் அவளுடைய திருமணம் நிச்சயிக்கப்பட்டிருந்தது. ஒருவாறு நானும் என்னை சுதாகரித்துக் கொண்டு பள்ளித்தோழன் ஒருவனை நண்பனாகப் பிடிப்பதற்கு ஆசைப்பட்டுக் கொண்டிருந்தேன். ஆனால் இதுவிடயத்தில் அக்கறை எடுக்காமல் எனது படிப்பிலேயே கண்ணும் கருத்துமாக இருந்தேன். இதேவேளை எனது பள்ளித் தோழிகளில் அதிகம் பேருக்கு ஆண் நண்பர்கள் இருந்தார்கள்.

(இன்னும் வரும்...)

---

**இருபதாம் நூற்றாண்டின் வரலாறு நமது கண்முன் உள்ளது. ஆனால் கடந்த பல நூற்றாண்டுகளின் வரலாற்றை நாம் காண முடியாதுள்ளது.**

**ஆனாலும், நம்மைக் கடந்து சென்ற 19ம் நூற்றாண்டு வரலாறு கண்ணீர் சிந்தவைப்பதும், அழகியதும், அரியதுமான படங்களினூடாக உங்கள் முன் பதிவு செய்யப் பட்டுள்ளது.**

**ஒவ்வொரு படமும் ஒவ்வொரு கதையைக் கூறுவன. 19ம் நூற்றாண்டின் வரலாறானது முன்னெப்போதுமில்லாத வகையில் அதிக மாற்றங்களை சந்தித்தது. எல்லா மாற்றங் களும் இயல்பாக ஏற்பட்டதுமல்ல, அவற்றுள் சில யுத்தங்கள், எதிர்ப்புகளைத்தாண்டி நடந்துள்ளன. பல சாம்ராஜ்யங்கள் சிதைந்து, புதிய நாடுகள் உருவாகியுள்ளன. விஞ்ஞான, அறிவியல் மாற்றங்கள் ஏற்படுகின்றன. உலகம் மாறிக்கொண்டே வந்திருக்கிறது.**

**19ம் நூற்றாண்டு தொடக்கத்தில் உலகின் முழு நிலப்பரப்பில் ஐந்தில் ஒரு பகுதி பிரித்தானிய சாம்ராஜ்யத்தின் கீழிருந்தது. இப்போது? இப்படியான பல கதைகள்... இவைகளை நமது வாசகர்கள் தரிசிக்க ஒரு வாய்ப்பை தினமுரசு ஏற்படுத்துகிறது.**


---

## தொழிலாளர்களின் முதலாவது தலைவர்



**தொ**ழிலாளர்களின் முதலாவது தலைவர் என்று குறிப்பிடப்படும், ஜேம்ஸ் கெயர் ஹார்டி (1856 – 1956) ஸ்கொட்லாந்தில் ஒரு பரம ஏழைக் குடும்பத்தில் பிறந்தார். அவரது குடும்பத்தினரின் பிரதானமான தொழில் சுரங்கம் அறுத்தலாகும். இந்த ஜேம்ஸ் கெயர் என்பவரும் ஆரம்பத்தில் ஒரு சுரங்கத் தொழிலாளியாக இருந்த போதிலும், அவர் அந்த மக்களிடையே ஒரு வித்தியாசமான ஆற்றலுடைய வராகவும், மிக மிக சுறுசுறுப்பான – வித்தியாசமான கெட்டித்தன முடையவராகவும் இருந்தார். அத்துடன் ஸ்கொட்லாந்து சுரங்கத்தொழிலாளர்களின் தலைமைப் பொறுப்பு இவரிடம் வழங்கப்பட்டது இதனைத் தொடர்ந்து தொழிலாளர்களின் சார்பாக 1892ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத்தேர்தலில் ஸ்கொட்லாந்து பாராளுமன்றத்தின் உறுப்பினராக தெரிவுசெய்யப்பட்டார். 1893ஆம் ஆண்டு ஜனவரி மாதம் "தொழிலாளர் கட்சி" ஜேம்ஸ் கயர் ஹார்டியால் ஆரம்பிக்கப்பட்டு அதன் தலைவராகவும் அவர் இருந்தார். அதனைத் தொடர்ந்துதான் பெப்ரவரி 1900ல் தொழிலாளர்களை பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளுமன்றத்தில் தொழிலாளர்களுக் கான பிரதிநிதித்துவ அமைப்பு உருவாக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து தற்போதைய "பெரிய தொழிலாளர் கட்சி" (Labour Party) உருவாக்கப்பட்டது. அந்தத் தொழிலாளர் கட்சியின் முதல் தலைவர்தான் படத்தில் காணப்படும் "ஜேம்ஸ் கயர் ஹார்டி." இவர் தனது தொழிலாளர்களுக்காக பெரிய போராட்டங்களில் ஈடுபட்டு கடைசியாக 1915ஆம் ஆண்டு தனது 59வது வயதில் காலமானார்.

---




## பிரான்சின் சாதனை விமானம்

"அல்பேர்டோ சண்டோஸ் டியூமோன்ட்" இவரொரு பிரேசில் நாட்டைச் சேர்ந்த விமானமோட்டி. இவர் 12ஆம் திகதி நவம்பர் மாதம் 1906ஆம் ஆண்டு 235 யார் நீளமான பெரிய விமானமொன்றைத் தயாரித்து சாதனை படைத்தார். அவ் விமானத்துக்கு இயந்திரம் பூட்டி பிரான்சில் பறக்கும் காட்சியே இது. ஆரம்பத்தில் இந்த அல்பர்டோ சண்டோஸ் டியூமோன்ட், ஆகாயத்தில் பறக்கும் முயற்சியை ஒரு இலேசான வாயு அடைத்த பலூனின் ஊடாகவே ஆரம்பித்தார். அதன் பின்புதான் பெரிய பலூனிலான ஆகாய விமானம் தயாரிக்கும் முயற்சியில் இறங்கினார். அதில் வெற்றியும் கண்டார். அதாவது பலூனிலான ஆகாய விமானம் தயாரித்து. அரைமணிநேரம் வானத்தில் பறந்து சாதனை படைத்தார். இதற்காக பிரான்ஸின் மிகப்பெரிய பரிசான "டிடச் டி லா மெரிதி" என்ற பிரான்ஸிய நாணயத்தில் ஒரு இலட்சம் பெறுமதியான பரிசு அவருக்கு வழங்ககப்பட்டது. 1901ஆம் ஆண்டு இந்த பரிசை அவர் வென்றெடுத்தார். அதனைத் தொடர்ந்து அவர் பெரிய இயந்திரங்களை பொருத்தி விமானங்களைத் தயாரித்து 1906ம் ஆண்டு புகழின் உச்சிக்கே சென்றார். அந்தக் காலப்பகுதியில் சிறந்த விமானியாக மதிக்கப்பட்ட அவர், 1932ம் ஆண்டு பிரான்ஸ் நாட்டு விமானப் படையின் விமானம் மூலம் சில மன அழுத்தங்களினால் தற்கொலை செய்து கொண்டார்.

# ஈராக்கில் இடைக்கால ஆட்சி சாதிக்கப்போவது எதை?

உண்மையான ஜனநாயக மாற்றத்தை ஏற்படுத்துவது எப்போதும் சிக்கலானதாகவே இருக்கும் என்பதுதான் யதார்த்தம். ஈராக்கில் இப்போது இடைக்கால அரசியல் நிருவாகத்தைக் கையளிக்கும் முயற்சிகளில் அமெரிக்கா ஈடுபட்டு வருகிறது.

ஈராக் மீது அமெரிக்கா முறையற்ற விதத்தில் போர் தொடுத்துத் தமது நாட்டைச் சீரழித்துவிட்டது என்ற வகையிலான குற்றச்சாட்டை வைத்து தொடர்ந்து தாக்குதல்களைத் தொடுத்து வருகின்ற போராட்ட வன்முறைக் குழுக்கள்தான் இப்போதைக்குப் பெரும் பிரச்சினையாக உள்ளன.

எண்ணெய் வளத்தில் நானூறு வருடங்களுக்கு மேல் தன்னிறைவு கண்டு உலக நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யக் கூடிய பலத்துடன் இருக்கும் ஈராக்கின் பொருளாதாரம், இப்போதைக்கு அனைவரது பார்வைகளிலும் கண்காணிப்பிலும் உள்ளது.

ஆனால், இது வரை நாட்டிற்குள் கலவரத்தைத் தூண்டும் விதத்திலான வன்முறைகளில் ஈடுபட்டு வந்த இந்த வன்முறைக் குழுக்கள் திடீரெனப் பொருளாதார இலக்குகளைத் தெரிவு செய்துள்ளன. வரலாற்றைப் புரட்டிப் பார்த்தால் போதுமே தம்மை விடுதலைப் போராட்டக் குழுக்களாக அறிமுகப்படுத்திக்கொள்பவர்கள் முக்கியமாக பொருளாதார இலக்குகளையே தெரிவு செய்வது வழமை. இதற்கு இலங்கையும் விதிவிலக்கல்ல. இம் மாத இறுதியில் அமையப்போகும் ஈராக் இடைக்கால அரசுக்கு ஜனாதிபதியாக காசி அல் யவார் நியமிக்கப்பட்டுள்ளார். இவ்வரசின் முக்கிய பொறுப்புக்கள் கொண்டவராய் ஜனாதிபதியை விடப் பிரதமரே காணப்படுவார்.

ஜனாதிபதி, பிரதமர், துணை ஜனாதிபதிகள், அமைச்சர்கள் அடங்கலான முப்பது பேரைக் கொண்ட இடைக்கால அரசில் பிரதமராக ஒரு வைத்தியர் நியமிக்கப்பட இருக்கிறார்.

ஈராக்கில் இருந்து வெளியேறி தனது வாழ்க்கையை முப்பது வருடங்களுக்கும் மேலாக லண்டனில் கழித்த ஜமேத் அலவி என்பவரே இவர். இருப்பினும் ஈராக்கில் கடந்த சில வாரங்களாக ஆரம்பிக்கப்பட்டிருக்கும் நிருவாகத் துறையினர் மீதான தாக்குதல்களைத் தொடர்ந்து பிரதமராக வேறு ஒருவர் நியமனம் பெறலாம் எனத் தெரிகிறது.

இதற்கு முன்னமே இடைக்கால அரசில் அங்கம் வகிப்போர், அமெரிக்கப் படையினர் ஈராக்கின் பாதுகாப்புக் கருதி அங்கேயே தங்கியிருக்க வேண்டும் எனக் கேட்டுள்ளனர். பிரதமர் கொரில்லாக்களை எதிர்த்துப் போரிடக் கூட்டுப்படைகள் அவசியம் எனத் தெரிவித்துள்ளார்.

இந் நிலையில் ஒரு இடைக்கால நிர்வாகத்திடம் ஈராக்கில் இறைமையைக் கையளிக்கவுள்ள அமெரிக்காத் தனது நோக்கத்தை, எவ்வாறு அடையப்போகிறது என்பதுதான் சந்தேகமானது.

ஈராக்கில் சதாமின் ஆட்சி வீழ்த்தப்பட்டதன் பின், மக்களின் மனோநிலையில் ஏற்பட்ட மாற்றங்களே தற்போதைய வன்முறை அதிகரிக்கக் காரணம். அதாவது பெரும்பாலானோரைப் பொறுத்தவரை சதாம் ஹூசைனின் ஆட்சியை விடவும் கூட்டுப்படையின் அட்டூழியங்களே தம்மை இம்சைப்படுத்துவதாகக் கருதுகிறார்கள்.

எதிர்வரும் 2006 ஜனவரியில் அல்லது 2005 இறுதியில் மக்களவைத் தேர்தல் நடாத்தப்பட்டு தேசிய மக்களவை தெரிவு செய்யப்படும். அவ்வரசாங்கமே சட்டவரைபிலும் ஈடுபடும். அதுவரை இடைக்கால அரசு பதிவியிலிருக்கும்.

ஆனால், அதுவரை எவ்வாறிருக்கும்? சரி அதற்குப் பின்பு எப்படியிருக்கும்? என்பதெல்லாமே இப்போதைய வன்முறைகளின் தணிவிலேயே இருக்கும். விடுதலைப் போராட்டங்கள் என்ற போர்வையில், மதம், இனம் போன்ற சாயங்களைப் பூசிக்கொண்டு மக்களை ஒரு வகை அச்ச நிலையில் இருக்கச் செய்து தமக்கு ஆதரவு இருப்பதாகக் காட்டிக்கொள்ளும் போராட்டக் குழுக்களைப் போல, (முக்கியமாக இலங்கையைக் குறிப்பிடலாம்.) ஈராக்கிலும் இப்போது உருவாகியுள்ள போராட்டக் குழுக்கள் எதனை நோக்கிச் செல்கின்றன என்பது தெரியாத நிலை இருக்கிறது.

இடைக்கால அதிகாரசபையின் முக்கிய எதிர்கொள்ளலானது பாதுகாப்புக் குறித்தே இருக்கும். சதாமின் ஆட்சியில் படைகள் பெரும்பாலும் பாத் கட்சியினராலேயே நிரப்பப்பட்டிருந்தது. போருக்குப் பின்னரான ஈராக்கில் இவர்களில் பெரும்பாலானோர் பதவி நீக்கம் செய்யப்பட்டனர். இவர்கள் சதாம் என்றால் உயிரையே கொடுக்கும் அளவுக்குப் பக்தி கொண்டவர்கள். இவர்கள் கிளர்ச்சிக் குழுக்களில் இணைந்து கொண்டுள்ளமையானது இன்னமும் பெரிய சிக்கலை ஏற்படுத்தியிருக்கிறது. அமெரிக்காவின் கைப் பொம்மைகளாகவே இடைக்கால நிருவாகத்தை கிளர்ச்சிக் குழுக்கள் பார்க்கப் போகிறார்கள். இதற்கு மக்களது பெரும்பாலான ஆதரவும் இருக்கிறது என்பதுதான் இதில் மிகவும் சோகத்திற்குரியதாக இருக்கிறது.

சதாமின் ஆட்சியைக் கவிழ்ப்பதில் ஆர்வமாகவும் வேகமாகவும் இருந்த அமெரிக்கா, இப்போது ஈராக்கிற்குள் சாதாரணமாக இயங்க வேண்டியுள்ளது. காரணம் கிளர்ச்சிக் குழுக்களே.

2005 டிசம்பரில் நடக்கப் போகின்ற ஈராக் தேர்தலுக்கு முன்னர், அடுத்த ஆண்டு நடுப் பகுதியில் அரசியல் யாப்பு கருத்துக் கணிப்புக்கு விடப்படும். டிசம்பரில் எப்படியும் தேர்தலை நடத்தி 2006இல் அதிகார பலமுள்ள அரசை நிறுவிவிட வேண்டும் என்பதுதான் இப்போதைக்கு இடைக்கால அரசுக்குள்ள முதன்மைப் பொறுப்பு. எப்படியிருந்தாலும் ஈராக்கைப் பொறுத்தளவில் அதற்கு ஆதரவும் துணையும் செய்வதற்கு அரபுநாடுகள் இணைய வேண்டும் என்பதுதான் பெரும்பாலான அரேபியர்களினதும் எதிர்பார்ப்பாக இருக்கிறது.

முக்கிய அரபு தேசம் ஒன்று அதன் கொள்கைகளை மீறிச் செல்கிறது என்பது போன்ற ஒரு சில காரணங்களாலேயே அரபு நாடுகள், அமெரிக்கா போர் தொடுக்கையில் வாய் பேச மறந்திருந்தன. ஆனால், அது இப்போது வினையாகியிருக்கிறது.

அமெரிக்கத் தாக்குதலால் அழிந்துபோயுள்ள ஈராக்கை மீளக் கட்டியெழுப்புதல் என்பதுதான் அனைவரதும் கனவாக இருக்கிறது. இதில் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டது பாபிலோன் நகரம். இதனைப் பார்வையிடுவதற்கு அமெரிக்கப் படைகள் தடை விதித்துள்ளன.

இதேவேளை ஈராக்கில் நடைபெற்று வருகின்ற தற்கொலைத் தாக்குதல்களின் சூத்திரதாரி என்று சந்தேகிக்கப்படும் அபு முசாப் அல் சர்காபி என்பவரைக் குறி வைத்து அமெரிக்கப் படையினர் மேற்கொண்ட தாக்குதலில் பொதுமக்கள் உயிரிழந்துள்ளனர். சர்காபியின் தலைக்கு 10 மில்லியன் டொலர் விலை பேசியிருந்த அமெரிக்கப் படைகள், விமானம் மூலம் தாக்குதலை மேற்கொண்டன.

வன்முறைகளைத் தடுக்கும் நோக்கில் அமெரிக்கப் படைகள் மேற்கொள்ளும் தாக்குதல்கள் பெரும்பாலும் பொதுமக்களையே பாதிக்கிறது. இது இன்னமும் அமெரிக்காவின் இருப்பை மோசமாக்கும். இது இடைக்கால அரசினது செயற்பாட்டில் பாதிப்புக்களை ஏற்படுத்தும் எனச் சமூகவியலாளர்கள் பலரும் கருத்து வெளியிட்டுள்ளனர். ஆனால், கூட்டுப் படைகளோ இடைக்கால அரசு பதவிக்கு வரும் முன்னர் வன்முறைகள் முழுமையாக ஒழிக்கப்படும் எனத் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இருப்பினும் வன்முறையாளர்கள் ஒரு சிலருக்காக மக்களைச் சேதப்படுத்தும் நடவடிக்கையில் ஈடுவடுவது தவறு எனப் பலரும் கருத்து வெளியிட்டுள்ளனர். இலங்கை, இஸ்ரேல், பலஸ்தீனம், ஈராக், ஆப்கான் என உலக நாடுகள் அனைத்துமே பிரச்சினைகளுக்கு நிலையான தீர்வுகளை நாடி நிற்பதாகவே உள்ளன. இதுவரை ஈராக்கில் நடந்து வருகின்ற போர்களுக்கு ஒரு சுமுகமான தீர்வு வர வேண்டுமென்றால் அது மக்களைப் பொறுத்ததுதான்.

**இலக்குவன்**

ஆனாலும் இடைக்கால அரசிடம் அதிகாரம வழங்கப்படுவது எப்படி ஈராக்கைப் பாதுகாக்கப் போகிறது, வழி நடத்தப் போகிறது என்பதைப் பொறுத்திருந்து பார்க்க வேண்டியதுதான். எது எவ்வாறென்றாலும் இப்பொழுது இலங்கையிலும் ஒரு இடைக்கால நிர்வாகச் சிக்கல் சென்று கொண்டிருக்கிறது. இது ஈராக்கை விடவும் மோசமான பாதிப்புக்களை ஏற்படுத்தலாம்.

ஆகவே, இடைக்கால நிர்வாகம் குறித்துப் பேசுவதை விடவும் நிரந்தரத் தீர்வுக்கு வழி காணுவதே கட்டாயத் தேவையாக உள்ளது. ஏனெனில், இடைக்கால நிர்வாக அமைப்பு தொடங்கிச் செயலாற்றும் புனரமைப்பு புனர்வாழ்வுப் பணிகள், நிரந்தரத் தீர்வு குறித்த பேச்சுக்களில் பாதிப்புகள் ஏற்படுத்துமிடத்து மீளவும் அழிவுப் பாதைக்கே இட்டுச் செல்லும் என மக்கள் அஞ்சுகின்றனர். ●

---

இரு எழுத்தாளர்கள் சேர்ந்து எழுதும் இலங்கைத் தமிழ் அரசியல் தொடர் இது.

# முட் பாதையில் மரித்த மிதவாதம்

## குடியுரிமை பற்றியது

ஜே. ஆர். ஜெயவர்த்தனா ஜனாதிபதியாகப் பதவி வகித்தபோது அரசியல் ரீதியான போட்டியாளர்களைப் பலவீனப்படுத்துவதிலும் பழிவாங்கு வதிலும் மிகவும் கவனமாகத் திட்டமிட்டுச் செயற்பட்டு வந்தவர் என்பது வரலாறு. ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவின் இக் குள்ளநரித்தனமான செயற்பாடுகளுக்குத் தெரிந்தோ தெரியாமலோ தமிழர் விடுதலைக் கூட்டணியும் ஒத்துழைத்து வந்தது என்பது குறிப்பிட்டுக் கூறக் கூடிய ஒரு விடயம் ஆகும். பாராளுமன்றத்தில் பலவீனமான ஒரு எதிர்க்கட்சியாக விளங்கிய தமிழர் விடுதலைக் கூட்டணியைப் பயன்படுத்தி, தேசிய ரீதியாக அரசுக்கு எதிராகக் கிளம்பும் எதிர்ப்பு உணர்ச்சிகளைத் திசை திருப்புவதிலும் ஜே.ஆர். அரசு வெற்றியே கண்டு வந்தது. உதாரணமாக தென்பகுதிப் பல்கலைக்கழக மாணவர்களின் போராட்டம் முதல் பயங்கரவாதத் தடைச் சட்டத்திற்கு எதிரான இடதுசாரிகளின் கிளர்ச்சிகள் வரை, பல கட்டங்களிலும் ஜே.ஆர். அரசு தமிழர் விடுதலைக் கூட்டணியை ஒரு கேடயமாகப் பயன்படுத்திக்கொண்டது. இவ் வகையில் முக்கியமான ஒரு விடயம், முன்னாள் பிரதமர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கவின் குடியுரிமை பறிக்கப் பட்டபோது கூட்டணியினர் நடந்து கொண்ட விதமாகும்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவியாகப் பதவி வகித்த முன்னாள் பிரதமர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்க, தமது ஆட்சிக் காலத்தில் அதிகார துஷ்பிரயோக நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தார் எனக் குற்றம் சுமத்தி விசாரிக்க ஜனாதிபதி ஆணைக் குழுவொன்று நியமிக்கப்பட்டது. இந்த ஜனாதிபதி ஆணைக்குழு இக் குற்றச் சாட்டுக்களை விசாரித்து திருமதி சிறிமாவோவின் குடியியல் உரிமைகளை ஏழாண்டு காலத்துக்குப் பறிமுதல் செய்ய வேண்டுமெனச் சிபாரிசு செய்தது. இதன் மூலமாக திருமதி சிறிமாவோ தேர்தல்களில் போட்டியிடுவதையும் அரசியல் நடவடிக் கைகளில் ஈடுபடுவதையும் தடை செய்யத் திட்டமிடப்பட்டது. இதற்கான நடவடிக் கைகளை முன்னெடுத்துச் சென்ற ஜே.ஆர்.ஜெயவர்த்தனா அரசாங்கம் பாராளுமன்றத்தின் முன்பாக இதனைக் கொண்டுவந்தது.

பிரதமர் பிரேமதாஸ 1980 அக்டோபர் 16ஆம் திகதியன்று திருமதி சிறிமாவோவின் குடியுரிமையைப் பறிப்பதற்கு ஏதுவான நகல் சட்ட மூலத்தைப் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தார். அரசியல் போட்டியாளர் களைத் திட்டமிட்டுப் பழிவாங்குகின்ற, முற்றிலும் ஜனநாயக விரோதமான இச் செயற்பாட்டிற்கு எதிராகத் தேசிய ரீதியான எதிர்ப்பைக் கட்டியெழுப்ப எதிர்க்கட்சித் தலைவர் பதவிப் பொறுப்பை வகித்த அமிர்தலிங்கம் முற்படவில்லை. இவ்வாறு குடியுரிமை மறுக்கப்படுவதன் மூலமாக




அரசியல் போட்டியாளர்களைப் பலவீனப் படுத்தும் வழிமுறை பொருத் தமானதல்ல என்பதை உரத்த குரலில் உறுதியாக எடுத்துரைக்கவும் அவர் முற்படவில்லை.

இணைந்து எழுதுவது
த.சபாரத்தினம்
+
அம்பி மகன்

மாறாக, பாராளுமன்ற விவாதத்தில் கலந்துகொண்டு அரசாங்கம் இம் முயற்சியைக் கைவிட வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்ததுடன் தனது பணியை முடித்துக்கொண்டார். இவ்வாறு குடியுரிமை பறிக்கப்படுவது ஜனநாயக விரோதமானது எனவும் இத்தகைய செயற்பாடு கோடூரமானது எனவும் வர்ணித்தபோதிலும் அதற்கான எதிர்ப்பைப் பாராளுமன்றத்தின் உள்ளும் புறமும் பலமாக எதிரொலிக்க அமிர்தலிங்கமும் கூட்டணியினரும் தவறிவிட்டனர்.

இதனால் இலங்கையின் எதிர்க்கட்சி வட்டாரங்களில் தமிழ்த் தலைமை தள்ளிவைக்கப்படும் நிலைமை உருவானது. அதாவது, பாராளுமன்றத் தில் எதிர்க்கட்சியாகப் பதவி வகித்தபோதும் தேசிய ரீதியாக ஜனநாயக நடைமுறைகளைப் பாதுகாப்பதில் தனக்குரிய கடமைப் பொறுப்பை ஆற்றுவதற்குத் தமிழர் விடுதலைக் கூட்டணி தயங்கி நின்றது. இது ஜே.ஆர்.ஜெயவர்த்தனா அரசுக்குப் பெரும் வாய்ப்பாகக் காணப்பட்டது.

இதனையும் விட இன்னும் ஒரு படி மேலே போய் 1981 பெப்ரவரியில் யாழ்ப்பாண அரசாங்க செயலகத்தில் இடம்பெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கலந்துகொண்ட தமிழர் விடுதலைக் கூட்டணிப் பாராளுமன்ற உறுப்பினர்கள் அரசாங்கம் முன்னெடுக்கும் அபிவிருத்தி முயற்சிகளுக்கு உறுதுணையாகச் செயற்படுவதாக வாக்குறுதி வழங்கினர். கூட்டணிப் பாராளுமன்ற உறுப்பினர்கள் கூறும் அபிவிருத்திப் பணிகள் என்பது இனத்தின் உரிமைப் போராட்டத்தை அடகு வைக்கும் ஒரு செயலாகவே இருக்கும் என்று தமிழ் இளைஞர்கள் கருத்து வெளியிட்டனர்.

மாவட்ட அபிவிருத்திச் சபைகளுக்காக நடைபெறவுள்ள தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணி பங்கு கொள்ளப் போவதாகவும் அறிவித்தது. இது தமிழ் இளைஞர்கள் மத்தியில் மேலும் ஆத்திரத்தைத் தூண்டியது. இதனால் வன்செயல் சம்பவங்கள் அதிகரித்தன. 1981 மார்ச் 16 அன்று மானிப்பாய்த் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினரான வி.தர்மலிங் கத்தின் ஜீப் வண்டி தாக்குதலுக்கு இலக்கானது. அமிர்தலிங்கம், தர்மலிங்கம் மற்றும் உடுப்பிட்டித் தொகுதியின் இராசலிங்கம் ஆகியோர் வல்வெட்டித் துறையில் ஒரு இரவு விருந்தில் கலந்துகொண் டிருந்தபோது இத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. யாழ்ப்பாணம் அரசடி வீதிப் பகுதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பாராளுமன்ற உறுப்பினர் இராசலிங்கத்தின் உத்தியோக பூர்வ வாகனமும் மற்றுமொரு சம்பவத்தில் சேதமாக்கப்பட்டது. முருங்கனிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்துகொண்டிருந்த பருத்தித்துறைத் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினர் கே.துரைரத்தினத்தின்

> **இவற்றின் உச்சக் கட்டமாக யாழ்ப்பாண மாநகர பொது நூலகமும் முற்றாகக் கருகச் செய்யப்பட்டது. தென்கிழக்காசியாவின் மிகப் பெரும் நூலகம் தன் பொலிவை இழந்து சாம்பர் மேடாகியது.**

வாகனமும் தாக்குதலுக்கு இலக்கானது. இவற்றை விட வட்டுக்கோட்டைத் தொகுதியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும், ஐக்கிய தேசிய கட்சி சார்பில் மாவட்ட அபிவிருத்தி சபைத் தேர்தலில் பங்கு கொண்டவருமான ஆ.தியாகராசா 1981 மே 26 அன்று சுட்டுக் கொல்லப் பட்டார்.

இந்தத் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தை வன்மையாகக் கண்டித்து அமிர்தலிங் கமும் சிவசிதம்பரமும் கூட்டாக அறிக்கையொன்றை வெளியிட்டனர். அர்த்தமற்ற இத்தகைய படுகொலைகள் தமிழ் மக்கள் எதிர்நோக்கிவரும் கஷ்டங்களையும் துன்பங்களையும் மென்மேலும் அதிகரிக் கவே செய்யும்.

ஜனநாயக அரசியல் செயற்பாடு என்பது வாக்குச் சீட்டுக்கள் மூலம் வெல்லப்பட வேண்டுமே தவிர வேட்டுக்கள் மூலம் அழிக்கப்படக் கூடாது என்றும் இவ்வறிக்கையில் வலியுறுத்தப் பட்டிருந்தது. ஆனால், வன்செயல் சம்பவங்கள் தொடர்ந்தன. தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் வேட்பாளரான பொன்.சிறிதரன் மீது கைக்குண்டுத் தாக்குதல் மேற்கொள்ளப் பட்டது. 1981 மார்ச் 31ஆம் திகதியன்று மாலையில் யாழ்ப்பாணம் நாச்சிமார் கோவிலடிப் பகுதியில் இடம்பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டமொன்றில் காவல் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸார் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டது. இதில் இரு பொலிஸார் கொல்லப்பட்டதோடு ஒருவர் காயமடைந்தார்.

இந்தச் சம்பவங்களை அடுத்துப் பொலிஸார் பதில் தாக்குதல்களை ஆரம்பித்தனர். நாச்சிமார் கோவிலடிப் பகுதி பலத்த தாக்குதலுக்கு இலக்கானது. வீடுகள் கூடத் தீக்கிரையாக்கப்பட்டன. கண்ணில் பட்ட அனைவரையும் பொலிஸார் தாக்கினர். வாகனங்கள் சேதமாக்கப்பட்டன. யாழ்ப்பாண நகரப் பகுதியிலிருந்த கடைகள் தீக்கிரையாக் கப்பட்டன. “ஈழநாடு” பத்திரிகை அலுவலகம் தாக்கப்பட்டு எரியூட்டப் பட்டது. யாழ்ப்பாணத் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினரான யோகேஸ் வரனின் வீடு தரைமட்டமாக் கப்பட்டது. அவரது உத்தியோகபூர்வ வாகனம் உட்பட அங்கிருந்த வாகனங்கள் நெருப்பிற்கு இரையாக்கப் பட்டன. இவற்றின் உச்சக் கட்டமாக யாழ்ப்பாண மாநகர பொது நூலகமும் முற்றாகக் கருகச் செய்யப் பட்டது. தென்கிழக்காசியாவின் மிகப் பெரும் நூலகம் தன் பொலிவை இழந்து சாம்பர் மேடாகியது.

(தொடர்ந்து வடியும்....)

இரகசியம் காத்தல் அவசியம் என்பதால் பெயர்கள், இடங்கள் யாவும் கற்பனையில்

# நெஞ்சினில் என்ன காயமோ...? 62

இந் நடவடிக்கைகள் சமூகத்தில் உள்ள மற்றவர்களின் உரிமையையும் செயல்களையும் பாதிப்பதாக அமையும். இக் காலப்பகுதியில் ஆண்கள் விலை மாதுகளுடன் தொடர்புகொள்ள முனைவதும் பெண்கள் வேண்டாத கர்ப்பம் தரிப்பதும் நிகழலாம்.

மிகை மகிழ்வு நோயின் தீவிரம் அதிகரித்துக் காணப்படும்பொழுது, பிறர் நம்பிக்கைகளுக்கு (Deliusions) இவர்கள் உட்படுகின்றனர். இவ்வாறு உட்படும் நோயாளிகள் தாங்கள் இறைவனால் அனுப்பப்பட்ட தூதுவர் எனவும் இறைவனின் மறுபிறப்பு எனவும் எண்ணத் தலைப்படுவதுடன், தங்களால் பல்வேறுபட்ட அசாதாரண சக்திகளைப் பிரயோகிக்க முடியும் எனவும் கூறுவார்கள். பணத்தைத் தண்ணீராகச் செலவிடும் இவர்கள், தேவையற்ற விதத்தில் மற்றவர்களுக்கு உதவவும், பாரிய சமூக சேவைகளில் ஈடுபடவும் முனைவார்கள். சில வேளைகளில் பிறர் நம்பிக்கைகள் சந்தேகத்தை அடிப்படையாகக் கொண்டதாக அமையலாம். தங்களது பலங்களைத் தெரிந்த இன்னொருவர் தன்னை அழிக்க முயல்வதாகக் கூறும் சந்தர்ப்பங்களும் ஏராளம். சமய சம்பந்தமான தரிசனங்கள் கிடைப்பது, குரல்கள் கேட்பது போன்ற மாப்புலன் உணர்வுகளும் (Hallucination) இவர்களில் ஏற்படுகிறது.

## உள மருத்துவம்

உடல் நோய்களால் பாதிக்கப்பட்டவர்களை விட உள நோயினால் பாதிக்கப்பட்டவர்களே அதிகமாக காணப்படும் இன்றைய காலகட்டத்தில், உள நலம், உளப் பாதிப்புகள், உள நோய்கள் பற்றி அறிந்துகொள்வதும் இவற்றுக்கான வைத்திய முறைகளை அறிமுகப்படுத்துவதும் அவசியமாகிறது. எனவே மேற்படி உள மருத்துவத்துறையில் அநுபவம் பெற்றவர்களும் நிபுணர்களுமான வைத்திய கலாநிதி திரு. த. கடம்பநாதன் (எம்.பி.பி.எஸ். எம்.டி உள மருத்துவம்) அவர்களும் உளவியலாளர் திரு. தி. சுவீந்திரன் பி.ஏ (உளவியல்) எம்.பில். உள மருத்துவம்) அவர்களும் இணைந்து தமது அநுபவங்களை பகிர்வர் என்பதை மகிழ்ச்சியுடன் தெரியப்படுத்திக் கொள்கின்றோம்.

### மிகைமகிழ்வு நோயாளிக்கு ஏற்படும் பாதிப்புகள் யாவை?

தன்னிலை உணராத இவர்கள், தங்கள் எண்ணங்கள் வழியே செயற்படுவதால் வேண்டாத பொருட் செலவு, முறை தவறிய கர்ப்பம், சில வேளைகளில் கைதுகள், விசாரணைக்கு உட்படும் நிலைமை ஏற்படுகிறது. ஒரு சிலரில் மது, போதை வஸ்துப் பாவனைகள் அதிகரிக்கும் நிலைமையினால் பிரச்சினைகள் பன்மடங்காகிறது.

### மிகைமகிழ்வு நோய் எவ்வளவு காலம் நீடிக்கும்?

சடுதியாகத் தோன்றும் மிகைமகிழ்வு நோய் 2 கிழமைக்கும் – 5 மாதங்களுக்கும் இடையில் நீடிக்க வல்லது. சராசரி காலமாக 4 மாதங்களைக் குறிப்பிடலாம்.

### மிகைமகிழ்வு நோய்க்கான சிகிச்சை முறைகள் யாவை?

இந் நோய்க்கு பிரதானமான சிகிச்சையாக அமைவது மருந்துகளேயாகும். மனோபாவத்தை நிலைப்படுத்தும் மருந்துகளும் பிறர் நம்பிக்கைகளைக் கட்டுப்படுத்தும் மருந்துகளும் அளிக்க வேண்டிவரும். சித்த மருந்துகள் காரணமாக மனம் தெளிவுறும்போது, தாங்கள் நடந்த விதத்தை எண்ணிக் கவலைப்படவும், வெட்கப்படவும் செய்வர். இப்படியான நிலையில் உளவளத்துணையும் மற்றும் ஆலோசனைகளும் பயன் மிக்கதாக அமையும்.

(தொடரும்)

# எது சந்தோஷம்?

*(சென்ற வாரத் தொடர்ச்சி)*

தன்னிடம் இல்லாததை நினைத்தே கஷ்டப்படும். வாளியில் உள்ள ஓட்டையை அடைத்துவிட்டால் ஒரு அளவு தண்ணீர் ஊற்றியதும் நிரம்பிவிடுவது போல், மனதில் இருக்கும் கரும் புள்ளிகளை (Blind Spots) அழித்துவிட்டால் மகிழ்ச்சி நிரம்பும். இது கிடைத்தால்தான் என் மனது சந்தோசப்படும் என்று மண்டைக்குள் சில விசயங்களை நம் மனது ஏற்றுக் கொள்கிறது.

அந்த இதுகள்தான் மனதில் கரும் புள்ளிகள்.

சில இளைஞர்கள் சந்தோசம் என்றால் அமெரிக்கா என்று அர்த்தம் பண்ணிக்கொள்வதையும் நாம் பார்க்கிறோம். அவர்களைப் பொறுத்தவரை அமெரிக்கா போக விசா கிடைத்தால் அதுதான் சந்தோஷம். அதாவது "விசா கிடைக்கும் வரை நான் சந்தோசப்படுவதை ஒத்திவைத்திருக்கிறேன்..." என்று அர்த்தம்! ஆம்... வருங்காலத்தில் நடக்கப்போகும் ஒரு விசயம் மட்டுமே சந்தோஷம் கொடுக்கப்போகிறது என்று சொல்லிக்கொண்டு, நிகழ்காலத்தில் கிடைக்கும் சந்தோசங்களை ஓட்டை வாளியைப் போல, இவர்கள் கீழே விட்டுவிடுகிறார்கள்!

இப்படிப்பட்ட பிளைண்ட் ஸ்பாட் மனமுடைய இளைஞர்களுக்கு அமெரிக்கா போக விசா கிடைத்தாலும் சந்தோசமாக இருக்க முடியாது. விசா கிடைத்த மறுகணமே, அமெரிக்காவில் வேலை கிடைத்தால்தான் என் மனசு சந்தோசப்படும் என்று ஏதாவது இன்னொரு காரணத்தைச் சொல்லி, இவர்களே தங்களின் சந்தோசங்களை மீண்டும் ஒத்திப் போட்டுவிடுவார்கள்.

சரி... அமெரிக்காவில் வேலையும் கிடைத்துவிட்டது. அப்போதாவது சந்தோசப்படுவார்களா? "கிரீன் கார்ட் கிடைக்கும் வரை சந்தோசம் இல்லை" என்பார்கள். அதுவும் கிடைத்துவிட்டால்... "அமெரிக்க வாழ்க்கையில் சந்தோசம் இல்லை. அப்பா, அம்மா, அக்கா, தங்கை, மாமா, உறவினர்கள், உற்றார்கள், நண்பர்கள் ஆகிய எல்லோரும் இருக்கும் இந்தியாவில்தான் சந்தோஷம் இருக்கிறது" என்று சொல்லி, மீண்டும் தங்களின் சந்தோசத்தை ஒத்திப்போட்டுவிடுவார்கள்.

இன்னும் சிலர் இருக்கிறார்கள். அவர்கள், சந்தோசம் என்பது கடைகளில் விற்பனையாகிறது என்ற கருத்து உடையவர்கள். ஆம்... அவர்களுக்கு சிகரெட், மது இதில்தான் சந்தோஷம். இவர்களைத் தன்னிடம் இல்லாததை நினைத்தே கஷ்டப்படும். வாளியில் உள்ள ஓட்டையை அடைத்துவிட்டால் ஒரு அளவு தண்ணீர் ஊற்றியதும் நிரம்பிவிடுவது போல், மனதில் இருக்கும்

(தொடரும்)

# முரசு குறுக்கெழுத்துப் போட்டி

**வாசக நெஞ்சங்களே! உங்கள் சிந்தனைக்குத் தீனி போடும் வினாக்கள் அடங்கிய இப் போட்டியிலே ஆர்வமுடன் பங்குகொண்டு பரிசுகளையும், பாராட்டுக்களையும் பெற வாழ்த்துகின்றோம்.**

## குறுக்கெழுத்துப் போட்டி 75

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | ■ |
| 5 | ■ | 6 | 7 | 8 |
| 9 | 10 | 11 | ■ | 12 |
| 13 | ■ | 14 | ■ | 15 |
| 16 | 17 | 18 | 19 | ■ |
| 20 | ■ | ■ | 21 | 22 |

### இடமிருந்து வலம்

1) அண்மையில் வெளிவந்த நடிகர் விஜய்யின் படம்.
6) பாவகை ஐந்தில் ஒன்று. (குழம்பியுள்ளது)
9) வாசனைத் திரவியங்களில் ஒன்று.
16) உலோபி.
21) அறிவிலி.

### மேலிருந்து கீழ்

1) சுக்கு, மிளகு, திப்பிலி.
3) பாரதிராஜா இயக்கிய ஒரு திரைப்படம் (குழம்பியுள்ளது)
4) குறிஞ்சியும் முல்லையும் கோடையால் மாறிய இடம். ஐவகை நிலங்களில் ஒன்று. (தலைகீழாக உள்ளது)
8) ஒரு உலோகம்
19) தலையைச் சொறியக் காரணமாக இருப்பதில் ஒன்று (தலைகீழாக உள்ளது).

குறுக்கெழுத்துப் போட்டி இல.73க்கான சரியான விடைகளை அனுப்பி 250 ரூபா பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி.

செ.ஜெ.நிரோஷன், கல்லூரி வீதி, வட்டுக்கோட்டை.

| பாராட்டுப் பெறும் 10 அதிர்ஷ்டசாலிகள். |
|---|
| வடிவேல் யோகசங்கர், 5.ஏறாவூர், செங்கலடி. |
| கா.பொ.இ.குலசிங்கம், 5ஏ வட்டாரம், நயினாதீவு. |
| கே.சாமினி, 54/6 கடல் காட்சி வீதி, திருகோணமலை. |
| ஏ.ஏ.ஜோர்ஜ், 7/13 ஹேனா வீதி, கல்கிஸை. |
| க.சின்னத்தம்பி, 84/10, பாரதி வீதி, திருகோணமலை. |
| சி.ராஜ்குமார், 50 வீட்டுத் திட்டம், சாந்தசோலை, வவுனியா. |
| ஸ்ரீ.குணாதீதன், 10, தாமரைக்கேணி, மட்டக்களப்பு. |
| ஏ.சீ.ஷர்மிலா, 7/1, நீர்கொழும்பு வீதி, ஒலியமுல்ல, வத்தளை. |
| எம்.பரமேஸ்வரி, நெலுவ த.வி., பண்டாரவளை. |
| எச்.சல்பியா, 30/2, கம்மெத வீதி, சரிக்கமுல்ல, பாணந்துரை. |

### குறுக்கெழுத்துப் போட்டி 73 விடைகள்

| | | | | |
|---|---|---|---|---|
| 1 வி | 2 ல் | 3 வி | 4 த் | 5 தை |
| 6 கா | ■ | 7 ம | ■ | 8 ய |
| 9 ர | 10 வீ | 11 ம் | ■ | 12 ல் |
| 13 மா | ■ | 14 ல் | 15 ப | ■ |
| 16 தே | 17 னி | ■ | 18 ணி | 19 ஏ |
| 20 வி | 21 ப | 22 த | ■ | 23 ர் |

### போட்டி விதிகள்:

இதற்குரிய விடையைக் கூப்பனில் நிரப்பி, அஞ்சலட்டையில் ஒட்டி 30.06.2004க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்புங்கள். அனுப்ப வேண்டிய முகவரி:

**குறுக்கெழுத்துப் போட்டி இல-75**
**தினமுரசு வாரமலர்,**
**த.பெ. இல - 1772,**
**கொழும்பு.**

தங்கள் சரியான முகவரியையும், காசுக் கட்டளையை மாற்றக்கூடிய அண்மித்த தபாலகத்தின் பெயரையும் குறிப்பிடுக.

**சரியான விடையை அனுப்புவோரில் முதல் அதிர்ஷ்டசாலிக்கு 250 ரூபா பரிசுண்டு. அடுத்த பத்து அதிர்ஷ்டசாலிகளின் பெயர்கள் தினமுரசில் பிரசுரமாகும்.**


# ராதா ரெக்ஸ்ரைல்ஸின்

## வண்ணச் சேலை பரிசுப் போட்டி

எல்லாவிதமான,ஆண்கள்,பெண்கள்,குழந்தைகள் என எல்லோருக்கும் பிடித்தமான ஆடை அணிகளின் அட்சயபாத்திரம். எல்லாத் தெரிவுகளும் ஓரே கூரையின் கீழ்.

**RATHAA TEXTILE**
377,379A,Galle Road,Wellawatta,Colombo-06.
(Opposite of Delmon Hospital) Tel:2364792

Branch:
No,33,37th Lane,
Colombo-06.
☎: 2364727

**மகளிர் மட்டும்** **மகளிர் மட்டும்**

49

பெயர்:- ..............................
முகவரி:- ..............................
..............................
தொழில்:- ..............................
கையொப்பம்:- ..............................



- ஒவ்வொரு வாரமும் ஒரு அதிர்ஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே வண்ணச் சேலை பரிசு வழங்கப்படும்.
- மேலேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது. (பதிவுத் தபால்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா)
- ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: **30-06-2004**

அனுப்ப வேண்டிய முகவரி:-
'ராதாவின் வாரம் ஒரு வண்ணச்சேலை'
தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772,
கொழும்பு.


## இந்த வாரம் யாருக்கு சேலை? 47
## சாவகச்சேரி வாசகிக்கு அதிர்ஷ்டம்!

**இவ்வாரம் சேலை பரிசுபெறும் வாசகி இவர்தான்** → **திருமதி யோகராஜா ஜெகதீஸ்வரி, சரசாலை தெற்கு, சாவகச்சேரி.**

பரிசு பெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக, வாசகியர் சார்பில் வாழ்த்துவோம். அடுத்த வாரம் யாருக்கு? ஒரு வாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா. இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசுபெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்ற பின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.

# அம்மாவின் இரக்கம்

**- நீ.பி. அருளானந்தம், கல்கிசை.**

என் அம்மா உடல் ஆரோக்கியம் உள்ளவர். அவர் நல்ல பொது அறிவும் படைத்தவர். அம்பாளைப் பார்த்தாற் போல தெய்வீக அழகும் உள்ளவர். இப்படியெல்லாம் சொல்ல முகத்தில் அப்படியொரு வாகு அவருக்கு. எல்லாவற்றுக்கும் மேலாக அவர் ஒரு நல்ல குணவதி. என் தாயைப் போன்ற குணவதியான வேறு ஒருவரை அருமையாகத்தான் எங்கேயாவது பார்க்க முடியும்.

ஒரு சிறு எறும்புக்கும் அடைக்கலங் குருவிக்கும் கூட என் அம்மா மனம் இரங்குவார். அம்மா அரிசி புடைத்தால் காணும், அந்தச் சத்தத்திற்கு அடைக்கலங் குருவிகள் ‘ஜிவ்’ வென்று பறந்து வந்து முற்றத்தடியில் நிறையும். அரிசிக் குறுணல்களை அம்மா சுளகிலிருந்து கொழித்துப் போட அவைகளும் தத்தித் தத்தி நின்று தீனி பொறுக்கும்.

அடைக்கலங் குருவி வந்து வீட்டு முகட்டில் கூடு கட்டினால் குடும்பம் செழிக்கும் என்று ஒரு சாத்திரம் அம்மா சொல்லுவார்.

அப்படி எங்கள் வீடுகளிலே அடைக்கலம் தேடும் அந்தக் குருவிகளை இம்சை பண்ணாது இரக்கம் காட்ட வேண்டும் என்றும் எனக்கெல்லாம் அந்த வயதில் அம்மா அறிவுரை சொல்லுவார்.

அதையெல்லாம் கேட்டுக்கொண்டு ‘திருதிரு’ வென்று விழித்துக்கொண்டு பூனை போல ஒன்றுமே தெரியாத மாதிரி அமசடக்காக நான் இருப்பேன்.

சுண்டு வில் இருக்கும் அந்த இடத்தை நோக்கி இவ்வேளை என் கவனமெல்லாம் வீச்சாகப் போய்ப் பதியும்.

கோடிப்புறத்துத் தோட்டத்து மரவள்ளித் தடியில் அது தொங்கிக்கொண்டிருப்பதை நினைத்து அப்போது என் மனசில் கலவரமும் எழும். யார் கண்ணிலும் படாது அங்கு நான் ஒழித்து வைத்திருக்கும் அந்தச் ‘சுண்டு வில்’ எப்போதும் காப்பாற்றப்பட வேண்டும் என்ற கவலையும் எனக்கு வரும்.

நான் ஒரு ‘சுண்டு வில்’ ‘விண்ணன்’ என்பது ஊரிலுள்ள பெடியன்களுக்கெல்லாம் நன்றாகத் தெரியும். பள்ளிக்கூடம் விட்ட பின்பு அந்த லீவு நாள்களிலெல்லாம் வீட்டாருக்குத் தெரியாமல் வேலிக்குள் மறைந்து பதுங்கித் திரிந்து, நான் சுண்டு வில்லால் குருவிகளுக்குச் சாக அடிப்பேன்.

வேலிகளில் உள்ள மரங்கள் கொடிகளிலே சின்னப் பறவைகளெல்லாம் சிறகடித்துப் பறந்து வந்து நிற்கும். ஆள் அரவம் காட்டாது ‘கொவ்வைக்’ கொடிகள் மூடியுள்ள மரத்துக்குக் கீழே மூச்சையும் அடக்கினாற் போல நின்றுகொண்டு சுண்டு வில்லின் கல்லை இழுத்து குருவிக்கு நான் அடிப்பேன். ‘சிளக்’ கென்ற ‘றபரின்’ சுருளல் சத்தத்தோடு ‘விர்’ ரென்று கல் விரைவாகச் சென்று குருவியைத் தாக்கும்.

அர்ச்சுனனின் குறி போல் என் குறியும் என்றுமே தப்பியதென்றில்லை. அப்படிக் குறி பார்த்து அடித்து விழுத்தும் வில்லாண்மைத் திறமையைக் கண்டு என் ஊர்ப் பெடியன்களுக்கெல்லாம் வியப்புத்தான்.

எத்தனை குருவிகளை இத்தனை நாளைக்குள் நான் சாக அடித்திருக்கிறேன் என்று குருவிகள் கல்லடி பட்டுக் கீழே விழும்போது நான் கணக்கெடுத்து வைத்துக்கொள்வேன். அதை ஒரு சாதனையாக இரவில் படுக்கும்போதும் நான் நினைத்துப் பார்ப்பேன்.

நித்திரையிலெல்லாம் குருவிக் கனவுகளே அதிகமாய் எனக்கு வரும். அந்தக் கனவுகளில் குருவிகளெல்லாம் சேர்ந்து என்னைத் துன்புறுத்துவது மாதிரிச்



சில சம்பவங்களும் அந்தக் காட்சியில் வரும்.

குருவிகளை அடிக்கப் போய் வேலிக் கரையில் நான் பதுங்கி நின்றால், அப்போது சின்னஞ்சிறு குருவிகள்தான் என் பார்வையில் அகப்படும்.

கொட்டைப் பாக்குச் சிட்டு, தேன் சிட்டு, கரிக்குருவி, கொண்ட லாத்தி, மாம்பழத்தி, கொக்குறுப்பான், வெடிவால் குருவி, தச்சன் குருவி, நிறைய மஞ்சள் கழுத்துக் கொண்ட தூக்கணாங் குருவிகள் என்று எல்லாம் வேலியிலுள்ள பூவரசு, முள்முருங்கை, கிளுவை, ஆமணக்கு, அலரி மரங்களில் வந்து வெயிலுக்குக் கொஞ்சம் இருந்து இளைப்பாறும். இந்த நேரம் அவைகளை நான் சுண்டு வில்லால் அடிக்கும்போது சிலவேளை கல் இலக்குத் தப்பி எகிறிப் போய் அடுத்த வீட்டுக் கூரையின் மேலும் தவறுதலாய் விழுந்துவிடும்.

“அங்காற்றா கெற்றப்போல் வைச்சு அடிக்கிறது?.... ஓடுங்கடாங்காலை... அடிக்கிறவரை உண்ணாணக் கண்ணால நான் கண்டனெண்டா அவற்ரை கையை முழுக்க முறிச்சு அடுப்புக்க நான் வைச்சிடுவேன்!”

ஓ...!! அது பெரிதான ஒரு மிரட்டல் சத்தம்தான்!

அடுத்த வீட்டு அன்னம் ஆச்சியின் ஏச்சு அண்டங் காக்கையின் கத்தல் போலத்தான் இருக்கிறது. அவருக்குத் தோதாய், உடனே வீட்டுக்குள்ளாலிருந்து வெளியே முற்றத்தடிக்கு வந்து என் அம்மாவும் ஒருமுறை;

“ஆர் எவர் இங்கின வந்து நிண்டுகொண்டு உது வழிய குருவியடிக்கிறவர்... எந்தப் பெடி, அந்தப் பெடியெண்டு நானும் ஒருக்காக் கண்டுபிடிச்சனெண்டா பிறகுதான் இருக்கு எல்லாம் அவருக்குக் கண்டியோ... கறும இழவுகளை ஏன்தான் உந்தப் பெடியள் செய்துகொண்டு திரியிதுகளோ எனக்கெண்டாத் தெரியேல்லல... இந்தப் பாவத்தையெல்லாம் ஏன் உதுகள் செய்யிதுகள்...?”

எனக்கு அம்மா ஏசுவதைக் கேட்க “பக்பக்” கென்று நெஞ்சடிக்கும். உடனே கையிலுள்ள சுண்டு வில்லை சுறுக்காக பூவரசு மரப் பொந்திற்குள் போட்டுவிட்டு வேலியருகாலே நடந்து வந்து ஒன்றுமே தெரியாத நல்ல பிள்ளை மாதிரி நான், வளவின் நடை வாசற்படியில் போய் உட்கார்ந்துவிடுவேன்.

எங்கள் வீட்டுக்கு வெளியே மேற்குப் பக்கமாகச் செல்லும் வீதி வழியாகச் சென்றால் காட்டுப் பக்கமாக இருக்கும் காளி என்ற பெயருடைய கிழவியின் ஓலைக் குடிசை வரும். அதைத் தாண்டி வரும் வயிரவர் கோயிலைக் கடந்து சிறிது தூரம் அந்தப் பாதை வழியே நடந்தால் ‘பளபள’வென்று தளிர்த்த இரண்டு பெரிய ஆலமரங்களும் ஒரு கூழா மரமும் நிற்கின்ற அந்த இடம் வரும்.

மனிதச் சந்தடிகளற்ற அந்த இடத்திலேதான் பெரும் பறவைகள் கிளையாகப் பறந்து வந்து அந்த மரங்களில் தங்கும். பட்சிகள் அலை அலையாகப் பாடிக்கொண்டிருக்கும் அந்த மரங்களில், பழம் தின்னும் குருவிகளை வேட்டையாட நானும் என் நண்பர்களும் அங்கே படையெடுத்தாற் போல சில நாளிற் போவோம்.

ஆலம் பழத்தை முழுதாய் விழுங்கிவிடும் அண்டங் காக்கை முதல் கிளி, குயில், தவிட்டுப் புறா, காட்டுப் புறா, வெடிவால் ருருவி இன்னும் எத்தனையோ பறவைகள் ஜாதியெல்லாம் வர்ணம், வர்ணமாக எங்களுக்குத் தெரிய கிளைகளில் இருந்துகொண்டு பழம் தின்னும். சில குருவிகள் ஒன்றை ஒன்று துரத்திக்கொண்டு கிளைக்குக் கிளை தாவி விளையாடிக்கொண்டிருக்கும். அவைகளைப் பார்த்து நாங்கள் சுண்டு வில்லால் அடிக்கும்போது விசிறி போன்ற இறக்கையை விரித்தபடி அடிபட்ட குருவிகள் மரத்திலிருந்து கீழே பொத்தென்று நிலத்தில் விழும்.

## இவ்வார சிறு கதைகள்

இப்படியெல்லாம் பறவைகளை வருத்தி வதைத்துக் கொல்லும் தீயதொரு விளையாட்டுத் தனத்திலிருந்து எப்படி நான் பிறகு விடுபட்டேன்? என்று இப்போது நினைக்க எனக்கே ஆச்சரியமாயிருக்கிறது.

அம்மாவின் முன்மாதிரியான செயல்களைக் கண்டுகொண்டதால்தான் அந்த வயதில் நான் திருந்தினேன் என்று நிச்சயமாக என்னால் இப்போது சொல்ல முடியும்.

அப்படி நான் மனம் மாறியதுக்குக் காரணமாய் அம்மா செய்த ஒரு காரியம் என் மனத்தில் ஆழப் பதிந்தது. அந்தச் சம்பவம் ஒன்றே பிறகு நான் திருந்துவதற்கு வழிகோலியது.

எங்கள் வீடு விசாலமானதொரு கல் வீடு. அந்த வீட்டுக்கு முன்னாலே இடப் பக்கமாக ஒரு மால் - எங்கள் வயல்களிலிருந்து அறுப்புக்கு அறுப்பு வரும் நெல் மூடைகளை அடுக்கி வைப்பதற்கென்றுதான் அது கட்டிவிடப்பட்டிருந்தது. கிடுகோலையால் கூரை வேய்ந்திருந்த அந்த மாலில், வெயில் காலம் போகுமட்டும் குளிர்ச்சிக்காக அவ்விடத்தில்தான் நாங்கள் போய் பகலைக்கெல்லாம் இருந்து கொண்டு நேரத்தைக் கழிப்போம். அந்தக் கீற்றுக் கொட்டகை, வெயிலுக்கு எங்களுக்கு இதமாக இருக்கும். அதற்குள்ளே சில காலங்களில் அடைக்கலங் குருவிகள் வந்து கூடுகளைக் கட்டிக்கொண்டிருக்கும்.

சோடி சோடியாக அவைகள் பறந்து வந்து மாலிலுள்ள முகடுகளில் கூடுகளைக் கட்டி முட்டையிட்டுக் குஞ்சு பொரித்து - அவைகள் வளர்ந்த பிற்பாடுதான், கூட்டிக்கொண்டு பறந்து போகும்.

எப்போதும் என் அம்மாவுக்குத் தன் வேலையோடு அந்தக் குருவிகளிலேயும் கவனம் இருந்து வந்தது.

அதன் நலனிலே அவர் அக்கறை கொண்டுள்ளார் என்பதை நாங்கள் கண்டு கொள்ள ஒரு சந்தர்ப்பமும் எங்களுக்குக் கிடைத்தது. அந்த முறை சித்திரைக் குழப்பத்தில் இரைந்து கொட்டும் சோனா வாரி மழை பெய்தது. காற்றும் பேயென அடித்துச் சீறியது. அந்தக் காற்றைத் தாங்க முடியாமல் மாலில் வேய்ந்திருந்த கிடுகோலைகளின் கட்டுக்களும் நெகிழ்ந்தன. கிடுகோலைகளை மேலும் கீழுமாக அடித்துச் சிதைத்து ஓட்டை போட்டதாய் ஆக்கிவிட்ட பின்புதான் காற்றும் அமர்ந்தது.

நெல் மூடைகளெல்லாம் அப்போது பெய்த மழைத் தண்ணீர் ஒழுக்குப் பட்டு நனைந்து கெட்டன. அதனால் மூடையிலுள்ள நெல் புழுங்கிய வாசனை அடித்தது.

அடுத்த நாள் புதிதாக கிடுகோலைக் கட்டுக்களை வாங்கி அந்தக் கொட்டிலை கூலியாட்களைப் போட்டு வேய வேண்டும் - என்று என் தந்தை அவசரப்பட்டார்.

நெல்லெல்லாம் மழைத் தண்ணீரில் ஊறி சாக்குடன் கிடந்து முழுவதும் கெட்டுத் தொலையப் போகின்றதேயென்று அவருக்குக் கவலை.

நெல்லைக் காயப்போட்டு எடுக்க வசதியான களமும் இல்லை - படங்களும் ஈரம் இதோடு இன்னும் வந்து மழை பிடித்தால் மீந்து போய் உள்ள நெல்லெல்லாம் நனைந்து முளை கட்டிவிடுமே? என்று மனம் துடிக்கின்ற நிலைமையிலும் அவர் இருந்தார். அம்மாவுக்கும் அப்பாவைப் போல் அதிலே அக்கறை உண்டுதான்! என்றாலும், அதற்கும் மேலாக அந்த மாலுக்குள் கூடு கட்டியிருக்கும் அடைக்கலங் குருவிகளிடத்தேதான் அவருக்கு மிகவும் அக்கறை எழுந்தது.

“பாவம் அந்தக் குருவியள்! இப்ப நாங்கள் கூரை மேச்சலுக்கெண்டு கிடுகைப் பிரிச்சுப் போட்டால் அதுகளின்ர கூடுகளும் சிதைஞ்சு குஞ்சுகளும் நிலத்தில் விழுந்து செத்துப்போகும்... இதையெல்லாம் காபாந்து பண்ணி வருகிற மேய்ச்சல்காரர் அக்கறையா வேலை செய்ய மாட்டினம்... அதால, இப்பத்தைக்கு கூரை மேய்ச்சலைக் கொஞ்ச நாளைக்கு நாங்க தள்ளிப்போடுவம்... அந்தக் குருவியள் தங்கடை குஞ்சுகளெல்லாம் வளர கூட்டிக்கொண்டு பறந்தாப் பிறகு... பேந்து உந்த மேய்ச்சல் வேலையைப் பார்ப்பம்... அது மட்டும் உந்த நெல்லு மூடைகளையெல்லாம் தூக்கிக் கொண்டோய் எங்கடை தாயறைக்கை அடுக்கிவிடுங்கோப்பா... எங்களுக்கென்ன, இரவில படுக்கைக்கு வெளி விறாந்தையை வடிவாக் கூட்டிப்போட்டு அதில பாய்களைப் போட்டுக்கொண்டு படுக்கலாந்தானே?”

அம்மா, அந்தக் குருவிகளுக்குப் பரிந்துகொண்டு அப்பாவிடம் இப்படிச் சொன்னார். அப்பாவுக்கு அம்மாவின் சொல்லே வேதம்.

அம்மாவின் சொல்லை மறுக்காமல் ஏற்றுக்கொண்டு அவருடைய விருப்பத்தின்படியே எல்லாவற்றையும் அப்பா செய்து முடித்தார்.

இந்த நிகழ்வு என் மனசுக்குள்ளே பெரியதொரு தாக்கத்தை ஏற்படுத்திவிட்டது. இந்தக் குருவிக் கூட்டத்திற்காக, என் அம்மா வீட்டிலுள்ள தானிய மூடைகளைக் கூட இழப்பதற்குத் தயாராய் இருக்கின்றாரே என்று எனக்கு மிகவும் ஆச்சரியமாக இருந்தது. ஒரு வருடம் முழுக்க வயலில் இருந்து வரும் அந்த நெல்லைக் கொண்டுதான் அதை அரிசியாக்கி நாங்கள் சோறு சமைப்போம். அப்படியான அந்த நெல்லை விட அந்தக் குருவிகளை என் அம்மா பெரிதாக மதிக்கின்றாரே? - என்கிறதாய் நினைக்கையில், அந்தக் குருவிகளுக்கெல்லாம் நான் செய்து வந்த வதைகள் நினைவில் வந்து அந்தக் குற்ற உணர்ச்சிகள் என் நெஞ்சில் நெருஞ்சி முட்களாய் உறுத்தின. அந்த உறுத்தலின் வேதனையோடு போய் நான் உடனே, அந்த மரப் பொந்தில் ஒளித்து வைத்திருந்த சுண்டு வில்லை வெளியில் எடுத்தேன். அதை உடனடியாக எரித்துப் பொசுக்கிவிட வேண்டுமென்று எனக்கு ஆவேசம் வந்தது. அதற்காக கீழே நிலத்தில் பரவிக் கிடந்த பூவரசம் இலைச் சருகுகளைக் கூட்டிக் குவியலாக்கினேன். பிறகு காய்ந்த சுள்ளிகளையும் அதில் பொறுக்கிப் போட்டு அதற்குத் தீ வைத்தேன். இத்தனை நாள் என் கையில் கொண்டு திரிந்த அந்தக் கொலைக் கருவியை அத் தீயினில் எறிந்தேன். சுண்டு வில் ‘தீ’க்குள் விழ தீக் கங்குகள் செவ்வொழிக் கண்கள் காட்டிப் பிரகாசித்தன. ‘றப்பர்’ நாற்றக் கலவையை வெளி விட்டுக்கொண்டு அந்தச் சுண்டு வில் எரிந்து அதிலே சாம்பரானது. அந்தச் சாம்பரை என் கண்ணால் கண்ட பின்புதான் ஈரச் சாக்கு மாதிரிக் கனத்துப் போன என் மனசு சாந்தியாகி நிம்மதியைப் பெற்றது.

---

# இன்னொருவனுக்காக......

மாதக் கடைசி. வேலைகள் குவிந்து கிடக்க மாதவன் தன்னை மறந்திருந்தான். மேசையிலிருக்கும் தொலைபேசி சிணுங்கல் வேலைகளைத் தடைப்படுத்தும் என்பதால் உதவியாளர்களிடம் எடுக்கும்படி கூறிவிட்டு மீண்டும் வேலைகளுக்குள் மூழ்கிவிட்டான்.

“ஹலோ ஆமா சொல்லுங்கோ.”

“அப்பிடியா? கொஞ்சம் இருங்க” என்றவன் திரும்பி,

“சார்! உங்களுக்குத்தான்” என்று ரிசீவரை நீட்டவும் மாதவனின் காதருகே ரிசீவர் சாய்ந்துகொண்டது. ஒரு விநாடி கூடக் கழிந்திருக்காது. துள்ளிக் குதித்து எழுந்த மாதவன் அவசர அவசரமாக வேலைகளை ஒழுங்குபடுத்திப் புறப்படத் தயாரானான்.

“என்ன சார் ஏதாவது விசேசமா?”

“ஓ! நான் போய்ட்டு ஓடி வாறன்.”

அலுவலகத்தை விட்டு வெளியில் இறங்கி மோட்டார் சைக்கிளை ஸ்ராட் செய்து மருத்துவமனையை நோக்கி விரட்டினான். கவிதாவை மருத்துவமனையில் சேர்த்திருப்பதாக வந்த தகவல் மாதவனுக்கு அதிர்ச்சியாக இருந்தது. கல்லூரி நாட்களில் கவிதாவின் நட்பு பின்னர் காதலாகி இரு வீட்டாருக்கும் தெரியவர எல்லா வீடுகளிலும் போன்று ஏட்டிக்குப் போட்டியான முரண்பாடுகள். அதிலும் கவிதாவை வெளி நாட்டு மாப்பிள்ளை ஒருவருக்குக் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று கவிதாவின் அப்பா தீவிரமாக இருந்தார். கவிதாவின் பிடிவாதத்தால் அவள் எடுத்த முடிவை எவராலும் மாற்ற முடியாமல் போயிற்று. திருமணமாகி மூன்று வருடங்கள் ஆயிற்று. இதுவரையும் இரு வீட்டிலிருந்தும் எவரும் எட்டிப் பார்க்கவே இல்லை. ஆனாலும் மாதவன் சமூகத்தின் அழுத்தங்கள்



**- திருமலை தாமரை மகன் -**

எல்லாவற்றையும் ஓரளவுக்குக் கிரகிக்கக் கூடியவன் என்பதால் கவிதாவிற்கு மனது நோகாதபடி அவன் வாழ்க்கைச் சக்கரம் சுழன்றது. என்னதான் சந்தோசம் நிறைந்திருந்த போதும், முதற் குழந்தை இல்லாமல் போனது இருவருக்குமே பெருத்த வாழ்நாள் துன்பமாயிற்று. உறவுகளைப் பிரிந்து ஒருவருக்கொருவர் உறவுகளாய் வாழ்க்கையைப் பகிர்ந்து கொண்டும் புதிய உறவும் ஏமாற்றிப் போனது இருவருக்கும் ஏமாற்றம்தான். ஒருவர் கவலைப்படுவதும் மற்றவர் தேற்றிக் கொள்வதும் கடந்த ஒரு வருடமாகப் பழகிப்போன விடயம். இப்போது கவிதா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருப்பது அவளது இரண்டாவது பிரசவத்திற்காக. முதற்குழந்தை தவறிப்போன அநுபவத்தால் இரண்டாம் முறை மிகக் கவனமாகவே கவிதாவைப் பார்த்துக்கொண்டான். மருத்துவமனை வளாகத்துக்குள் மோட்டார் சைக்கிள் உட்புகுந்ததுமே அவன் மனதைப் போல மருத்துவ மனை சூழலும் பரபரப்பாகவே இருந்தது. பிரசவ விடுதிக் கட்டிலில் கவிதா முகட்டைப் பார்த்தபடி தன்னை மறந்திருந்தாள். அருகில் சென்ற மாதவன் அவளது நெற்றியில் தன் அன்பை வெளிப்படுத்திய ஆதங்கம் அவளுக்குப் புரிந்தது. அருகில் இருந்த தொட்டிலை நெருங்கிய மாதவனுக்கு விவரிக்க முடியாத ஆனந்தம் பெருக் கெடுத்தது. இரட்டைக் குழந்தைகள் அவனுக்குள்ளாகவே பலவாறும் எண்ணிக் கொண்டான். அநாதைகளாக இதுவரை இருந்துவிட்ட காலங்கள் இருண்டயுகம் எனவும் இனிவரும் காலம் இனிய காலங்கள் எனவும் அவன் மனது கவிதாவின் காது களில் முணுமுணுத்தது. கவிதாவுக்கு அரு கில் அமர்ந்து மிக நெருக்கமாக அவள் முகத்தைப் பார்த்துக்கொண்டு இருந்தவனை கவிதா இடைநிறுத்தினாள். வாசலில் தமது பெற்றோர் வந்து நிற்பதை அவள் பார்வை அவனுக்குக் காட்டியது. கவிதாவின் பெற்றோருக்கும் மாதவனின் பெற்றோருக்கும் வார்த்தைகள் மௌனித்துப் போக கண்கள் உத்தரவுகளுக்காகக் காத்திருப்பதை உணர்த்தின. தம் மீது அவர்களுக்கு ஏற்பட்ட கோபத்தில் நியாயம் இருப்பதை எப்போதோ இருவரும் புரிந்துகொண்டதால் அதற்காக இருவரும் இப்போது அழ வேண்டும் போல் உதடு நடுங்கியது. வரவேற்புகளுக்காக அன்பு காத்திருப்பதில்லை என்பதை உறவுகள் நெருங்கி குழந்தைகளையும் இவர்களையும் அள்ளித் தழுவியதை உணர்த்தியது. ஒவ்வொரு தவறும் திருத்திக்கொள்ளக் கூடியதே என்பதையும் ஒவ்வொரு இழப்பும் மீளப் பெற்றுக்கொள்ளக் கூடியதே என்பதையும் சூழல் புலப்படுத்தியது.

படித்துச் சுவைத்தவற்றில் சிலவற்றை உங்கள் சிந்தனைக்காக முன்வைக்கிறோம். உங்கள் அநுபவத்தையும் எம்முடன் பகிர்ந்துகொள்ளுங்கள்.

## சிந்தித்துப் பார்க்க...

### பேரின்பமான நாளுக்கான சிந்தனைகள்

* திருப்தியும் பேரின்பமும் ஒன்றோடு ஒன்று கைகோர்த்துச் செல்லும். இக் குணங்களால் நீங்கள் மற்றவர்களால் வசீகரிக்கப்படுவீர்கள்.

* ஒவ்வொரு அடியும் இறைவனின் ஞாபகத்தில் எடுத்து வைத்தால், ஒவ்வொரு கணமும் எவ்வளவு அதிர்ஷ்டமானது என்று கற்பனை செய்து பாருங்கள்.

* சில தவறுகளினால் நேற்றைய நாளை ஆழ்ந்த துக்கத்தில் இழந்தீர்கள் எனில், அதை உங்கள் ஞாபகத்தில் வைத்திருப்பதன் மூலம் இன்றைய நாளையும் இழந்துவிடாதீர்கள்.

* முகத்திற்கு அழகு இன்முகம். உட்கோபம் உடையவர் உண்மையிலே அழகற்றவர்.

* வாழ்க்கை ஒரு நாடகமாகும். இந்தக் கருப்பொருளைப் புரிந்துகொண்டால் பெரும் மகிழ்ச்சி இருக்கும்.

* நல்ல முயற்சிகளை மேற்கொள்வதில் கூடியளவு சந்தோசத்தை அநுபவம் செய்தால், அந்த முயற்சிகள் பலன் தரும்போது மகிழ்ச்சி மேலும் அதிகமாகும்.

* சிரிக்கும்போது நீங்கள் சந்தோசம் அடைவது மட்டும் அல்ல, மற்றவர்கள் வாழ்க்கையிலும் ஒளிக்கீற்றினைக் கொண்டுவருகிறீர்கள்.

* எல்லாச் சந்தர்ப்பத்திலும் சமநிலையுடன் இருப்பதுதான் மகிழ்ச்சிக்குத் திறவுகோலாகும்.

* பலர் உங்களுடன் சச்சரவிடவும் சண்டை பிடிக்கவும் விரும்புவார்கள். புன்னகையும் அன்பான மனப்பாங்குமே உங்களுக்குத் தேவையான ஆயுதங்கள் என்பதை உணர்ந்துகொள்ளுங்கள்.

* சில வேளைகளில் புன்னகையானது பாலைவனத்தில் ஒரு துளி நீரைப் போன்றதாகின்றது.

**“இன்றைய நாளுக்கான நல்ல எண்ணங்கள்” என்ற நூலிலிருந்து....**

## இலக்கிய நயம்

## “கனிகளைத் தாங்கி நிற்கும் இளங்கொடி போல நின்றாள்”

“என்னடி பேசினாயா?” ஆரண்யாவின் தோளை உலுக்கிக் கேட்டாள் நயனா.

சங்கிலியின் பதக்கத்தை உதடுகளால் அழுத்தியவாறே,

‘இல்லை’ என்பதாகத் தலையை அசைத்தாள் ஆரண்யா.

“என்ன சொல்கிறாய்?” என்று அவள் கண்களை ஊடுருவினாள் நயனா.

“பேசாமல் பார்த்துக்கொண்டே நிற்கிறவனிடம் நான் என்ன பேசுவது?” பதக்கத்தைத் துப்பி உதட்டைச் சுளித்துக்கொண்டே சொன்னாள் ஆரண்யா.

“சும்மா பார்த்துக்கொண்டு நின்றுவிட்டு வரவா, இவ்வளவு கஷ்டப்பட்டு உங்கள் சந்திப்புக்கு ஏற்பாடு செய்தேன்...?”

“நான் என்ன செய்கிறது? ஒன்றும் பேசாமல் என்ன முறைத்துப் பார்த்துக்கொண்டே நிற்கிறான். அப்பிடி வைத்த கண் வாங்காமல் என்னமோ விழுங்குவதைப் போலப் பார்த்துக்கொண்டு நின்றால் மற்றவர்கள் என்ன நினைப்பார்கள் என்ற வெட்கம் கூட இல்லாமல்... நான் வந்துவிட்டேன்!”

“எதுவுமே பேசவில்லையா?”

“அதுதான் முறைத்து முறைத்துப் பார்த்துக்கொண்டுதான் நின்றான் என்கிறேனே... பிறகென்ன பேசினானா, பேசினானா என்று என்னைப் பிடுங்குகிறாய்? நான்தான் பேசிப் பார்த்தேன். அதற்குக் கூட அவன் பதில் சொல்லவில்லை?”

“நீ என்னடி பேசினாய்?”

“என்னை ஒன்றும் எரித்துவிட முயற்சி செய்ய வேண்டாம் என்று சொல்லிப் பார்த்தேன்!”

“கேலியை விட்டுவிட்டுச் சொல்!”

“அப்படியேதான் சொன்னேன். இப்படி நாலு பேர் வரும் இடத்தில் என்னைப் பார்வையால் எரிக்கவோ விழுங்கவோ செய்துகொண்டு நின்றால் பார்க்கிறவர்கள் என்ன நினைப்பார்கள்! நாளைக்கு ஊருக்குள் தலைகாட்ட முடியாது. பயலே, ஓடிப் போய்விடு என்று விரட்டிவிட்டு வந்துவிட்டேன்...!” என்று சிரித்தாள் ஆரண்யா.

“ஏய், கதை விடாதே! என்னமோ எல்லாம் பேசி முடித்துவிட்டீர்கள் போலிருக்கிறது... என்னையா ஏமாற்றப் பார்க்கிறாய்?” என்று அவள் கன்னத்தைக் கிள்ளி முகத்தைத் தள்ளினாள் நயனா.

**தருவது**

**முழடில்யன்**

“நம்பாதுவிட்டால் போ”

“அடீ கள்ளி! உன் வெட்கத்தைப் பார்த்தாலே தெரிகிறது. அவனுக்கு நீ ஓமென்று தலையாட்டிவிட்டாய்... அப்படித்தானே?”

“ச்சீ.... பார்வையாலேயே கெஞ்சிக்கொண்டு நிற்பதைத் தவிர வேறெதுவும் செய்யத் துணிவில்லாதவன், என்னிடமென்ன கேட்பது?... நானென்ன சொல்வது?... ஒழுங்காய் ஊர் போய்ச் சேர் என்று அனுப்பிவிட்டு வருகிறேன்...”

“ஏய்! மாய்மாலக்காரி! அவன் கேட்டதற்கு நீ உடன்படவில்லை என்று என்னைத் தொட்டுச் சத்தியம் செய்” என்றவாறே அவள் கையைப் பிடித்தாள் நயனா.

கையை உதறிக்கொண்ட ஆரண்யா, நடந்ததை நினைத்துப் பார்த்துக்கொண்டாள். காந்தனை ஏறிட்டுப் பார்க்கத் தைரியமின்றி, சங்கிலிப் பதக்கத்தை உதடுகளிடையே வைத்து அழுத்தியவாறு நிலத்தைக் கீறும் தன் கால் விரல்களின் மீது பார்வையைச் சாய்த்து நின்றிருந்தாள் ஆரண்யா.

வெகு சமீபத்தில் அவளைப் பார்த்து



நிற்பதையும் தன் அழைப்புக்கிணங்கி அவள் வந்திருப்பதையும் நம்ப முடியாதவனாக விரிந்த விழிகளால் அவள் அழகை அள்ளி அலமலந்து நின்றிருந்தான் காந்தன்.

அவள் நின்றிருந்த முறையால் வெளிப்பட்ட அழகிடங்களும் மறைந்திருந்த எழுச்சிகளும் அவளது அங்கங்களின் இணையற்ற கவர்ச்சிக்கும் செழுமைக்கும் அத்தாட்சிகளாக நின்றன.

சுமக்க முடியாத கனிகளைத் தாங்கி நிற்கும் இளங்கொடி போல வளைந்து நெளிந்து பேரெழிலுடன் நின்றவளைப் பார்த்துத் தடுமாறிய காந்தன், “உன் சம்மதத்தைத் தெரிந்துகொள்ளவே, தோழியிடம் கேட்டேன்... வந்ததுக்கு நன்றி” என்றான். தனக்கே அந்நியமாக ஒலித்த ஒரு குரலில்.

அவன் தயக்கமும் தடுமாற்றமும் அவளுக்கு உள்ளூர உவகையளித்தன. உள்ளே கும்மாளமிட்ட உணர்ச்சிகளை முகத்தில் காட்டிக்கொள்ளாது, வெட்கத்தால் தாழ்ந்திருந்த விழிகளைச் சற்றே மேலுயர்த்தி அவன் விழிகளைக் கலந்தாள்.

அந்த விழிகளில் ஆசை பொங்கி வழிந்ததைக் காந்தன் கண்டான். துணிவு கொண்டவனாய் எட்டி அவள் கையைப் பிடித்தான். அனிச்சைச் செயலாகக் கையை இழுத்துக்கொண்டாள் ஆரண்யா.

அவன் பதறிப் போய் அவளைப் பார்த்தாள். அவள் அச்சப்பட்டுக் கையை இழுத்துக் கொண்டது அவனைச் சங்கடப்படுத்தியது. ஏதோ செய்யக் கூடாத குற்றத்தைச் செய்துவிட்டவன் போல மனதில் விவரிக்க இயலாத கூச்சத்துடனும் வருத்தத்துடனும் அப்படியும் இப்படியுமாக அசைந்தான்.

ஆரண்யாவுக்கும் தன்னையறியாமல் தான் செய்துவிட்ட காரியம் சங்கடத்தையளித்தது. அப்படி வெடுக்கென்று கையை உதறியிருக்கக் கூடாது. அவனைக் குற்றவாளி என்பது போல் காட்டிவிட்டோமோ என்று கிலேசமடைந்தாள்.

‘இந்தா, கையை மறுபடி பிடித்துக்கொள்ளேன்!’ என்று மனதுக்குள் வேண்டினாள். கையை நீட்டத் தைரியமில்லாமலும் மிதமிஞ்சிய நாணத்தால் என்ன செய்வது என்று விளங்காமலும் சேலையைச் சரிப்படுத்திக்கொண்டு அவனெதிரில் நின்றாள்.

“என்னை மன்னித்துக்கொள் ஆரண்யா!”

“எதுக்கு?” குரல் உணர்ச்சியால் பலவீனப்பட்டுக் கிடந்ததால் வெளியே வரவில்லை.

நீண்ட மௌனத்தைத் தாங்கிக் கொள்ள மாட்டாமல்,

“வந்ததுக்கு நன்றி” என்றான் மீண்டும் அடிக் கிணற்றுக் குரலில்.

ஆவலும் தாபமும் நிரம்பிய விழிகளை உயர்த்தி அவனை ஒரு கணம் ஏறிட்டாள் ஆரண்யா.

அவனது சங்கட முகம் பரிதாபத்தை ஏற்படுத்தியது. இதமான புன்முறுவல் செய்து, “நாளைக்கு வருகிறேன்” என இரகசியக் குரலில் சொல்லிவிட்டுத் திரும்பி ஓடி வந்தாள்.

ஆரண்யா, திடீரென்று மௌனமாகி விட்டதைக் கண்டு அவளை உலுக்கிய நயனா, “கள்ளீ! நீ நிலத்தைக் கால் விரலால் கீறிக்கொண்டு அவனிடம் குழைந்து நின்றதை நான் பார்த்தேன். இப்போதும் அவனைப் பார்க்கத்தானே உன் மனம் விரும்புகிறது. தனியே *அவனுடன் இருக்க வேண்டும். அவ்வளவுதானே? நான் குறுக்கே நிற்கமாட்டேன். போய் அவனுடன் குலாவு” என்று சொல்லியபடியே அவளைத் தனியே விட்டுப் போனாள் நயனா.

***இன்னும் கடம்பூண்டு ஒருகால்***
***நீ வந்தை உடம்பட்டாள்***
***என்னாமை என் மெய்தொடு,***
***இஃதோ அடங்கக் கேள்;***
***நின்னொடு சூழுங்கால் நீயும்***
***நிலங்கிளையா என்னொடு***
***நிற்றல் எளிதன்றோ மற்று அவன்***
***தன்னொடு நின்று விடு.***
***(கலித்தொகை : 27 : 12-17)***

✉ **சிந்தியா, எனக்கு இன்னும் திருமணமாகவில்லை. தேவதை மாதிரி ஒரு பெண் கிடைக்க என்ன செய்ய வேண்டும்?**
-இ.முகுந்தராஜா, மட்டக்களப்பு.

"என் மனைவி ஒரு தேவதை" என்று ஒருவன் தன் நண்பனிடம் சொன்னான்.

"நீ கொடுத்து வைத்தவன். என் மனைவி இன்னும் உயிரோடிருக்கிறாள்!" என்றான் நண்பன்.

✉ **வானில் ஓடும் மேகங்களைப் பார்த்தபடி, மணலில் மல்லாக்காகப் படுத்திருந்த அநுபவம் உண்டா? அப்போது என்ன ஞாபகங்கள் வரும்?**
-ஏ.ஸ்ரனிஸ்லோஸ், மன்னார்.

ஞாபகம் என்றால்....மேகங்களை, வானில் பறக்கும் நதி என்று யாரோ ஒரு கவிஞன் சொன்ன வரிகள் வரும். "வானம் எனக்கொரு போதிமரம்" என்று வைரமுத்து சொன்னதையும் நிரூபிப்பது போல எண்ணங்கள் கிளைத்துப் படர்ந்து என்னையும் விண்ணுக்கு இழுத்துவிடும். ஓடும் மேகங்கள் இணைந்தும் பிரிந்தும் உருவங்கள் செய்து கலைத்து விளையாடுவதைப் பார்த்துக் கொண்டிருந்தால், நம் மன நெருக்கடிக ளெல்லாம் உதிர்ந்து விழும் அநுபவம்தான் பெரிய சுகம்! இப்போ, கொழும்புக்கு வந்த பிறகு விண்ணாவது மண்ணாவது....!

✉ **இன்று திருமணமான பெண்கள் கூட அரைகுறை ஆடை அணிகிறார்களே?**
-ஆர்.கோபிநாத், கம்பளை.

காற்றோட்டமும் கவர்ச்சியும் கல்யாண மாகாதவர்களுக்குத்தான் வேண்டும் என்கிறீர்களா!

## சிந்தியா
பதில்கள்

✉ **நீங்கள் எரிச்சலடைவது எப்போது?**
-எ.்ப். பாத்திமா, கல்முனை.

காலையில் எழுந்து கண்ணாடி பார்க்கும்போது!

✉ **நம் போராளிகள் விடும் தவறுகளை நாமே எடுத்துச் சொல்லிக்கொண்டிருந்தால், அது பேரினவாதிகளின் வாய்க்கு அவல் கொடுத்தது போல் ஆகிவிடாதா?**
-எஸ்.ஆர்.ராஜேந்திரன், கொழும்பு - 12.

சிங்களத் தேசியவாதத்தின் குற்றங்களைப் போலவே தமிழ்த் தேசியவாதத்தின் குற்றங் களும் மன்னிக்கப்பட முடியாதவை. (குறுகிய எண்ணங்களை விட்டு) இதை உணர்ந்து கொண்டால்தான் விடுதலைக்கு நாம் அருகதை யுடையவர்களாவோம்.

✉ **‘ஆய்தஎழுத்து’ பார்த்துவிட்டீர்களா?**
-ரி.நிக்கலஸ், பெரியநீலாவணை - 01.

கலக்கல் நடிப்பு (சூர்யா, மாதவன், பாரதிராஜா, மீரா ஜாஸ்மின்), ஒளிப்பதிவு, கலை, படத்தொகுப்பு எல்லாமே உலகத் தரம். சுஜாதாவின் வசனங்கள் செதுக்கிய கூர்மை....எல்லாம் இருந்தும்....புரட்சி என்ன இவ்வளவு இலகு என்றா சொல்கிறார் மணிரத்னம்!

✉ **துன்பம் வரும் வேளையிலே சிரிக்க வேண்டும் என்கிறார்களே, அது முடியுமா?**
-ஜெ.லக்கி, பெரியகல்லாறு.

மணமேடையில் பார்த்ததில்லையா.... இருவரும் சிரித்துக்கொண்டுதானே இருக்கிறார்கள்!

✉ **எப்போதாவது ஏதாவது ஒரு கேள்விக்கு விடை தெரியாமல் தாங்கள் திண்டாடியதுண்டா?**
-மனோ கோபாலன், ஹப்புத்தளை.

எப்போதாவது பதில் சொல்லக் கூடிய கேள்வியைக் கண்டுவிட்டால் எழுந்து அறைக்குள்ளேயே நாலு நடை நடந்து பெருமிதப்பட்டுக் கொள்ளுமளவுக்கு.... திண்டாடும் நேரங்கள்தான் இங்கு அதிகம்!

✉ **என்னதான் தவறுகள் ஒரு பக்கமிருந்தாலும், மக்களுக்காகச் சாகவும் தயாராயிருக்கும் வீரர்களை, அவர்கள் தியாகத்தை மதித்து வணங்கத்தானே வேண்டும்?**
-ஏ.டி.எஸ்.குரூஸ், திருகோணமலை.

மக்களுக்காக அல்லது வேறு எதற்கா கவுமோ சாவதை ஒரு கொள்கையாக ஏற்றுக்கொள்ளச் சொல்கிறீர்களா? கொள்கை மனிதரின் தேவைக்காகவே அன்றி, கொள்கையின் தேவைக்காக மனிதர் இல்லை. கொள்கைக்காக ஒருவர் உயிர்ப் பலியாவதைத் தியாகம் என்று கொண்டாடுவது, உயிரோடி ருப்பவர்களின் கள்ளத்தனமான சுயநலம்தான்; அவரைத் ‘தெய்வப் பிறவி’ என்று வஞ்சகமாகக் கொண்டாடிச் சாகடிப்பது. ‘அவரே விரும்பிச் சாகிறார் என்ன செய்ய’ என்று சொல்லிக்கொண்டு, பொறுப்பற்று ஒதுங்குவது பச்சை மோசடி. தியாகம் என்பதன் மீது இல்லாத பொல்லாத தெய்வத் தன்மைகளை ஏற்றிவைத்து, நமது சுயநலத்துக்காக ஒருவரை, அவரே விரும்பிச் சாகும்படி தூண்டிவிடுவதுதான் அது! நம்முடைய உயிரைப் பெறுமதி என்று கருதி உயிரோடிருக்கிறோமல்லவா! மற்றவர் உயிர் விடுவதை ஏன் பாராட்ட வேண்டும்? அதில் கள்ளத்தனம் இருக்கிறதல்லவா!


✉ **சிந்தியா, அஜித்தின் அடுத்த படம் என்ன?**
-ஆர்.உமாதேவி, கினலன் எஸ்டேட்.

‘ஜி’சொதப்பல் இயக்குநர்களால் துவண்டு போயிருக்கும் அஜித் வெற்றியை நம்புகிறாரோ இல்லையோ, நான் நம்புகிறேன்....லிங்குசாமியை!

✉ **கத்தியை விட பேனாமுனை வலிமையானது என்று ஏன் சொல்லுகிறார்கள்?**
-எப்.ஏ.எம்.இர்ஃபான், கொழும்பு - 10.

சில கொலைகளை ஆதரித்து மேலும் பல கொலைகளுக்குத் தூண்டுகோலாய் இருந்து வருகின்றனவே....அதனால்தான்!

✉ **நாம் எல்லோருமே வன்முறை யாளர்கள்தான் என்று எப்படிச் சொல்கிறீர்கள்?**
-எம்.எம்.மிஹ்லார், குருநாகல்.




நுளம்புகள் சுற்றி மொய்க்கின்றன. கடியை விட அவற்றின் ரீங்காரம் ங்ங்...ஙென்று எரிச்சலோ எரிச்சல்! கைகளைச் சுற்றி வீசி உதறுகிறோம். கள்ள நுளம்புகள்! எங்கோ ஓரிரு நிமிடங்கள் மட்டும் மறைந்துவிட்டுத் திரும்ப மொய்க்கின்றன. கையை ஆட்டிக்கொண்டே புத்தகம் படிக்கிறோம். ஒளித்திருந்து அவை தொடையிலும் கைகளிலும் கடிக்கின்றன. அடித்தால்.... நுளம்புகள் தப்பிவிடுகின்றன. நமக்கு மட்டும் அடித்த இடத்தில் வலி மிஞ்சுகிறது! சனியன்கள் படிப்பதை நிறுத்தி விட்டு ஆடாமல் அசையாமல் நுளம்புகள் உடம்பில் வந்து உட்காரட்டும் என்று பார்த்திருக்கிறோம். உட்கார்ந்தவுடனும் குழப்பக் கூடாது. ஊசியைச் செலுத்தி இரத்தம் குடிக்கும் திளைப்பில் மயங்கியிருக்கட்டும்..... பொறுமையாகக் காத்திருந்து... ஒரே அடி! இரத்தம் பீறிட நாலைந்து நுளம்புகள் நசுங்கிச் சாகின்றன. ஆ... எவ்வளவு திருப்தி! கையில் இரத்தம்..... முகத்தில் வெற்றிப் பெருமிதம்!

✉ **முரளி அவுஸ்திரேலியப் பயணம் போகாதது பற்றி?**
-ஆர்.இலட்சிகா, வவுனியா.

போயிருந்தால் அவமானப்படுத்தியிருப் பார்கள் என்பதும் உண்மை; அவரை இரண்டு டெஸ்ட்களில் விளையாட விடாமல் செய்வதில் வெற்றி பெற்றுவிட்டார்கள் என்பதும் உண்மை. இதே முறையை இனி இங்கிலாந்துக்காரர் களும் பின்பற்றக் கூடும். வெள்ளையரல்லாத நாடுகளில்தான் முரளி விளையாட வேண்டி ஆகிவிடுமோ என்று பயமாகத்தானிருக்கிறது!

✉ **சமீபத்தில் சிரித்தது?**
-கே.மேகசுதன், திருக்கோவில் - 02.

விகடனில் பார்த்த எஸ்.எம்.எஸ். ஜோக்குகளுக்கு. உதாரணத்திற்கு ஒன்று :

‘சிங்கம் போல நடந்து வர்றான் செல்லப் பேராண்டின்னு உன்னைப் பார்த்து, உன் பாட்டி பாடினாங்களாமே!’

‘ஏண்டா வீட்டுக்குப் போகும்போது தவழ்ந்து போற அளவுக்கா தண்ணியடிச் சிருந்தே?’

✉ **கிழக்கில் துப்பாக்கிச் சூடுகளும் கொலைகளும் தொடர்கிறதே! யார் காரணம்?**
-நா.பிரியா, வெலிமடை.

கொலையை எதிர்த்து மிகையான ஆர்ப்பாட்டங்களை மேற்கொண்டும், தமிழ் ஊடகங்கள் சில நாட்களுக்கேனும் தொடர்ந்து கண்டனங்களை வெளியிட்டும் வந்தால் அந்தக் கொலை கருணா குழுவினரின் கைங்கரியம் என்றும், இனந்தெரியாதவர்களால் சுடப்பட்டார் என்று விஷயம் அத்துடன் கமுக்கமாகிவிட்ட தென்றால் அது வன்னிப் புலிகளின் கைங் கரியம் என்றும் புரிந்துகொண்டு தமிழுணர்வை வளர்த்துக்கொள்ள வேண்டியதுதான்!

✉ **தமிழ் நடிகைகளில் இன்று நம்பர் 1 ஆக இருப்பவர் யார்?**
-எஸ்.பார்த்திபன், கொழும்பு -12.

தயாரிப்பாளர்கள் யாருக்கு அதிக சம்பளம் தரத் தயாராக இருக்கிறார்கள் என்பதை வைத்துப் பார்த்தால்...முன்னணியில் இருப்பவர்கள் ஜோதிகாவும் திரிஷாவும்.

✉ **நாட்டு மக்கள் எப்படி இருக்க வேண்டும் என்று கூறுங்களேன்?**
-தேவி மகாதேவன், கம்பளை.

எந்த ஒரு வன்கொலைச் சாவையும், "இது நம் சுபீட்ச எதிர்காலத்திற்குத் தேவைதான்" என்று இரகசியமாய்க் கூட மனதிற்குள் திருப்திப்பட்டுக்கொள்ளாத, அந்தரங்கத்தில் மகிழ்ச்சிகொள்ளாத, மனித நேயமுள்ளவர்களாய் இருக்க வேண்டும்.!

# கிரிக்கெட்டின் வரலாறு

கிரிக்கெட் என்பது உற்சாகம், தோல்வி, வெற்றி, அதிர்ஷ்டம், துரதிர்ஷ்டம் போன்றே நிச்சயிக்க முடியாத ஒரு விளையாட்டாகும். இன்று பெரும் வெற்றியை ஈட்டுகின்ற ஓர் அணி திடீரென நாளை படுதோல்வியைத் தழுவக் கூடும். இன்று 100 ஓட்டங்களைப் பெறுகின்ற வீரர், நாளை பூஜ்யத்துடன் மைதானத்தை விட்டு அகன்றுவிடக்கூடிய நிலைமைகளும் உருவாகலாம். இதுதான் இந்த விளையாட்டின் சுயரூபம்.

கால்பந்தாட்ட அணியைத் தவிர உலகில் மிகவும் பிரபலம் வாய்ந்த அணிகளாகக் கிரிக்கெட் அணிகளே காணப்படுகின்றன. தற்போது டெஸ்ட் போட்டிகளில் கலந்துகொள்வதற்காக 10 நாடுகள் வரையறுக்கப்பட்டுள்ளன. என்றாலும் இந்த விளையாட்டு ஏனைய நாடுகளிலும் மிக விரைவாகப் பரவி வருவதைக் காணலாம்.

கிரிக்கெட் சுமார் 400 ஆண்டுகள் பழைமை வாய்ந்த ஒரு விளையாட்டாகும். இதன் தாயகம் பிரான்ஸ் என்பது குறிப்பிடத் தக்கது. எனினும் கிரிக்கெட்டின் தாயகம் இங்கிலாந்து என்பதற்கான எழுத்து மூல ஆவணங்கள்தான் எமக்குக் கிடைத்துள்ளன. இதன்படி பார்க்கும்போது




கிரிக்கெட் விளையாட்டு 1958இல் முதன்முதலாக உலகில் விளையாடப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

1958ஆம் ஆண்டில் இங்கிலாந்தில் உள்ள கயில்ட் ஹோரிடா சுதந்திரக் கல்லூரி மாணவர்கள் ஒன்றிணைந்து கிரிக்கெட்டுக்கு சமமானதொரு விளையாட்டில் ஈடுபட்டதாகக் கூறப்படுகின்றது.

எனினும், இங்கிலாந்து மக்களினிடையே பரவியுள்ள கதைகளின்படி கிரிக்கெட் விளையாட்டு 1541இல் கயில்ட் போர்ட் எனும் பகுதியில் விளையாடப்பட்டதாகத் தெரிய வருகின்றது.

என்ன இருந்தபோதிலும் இந்த விளையாட்டு முறையாகத் தொடங்கப்



பெறாததால் அதன் பரவும் வேகமும் ஆமை வேகத்தில்தான் நடந்தேறியுள்ளது என்பதைக் குறிப்பிட்டாக வேண்டும். அதே நேரம் அக் காலகட்டத்தில் இது "கிரிக்கெட்ஸ்" என்றே அழைக்கப்பட்டு வந்துள்ளது என்பது குறிப்பிடத் தக்கதாகும்.

இதனிடையே கிரிக்கெட் விளையாட்டானது ஆடு மேய்க்கும் இளைஞர்களிடையே பிரபலமாகியதால் அது இங்கிலாந்து முழுவதிலுமாக மிக வேகமாகப் பரவ ஆரம்பித்துவிட்டது. காலையில் ஆடுகளுடன் புற்றரைகளை நோக்கிச் செல்லும் மேய்ப்பர்கள் ஆடுகளைப் புற்றரையில் புல் மேய விட்டுவிட்டு, கிடைக்கும் ஓய்வு நேரங்களைப் பயன்படுத்தி கிரிக்கெட்ஸ் விளையாட்டில் ஈடுபட்டுள்ளனர். இது அவர்களுக்கு காலத்தைப் போக்கக் கூடிய ஒரு விளையாட்டாக

**மைந்தன்**

இருந்துள்ளது.


ஆயினும், இவர்களது இந்த விளையாட்டு அநேகமான சந்தர்ப்பங்களில் மோதல்களிலேயே முடிவுற்றுள்ளன என்பதும் குறிப்பிடத் தக்கதாகும்.

1624இல் இடம்பெற்ற இவ்வாறானதொரு கிரிக்கெட்ஸ் போட்டி ஒன்றின்போது இடைநடுவில் ஏற்பட்ட சண்டை காரணமாக ஒரு வீரர் இன்னொரு வீரரைத் துடுப்பால் தாக்கியதால் அவர் இறந்துள்ளார். இச் சம்பவம் இங்கிலாந்தின் சசெக்ஸ் மாநிலத்தில் இடம்பெற்றுள்ளது.

17ஆம் நூற்றாண்டின் நடுப் பகுதி ஆகும்போது இங்கிலாந்தின் பல பகுதிகளிலும் கிரிக்கெட் விளையாட்டுப் பரவலாக வியாபித்துக் காணப்பட்டுள்ளது. இதன்படி 1646இல் கென்ட் மாநிலத்தின் கொன்ங்ஹின் பகுதியில் இடம்பெற்ற கிரிக்கெட் போட்டியானது சாதனைப் புத்தகத்தில் குறிக்கப்பட்டுள்ள முதலாவது போட்டியாகும் என கிரிக்கெட் சரித்திரம் சுட்டிக் காட்டுகின்றது.

இந்தப் போட்டி கூட முறையான வகையில் நடாத்தப்படவில்லை. "கிரிக்கெட்" துடுப்பானது எல்லே மட்டையைப் போன்ற உருவத்தைக் கொண்டிருந்ததுடன், விக்கெட்டில் மூன்று பொல்லுகளுக்கு பதிலாக இரண்டு பொல்லுகள் மாத்திரமே காணப்பட்டுள்ளன. இவற்றுக்கான 'பேல்ஸ்' இடம்பெறவில்லை.

அக் காலகட்டத்தில் 4, 6 ஓட்டங்கள் என இருக்கவில்லை. ஒரு




முறை பந்தை அடித்துவிட்டு அந்த வீரர் ஓடி ஓடி எத்தனை ஓட்டங்களை வேண்டுமானாலும் பெறலாம். துடுப்பாட்ட வீரர்கள் பந்து விக்கெட்டில் படுதல், பிடி கொடுத்தல், ஓட்டத்தின்போது ஸ்டம்ப் பண்ணுதல் என ஆட்டமிழக்கச் செய்யப் பட்டனர். விக்கெட்டை மறைப்பதன் காரணமாக அப்போது ஆட்டமிழக்கச் செய்யப்படவில்லை என்பது குறிப்பிடத் தக்கதாகும்.

***தொடரும்.....***

---

## எந்தக் கிழமையில் பிறந்தீர்கள்? என்ன அதிர்ஷ்டம் பெறுவீர்கள்?

**மின்சார உலகின் வேகத்திற்கு ஏற்ப மனிதனுடைய பிறப்பு,இறப்பு பற்றிய விரிவான விளக்கங்களைப் பெற்றுக் கொள்ளவேண்டிய அவசியமற்ற இவ் வுலகில் மானிடத் தேவைக்கு ஏற்ப விரைவாக அவர்களது பிறப்பு எண்ணையும் (திகதி) பிறந்த கிழமையினையும் (திங்கள் - ஞாயிறு) கொண்டு தீர்க்கமாக என் அருள் ஞான ஜோதிட சித்தத்தில் கணிக்கப்பட்ட சுருக்கமான உங்கள் பலா பலன்களாகும்.**

**சொல்பவர் :**
**ஜோதிட அறிஞர், பேராசிரியர்,**
**டாக்டர் பீ.கே. சாமி J.D.G.A.N.,**
**(J.P.சமாதான நீதிபதி, கொழும்பு - இலங்கை)**

### ஆதிக்கம் 3 : பிறந்த கிழமை புதன்

பிறப்பெண் 3ஐயும் புதன் கிழமையினைப் பிறந்த தினமாகவும் கொண்டுள்ள நீங்கள் கற்பனை சக்தி மிகுதியாக உடையவர். கற்பனையில் இன்பம் காண்பீர்கள். இந்த உலகம் அறிவியலில் உயர்ந்து விளங்கக் காரணம் கற்பனா சக்திதான். ஒன்றை யூகித்துச் சொல்லக் கூடிய திறன் நிறையவே உங்களுக்கு இருக்கின்றது. ஒரு செயலைச் செய்வதற்கு முன் மனதால் அந்தச் செயலை நிகழ்த்தி அதன் விளைவினையும் அறிந்து வைத்திருப்பீர்கள்.

துணிவுதான் வாழ்க்கையில் அதிகமான சாதனைகளைப் புரிவதற்குக் காரணமாக இருக்கின்றது. அஞ்சியவன் அடிக்கடி மரணிக்கின்றான். அஞ்சாதவன் ஒரு தரம் இறந்து போகிறான். நீங்கள் துணிவும் பலமும் மிக்கவர். அதனால் பல காரியங்களை இலகுவாகச் செய்து முடிக்கக் கூடிய திறன் உங்களுக்குண்டு. அடுத்தவர்கள் சிரமப்படும் காரியங்களை எளிதாகச் செய்து முடிப்பீர்கள். வீரம் செறிந்தவர்கள் நீங்கள்.

துணிவும் பலமும் இருந்தாலும் குறுக்கு வழியில் ஒருபோதும் ஒரு காரியத்தைச் செய்ய முயற்சிக்கமாட்டீர்கள். நேர்மையோடுதான் நடந்துகொள்வீர்கள். பிறரின் அன்பை அதிகமாகச் சம்பாதிப்பீர்கள். யாருடைய மனமும் நோகும்படி பேசமாட்டீர்கள். யாரையும் புண்படுத்த நினைக்கமாட்டீர்கள். அன்புதான் உங்கள் தாரக மந்திரமாக இருக்கும். அன்புக்கும் உண்டோ அடைக்கும் தாழ் ஆர்வலர் புன் கண்ணீர் பூசல் தரும் என்ற வள்ளுவனின் தெள்ளு தமிழ்க் குறளுக்கேற்ப அன்பைத்தான் ஆயுதமாகப் பாவிப்பீர்கள். பிறரை வஞ்சிப்பவர்களை வெறுத்து விடுவீர்கள். அதே நேரம் பிறரை வஞ்சிக்கும் மனம் உங்களுக்குக் கிடையவே கிடையாது. மோசடி, ஊழல் புரிவது பலருக்குக் கைவந்த கலை. ஆனால், நீங்கள் பாவத்திற்கும் பழிக்கும் அஞ்சும் மனம் உடையவராதலால் நாணயமாகவும் ஒழுக்கமாகவும் நடந்துகொள்வீர்கள்.

ஒரு தொழில் செய்கின்றீர்கள் என்றாலும் மேலும் ஒரு தொழிலைச் செய்து வருமானத்தைப் பெருக்கக் கூடிய திறன் உங்களிடம் காணப்படுகின்றது. தொழிலில் கண்ணும் கருத்துமாகச் செயற்படுவீர்கள். நீங்கள் எந்தத் தொழில் செய்தாலும் இலாபமும் வருமானமும் நிறையவே கிடைக்கும். அதனால் தொழிலில் மூலம் வெற்றியே தவிர தோல்வி கிடையாது.

பட்டாடை, கார், பங்களா, அறு சுவை உணவு, கேளிக்கை, களியாட்டம் போன்ற ஆடம்பர வாழ்க்கை மீது அதிக மோகம் வைத்திருப்பீர்கள். அதே போல் சுகபோக வாழ்க்கையினையும் அநுபவிப்பீர்கள். நீங்கள் தொட்டதெல்லாம் பொன்னாகும் வாய்ப்பு இருப்பதனால் நீங்கள் ஆசைப்பட்ட எதனையும் இலகுவாக அடைந்துகொள்வீர்கள்.

பிறர் உங்களைப் புகழ வேண்டும் என்பதற்காக ஏழைகளுக்கும் அடுத்தவர்களுக்கும் உதவி புரிவீர்கள். புகழை விரும்பாத மனிதன் எவனுமில்லைதான். ஆனால், உங்களுக்கோ புகழ் மீது அதிக ஆவல் இருக்கும். அத்தோடு மென்மை மனதும் உண்மை இதயமும் நேர்மை நோக்கமும் உங்களுக்கு இருப்பதனால் கலைகள் மீது அதிக ஆர்வம் ஏற்படும். இசை, நடனம், நாட்டியம், பாட்டு, சினிமா போன்றவற்றைக் கண்டு களிக்க விருப்பமுள்ளவராகத் திகழ்வீர்கள். இதற்காக எவ்வளவு செலவானாலும் கவலைப்படாமல் செலவு செய்து சந்தோசம் காண்பீர்கள். ஒரு மனிதன் கலைஞனாக வாழ வேண்டும். அப்படி இல்லாது போனால் கலையை இரசிப்பவனாக இருக்க வேண்டும். இந்த இரண்டு வகைக்குள்ளும் அடங்காதவன் மனிதனில்லை. அவன் உணர்ச்சியில்லாத மிருகம். ஆனால், நீங்கள் கலை மீதும் கலைஞர்கள் மீதும் அதிக அன்பு செலுத்துவீர்கள்.

அன்பும் ஞானமும் உங்களிடம் மிகுதியாகக் காணப்படுவதனால் பிறருக்கு ஆலோசனை வழங்கக் கூடிய வல்லமை உங்களிடம் உண்டு. போதனை செய்யக் கூடிய பக்குவமும் முன்மாதிரி நடத்தையும் உங்களிடம் காணப்படும். பிறர் உங்களை ஏமாற்ற நினைத்தாலும் ஏமாறமாட்டீர்கள். அதே நேரம் ஏமாற்ற நினைப்பவர்களை வஞ்சிக்கவும் மாட்டீர்கள். மன்னிக்கும் மகா பெரிய மனம் உங்களுடையது.

உங்களுடைய 16 வயதுக் காலத்தில் ஒரு ஆபத்து நேரிடும். ஆனால், உயிருக்கோ உடலுக்கோ சேதம் இருக்காது. இதன் பின் இறுதி மூச்சு உள்ள வரை உங்களுக்கு எந்த விதமான கண்டமும் ஏற்படாது. அதிக சிரமம் அடைந்து உழைக்க வேண்டிய தேவை உங்களுக்கு இல்லை. வியர்வை சிந்தாத உடல் உழைப்புடன் வருமானம் பெறுவீர்கள்.

நீங்கள் இளவயதில் தொழில் செய்ய ஆரம்பிப்பீர்கள். ஆனால், அதிக பலன் உங்களுக்கு இருக்காது. 22 வயதுக்குப் பின்னர்தான் தொழில் நல்ல வருமானத்தை உங்களுக்கு ஈட்டித் தரும். 23 வயதிலிருந்து 35 வயது வரை வருமானம் தாராளமாகக் கிடைக்கும். இதனால் உங்கள் வாழ்க்கை முன்னேற்றம் அடையும். 36 வயது தொடக்கம் 48 வயது வரைக்கும் வருமானம் இன்னும் சிறப்பாக அமையும். ஆனால், வீண் செலவு காரணமாகவும், சிக்கனமின்மை காரணமாகவும், சேமிப்பு அக்கறை போதாமை காரணமாகவும் பணம் உங்கள் கையில் தங்காது. 49 வயது தொடக்கம் 55 வயது வரை உங்கள் வருமானம் சமநிலையில் காணப்படும். 56 வயது ஆரம்பித்தும் ஒருவருடன் கூட்டுச் சேர்ந்து உணவு சம்பந்தமாக ஒரு வியாபாரத்தை ஆரம்பிப்பீர்கள். கூழ குடித்தாலும் கூட்டாகாது என்பது போல உங்களுக்குக் கூட்டு வியாபாரம் சரிப்பட்டு வராது. அதனால் அவர் விலகிவிடுவார். நீங்கள் முழுப் பொறுப்புடன் இயங்கி அதிக இலாபம் சம்பாதித்து ஆயுள் வரை சுகபோக வாழ்க்கை வாழ்வீர்கள்.

உங்களுடைய பிறப்பெண் 3தான். ஆனால், அதிர்ஷ்ட எண் 5 . எனவே தனி ஐந்து எண்ணோ அல்லது ஐந்தாகக் கூட்டெண் வரக்கூடிய எண்ணோ உங்களுக்கு யோகமானது என்பதை மறக்க வேண்டாம். இதனால் மாதத்தில் வருகின்ற 5, 14, 23 தேதிகளில் நல்ல காரியங்களைச் செய்யுங்கள். அதிக பலனை அடைவீர்கள். இந்தத் திகதிகள் புதன் கிழமையில் அமையுமாக இருந்தால் அதிர்ஷ்டம் பன்மடங்காகப் பெருகும்.

உங்களுக்குப் பொருத்தமான நிறம் வெளிர் நிறமாக இருக்கட்டும். வெளிர் நிற (லைட்கலர்) ஆடைகளை அணியுங்கள். அதிர்ஷ்டம் கைகூடும். மோதிரம் அணிய விரும்பினால் வைரம் புஷ்பராகம். இமிடேசன் வைரம், முத்து இவைகள் பதித்த தங்க மோதிரம் அணியுங்கள். நீங்கள் வசிக்கும் வீடும் அதிர்ஷ்டத்தை அள்ளித் தர வேண்டுமாக இருந்தால் 5, 14, 23, 32, 41, 50, 59, 68, 77, 86, 95, 104, 113 போன்ற இலக்கங்கள் அமைய வேண்டும்.

ஆகவே, பிறப்பெண் 3ஐயும் பிறந்த கிழமை புதனையும் உடைய நீங்கள் வாழ்க்கையில் சகல சௌபாக்கியங்களையும் பெற்று வாழ என் ஆசீர்வாதம்.

*பொன் தன்மை கொண்டது புதன் - இது தண் தன்மை சிறப்பு. இதன் கண் போல் ஒளி சிந்தும். இது உம் வாழ்வுக்கு சேர்க்கும் வளம்.*

***(அடுத்து வியாழக்கிழமை பிறந்தவர்களைப் பார்ப்போம்)***

---

## சிரிப்பு

**இரு நண்பர்கள் பேசிக்கொண்டது :-**

"என் மனைவி டீ - இன் - ஒன் சாம்பார் வைக்கிறதிலே ரொம்ப கெட்டிக்காரி."

அப்படியா! அது என்ன? டீ - இன் - ஒன் சாம்பார்?

என் மனைவி வைக்கிற சாம்பாரைக் கலக்காம தெளிவாவிட்டால் ரசம்! கலக்கிவிட்டால் சாம்பார்!

**இருவர் பேசிக்கொண்டது:-**

"எதற்காக மாமா தூங்கி எழுந்தவுடன் பர்ஸைத் திறந்து பணத்தை எண்ணிப் பார்க்கிறார்."

"இராத்திரி பிச்சை போடுவதாகக் கனவு கண்டாராம்! அதனாலே, பணம் சரியா இருக்கான்னு எண்ணிப் பார்க்கிறாராம்."

**இரு நண்பர்கள் பேசிக்கொண்டது :-**

"சுந்தரம் வீட்டுக்குப் போயிடாதே! அவன் சுத்தக் கஞ்சப் பயல்"

"ஏன்?"

"வீட்டிலே இருக்கும்போது, டிரஸ் கூட போட்டுக்கமாட்டான்."

---

## 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி

| அன்னை மடியில் | | ஆண்டவன் திருவடியில் |
|---|---|---|
| 10 |  | 01 |
| 08 | | 07 |
| 1925 | | 2003 |

**அமரர் திரு.செல்லையா சிதம்பரப்பிள்ளை**

**(இல.15, 1ஆம் யூனிற், சேமமடு)**

**திதி :- 19.06.2004**

*பாசத்தின் பிறப்பிடமாய்!*
*பண்பின் சிகரமாய்!*
*தந்தையாய் தாத்தாவாய்!*
*நண்பனாய் நல் ஆசானாய்*
*அநுபவ அறிவு கூறி,*
*அழியா நினைவு தந்து,*
*மீளாத் துயிலில் நீங்கள்.*
*தாளாத் துயரில் நாங்கள்.*
*எம் குல முதல்வரே!*
*உம் ஆத்மா சாந்தியடைய*
*பிரார்த்திக்கிறோம்.*

மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

தகவல் :- ஸ்ரீதரன், செல்வராசா, தமிழ்ச்செல்வன்.
81/1, குருமண்காடுச் சந்தி, வவுனியா.


---

## வாரம் ஒரு தகவல் தெரிந்துகொள்ளுங்கள்

### மகாவம்சம் கூறும் விஜயன் கதை உண்மையா?

**விஜயன் கதை கட்டுக் கதை என்று பௌத்த சிங்கள புத்திஜீவிகள் கூறுகிறார்கள். எச். டபிள்யு. கொட்ரிங்ரன் என்ற வரலாற்று ஆசிரியர் மகாவம்சம், தீபவம்சம், வாக்கஜதாகக்கதைகள் போன்ற புத்த வரலாற்று நூல்களை நன்கு ஆராய்ந்த பின்பு, "விஜயன் கதை என்பது பல வினோதக் கதைகளின் ஒரு கூட்டு" என்றார். பேராசிரியர் சனக்க பண்டாரநாயக்கா, "விஜயன் கதை ஒரு கட்டுக் கதை" என்றார்.**

"மாஜிக் தந்திரங்கள்" குறித்த பயிற்சியும் அதனோடு ஒட்டிய சுவைமிகு தகவல்களும் தொடர்ந்து வெளிவரும். மாஜிக் பிரியமுடைய நீங்களும் மாஜிக் நிபுணராகத் திகழ எமது வாழ்த்துக்கள்.



# மாஜிக் தந்திரங்கள்

இதைக் கண்ட சபையோர் துப்பாக்கிக் குழாயில் போட்ட சீட்டின் மூலைதான் பறந்துபோய் ஒட்டிக்கொண்டது என்று நினைத்து ஆச்சரியப்படுவார்கள்.

**குறிப்பு** : இந்தக் காட்சியில் உதவியாளர் மிகக் கவனமாக நடக்க வேண்டும். துப்பாக்கியைச் சுடும்பொழுது மடித்த முனையைத் தூக்காமல் பராக்காக இருந்துவிடக் கூடாது.

## ரிப்பனில் முயல் குட்டி வரவழைத்தல்

இந்தக் காட்சியைச் செய்வதற்கு ஒரு முயல்குட்டி தேவைப்படும். அடுத்து 60 செ.மீட்டர் நீளத்தில் இரண்டு செ.மீ. அகலமுள்ள துண்டு ரிப்பன்கள் ஒவ்வொரு கலரிலும் 10 ரிப்பன்கள் வீதம் தேவைப்படும். அதாவது பச்சை நிறத்தில் 10, மஞ்சள் நிறத்தில் 10, சிவப்பு நிறத்தில் 10, நீல நிறத்தில் 10, வெள்ளை நிறத்தில் 10, இப்படியாக 50 துண்டு ரிப்பன்களையும் பல நிறமாக கலந்து கடைசியில் ஒரே தலைப்பாக எல்லாவற்றின் தலைப்புக்களையும் ஒன்றாகச் சேர்த்து சவுரி முடி போல் தலைப்புகளை ஒன்றாகச் சேர்த்து உறுதியாகக் கட்டிவிட வேண்டும். இந்தத் தலைப்பைப் பிடித்து உதறினால், எல்லா கீழ் தலைப்புகளும் விரிந்து சவுரி முடிபோல பரவலாக பம் மென்று உப்பிக் கொள்ள வேண்டும். இந்த விதமாக ஒரு ரிப்பன் கட்டுத் தயார் செய்துகொள்ள வேண்டும்.


காட்சி ஆரம்பிக்கும் முன் மேடையில் ஒரு ஸ்ரூலைப் போட்டு, அதன் மேல் இந்த ரிப்பன் கட்டை வைத்துவிட வேண்டும். காட்சி நடத்துகிறவர் மேடைக்கு வந்து இந்த ரிப்பன் கட்டை கையில் எடுத்து அதை பல விதமாக ஆட்டி, மேலும் கீழுமாக உலுக்கி, உதறி அதன் உள்ளே ஒன்றும் இல்லை என்பதைச் சபையோருக்குக் காண்பித்து, மேடையிலேயே மேடை ஓரத்தை அணுகி, ரிப்பனை உலுக்கிக்கொண்டே வர வேண்டும். ஒரு சுற்றுச் சுற்றிவிட்டு, இரண்டாவது சுற்றும் வர வேண்டும். மூன்றாவது சுற்று வரும் பொழுது மேடையின் கடைசியில் விடப்பட்டி ருக்கும் கறுப்புத் திரையின் நடுப் பாகத்திற்குப் போய் அதில் செய்யப்பட் டிருக்கும் தந்திர வழிக்கு நேராக ரிப்பனை அசைத்துக்கொண்டே, திரையிலுள்ள இடைவெளி வழியே உதவியாள் கொடுக்கும் முயல்குட்டியை ரிப்பனில் மறைத்து சபையோருக்குத் தெரியாமல் அதை ரிப்பன் கட்டோடு மேடைக்கு எதிரே கொண்டுவந்து, பலமாக உதறிக்கொண்டே தரை வரை தாழ்த்தி முயல்குட்டியைக் கீழே விட சபையோர் ஆச்சரியப்படுவார்கள்.

## ரிப்பன் கட்டில் ரூபாய் நோட்டு வரவழைத்தல்

முயல் குட்டி வரவழைக்கப் பயன்படுத்திய அதே ரிப்பன் கட்டைக் கொண்டுதான் ரூபாய் நோட்டையும் வரவழைக்க வேண்டும்.

முதலில் ஒரு 100 ரூபாய் நோட்டை பாங்கிற்குக் கொண்டு போய், அதைப் புதிய பத்து ரூபாய் நோட்டுக் கட்டாக மாற்றி வர வேண்டும். இதைப் பத்திரமாக வைத்துக் கொள்ள வேண்டும்.

காட்சி ஆரம்பித்தபின் முயல் வரவழைக்க ரிப்பன் கட்டை எந்த விதமாகக் குலுக்கி, உதறிக் காண்பிக்கப்பட்டதோ அது போலவே இப்பொழுதும் செய்ய வேண்டும். மேடையின் உள் பக்க ஓரத்தில் ரிப்பன் கட்டை உதறிக் கொண்டேபோய், மூன்றாம் முறை மேடையின் பின் பகுதியில் தொங்கவிடப்பட்டிருக்கும் கறுப்புத் திரையின் நடுப் பாகத்திற்குப் போய் திரையிலுள்ள மறைவு வழியாக உதவியாள் வெளியே நீட்டும் பத்து ரூபாய் நோட்டுக் கட்டை சபையோர் அறியாவண்ணம் கையில்



வாங்கி, ரிப்பன் கட்டில் மறைத்துக்கொண்டு சபையோர் முன் வந்து ரிப்பன் கட்டை உதறிக்கொண்டே பத்து ரூபாய் நோட்டுகளைப் பொல பொலவென்று உதிரச் செய்தால் சபையோர் கண்டு ஆச்சரியமடைவார்கள்.

**குறிப்பு** :- திரைமறைவிலிருந்து முயல்குட்டி, ரூபாய் நோட்டுக் கட்டு இவற்றை வெளியே கொடுக்கும் உதவியாள் மிகவும் எச்சரிக்கையாகக் கவனமாக நடந்துகொள்ள வேண்டும். அதை வாங்கும் காட்சி நடத்துகிறவரும் இந்தப் பொருள்களைக் கைதவற விடாமல் சபையோர் தெரிந்துகொள்ள முடியாத அளவில் வாங்க வேண்டும். இந்தக் காட்சியை நடத்த மிகவும் கவனம் தேவை.

## பாணில் முட்டை வரவழைத்தல்

ஒரு கோழி முட்டையை வாங்கி அதைக் கழுவிச் சுத்தம் செய்து, பாண் தயாரிக்கும் பேக்கரிக்குச் சென்று பாண் தயாரிப்பவரிடம் கோழி முட்டையைக் கொடுத்து, அதை ஒரு முழு அளவு பாணின் உள்ளே நடு மையத்தில் வைத்து தயார் செய்து கொடுக்கச் சொன்னால், அவர் அது போலவே செய்து தருவார். இதற்காக அவருக்கு ஏதாவது அதிகம் பணம் கொடுக்க வேண்டி வரும். ஆனால், முட்டை வைத்த பாண் எது என்பதை பாண் தயாரிப்பவர் ஞாபகம் வைத்து அந்தப் பாணைக் கொடுக்கும்படி ஞாபகப்படுத்த வேண்டும். ஞாபகப் பிசகாக முட்டை வைக்காத பாணைக் கொடுத்து விட்டால், காட்சியின்போது தோல்வியும் அவமானமும் ஏற்படும். எனவே, முட்டை வைத்த பாண் கைக்கு வந்தவுடன் ஒரு மெல்லிய உறுதியான கம்பியை பாணின் நடுவில் செலுத்தி உள்ளே முட்டை இருக்கிறதா என்பதைத் தெரிந்து கொண்டுதான் இந்தக் காட்சிக்குப் பயன் படுத்த வேண்டும்.

இந்தக் காட்சியை ஆரம்பிக்கும் முன் ஒரு கோழி முட்டையை எடுத்து அதை நீளப் பக்கமாக மேல் பக்கமும், கீழ்ப் பக்கமும் ஒரு ஈர்க்கு உள்ளே போகும் அளவிற்கு இரண்டு துளைகள் போட்டு, ஒரு சிறு பாத்திரத்தைக் கீழே வைத்து அதன் மேல் முட்டையைப் பிடித்துக்கொண்டு மேல் பக்கத் துவாரத்தை மேல் பக்கமாக வைத்து துளையில் வாயை வைத்து துளையின் உள்ளே காற்றுப் போகும்படி ஊதினால் அதிலுள்ள வெள்ளை, மஞ்சள் திரவம் கீழ்த் துளை வழியாக மெதுமெதுவாக வெளியேறும். இந்த விதமாக ஊதி, ஊதி உள்ளே உள்ள திரவப் பொருள் முழுவதையும் வெளியே எடுத்துவிட்டு, முட்டையின் அடித் துளை தண்ணீரில் அழுந்தும்படி வைத்து மேல்த் துளையில் வாய் வைத்துக் காற்றை மேல் நோக்கி இழுத்தால் முட்டையில் தண்ணீர் ஏறும். அரை முட்டை அளவிற்குத் தண்ணீரை இழுத்து முட்டையை நன்றாகக் குலுக்கி, மறுபடி துளையில் வாயை வைத்து ஊதினால் அதிலுள்ள நீர் கீழே இறங்கிவிடும். இந்தச் சமயம் வெற்று முட்டை ஓட்டை வெயிலில் வைத்து உள்ளே நீர் இல்லாதபடி வரளக் காய வைத்து எடுத்து வைத்துக்கொள்ள வேண்டும்.

இந்தக் வெற்றுக் கோழி முட்டையை மேடையின் மேலுள்ள மேசை மேல் வைத்துவிட வேண்டும். இதன் பக்கத்தில் ஒரு நல்ல கோழி முட்டையையும் வைத்துவிட வேண்டும்.

தொடர்ந்து வரும்..........

# காதிலை பூ கந்தசாமி

## நோட்டீஸ் பலகை



நான் சொல்வ தெல்லாம் பொய். பொய்யைத் தவிர வேறொன்றுமில்லை.

*-காதில பூ கந்தசாமி-*

"சேதி கேட்டோ... சேதி கேட்டோ... சேத்தன் பத்தின சேதி கேட்டோ... சே! தேர்தல் பத்தின சேதி கேட்டோ....."

அது பாருங்கோ எங்கட நாட்டில இப்ப கொஞ்ச நாளுக்கு முன்னால ஒரு தேர்தல் நடந்ததெல்லோ. அந்தத் தேர்தல் எப்பிடி நடந்ததெண்டு ஐரோப்பிய யூனியன் கண்காணிப்பாளர்கள் ஒரு அறிக்கை சமர்ப்பிச்சிருக்கினம் கண்டியளோ... அதப் பற்றி யோசிச்சாப் போல அப்பிடியே பாடிட்டன்.

தேர்தல் எப்பிடி நடக்குமெண்டு அவையென்ன எங்களுக்குச் சொல்லுறதெண்டு யோசிக்கிறியளோ? தேர்தலெண்டால் பெட்டி வைச்சு, மை பூசி வாக்குப் போடுறது - அதில என்ன அறிக்கை வேண்டிக் கிடக்கு எண்டு சொல்லுவியள். சொல்லலாந்தான். ஆனால், அதில எங்கட வடக்கு கிழக்கில மட்டும் பெரிய மோசடி நடந்திருக்கிறதாயும், அங்க நடந்த தேர்தல நியாயமான தேர்தலெண்டு கொள்ள முடியாதெண்டுமெல்லே அவை உந்த அறிக்கையில சொல்லி வைச்சிருக்கினம். இது எங்கட தமிழ் கூறும் உலகுக்கே அவமானமெல்லோ. உதச் சும்மா விடலாமோ?

அதுதான் பாருங்கோ, இந்தத் தன்மானத் தமிழனால இதப் பொறுக்க ஏலாமல் கிடக்குது. இப்பிடி ஒரு இழுக்கை எழுதி வைச்சிருக்க, இவங்கள் உந்த ரிவீக்காறர் அதையெடுத்து ஒப்பினா அறிவிக்கிறானே! உவனுக்கு மதியெங்க போச்சு! இத்தினை காலம் மீடியாத் தொழில் செய்தும் எதை அமுக்கிறது, எதை விளம்பரப்படுத்திறதெண்ட அறிவுத் தெளிவு இன்னும் வரேல்லையே உவைக்கு? ஒருவேளை வெள்ளைக்காறன் எழுதினால் இருட்டடிப்புச் செய்யக் கூடாதெண்டு பயந்திட்டினமோ தெரியாது. லோக்கலா நடக்கிற எத்தினையோ தப்புத் தண்டாக்களையெல்லாம் அமசடக்கி மறைச்சு வைக்கிறவை வெள்ளையனைக் கண்டவுடன கொஞ்சம் வெலவெலத்துப் போட்டினம் போல. ம்... போகட்டும்.

இப்ப இப்பிடிச் செய்தி வந்ததுக்கு என்ன பதில் சொல்லலாமெண்டறிய நம்மட பிரகிருதிகளைக் கொஞ்சம் கேட்டுப் பாத்தன்.

***கா.பூ*** : ஹலோ! யார் எங்கட சங்கரியண்ணையே! அண்ணை, வடக்குக் கிழக்கில தேர்தல் மோசடியாம், உந்த வெள்ளைக்காறன் சொல்லுறான். என்ன பதில் சொல்லலாமெண்டு நினைக்கிறியள்?

***சங்கரி*** : ஏன் தம்பி, சரியாத்தானே சொல்லியிருக்கினம். மாற்றுக் கட்சிகள் பிரசாரம் செய்யவே விடயில்லையெண்டு சொன்னதெல்லாம் நூற்றுக்கு நூறு உண்மை தம்பி. ஏன், எனக்கே எத்தின இடைஞ்சல் பண்ணியிருக்கினம்! அங்க வாக்களிப்பே நடந்தது? விரல் சூப்பிகளும், காச்சட்டையோட ஒண்டுக்குப் போறதுகளும், செத்தவை, வெளிநாடு போனவையின்ர பெயரில வாக்களிக்க வந்தது வேடிக்கையாய் இல்லையே! மற்றாக்களை வீட்டோட அடைச்சு வைச்சுக்கொண்டு, சுத்திச் சுத்திக் கள்ள வோட்டுக்காறர்தானே வலம் வந்தவை தேர்தல் தினத்தில. இதப் போய்த் தேர்தலெண்டு சொல்லுறவன் விசரனெல்லோ.

***கா.பூ*** : அண்ணை, அண்ணை நீங்கள் என்ன ஏடாகூடமாப் பேசிக்கொண்டு போறியள். உந்த வெள்ளைக்காறர் எங்கட மானத்தை வாங்கிப்போட்டினமெண்டு அவைக்கு நாலு சூடாக் குடுப்பியளெண்டு பாத்தால் நீங்கள் மறுவளமாப் பேசிறியள்.

***சங்கரி*** : நான் சரி வளமாத்தான் யோசிக்கிறன். நீர்தான் ஏதோ பிறவளமாய் நினைச்சிட்டீர் போல!

***கா.பூ:*** அட! யார் சங்கரியண்ணைக்கே கோல் எடுத்துப் போட்டன். அடடடா, நான் பழய நினைப்பில கதைச்சிட்டன். நீங்கள் இப்ப வெளியால எண்டத மறந்திட்டன். சொறி யண்ண. உங்கட அபிப்பிராயம் எங்கட மீடியா வக்கு தேவையில்லை. சொறியண்ணை சொறி.

***சங்கரி*** : என்னத்துக்குச் சொறி? உமமட சொறிச் சேட்டைக்கே? 'எங்கட அபிப்பிராயம் எல்லாம் தமிழற்ற அபிப்பிராயமில்லையோ? எங்கட கருத்தச் சொல்லக் கூட பத்திரிகைச் சுதந்திரமில்லையே உமக்கு!

***கா.பூ*** : பத்திரிகைச் சுதந்திரத்தைத் தவறாய் விளங்கியிட்டியள். எதையும் பிரசுரிக்கிறதுக்கு இருக்கிற சுதந்திரத்தை விட, இப்ப எதையும் இருட்டடிப்புச் செய்யிறதுக்கு இருக்கிற சுதந்திரம்தான் எங்கட அகராதியில பத்திரிகைச் சுதந்திரம். அந்தச் சுதந்திரப்படி உங்கட கருத்துக்கு எங்கட ஆழ்ந்த அனுதாபங்கள்! பாய்!

நான் எப்பிடிப்பட்ட மடயன் பாத்தியளே! தேர்தல் மோசடி பற்றிக் கேக்க ஆளில்லாமல் ஆனந்தசங்கரிக்கு அடிச்சிருக்கிறன் கோல்! நல்ல காலம் இது பேப்பராய் போச்சுது. ரிவி அல்லது ரேடியோவாயிருந்தால் அவ்வளவும் எயாரில போயிருக்குமெல்லே. ம்.... இனி யாரைப் பிடிப்பம்?

***கா.பூ*** : ஹலோ எங்கட மாவை அண்ணயோ! பாத்தியளே, மலை போல நீங்கள் இருந்தும் எனக்கு உங்கட ஞாபகம் வராமல் போச்சுதே! ம்... தமிழாக்களுக்கே உங்கட முகம் மறந்து போச்சுது. நான் மட்டும் தினிசே! அண்ணை! உந்த ஐரோப்பிய யூனியன்காறற்ர அறிக்கையைப் பற்றி என்ன சொல்லுறியள்?

***மாவை*** : நான் இப்பதான் நித்திரை முழிச்சிருக்கிறன் தம்பி. அதுக்கென்ன! ஐரோப்பியர் நல்லாத்தானே சொல்லியிருப்பினம்!

***கா. பூ*** : என்ன விஷயம் தெரியாமல் கதைக்கிறியள். வடக்குக் கிழக்கில தேர்தல் மோசடியெண்டினமே!

***மாவை*** : உள்ளதைச் சொன்னால், நானே கட்சிச் செயலாளர், தலைமை வேட்பாளராயிருந்தும் கடைசியாளாத்தான் தெரிவாக்கப் பட்டிருக்கிறன். ஆனாலும் தம்பி அதில என்ன இருக்குது மோசடியெண்டு கேக்கிறன்? பேப்பரில வாற செய்தியெண்டேக்க நான் மிகவும் ஆணித்தரமாய்ச் செல்லிக்கொள்ள விரும்பிறன் என்னவெண்டால், இது எங்களுக்குத் தமிழ் மக்கள் தந்திருக்கிற ஆணை! இதில மோசடியெண்ட பேச்சுக்கே இடமில்லை.

***கா.பூ*** : அப்பிடிப் போடுங்கோ அண்ணை! சரி, இந்த ஐரோப்பியற்ற அறிக்கையை என்ன செய்யிறது?

***மாவை*** : கிழிச்செறியும்!

***கா.பூ*** : ஓகே!

**யாவும் கலப்படமற்ற கற்பனை**

# இந்த வாரம் உங்கள் பலன்

(27.06.2004 தொடங்கி 03.07.2004 வரை)

## சோதிட மாமணி தில்லை

### இந்த வாரக் கிரக நிலை

மீனம் - சூரியன், மேடம் - புதன், இராகு, இடபம் - வெள்ளி, செவ்வாய், மிதுனம் - சனி, சிங்கம் - வியாழன், துலாம் - கேது, 03-07-2004இல் மேட சூரியன், சந்திரன் தனு, மகரம், கும்பம் இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார்.



***மேடம்*** : (அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)
தொழில் மேன்மை, வீண் செலவு, அன்னியர் உதவி, கௌரவம், குடும்ப சுகம், உறவினர் தொல்லை, உத்தியோகக் கலக்கம், மேலதிகாரிகள் கெடுபிடி, மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- செவ்வாய்**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 04.**




***இடபம்*** : (கார்த்திகை பின் முக்கால், ரோகிணி, மிருகசீரிடத்து முன்னரை)
தொழில் மந்தம், கூடிய முதலீடு, பணியாளர் பகை, பெரியோர் உதவி, குடும்ப நன்மை, உத்தியோகச் சிறப்பு, மாணவர் கல்வி ஊக்கம், விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- வெள்ளி**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 06.**



***மிதுனம்*** : (மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)
தொழில் பலிதம், பண வரவு, உறவினரால் தொல்லை, மனக் குறையதிகம், உத்தியோகக் கஷ்டம், மேலதிகாரிகள் தொல்லை, மாணவர் கல்வி மேன்மை, விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- புதன்**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 05.**



***கர்க்கடகம்*** : (புனர்பூசத்து நாலாங்கால், பூசம், ஆயிலியம்.)
தொழில் உயர்ச்சி, காரியானுகூலம், வெளியிடப் பயணம், அன்னியர் நட்பு, குடும்ப நன்மை, உத்தியோக முயற்சி, மாணவர் கல்வி சிறப்பு, விவசாயிகள், வியாபாரிகள் அற்ப இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- வியாழன்**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 02.**



***சிங்கம்*** : (மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)
தொழில் மந்தம், மனக் கவலை, செலவு மிகுதி, கடன்படல், வீண் பிரயாணம், தேகசுக கஷ்டம், உத்தியோக மாற்றம், மேலதிகாரிகள் கெடுபிடி, மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- செவ்வாய்**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 07.**




***கன்னி*** : (உத்தரத்துப் பின் முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)
தொழில் மாற்றம், மனக் குறை நீங்கும், உயர்ந்த நிலை, உறவினர் உதவி, பெரியோர் நட்பு, உத்தியோகச் சிறப்பு, மாணவர் கல்வி மேன்மை, விவசாயிகள், வியாபாரிகள் இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- புதன்**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 05.**




***துலாம்*** : (சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)
தொழில் சிறப்பு, அன்னியரால் உதவி, வெளியிடப் பயணம், தேக சுக நன்மை, குடும்ப மகிழ்ச்சி, உத்தியோக நன்மை, மாணவர் கல்வி குழப்பம், விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- வெள்ளி**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 03.**




***விருச்சிகம்*** : (விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை )
தொழில் உயர்ச்சி, கௌரவம், இனசன மகிழ்ச்சி, செலவதிகம், உத்தியோக மாற்றம், மனக் கிலேசம், மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- செவ்வாய்**
**அதிர்ஷ்ட இலக்கம் :- 04.**



***தனு*** : (மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)
தொழில் கஷ்டம், பாரிய செலவு, கடன் தொல்லை, உறவினர் பகை, மனக் கலக்கம், உத்தியோகம் பலிதம், மன மகிழ்ச்சி, மாணவர் கல்வி மேன்மை, விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- வியாழன்**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 02.**



***மகரம்*** : (உத்தராடத்துப் பின் முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை)
தொழில் உயர்ச்சி, மன மகிழ்ச்சி, உயர்ந்த நிலை, குடும்ப நன்மை, உறவினர் தொல்லை, உத்தியோகக் கலக்கம், மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி சிறப்பு, விவசாயிகள், வியாபாரிகள் இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- புதன்**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 07.**



***கும்பம்*** : (அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்)
தொழில் பலிதம், பண வரவு, அன்னியர் உதவி, பெரியோர் பகை, குடும்ப கலகம், உத்தியோக முயற்சி, மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி மேன்மை, விவசாயிகள், வியாபாரிகள் அற்ப இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- வெள்ளி**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 06.**



***மீனம்*** : (பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)
தொழில் பலிதம், உயர்ந்த நிலை, மன மகிழ்ச்சி, குடும்ப நன்மை, சுபகாரிய மகிழ்ச்சி, உத்தியோகக் கஷ்டம், மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி மந்தம், ஊக்கமின்மை, விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- வியாழன்**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 01.**

## கை கண்ட பலன்



எனது கிளை நிறுவனத்தில் மாந்திரிக ஜோதிட வேலைகளுக்கு கைமேல் பலன். நுவரெலியாவில் எனது மூத்த சகோதரனாகிய P.T.R அவர்களிடம் சென்று உங்கள் வேலைகளை அப்பொழுது நிவர்த்தி செய்து கொள்ளுங்கள். ஸ்ரீ துர்க்கா தேவி ஆலயம் மாந்திரிக உச்சாடன பீடம் பேராசிரியர் டாக்டர் பி.கே. சாமி.

Prof.Dr. P.K. SAMY (J.D.G.A.N.)J.P.
33, DAILY FAIR COMPLEX
NUWARAELIYA
T.P. 052 - 2222508

நுவரேலியாவை தவிர வேறு எங்கும் கிளைகள் கிடையாது இங்கும் தீயவேலைகளுக்கு இடமில்லை.


# ஆதி

"ஆடி அடங்கும் வாழ்க்கையடா ஆறடி நிலமே சொந்தமடா" இப்படிக் கண்ணதாசன் பாடினார். இங்கே ஒட்டிய தோலும் எலும்புமாக காணப்படும் உருவம் ஒக்ட் மனித இனத்தைச் சேர்ந்த ஒருவரது உடல் ஆகும். சுமார் 5000 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த மனிதனின் எலும்புக் கூடு என ஆய்வாளர்கள் கூறுகின்றனர். இவர் இறக்கும்போது 40-50 வயது வரை இருக்கலாம் எனத் தெரியவருகிறது. 1991ஆம் ஆண்டு ரஷ்யாவின் இனஸ்பேட் எனும் இடத்திலுள்ள கபரொப் ஒஸ்றீஸ் கல்வித்துறையைச் சேர்ந்தவர்களால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. தற்போதைய ஆராய்ச்சிகளின்படி இவரது நாள அமைப்புகள் சாதாரண மனித நாள அமைப்புகளிலிருந்து வேறுபட்டதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.


## நிபுணத்துவ கைரேகை






கைரேகை என்பது ஒரு கடல் போன்றது. அப்படியே அதை ஆராய்ச்சி செய்வதென்றால் ஆதி பராசக்தியின் அருட்கடாட்சம் வேண்டும். இக் கூற்றுக்கமைய உலக நாடுகளுக்கு சென்று கைரேகைக் கலையை அக்குவேறு ஆணிவேறாக அலசி ஆராய்ந்து நிபுணத்துவம் பெற்ற என்னைச் சந்தியுங்கள். உங்கள் கைரேகையை பார்த்துப் பலா பலனை தெரிந்து கொள்ள முன்னறிவித்தலுடன் வந்தால் கைரேகை வாசிக்க காலநேரம் கொடுக்கப்படும்.

Tel: 2344832

கே.கங்காதரன் (M.A) J.P.


162, கொட்டாஞ்சேனை வீதி, கொழும்பு-13.

Booking Time 4.00 p.m To 7.00 p.m Only

# நீளம்

இவ்வகை மீன்கள் கடல் மட்டத்திலிருந்து 100 மீற்றர் ஆழத்தில் ஆபிரிக்கா, அமெரிக்கா நாடுகளை அண்டிய கடற் பகுதிகளிலே அதிகமாக வாழ்கின்றன. இவ்வகை மீன்களுக்கு உள்ள சிறப்பு அம்சம் என்னவென்றால், அவை தாம் வாழ்கின்ற இடத்திற்கேற்ப தமது நிறத்தினை மாற்றிக்கொள்ளக் கூடியவை. மற்றைய மீன் இனங்கள் வாய்ப்பகுதி ஊடாக நீரை உறிஞ்சியே சுவாசிக்கின்றன. ஆனால், இவ்வகை மீன்கள் தமது உடம்பின் எல்லாப் பகுதிகளூடாகவும் நீரை உறிஞ்சும் தன்மை கொண்டவை. பின்புற வால் பக்கமாகவே ஏனைய உயிரினங்களைப் பார்க்கவும் செய்கின்றன. வால் நீளம் 80 சென்ரி மீற்றர்.





# போஸ்

ஆபிரிக்காவின் மடகாஸ்கர் காட்டுப் பகுதியில் இச் சிறு விலங்கு கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. குரங்கு இனத்தை ஒத்த இவ்விலங்குகள் மரங்களின் உச்சிகளிலேயே அதிகமாக வாழ்கின்றன. இது 50 சென்ரி மீற்றர் நீளமும் 3.5 கிலோ கிராம் நிறையும் கொண்டது. வால் பகுதி மட்டும் 40 சென்ரி மீற்றர் ஆகும். எல்லா விலங்குகளைப் போலவும் இல்லாமல் என்றும் பசுமையான காடுகளிலேயே வாழ்கின்ற அரிய இனக் குரங்குகள் இவை. இவை குறிப்பிட்ட பகுதிகளில் 6000 அல்லது 8000 ஒன்று சேர்ந்து ஒவ்வொரு குடும்பத் தொகுதிகளாகவே வாழ்கின்றன.



# கீரி + பாம்பு

நம்மில் அநேகமானோருக்கு கீரியும் பாம்பும் பற்றிய கதைகள் அடிக்கடி கூறப்படுவதுண்டு. இவை இரண்டுமே தங்களுக்குள் ஜென்மப் பகை கொண்டவையாகும். அவை சண்டையிடுகின்ற காட்சியை அநேகம் பேருக்குப் பார்க்கக் கிடைத்திருக்காது. அவர்களுக்காக இதோ! மொங்குஸ் எனப்படும் கீரி கருநாகத்தின் தலையைக் கடித்துக் குதறும் காட்சி இது. இவ்வகை கீரிகள் கருநாகங்களோடு மட்டுமே சண்டையிடுமாம். சாதாரண கீரிகளை விட மொங்குஸ் கீரிகளின் தாக்கும் திறன் இரண்டு மடங்கு அதிகமாகும். ஏனைய கீரிகளை விட 20 மடங்கு விசத்தைத் தாங்கக் கூடியது. உடல் நிறையை விடவும் அதன் விசத்தின் நிறை கூடுதல் என்கின்றனர்.




## 1ஆவது பிறந்தநாள் வாழ்த்து



புத்தூரைச் சேர்ந்த சந்திரசேகரன்-பேபிராணி தம்பதிகளின் செல்வப் புதல்வி இமானுகாவுக்கு 24.06.2004 அன்று முதலாவது பிறந்த நாள்.


இமானுகாவை அன்பு அப்பா, அம்மா, இலங்கையிலிருக்கும் அம்மப்பா, அம்மம்மா, அம்மன் அன்ரி, தங்கா

### செல்வி ச.இமானுகா / 24.06.2004

அன்ரி, பெரிய மாமா, சின்ன மாமா, சுமன் மாமா, அப்பம்மா, பெரியப்பாமார், பெரியம்மாமார், அக்காமார், அண்ணாமார், அத்தைமார், மாமாமார், மச்சான்மார், மச்சாள்மார், சுவிஸிலிருக்கும் மோகன் சித்தப்பா, சுபா சித்தி, மச்சான் குடும்பத்தினர், மச்சாள் குடும்பத்தினர் மற்றும் உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் பல்கலையும் கற்றுப் பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

தகவல்: சந்துரு- ஜேர்மனி

## 5ஆவது பிறந்தநாள் வாழ்த்து



### செல்வி நிவ்விஜா 26.06.2004

சுவிற்ஸர்லாந்தை வசிப்பிடமாகக் கொண்ட தட்சணாமூர்த்தி அருந்ததி தம்பதிகளின் செல்வப் புதல்வி நிவ்விஜா தனது 5ஆவது பிறந்த தினத்தை 26.06.2004 அன்று சப்கவுசன் மாநகரில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகிறார்.

இவரை அன்பு அம்மா-அப்பா, ஆசை அக்கா விதுர்சா, தாத்தா, பாட்டி, மாமாமார், மாமிமார், மச்சான்மார், மச்சாள்மார், ஜேர்மனியில் வசிக்கும் மாமா, மாமி, மச்சான், மச்சாள், பிரான்ஸில் வசிக்கும் பெரியப்பா, சித்தப்பா குடும்பத்தினர், இலங்கையில் வசிக்கும் பாட்டி, மாமா, மாமி, மச்சாள், மச்சான் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் எல்லாம் வல்ல நல்லூர்க் கந்தன் அருள் பெற்று நீடூழி காலம் வாழ்க வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

தகவல்: மலர்-ஜீவா,
ஜேர்மனி : 076-3226069.